# தமிழ்ச் சோலை

பத்தாம் வகுப்பு



ஜெனரல் புக் கம்பெனி
கும்பகோணம்

# தமிழ்ச் சோலை

## பத்தாம் வகுப்பு

VIDYA... KARAIKU...
19.7.67

31—8—1966இல் வெளியிட்ட புதிய பாட இயலின்படி
தொகுக்கப் பெற்றது.

தொகுப்பாசிரியர்:

வித்துவான் கா. சு. துரைராசு,
(கவிஞர் முடியரசன்)
தலைமைத் தமிழாசிரியர், மீ. சு. உயர்நிலைப் பள்ளி, காரைக்குடி.

தமிழக அரசின் பாட நூற் குழுவினரால் ஒப்புதல் பெற்றது.
சான்று: கெசட் பக்கம் 42 தேதி 17—5—1967

ஜெனரல் புக் கம்பெனி
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்

முதற் பதிப்பு – 1966
திருத்திய பதிப்பு – 1967 (மே)
மறு பதிப்பு – 1967

14·6 கிலோ 57X91 செ. மீ. அளவுள்ள
வெள்ளைக் காகிதத்தில் அச்சிடப்பெற்றது.

## நன்றி

தத்தம் கவிதைகளையும் கட்டுரைகளையும் இந்நூலில் சேர்த்துக்கொள்ள இசைவளித்த அறிஞர் பெருமக்கட்கு எங்கள் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—பதிப்பகத்தார்

பதிப்புரிமை

விலை ரூ. 2.25

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்

# முன்னுரை

இந்நூல் அரசியலார் 31—8—1966 இல் வெளியிட்ட புதிய பாட இயலின்படி பத்தாம் வகுப்பு மாணவர்களுக்காகத் தொகுக்கப் பெற்றதாகும்.

மாணவர்களுக்குத் தாய்மொழியில் ஆர்வம் ஊட்டத்தக்க வகையில் செய்யுட் பகுதிகளும் உரைநடைப் பகுதிகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள், கடிதம், உரையாடல், நாடகம், குடும்பக்கலை, நாட்டு நலத்திட்டம், விஞ்ஞானம், செய்யுட் பகுதிகளைச் சுவைபட அமைத்த உரையாக்கம் முதலிய பலதிறப்பட்ட எழுத்தோவியங்கள் இதில் அமைந்துள்ளன. நூலாசிரியர் வரலாறு, அருஞ்சொற்பொருள், வினாக்கள் முதலியன மாணவர்களுக்குப் பயன் தரும் முறையில் அமைக்கப் பெற்றுள்ளன.

இந்நூலில் தங்கள் கவிதைகளையும், கட்டுரைகளையும் சேர்த்துக்கொள்ள இசைவு தந்த பெருமக்கள் யாவருக்கும் உளம் நிறைந்த நன்றியினை உரிமையாக்குகின்றேன்.

கல்வித் துறையில் ஈடுபட்ட பெருமக்கள் அனைவரும் இந்நூலினை ஆதரித்து இத்துறையில் மேலும் மேலும் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தருள வேண்டுகிறேன்.

தொகுப்பாசிரியர்

# உள்ளுறை

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | வாழ்த்து | | |
| | (அ) கடவுள் வாழ்த்து | | 1 |
| | (ஆ) மொழி வாழ்த்து | ... | 1 |
| | (இ) நாட்டு வாழ்த்து | ... | 1 |
| II. | அறவுரை | | |
| 1. | திருக்குறள் | ... | 2 |
| 2. | இன்னிலை | ... | 6 |
| 3. | பழமொழி | ... | 6 |
| 4. | நாலடியார் | ... | 7 |
| 5. | ஆசாரக்கோவை | ... | 7 |
| 6. | சிறுபஞ்சமூலம் | ... | 8 |
| III. | தொடர்நிலைச் செய்யுள் | | |
| 1. | சிலப்பதிகாரம் | ... | 9 |
| 2. | மணிமேகலை | ... | 12 |
| 3. | பெரியபுராணம் | ... | 14 |
| 4. | கம்ப ராமாயணம் | ... | 18 |
| 5. | இரட்சணிய யாத்திரிகம் | ... | 22 |
| 6. | சீறாப்புராணம் | ... | 24 |
| 7. | பெருந்தேவனார் பாரதம் | ... | 26 |
| 8. | மனோன்மணீயம் | ... | 28 |
| IV. | பல்சுவை | | |
| 1. | புறநானூறு | ... | 31 |
| 2. | வருணனை | ... | 31 |
| 3. | சீட்டுக்கவி | ... | 32 |
| 4. | இரட்டுற மொழிதல் | ... | 32 |
| 5. | சிற்றிலக்கியம் | ... | 33 |
| 6. | வழிபாட்டுப் பாடல்கள் | ... | 34 |
| | குறிப்புரை | ... | 35 |

## உரைநடைப் பகுதி


1. பயிர் வண்டும் படர்கொடியும் ... 63
டாக்டர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்.

2. பொன் காத்த கிழவி ... 69
டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர்

3. மார்கோபோலோவும் தமிழ்நாடும் ... 75
பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ., பி, எல்., எம். ஓ. எல்.

4. ஓவியக் கலைஞர் — இரவிவர்மா ... 83
பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாதுரை, எம். ஏ., எல். டி.

5. நாவலர் நாட்டாரய்யா அவர்கள் ... 88
பேராசிரியர் திரு. ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.

6. உழவப் புலவன் ... 97
டாக்டர் வ. சுப. மாணிக்கம், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச்டி.

7. ஐக்கிய நாடுகள் சபை ... 105
திரு. ரா. நடராசன். பி. ஏ., பி. டி.

8. பன்னாட்டு நாகரிகம் ... 111
பேராசிரியர் திரு. பா. சூரியநாராயணன், எம். ஏ. (வரலாறு), எம். ஏ. (அரசியல்)

9. யாழ் எங்கே? ... 120
வித்துவான் திரு. இராம. பெரியகருப்பன், எம். ஏ.

10. சிந்தையள்ளும் சீறா ... 126
பேராசிரியர் திரு. சி. நயினார் முகம்மது, எம். ஏ.

11. அணுவின் ஆற்றல் ... 133
திரு. பெ. தங்கராசன், எம். ஏ.,

12. பொங்கல் விழா ... 138
பேராசிரியர் வித்துவான் திரு. மு. அருணாசலம்பிள்ளை

13. திரைப்படத்தால் விளைவது நன்மையா? தீமையா? ... 147
திரு. ந. சக்திவேலு, பி. ஏ.,

14. விபுலானந்தரின் நற்பண்புகள் ... 155
வித்துவான் திரு. ஆர். பழநியாண்டி முதலியார்

15. மனைக்கலை ... 161
கலைஞர் திருமதி சி. பெரியநாயகி அம்மையார்

16. வள்ளல் அழகப்பர் ... 169
புலவர் திரு. முத்து சம்பந்தன்

17. இளவரசனுக்கு (கடிதம்) ... 176
வித்துவான் திரு. கா. சு. துரைராசு

18. சிறுசேமிப்புத் திட்டம் ... 182
வித்துவான் திரு. எம். சுந்தரேசன்

19. கிராம முன்னேற்றம் ... 189
வித்துவான் திரு. ஆ. பழனி

## மனப்பாடப் பகுதி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | ... | 4 | வரிகள் |
| 2. | மொழி வாழ்த்து | ... | 4 | ,, |
| 3. | நாட்டு வாழ்த்து — தமிழ்நாடு | ... | 4 | ,, |
| 4. | திருக்குறள் (பாட்டு எண்கள்) [1, 5, 6, 11, 15, 20, 25, 28, 32, 36, 40, 42, 43, 46, 50] | ... | 30 | ,, |
| 5. | இன்னிலை [1] | ... | 4 | ,, |
| 6. | பழமொழி [3] | ... | 4 | ,, |
| 7. | நாலடியார் [3] | ... | 4 | ,, |
| 8. | ஆசாரக்கோவை [2] | ... | 4 | ,, |
| 9. | சிறுபஞ்ச மூலம் [2] | ... | 4 | ,, |
| 10. | மணிமேகலை [50 முதல் 55 முடிய உள்ள வரிகள்] | | 6 | ,, |
| 11. | பெரிய புராணம் [1, 20] | ... | 8 | ,, |
| 12. | கம்ப ராமாயணம் [4] | ... | 4 | ,, |
| 13. | இரட்சணிய யாத்திரிகம் [10] | ... | 4 | ,, |
| 14. | புறநானூறு [2] | ... | 8 | ,, |
| 15. | வழிபாட்டுப் பாடல்கள் [2, 4] | ... | 8 | ,, |
| | | மொத்தம் | 100 | ,, |

( [ ] அடைப்புக்குள் பாட்டு எண் குறிப்பிடப்பெற்றுள்ளது)

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல ஜமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

# தேசீய கீதம்
(பொருள்)

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான் மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும் ஸிந்துவையும் குஜாரத்தையும் மகாராஷ்டிரத்தையும் திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது; இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன! நின் புகழைப் பாடுகின்றன; இந்தியாவின் சுக துக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

## இந்திய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

இந்தியா என்னுடைய நாடு. இந்நாட்டில் வாழ்கின்ற ஆண், பெண் அனைவரும் என் உடன்பிறந்தவர்கள்.

என் நாட்டின்பால் நான் அன்புடையேன். அதனுடைய வளமான பலவகைப்பட்ட பண்பாட்டியல்புகளை நினைந்து பெருமையடைகிறேன். இத்தகைய பழம் பெருமையுடைய நாட்டின் குடிமகனாக இருத்தற்குரிய தகுதிகளை அடைய நான் முயல்வேன்.

என்னுடைய பெற்றோரிடத்தும், ஆசிரியரிடத்தும், ஏனைய பெரியோரிடத்தும் பணிவுடன் நடந்து கொள்வேன்; அனைவரிடத்தும் பண்புடன் பழகுவேன்.

என்னுடைய நாட்டிற்கும், அதனுடைய மக்களுக்கும் தொண்டு செய்ய உறுதி கூறுகிறேன். என் நல்வாழ்வு அவர்தம் நலத்தையும் வளமான வாழ்க்கையையுமே பொறுத்திருக்கின்றது.

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

தாய் நாட்டின் உரிமையையும் ஒருமைப்பாட்டையும் எப்பாடு பட்டாகிலும், என்ன தியாகம் செய்தாகிலும் காக்க மக்கள் மேற்கொண்டுள்ள எண்ணத்தில் (சங்கற்பத்தில்) எனது உறுதியை மீண்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நாடு வலிவுறவும் ஒற்றுமை வலுப்பெறவும் உறுதியான உள்ளத்துடன் பாடுபட உறுதி கூறுகிறேன்.

# செய்யுட் பகுதி

## I. வாழ்த்து

### (அ) கடவுள் வாழ்த்து

கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை
எண்ணி யெண்ணி யிரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்றொழுந் தெய்வமே. (1)

—தாயுமானவர்

### (ஆ) மொழி வாழ்த்து

நாவலநற் றீவிலுயர் நாயகமா யொளிர்வாள்
நாகரிகம் உலகில்முதல் நல்கிமகிழ் நங்கை
காவல்பெறுங் கடவுளர்க்கிங் கேவல்தரும் இறைவி
கவினனைத்துங் கருவுயிர்த்த காரிகைநங் கன்னி. (2)

—நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்

### (இ) நாட்டு வாழ்த்து

*தமிழ் நாடு*

அகிலுந் தேக்கும் அழியாக் குன்றம்
அழகாய் முத்துக் குவியுங் கடல்கள்
முகிலுஞ் செந்நெலும் முழங்கு நன்செய்
முல்லைக் காடு மணக்கும் நாடு. (3)

—பாவேந்தர் பாரதிதாசன்

*பாரத தேவி*

காலன் எதிர்ப்படிற் கைகூப்பிக் கும்பிட்டுக் கம்பனமுற்
றோலமிட் டோடி மறைந்தொழி வான்பகை யொன்றுளதோ
நீலக் கடலொத்த கோலத்தி னுள்மூன்று நேத்திரத்தாள்
காலக் கடலுக்கோர் பாலமிட் டாளன்னை காற்படினே. (4)

—மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார்

# II. அறவுரை

## 1. திருக்குறள்

*கடவுள் வாழ்த்து*

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். 1

*வான் சிறப்பு*

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை. 2

*அறன் வலியுறுத்தல்*

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற. 3

அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 4

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 5

*அன்புடைமை*

என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். 6

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு. 7

*விருந்தோம்பல்*

வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம். 8

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு. 9

*செய்ந்நன்றி யறிதல்*

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார். 10

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். 11

### அடக்கமுடைமை

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து. 12

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 13

### ஒழுக்கமுடைமை

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். 14

ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி. 15

### அழுக்காறுமை

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். 16

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 17

### ஈகை

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர். 18

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல். 19

சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை. 20

### வாய்மை

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. 21

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற. 22

### வெகுளாமை

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும். 23

இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 24

*இன்னா செய்யாமை*

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 25

தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். 26

*நிலையாமை*

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல். 27

உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 28

*கல்வி*

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 29

*கேள்வி*

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். 30

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை. 31

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென். 32

*அறிவுடைமை*

அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண். 33

*சிற்றினஞ் சேராமை*

மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும். 34

மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும். 35

*வலியறிதல்*

பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின். 36

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோன்றாக் கெடும். 37

### தெரிந்து தெளிதல்

காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும். 38

தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும். 39

### செங்கோன்மை

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. 40

இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 41

### கொடுங்கோன்மை

வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவு. 42

### இடுக்கணழியாமை

இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர். 43

இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன். 44

### சொல்வன்மை

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. 45

### வினைத்திட்பம்

துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை. 46

வினைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. 47

### பண்புடைமை

அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 48

*உழவு*

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். 49

உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை. 50

—திருவள்ளுவர்

## 2. இன்னிலை

*செல்வத்தின் சிறப்பு*

உடைமையரு திட்ட வுறுதுணையாம் யாண்டும்
உடைமையராச் சென்றக்கால் ஊரெல்லாஞ் சுற்றம்
உடைமைக்கோ லின்றங்குச் சென்றக்காற் சுற்றம்
உடையவரும் வேறு படும். 1

*அறிஞர் கடமை*

கடன்முகந்து தீம்பெயலை யூழ்க்கு மெழிலி —
மடனுடையார் கோதகற்றி மாண்புறுத்த லேமம்
படைத்தாக்கல் பண்பறிந்தோர் சால்பு. 2

—பொய்கையார்.

## 3. பழமொழி

*கல்வி*

ஆற்றவுங் கற்றா ரறிவுடையா ரஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை — அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாயினா
லாற்றுணா வேண்டுவ தில்.

*அறஞ் செய்க*

பலநாளு மாற்றா ரெனினு மறத்தைச்
சிலநாள் சிறந்தவற்றாற் செய்க—கலைதாங்கி
நைவது போலு நுசுப்பினாய் நல்லறஞ்
செய்வது செய்யாது கேள். 2

*சிறியர் என்றுஞ் சிறியரே*

தக்காரோ டொன்றித் தமரா யொழுகினார்
மிக்காரா லென்று சிறியாரைத் தாந்தேறார்
கொக்கார் வளவய லூர தினலாமோ
அக்காரஞ் சேர்ந்த மணல். 3

—முன்றுறையரையனார்.

## 4. நாலடியார்

குலம்

நல்ல குலமென்ப தீய குலமென்ப
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
யென்றிவற்றா னாகுங் குலம். 1

மூவகை மக்கள்

கல்லாக் கழிப்பர் தலையாயர் நல்லவை
துவ்வாக் கழிப்ப ரிடைகள்—கடைகள்
இனிதுண்ணே மாரப் பெறேமியா மென்னும்
முனிவினாற் கண்பா டிலர். 2

ஆண்மகன் கடன்

அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லாம்
நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்—பழுமரம்போல்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன். 3

—சமணமுனிவர்கள்.

## 5. ஆசாரக் கோவை

காலைக் கடமைகள்

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை. 1

ஒழுக்கமுடையார் எய்துவன

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றங் கல்விநோ யின்மை
இலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர். 2

தத்தமக்குத் தக்கன செய்தல்

உடைநடை சொற்சோர்வு வைதலிந் நான்கும்
நிலைமைக்குங் கல்விக்கு மாண்மைக்குந் தத்தங்
குடிமைக்குந் தக்க செயல். 3

—பெருவாயின் முள்ளியார்.

## 6. சிறு பஞ்ச மூலம்

*தேவர், பூதர், ஆதர், எருது*

தேவரே கற்றவர் கல்லாதார் தேருங்கால்
பூதரே முன்பொருள் செய்யாதார்— ஆதரே
துன்ப மிலேம்பண்டு யாமே வனப்புடையேம்
என்பா ரிருகா லெருது.

*உண்மை வனப்பு*

மயிர்வனப்புங் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்பும்— செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. 2

—காரியாசான்.

# III. தொடர்நிலைச் செய்யுள்

## 1. சிலப்பதிகாரம்

### நாடு காண் காதை

[ *கோவலனும் கண்ணகியும் வைகறை யாமத்துப் புறப்பட்டுப் புகார் நகரின் வாயிலைக் கடந்து, காவிரியின் கடைமுகங் கழிந்து, வடகரையின் வழியாக மேற்கு நோக்கி நடந்து கவுந்தியடிகள் வாழும் பள்ளியை அடைகின்றனர். கண்ணகி, 'மதுரை மூதூர் யாண்டுளது'? எனவினவ, 'நம் நாட்டிலிருந்து ஆறைங்காதத் தொலைவில் உளது' எனக் கோவலன் கூறினான். பின்னர் இருவரும் ஆண்டிருந்த கவுந்தியடிகளை வணங்க, 'நீவிர் வந்த காரணம் யா'தென அடிகள் வினவியதற்கு 'மதுரை மூதூர் நகரை செல்ல நினைத்தேன்' எனக் கோவலன் விடையிறுத்தான். அது கேட்ட அடிகள், ஊழின் வலிமையை எடுத்துக் காட்டி, மதுரை செல்லவிருக்கும் தமது விருப்பத்தையும் வெளியிடக் கோவலன் மகிழ்ந்து 'நீவீர் உடன்வரப் பெறின் கண்ணகியின் துயர் தீர்ந்த தென்றான்.' அப்பொழுது, கவுந்தியடிகள் சோலையும் தோட்டமும் ஆகிய வழியின் அருமையையும் வயல் வழியின் அருமையையும் விதந்து கூற, மூவரும் வழிக்கொண்டனர்.*]

#### கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகள் வாழும் பள்ளியை அடைதல்

இலவந் திகையி னெயிற்புறம் போகித்
தாழ்பொழி லுடுத்த தண்பதப் பெருவழிக்
காவிரி வாயிற் கடைமுகங் கழிந்து
குடதிசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழில் நுழைந்து
காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்கண்

#### கண்ணகி வினவும் கோவலன் விடையும்

இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல வுயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ
ஆறைங் காதநம் மகனாட் டும்பர்
நாறைங் கூந்தல் நணித்தென நக்குத்

*கவுந்தியடிகளின் வினவும் கோவலன் மறுமொழியும்*

தேமொழி தன்னொடுஞ் சிறையகத் திருந்த
காவுந்தி ஐயையைக் கண்டடி தொழலும்
உருவுங் குலனு முயர்பே ரொழுக்கமும்
பெருமகன் றிருமொழி பிறழா நோன்பும்
உடையீ ரென்னோ வுறுக ணாளரிற்
கடைகழிந் திங்ஙனங் கருதிய வாறென
உரையாட் டில்லை யுறுதவத் தீர்யான்
மதுரை மூதூர் வரைபொருள் வேட்கையேன்

*கவுந்தியடிகள் ஊழின் வலிமை கூறித் தாமும் மதுரைக்கு வருவதாக மொழிதல்*

பாடகச் சீறடி பரற்பகை யுழவா
காடிடை யிட்ட நாடுநீர் கழிதற்
கரிதிவள் செவ்வி அறிகுநர் யாரோ
உரிய தன்றீங் கொழிகென வொழியீர்
மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங் கறிவனை ஏத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்
கொன்றிய வுள்ள முடையே னாகலின்
போதுவல் யானும் போதுமி னென்ற
காவுந்தி ஐயையைக் கைதொழு தேத்தி
அடிக ணீரே யருளுதி ராயினித்
தொடிவளைத் தோளி துயர்தீர்த் தேனெனக்

*கவுந்தியடிகள் வழியருமை கூறல்*
*சோலைவழியும் தோட்டவழியும்*

கோவலன் காணாய் கொண்ட விந்நெறிக்
கேதந் தருவன யாங்கும்பல கேண்மோ
வெயினிறம் பொறாஅ மெல்லியற் கொண்டு
பயில்பூந் தண்டலைப் படர்குவ மெனினே
மண்பக வீழ்ந்த கிழங்ககழ் குழியைச்
சண்பக நிறைந்த தாதுசோர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப் போற்றா மாக்கட்குக்
கையறு துன்பங் காட்டினுங் காட்டும்
உதிர்பூஞ் செம்மலி னொதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பகை முட்டினு முட்டும்
மஞ்சளு மிஞ்சியு மயங்கரில் வலயத்துச்
செஞ்சுளைப் பலவின் பரற்பகை யுறுக்கும்

*வயல்வழி*

கயனெடுங் கண்ணி காதற் கேள்வ
வயலுழைப் படர்வே மெனினே யாங்குப்
பூநா றிலஞ்சிப் பொருகய லோட்டி
நீர்நாய் கௌவிய நெடும்புற வாளை
மலங்குமிளிர் செறுவின் விலங்கப் பாயிற்
கலங்கலு முண்டிக் காரிகை யாங்கண்
கரும்பிற் றொடுத்த பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத் தூநீர் கலக்கும்
அடங்கா வேட்கையி னறிவஞ ரெய்திக்
குடங்கையி னொண்டு கொள்ளவுங் கூடும்
குறுந ரிட்ட குவளையம் போதொடு
பொறிவரி வண்டினம் பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து நீரஞ ரெய்தி
அறியா தடியாங் கிடுதலுங் கூடும்.

*வாய்க்கால் வழி*

எறிநீ ரடைகரை இயக்கந் தன்னிற்
பொறிமா ணலவனு நந்தும் போற்றாது
ஊழடி யொதுக்கத் துறுநோய் காணில்
தாழ்தரு துன்பந் தாங்கவு மொண்ணா
வயலுஞ் சோலையு மல்ல தியாங்கணும்
அயல்படக் கிடந்த நெறியாங் கில்லை
நெறியிருங் குஞ்சி நீவெய் யோளொடு
குறியறிந் தவையவை குறுகா தோம்பெனத்

*மூவரும் வழி நடத்தல்*

தோமறு கடிஞையுஞ் சுவன்மே லறுவையும்
காவுந்தி யையைக்கப் பீலியுங் கொண்டு
மொழிப்பொருட் டெய்வம் வழித்துணை யாகெனப்
பழிப்பருஞ் சிறப்பின் வழிப்படர் புரிந்தோர்
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
முறஞ்செவி வாரணம் முன்சமம் முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர் புரிந்தென்.

—இளங்கோவடிகள்

# 2. மணிமேகலை

## பாத்திரம் பெற்ற காதை

[தீவதிலகை மணிபல்லவத்தில் மணிமேகலையின் முன் தோன்றித் தன் வரலாறுரைத்து, ஆபுத்திரன் வைத்திருந்த அமுதசுரபி கோமுகிப் பொய்கையில் கிடப்பதையும் அது தோன்றுங் காலத்தையும் கூறி அப்பாத்திரம் நின்கையிற் கிட்டும்போலும் என உரைத்தனள். மணிமேகலை புத்த பீடிகையை வணங்கிக் கோமுகியை வலஞ்செய்து நிற்க அமுதசுரபி அவள் கையிற் புகுந்தது. அவன் மகிழ்ந்து புத்த தேவனைப் பலவாறு போற்றினள். அப்பொழுது தீவதிலகை பசிப்பிணியின் கொடுமையை மணிமேகலைக்கு விளக்கி, விசுவாமித்திரன் பசியின் கொடுமையால் நாயின் ஊனை உண்டமையையுஞ் சொல்லி, உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆதலின் நீயும் அவ்வறத்தினை மேற்கொள்க என்றுங் கூறி முடித்தனள். மணிமேகலை அமுதசுரபியுடன் புகார் நகரை அடைந்தாள்.]

### தீவதிலகை அமுதசுரபியைப்பற்றி மணிமேகலையிடம் தெரிவித்தல்

பழுதில் காட்சியிந் நன்மணிப் பீடிகை
தேவர்கோ னேவலிற் காவல் பூண்டேன்
தீவ திலகை யென்பெய ரிதுகே
டரும தலைவன் றலைமையி னுரைத்த
பெருமைசா னல்லறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதற் பின்னர்ப்
பண்டைப் பிறவிய ராகுவர் பைந்தொடி
அரிய ருலகத் தாங்கவர்க் கறமொழி
உரிய துலகத் தொருதலை யாக
ஆங்கன மாகிய வணியிழை யிதுகே
ஈங்கிப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையு நெய்தலு மயங்கிய
கோமுகி யென்னுங் கொழுநீ ரிலஞ்சி
யிருதிள வேனிலி லெரிகதி ரிடபத்
தொருபதின் மேலு மொருமூன் றுசென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவையிற்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை யமுத சுரபியெனு
மாபெரும் பாத்திர மடக்கொடி கேளா
யந்நா ளிந்நா ளப்பொழு திப்பொழுது
நின்னாங்கு வருவது போலு நேரிழை
ஆங்கதிற் பெய்த வாருயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துத லல்லது

தான்றொலை வில்லாத் தகைமைய தாகும்
நறுமலர்க் கோதை நின்னூ ராங்கண்
அறவணன் றன்பாற் கேட்குவை யிதன்றிற
மென்றவ ளுரைத்தலு மிளங்கொடி விரும்பி

*மணிமேகலை பாத்திரம் பெற்று மகிழ்தல்*

மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடுங் கூடிக்
கோமுகி வலஞ்செய்து கொள்கையி னிற்றலு
மெழுந்துவலம் புரிந்த விளங்கொடி செங்கையிற்
றொழுந்தகை மரபிற் பாத்திரம் புகுதலும்
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை யின்றி மனமகிழ் வெய்தி

*புத்த தேவரை மணிமேகலை துதித்தல்*

மாரனை வெல்லும் வீர நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
யெண்பிறக் கொழிய விறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
யுரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்கா தென்ற வாயிழை முன்னர்ப்

*தீவதிலகை உண்டி கொடுத்தலின் சிறப்பையுரைத்தல்*

போதி நீழற் பொருந்தித் தோன்றும்
நாதன் பாத நவைகெட வேத்தித்
தீவ திலகை சேயிழைக் குரைக்குங்

*பசிப் பிணியின் கொடுமை*

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூணணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோர்
இசைச்சொ லளவைக் கென்னா நிமிராது

### விசுவாமித்திர முனிவன் பசிக் கொடுமையால் நாயின் ஊனை உண்ட வரலாறு

புன்மரம் புகையப் புகையழற் பொங்கி
மன்னுயிர் மடிய மழைவளங் கரத்தலி
னரசுதலை நீங்கிய வருமறை யந்தண
னிருநில மருங்கின் யாங்கணுந் திரிவோ
னரும்பசி களைய வாற்றுவது காணான்
திருந்தா நாயூன் றின்னுத லுறுவோ
னிந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளந் தருதலின் மன்னுயி ரோங்கிப்
பிழையா விளையுளும் பெருகிய தன்றே

### உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்

ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
யுயிர்க்கொடை பூண்ட வுரவோ யாகிக்
கயக்கறு நல்லறங் கண்டனை யென்றலும்
........................................
............ எழுந்தன ளிளங்கொடி தானென்.

—சீத்தலைச் சாத்தனு

## 3. பெரிய புராணம்

### திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்

*[திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்னுந் திருப்பதியி தோன்றிய புகழனார் என்னும் வேளாண் மரபினர்க்கும் மாதினியார்க்கு திலகவதியார் பிறந்தார். அடுத்து மருணீக்கியார் தோன்றினார். இருவரு இளம்பிறைபோல் நாளுக்கு நாள் வளர்ந்து தக்க பருவம் எய்தின அப்பொழுது கலிப்பகையார் என்னும் படைத் தலைவர்க்குத் திலகவதியை பெண் கேட்டு வந்தனர். புகழனாரும் இசைவு தந்தனர். அவ்வமய வடபுலத்தின்மேற் படையெடுத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு*

அதனால் அரசன் ஆணைப்படி கலிப்பகையார் படைகொண்டு சென்றார். அந்நிலையில் புகழனாரும் மாதினியாரும் விண்ணுலகடைந்தனர். பெற்றோரை இழந்த துயரம், கிளைஞரின் ஆறுதலுரையால் ஓரளவு தணிந்து வருநாளில், கலிப்பகையார் போர்க்களத்தே வீர மரணம் எய்தினர் என்ற செய்தி வந்தது. இதனைக் கேட்ட திலகவதியார் தாமும் உயிர்விடத் துணிய, மருணீக்கியார் 'பெற்றோர்க்குப் பின் உம்மையே வணங்கி வருகின்றேன். என்னை விட்டேகக் கருதுவிராயின் முதலில் நான் உயிர் துறப்பேன்' என, அவருக்காக உயிர் தாங்கி நின்றார். மருணீக்கியாரும் மனத்துயரம் நீங்கும் பொருட்டுப் பல்வகை யறங்கள் புரிந்து வந்தார்.]

### திருமுனைப்பாடி வளநாடு

தொன்மைமுறை வருமண்ணின் துகளன்றித் துகளில்லா
நன்மைநிலை யொழுக்கத்து நலஞ்சிறந்த குடிமல்கிச்
சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகள்
மன்னிநிறைந் துளதுதிரு முனைப்பாடி வளநாடு. 1

### சிவம்பெருக்குந் திருவாமூர்

இவ்வகைய திருநாட்டி லெனைப்பலவூர் களுமென்றும்
மெய்வளங்க ளோங்கவரும் மேன்மையன ஆங்கவற்றுட்
சைவநெறி யேழுலகும் பாலிக்குந் தன்மையினாற்
றெய்வநெறிச் சிவம்பெருக்குந் திருவாமூர் திருவாமூர். 2

### குறுக்கையர் குடிப் புகழனார்

தலத்தின்கண் விளங்கியவத் தனிப்பதியி லனைத்துவித
நலத்தின்கண் வழுவாத நடைமரபிற் குடிநாப்பண்
விலக்கின்மனை யொழுக்கத்தின் மேதக்க நிலைவேளாண்
குலத்தின்கண் வரும்பெருமைக் குறுக்கையர்தங்
குடிவிளங்கும். 3

அக்குடியின் மேற்றோன்ற லாயபெருந் தன்மையினார்
மிக்கமனை யறம்புரிந்து விருந்தளிக்கும் மேன்மையினார்
ஒக்கல்வளர் பெருஞ்சிறப்பி னுளரானா ருளரானார்
திக்குநில வும்பெருமை திகழவரும் புகழனார். 4

### திலகவதியார் பிறப்பு

புகழனார் தமக்குரிமைப் பொருவில்குலக் குடியின்கண்
மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்
நிகழுமலர்ச் செங்கமல நிரையிதழின் அகவயினில்
திகழவருந் திருவனைய திலகவதி யார்பிறந்தார். 5

### மருணீக்கியார் அவதாரம்

திலகவதி யார்பிறந்து சிலமுறையாண் டகன்றதற்பின்
அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரு மருணீக்கி யொளிவிளங்கு கதிர்போற்பின்
மலருமரு ணீக்கியார் வந்தவதா ரஞ்செய்தார். 6

### மருணீக்கியார் வளர்ச்சி

மாதினியார் திருவயிற்றின் மன்னியசீர்ப் புகழனார்
காதலனா ருதித்ததற்பின் கடன்முறைமை மங்கலங்கள்
மேதகுநல் வினைசிறப்ப விரும்பியபா ராட்டினுடன்
ஏதமில்பல் கிளைபோற்ற இளங்குழவிப் பதங்கடந்தார். 7

### திலகவதியார்க்கும் கலிப்பகையார்க்கும் திருமண ஏற்பாடு

அந்நாளில் திலகவதி யாருக்கான் டாறிரண்டின்
முன்னாக ஒத்தகுல முதல்வேளாண் குடித்தலைவர்
மின்னார்செஞ் சடையண்ணல் மெய்யடிமை விருப்புடையார்
பொன்னாரு மணிமௌலிப் புரவலன்பா லருளுடையார். 8

ஆண்டகைமைத் தொழிலின்கண் ணடலரியே றெனவுள்ளார்
காண்டகைய பெருவனப்பிற் கலிப்பகையா ரெனும்பெயரார்
பூண்டகொடைப் புகழனார் பாற்பொருவின் மகட்கொள்ள
வேண்டியெழுங் காதலினால் மேலோரைச் செலவிட்டார். 9

### கலிப்பகையார் போர்மேற் செலவு

கன்னித்திருத் தாதையார் மணவிசைவு கலிப்பகையார்
முன்னணைந்தா ரறிவிப்ப வதுவைவினை முடிப்பதன்முன்
மன்னவற்கு வடபுலத்தோர் மாறேற்க மற்றவர்மே
லன்னவர்க்கு விடைகொடுத்தா னவ்வினைமே லவரகன்றார். 10

வேந்தற்குற் றுழிவினைமேல் வெஞ்சமத்தில் விடைகொண்டு
போந்தவரும் பொருபடையு முடன்கொண்டு சிலநாளில்
காய்ந்தசினப் பகைப்புலத்தைக் கலந்துகடுஞ் சமர்க்கடலை
நீந்துவார் நெடுநாள்கள் நிறைவெம்போர்த் துறைவிளைத்தார். 11

### பெற்றோர் பிரிவு

ஆயநா ளிடையிப்பா லணங்கனையா ரனைப்பயந்த
தூயகுலப் புகழனார் தொன்றுதொடு நிலையாமை
மேயவினைப் பயத்தாலே இவ்வுலகை விட்டகலத்
தீயவரும் பிணியுழந்து விண்ணுலகிற் சென்றடைந்தார். 12

மற்றவர்தா முயிர்நீப்ப மனைவியார் மாதினியார்
சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப்
பெற்றிமையா லுடனென்றும் பிரியாத வுலகெய்துங்
கற்புநெறி வழுவாமற் கணவனா ருடன்சென்றார். 13

தாதையா ரும்பயந்த தாயாரு மிறந்ததற்பின்
மாதரார் திலகவதி யாருமவர் பின்வந்த
காதலனார் மருணீக்கி யாருமனக் கவலையினாற்
பேதுறுநற் சுற்றமொடும் பெருந்துயரி லழுந்தினார். 14

*போர்க்களஞ் சென்ற கலிப்பகையார் உயிர்கொடுத்துப்*
*புகழ்கொண்டார். அது கேட்டுத் திலகவதியாரும்*
*உயிர் துறக்க முனைதல்*

வெம்முனைமேற் கலிப்பகையார் வேல்வேந்த னேவப்போய்
அம்முனையில் பகைமுருக்கி யமருலக மாள்வதற்குத்
தம்முடைய கடன்கழித்த பெருவார்த்தை தலஞ்சாற்றச்
செம்மலர்மேற் றிருவனைய திலக்வதி யார்கேட்டார். 15

எந்தையுமெம் மனையுமவர்க் கெனைக்கொடுக்க விசைந்தார்கள்
அந்தமுறை யாலவர்க்கே உரியதுநா னாதலினால்
இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்ப னெனத்துணிய
வந்தவர்த மடியிணைமேன் மருணீக்கி யார்விழுந்தார். 16

*மருணீக்கியார் முறையீடு*

அந்நிலையின் மிகப்புலம்பி யன்னையுமத் தனுமகன்ற
பின்னையுநா னுமைவணங்கப் பெறுதலினா லுயிர்தரித்தேன்
என்னையினித் தனிக்கைவிட் டேகுவீ ரெனில்யானும்
முன்னமுயிர் நீப்பனென மொழிந்திடரி னழுந்தினார். 17

*திலகவதியார் தவம்*

தம்பியா ருளராக வேண்டுமென வைத்ததயா
உம்பருல கணையவுறு நிலைவிலக்க வுயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கு மருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார். 18

*மருணீக்கியார் அறச்செயல்களில் ஈடுபடல்*

மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசிலறச் சாலைகளுந் தண்ணீர்ப்பந் தருமமைப்பார். 19

காவளர்த்துங் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுமந் நிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத ஈகைவினைத் துறைநின்றார்.

—சேக்கிழார்.

## 4. கம்பராமாயணம்

### கங்கைப் படலம்

*[தந்தையின் ஆணையைத் தலைமேற்கொண்டு காட்டிற்கு வந்த இராமன், தம்பி இலக்குவனுடனும் சீதையுடனும் கங்கைக் கரையில் வந்து தங்கியுளான் என்பதறிந்து, காணும்பொருட்டுக் குகன் வந்தான். அவன் வருகையை இலக்குவன் கூறக்கேட்ட இராமன், அழைத்துவரப் பணித்தான். தான் கொணர்ந்த காணிக்கைகளை அன்புடன் குகன் தர, மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட இராமன், கங்கையைக் கடப்பதற்கு நாவாயுடன் நாளை வருகெனப் பணித்தான். இராமனை நீங்க மனமில்லாத குகன், 'ஈண்டிருந்து அடிமை செய்வேன்' என்றான். இராமனும் இசைய ஆண்டிருந்து காவல் புரிந்தனன் குகன். இராமனும் சீதையும் துயிலும்போது, இரவு முழுதும் இலக்குவன் இமைப்பிலனாகிக் காத்திருந்த நிலைகண்டு, குகன் கண்ணீர் சொரிந்து வருந்தினான். விடிந்தபின்னர், 'எல்லா நலங்களும் ஈண்டுள; ஆதலின் இங்கேயே தங்கியருள்க' எனக் குகன் இராமனை வேண்டினான். 'அன்ப! கவலற்க, புண்ணிய நதிகளாடி விரைவில் நின்பால் வருவோம்' என்று ஆறுதல் கூறினன் இராமன். அவ்வாறாயின் தன்னையும் அழைத்துச் செல்லுமாறு குகன் வேண்ட, இராமன் குகனையும் உடன் பிறந்தவனாக ஏற்றுக்கொண்டு, அங்கேயே இருக்குமாறு பணித்தான்.]*

*குகன் வருகையை இராமனிடம் இலக்குவன் கூறல்*

நிற்றியீண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகின னிமிர்ந்த கூட்டச்
சுற்றமு தானு முள்ளந் தூயவன் தாயி னல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க் கிறைகுக னொருவ னென்றான். 1

*குகன் இராமனை வணங்கிக் காணிக்கை கொடுத்தான்*

அண்ணலும் விரும்பி யென்பா லழைத்திநீ யவனை யென்றான்
பண்ணவன் வருக வென்னப் பரிவினன் விரைவிற் புக்கான்
கண்ணனைக் கண்ணி னோக்கிக் களித்தன னிருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான். 2

இருத்தியீண் டென்ன லோடு மிருந்தில னெல்லை நீத்த
அருத்தியன் தேனு மீனு மமுதினுக் கமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தே னென்கொல் திருவுள மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான். 3

காணிக்கையை இராமன் ஏற்றல்

அரியதா முவப்ப வுள்ளத் தன்பினா லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றா லமிழ்தினுஞ் சீர்த்த வன்றே
பரிவினிற் றழீஇய வென்னிற் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன வினிதி னாமு முண்டனெ மன்றே வென்றான். 4

இராமன் குகனை நாவாயொடு வரப் பணித்தல்

சிங்கவே றனைய வீரன் பின்னருஞ் செப்பு வான்யாம்
இங்குறைந் தெறிநீர்க் கங்கை யேறுதும் நாளை யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும் போயுவந் தினிதுன் னூரில்
தங்கிநீ நாவா யோடுஞ் சாருதி விடிய லென்றான். 5

குகன் இராமனை நீங்க மனமின்றி அடிமை செய்வேன் எனல்

கார்குலா நிறத்தான் கூறக் காதல னுணர்த்து வானிப்
பார்குலாஞ் செல்வ நின்னை யிங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேன்யா னின்னலி னிருக்கை நோக்கித்
தீர்கிலே னான தைய செய்குவெ னடிமை யென்றான். 6

இராமன் இசையக் குகன் காவலிருத்தல்

கோதைவிற் குரிசி லன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னாகு மென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நண்ப இருத்தியீண் டெம்மொ டென்றான். 7

அடிதொழு துவகை தூண்ட வழைத்தன னாழி யன்ன
துடியுடைச் சேனை வெள்ளம் பள்ளியைச் சுற்ற வேவி
வடிசிலை பிடித்து வாளும் வீக்கிவா யம்பு பற்றி
இடியுடை மேக மென்ன இணையடி யேத்தி நின்றான். 8

இராமனும் சீதையும் துயில இலக்குவன் இரவு முழுதும் காவல் புரிதல்

மாலைவாய் நியமஞ் செய்து மரபுளி யியற்றி வைகல்
வேலைவா யமுத னாளும் வீரனும் விரித்த நாணல்
மாலைவாய்ப் பாரின் பாயல் வைகினர் வரிவி லேந்திக்
காலைவா யளவுந் தம்பி யிமைப்பிலன் காத்து நின்றான். 9

மற்றவ ளிறைஞ்சி யேக மாமலர்த் தவிசு நீங்காப்
பொற்றொடி யோடு மையன் றுயிறரும் புன்மை நோக்கி
இற்றதோர் நெஞ்ச னாகி யிருகணீ ரருவி சோர
உற்றவோ வியம தென்ன வொருசிலை யதனி னின்றான். 10

*குகன் அந்நிலைகண்டு கண்ணீர் விடல்*

தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் றொடுத்த வில்லன்
வெம்பிவெந் தழியா நின்ற நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித் தலைமகன் றன்மை நோக்கி
அம்பியின் றலைவன் கண்ணீ ரருவிசோர் குன்றி னின்றான். . 11

*கதிரவன் பிறந்தான் தாமரை மலர்ந்தது*

துறக்கமே முதல வாய தூயன யாவை யேனும்
மறக்குமா நினைய லம்மா வரம்பில தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போன் முன்னைநா ளிறந்தான் பின்னாள்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன் பிறவா
வெய்யோன். 12

செஞ்செவே சேற்றிற் றோன்றுந் தாமரை தேரிற் றோன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கிய விரிந்த வேறோர்
அஞ்சன நாயி றன்ன வையனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதன மென்னுந் தாமரை மலர்ந்த தன்றே. 13

*இராமனை அங்கேயே தங்குமாறு குகன் வேண்டல்*

பொய்ம்முறை யலராவெம் புகலிடம் வனமேயால்
கொய்ம்முறை யுறுதாராய் குறைவிலெம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குது மடியோமை
இம்முறை யுறவென்னா வினிதிரு நெடிதெம்மூர். 14

தேனுள திணையுண்டா றேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயே முயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்றே
நானுள தனையுநீ யினிதிரு நடவெம்பால். 15

தோலுள துகில்போலுஞ் சுவையுள தொடர்மஞ்சம்
போலுள பரண்வைகப் புரையுள கடிதோடுங்
காலுள சிலைபூணுங் கையுள கலிவானின்
மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால். 16

ஐயிரு பத்தோடைந் தாயிர ருளராணை
செகுநர் சிலைவேடர் தேவரின் வலியாரால்
உய்குது மடியேமெங் குடிலிடை யொருநாணீ
வைகுதி யெனின்மேலோர் வாழ்விலை பிறிதென்றான். 17

*இராமன் மறுமொழி*

அண்ணலு மதுகேளா வகநிறை யருண்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான். 18

*குகன், தன்னையும் உடனழைத்தேக இராமனை வேண்டுதல்*

நெறியிடு நெறிவல்லே னேடினென் வழுவாமல்
நறியன கனிகாயும் நறவிவை தரவல்லேன்
உறைவிட மமைவிப்பே னொருநொடி வரையும்மைப்
பிறிகிலெ னுடனேகப் பெறுகுவெ னெனினாயேன். 19

கல்லுவென் மலையேனுங் கவலையின் முதல்யாவுஞ்
செல்லுவெ னெறிதூரஞ் செறிபுன றரவல்லேன்
வில்லின முளனென்றும் வெருவலெ னொருபோதும்
மல்லினு முயர்தோளாய் மலரடி பிரியேனால். 20

திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்
டொருவலெ னொருபோது முறைகுவெ னுளரானார்
மருவல ரெனின்முன்னே மாய்குவென் வசையில்லேன்
பொருவரு மணிமார்பா போதுவெ னுடனென்றான். 21

*இராமன், குகனை உடன் பிறந்தவனாக ஏற்றுக்கொண்டு,
அங்கேயே இருக்கப் பணித்தல்*

அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ யிளவலு னிளையானிந்
நன்னுத லவணின்கே ணளிர்கட லிலமெல்லா
முன்னுடை யதுநானுன் றொழிலுரி மையினுள்ளேன். 22

துன்புள தெனினன்றோ சுகமுள தது வன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளெ மொருநால்வே முடிவுள தெனவுன்னா
அன்புள வினிநாமோ ரைவர்க ளுளரானோம். 23

படருற வுளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு பகையாபோ யானென வுரியாய்நீ
சுடருறு வடிவேலாய் சொன்முறை கடவேன்யான்
வடதிசை வருமந்நா ணின்னுழை வருகின்றேன். 24

அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் கியாருள ரிசையாய்நீ
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யிதுகாவென் னேவலி னினிதென்றான். 25

—கம்பர்

# 5. இரட்சணிய யாத்திரிகம்

## இரட்சணிய சரிதப் படலம்

## சிலுவைப்பாடு

[யூதர்களும் சேவகர்களும் இயேசுநாதரைச் சொல்லாதன சொல்லி, எள்ளிப் புறக்கணித்தனர். அவற்றையெல்லாம் இயேசு பொறுத்துக் கொண்டார். பின்னர் செவ்வங்கியைக் களைந்து, முன் தரித்திருந்த ஆடையை அணிவித்துச் சிலுவையைச் சுமத்தித் தெருவழியே கொண்டு சென்றனர். சோர்ந்து, வருந்தித் தள்ளாடி நடந்து சென்றார் இயேசு. அந் நிலையிற் செல்லும் இயேசுவைக் கண்ட பெண்டிர், பிள்ளைகள், ஏனையோர் அனைவரும் அழுது, புலம்பிப் பலவாறு அரற்றினர்; மரியன்னையின் மனத் துயருக்கோர் அளவே இல்லை; இறுதியில் கொலைக் களத்திற்குக் கொண்டு சென்றனர். 'இடப் பக்கமும் வலப் பக்கமும் இரண்டு திருடர்களையும் இடையில் இயேசுவையும் சிலுவையில்வைத்து அறைந்தனர். அத்தகு பன்னரிய துயருறும்போதும் அருளாளராகிய இயேசு 'இறைவா! அறியாமையாற் செய்யும் இவர் தம் பிழையை மன்னித்தருள்வாய்' என்று வேண்டிநின்றனர்.]

### பொல்லாங்கனைத்தும் பொறுத்துக்கொள்ளல்

பொல்லாத யூதர்களும் போர்ச்சே வகர்குழுவும்
வல்லானை யெள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித் துணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாம்நம் மீசன் பொறுத்திருந்தார். 1

### தேவர்பிரான் சிலுவையைச் சுமத்தல்

செவ்வங்கி யைக்களைந்து தேவர்பிரான் முன்றரித்த
அவ்வங்கி யைத்தரித்தே யாகடியம் பலபேசித்
தெவ்வர் குழுமிச் சிலுவை தனைச்சுமத்திக்
கவ்வை நகர்கலுழக் கட்டிக் கொடுபோனார். 2

கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன்மறு கூடுவரக் கண்டார் அணிநகரார். 3

### ஐயனைக் கண்ட நகரத்தார் புலம்பல்

மாதருக்கு ளாசிபெற்ற மங்கலையா மன்னைமரி
காதலனுக் கோவிக் கதிநேர்ந்த தென்றுமன
வேதனைப்பட் டாற்றாது மெல்லியலார் தாங்குழுமி
வீதி யிருமருங்கு மொய்த்தார்வாய் விட்டழுது. 4

செந்தா மரைபோற் றிகழுந் திருவதனம்
அந்தோ வதங்கி யழகுகுடி போயதென்பார்
நந்தாக் கருணை நருத்துளிக்குங் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழந்து விட்டதென்பர். 5

பெண்டிரெலா மழுதரற்றப் பிள்ளைகளெ லாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுய ரெனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க. 6

குழனூலிற் பிரியாத குருத்துவமா ரருட்சீடர்
அழலனைய துயர்நலிய வழுதுகரந் துடன்செல்லப்
பழுதறுமெய்ப் பரம்பொருளை மகவாக்கொள் பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோற் சாம்பியுயிர் தளர்ந்தேக. 7

*கொலைக்களத்திற்குக் கொண்டுபோதல்*

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி யெவ்வுயிரும்
செப்பரிய துயருழப்பச் செருசலையைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைம்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான்
கொலைக்களத்தில். 8

*இயேசுவைக் குருசில் அறைதல்*

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்து மிடப்புறத்துஞ்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழியச்
சொற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை. 9

*இயேசுபெருமான் அருள்வாக்கு*

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென வறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம்
அருள்வள்ளல். 10

**H. A. கிருஷ்ண பிள்ளை**

# 6. சீருப்புராணம்

## கபுகாபுப் படலம்

[கபுகாபு முகம்மது நபியைக் காணவேண்டும் என்னும் ஆர்வந் தூண்ட ஒரு சமயம் அவரை, வந்து கண்டு தன் வரலாற்றைக் கூறுகின்றான். 'மதீன நகரில் மறைகள் வல்ல பண்டிதர் ஒருவர்க்கு மகனைப் பிறந்தேன். என் பெற்றோர்க்கு வேறு பிள்ளையில்லாத காரணத்தால் அவர்கள் என்பாற் பேரன்பு கொண்டு, கபுகாபு என்னும் பெயரிட்டு வளர்த்துக் கல்வி கேள்விகளில் வல்லமை பெறப் பயிற்றுவித்தனர். ஒரு நாள் என் வீட்டில் இருந்த பேழைகளில் உள்ள நூல்களில் சிறந்ததை எடுக்க நினைந்து முயன்றபோது முத்திரையிட்ட பொற்செப்பொன்றைக் கண்டேன். அதனைப் பற்றித் தந்தையிடங் கேட்டேன். அதற்கு அவர், மாயமுங் கபடும் நிறைந்த மறையைக் காட்டித் தீன் என்னும் மதத்தைத் தோற்றுவிக்கும் தீயன் ஒருவன் தோன்றுவான் என்று பெரியோர் ஆய்ந்து கண்டு, அவன் பெயர் முதலியனவற்றை எழுதிவைத்துள்ளனர்; அதனை நீ தீண்டாதே என்று கூறினர். எனினும், நான் ஒருவரும் அறியாவண்ணம் ஒரு நாள் அதனை எடுத்துப் படித்தேன். அதனுள் முகம்மது என்ற பெயரும் சிறப்பும் எழுதியிருக்கக் கண்டேன். எவரும் அறியாவண்ணம் அக்கடுதாசியில் ஒளியொன்று தோன்றக் கண்டேன்' என்றான்.]

### நபிகளிடம் கபுகாபு தன் வரலாறுரைத்தல்

எந்தையும் யாயும் பன்னா ளியற்றிய தவத்தால் வந்த
சந்ததி யென்ன வேறு தனையரில் லாது நாளும்
புந்தியி னுவகை கூரப் போற்றிநற் புராணந் தேர்ந்து
நந்தலில் கபுகா பென்னு நாமமு நவின்றிட் டாரால். 1

பேதைமை யகற்றிப் புந்திப் பெருக்கெடுத் தொழுகல் செய்யும்
வேதவா சகம்பு ராண காவிய விதிக ளியாவு
மோதென வோது வித்தென் னுளத்தினுக் கியைந்த தாகப்
போதரச் செய்து நின்றார் பொருவிலா வண்ணத் தன்றே 2

### கபுகாபு தன் வீட்டில் நல்ல நூல் தேடும்பொழுது முத்திரையிட்ட செப்பொன்றைக் காணல்

முன்னவ ரோதும் வேத மூன்றினுந் தெரிந்த நூல்கள்
பன்னெறி ஞான நூல்க ளினையன பலவுந் தொக்க
மின்னவிர் பேழை நூற்றின் மேலுமுண் டருங்காப் பின்றி
யென்னுளம் பொருந்து நூன்மற் றெவையவை தெருள்வன்
மன்னோ. 3

அன்னவிற் பேழை யுட்க ணறையினு டகத்தின் வாய்ந்த
மின்னவிர் கிரணச் செப்பொன் றிருந்ததென் விரலாற் றீண்டி
யென்னிதென் றறிவோ மென்ன வெடுப்பமுத் திரைக டம்மாற்
பின்னரும் வைத்து மீண்டே தோவெனப் பேதுற் றேனால். 4

*அதனைப்பற்றித் தந்தையைக் கேட்டல்*

சிந்தையி னையந் தோன்றித் தெளிவிலா தெம்மான் பாலின்
வந்துதாள் வழுத்தி யில்லின் வயங்குபொற் பேழை யின்க
ணெந்தையே யிருப்ப தென்னென் றியம்பினே னியம்ப லோடுஞ்
சந்ததி யென்னக் கூவி யன்பொடு சாற்று வானால். 5

*தந்தை அதனைத் தீண்ட வேண்டாவென்று*
*தடுத்துக் கூறல்*

சொல்லிய கனகச் செப்பிற் சுடர்மணித் தொகுதி யேனு
மெல்லையி னிதிய மேனு மிழைபல வேனு மியாது
மொல்லைநீ யறியா வண்ண மொளித்ததென் றெள்ளல் வேண்டா
மல்லலம் புவியிற் செய்த தவத்தினால் வந்த மைந்த. 6

மாயமும் கபடும் பொய்யு மறையெனத் திரட்டி முன்னு
ளாயதே வதத்தின் மார்க்கத் தறத்தினை வழுக்கிப் பேசுந்
தீயவ னொருவன் றோன்றித் தீனெனு மதமுண் டாகக்
காய்கதி ரவனைப் போற்பிற் காலத்தில் வருவ னென்றே. 7

அன்னவ னெறியான் மாந்தர்க் கடுபகை பெரிதுண் டாகு
மென்னமுற் பெரியோ ராய்ந்த வியன்மறை யதனுட் கண்டு
பன்னிநிச் சயித்துப் பேரும் புள்ளியும் பரிவிற் றீட்டும்
பொன்னின்முத் திரைநீ தீண்ட லன்றெனப் புகழ்ந்து
சொன்னான். 8

*தந்தை யறியாமல் கடிகாபு அந்தக் கடுதாசியைப் படித்தல்*

வெறியினாற் றந்தை வைகும் வேளையி லின்ரு டானு
மறிகிலா வண்ணம் புக்கவ் வறைதிறந் தரும்பொற் செப்பைக்
குறியொடு மெடுத்து வல்லே கொண்டொரு புறத்திற் சார்ந்து
செறியுமுத் திரையை நீக்கி நோக்கினன் சிறப்ப மன்னோ. 9

விரித்ததை நோக்கும் போழ்தின் விறனபி முகம்ம தென்னத்
திருத்திய பெயரும் வீறுஞ் சிறப்புமெய்ப் புதுமைப் பேறுங்
கருத்துறத் தெளிய வாசித் தனன்கடு தாசின் கண்ணே
யொருத்தருந் தெரியா வண்ண மொளியொன்று பிறந்த
தன்றே. 10

—உமறுப்புலவர்.

# 7. பெருந்தேவனார் பாரதம்

## வாசுதேவனைப் படைத்துணை யழைத்தது

[பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்கும் போர்மூண்டது. திருதராட்டிரன் ஆணைப்படி துரியன் கண்ணனைப் படைத்துணையாக அழைக்கச் சென்றான். இதனையுணர்ந்த கண்ணன், அருச்சுனன் வரும்வரை பொய்த் துயில்கொண்டான். பின்னர் அருச்சுனனும் கண்ணனிடம் படைத்துணை பெற வந்தான். முதலில் வந்த துரியன், துயில்வோன் தலைமாட்டில் ஓர் இருக்கையில் அமர்ந்தான். அருச்சுனன் கால்மாட்டின் அருகிருந்தான். மாயக் கண்ணன் துயிலுணர்ந்து அருச்சுனனைக் காணாதவன்போலக் கண்டு, பின்பு துரியனையும் நோக்கி, 'நீவிர் எப்பொழுது வந்தீர்? என் கருதி வந்தீர்?' என வினவ, 'நிகழவிருக்கும் பாரதப் போரில் என் பக்கம் நின்று துணைபுரிதல் வேண்டும்; நானே முதலில் வந்தேன்' என்று துரியன் கூறினான். அப்பொழுது அருச்சுனன், 'துரியன் வாக்கினால் முதலிற் சொன்னான், நான் நோக்கினால் முதலிற் குறித்தேன்; அதனால் எமக்கே துணையாதல் வேண்டும்' என்றான். 'ஆம் ஆம் நான் முதலில் அருச்சுனனையே கண்டேன்; பின்புதான் நீ யுரைத்தாய்; ஆதலின் மற்றேதேனும் வேண்டுதி' என்றான் கண்ணன். 'அவ்வாறாயின் பொருசமரில் படையொன்றும் தொடேல்' என்றான் துரியன். அது கேட்ட அருச்சுனன், 'கண்ணன் எனக்குத் தேர் செலுத்தினால் போதும்' என்றான். அதற்குக் கண்ணன் இசைந்து இருவர்க்கும் விடை கொடுத்தனுப்பினான்.]

### துரியன் துவாரகைக்கு வருதல்

தாமரையாள் கோனைத் தனக்குத் துணைவேண்டிக்
கோமறுகக் கோனாகை மேந்தினான் — மாமகரம்
வண்டுவரைக் கேதவழ மாலோத மூடாடுந்
தண்டுவரைக் கேகினான் றான். 1

### கண்ணன் பொய்த்துயில் கொள்ளுதல்

சீரணிந்த செம்பொற்கா னட்டித் திகழ்ந்திலங்கும்
பேரமளி தன்னிற் பிறழ்ந்திலங்கப் — போரியலும்
வெஞ்சினமால் யானை விசயன் வருமளவும்
வஞ்சனையாற் கண்வளர்ந்தான் மால். 2

### விசயன் துவாரகை புகுதல்

நாரணன்றன் பாத நினைந்தெழுந்து நல்வேந்தன்
காரணங்க ளாகம்போர் கண்டுகப்பப்—போரணிந்த
வெஞ்சினமால் யானை விசயனுந்தான் போந்தந்த
மஞ்சனையா னூர்புகுந்தான் வந்து. 3

### கண்ணன் துயிலுணர்தல்

பொய்யுறக்கங் கொண்டபிரான் போர்விசயன் றன்னுடைய
செய்ய திருவடிகள் சேர்தலுமே—மெய்யடிமை
தெள்ளியுணர்ந் தாரவர்கள் சிந்தையுள்ளே வீற்றிருப்பான்
பள்ளியுணர்ந் தானவனைப் பார்த்து. 4

### கண்ணன் வினா

செருவீரர் யானைத் திருநெடுந்தோண் மன்ன
ரிருவீரு மெப்பொழுது வந்தீ—ரிருவீரு
மென்போந்த வாறென் றுரைத்தா னெழுசுடரின்
மின்போந்த வாழியான் மீட்டு. 5

### துரியன் வேண்டுகோள்

பாராளு மாசையாற் பாண்டவர்க ளெம்மோடு
போராளு மாறே புரிந்தார்கள்—சீராளுஞ்
செங்கமல மங்கை திருமாலே நீயெமக்காப்
பொங்கமர்செய் யென்றான் புரிந்து. 6

முன்னே புகுந்தேன் முகில்வண்ணா வென்குறையுஞ்
சொன்னே னினியான் சொலவுண்டோ—வென்னோடு
போர்புரிந்த பாண்டவர்கள் போராழிப் போர்க்களத்தென்
றேர்புரிந்து நில்லென்றான் சென்று. 7

### விசயன் வேண்டுகோள்

வாக்கினாற் சொன்னான் மலரடிக்கீழ் யான்பணிந்து
நோக்கினாற் சொன்னவுரை நொய்தாமோ—தாக்கமருட்
போர்செய்வாய் நீயெமக்காய்ப் பூமகடன் னாயகனே
யார்செய்வார் மற்றிங் கமர். 8

### கண்ணன் கருத்துரைத்தல்

முன்னம் விசயனையான் கண்டனனா னின்னிருக்கை
பின்னை யறிந்தனனாற் பெய்கழலாய்—முன்னமே
நோக்கினாற் றன்கருமஞ் சொன்னா னதன்பின்னை
வாக்கினாற் சொன்னாய்நீ மற்று. 9

### துரியன் கண்ணனை வேண்டிக் கொள்ளுதல்

யானு மிவனு மெதிரம்பு கோத்தெங்கள்
சேனை கலந்த செருக்களத்து—மானக்
குடையேந்து வேந்தர் குலவேந்தே கொற்றப்
படையேந்த லென்றான் பணிந்து. 10

விசயன் வேண்டுதல்

இமைப்பளவின் மூன்றுலகங் கொள்வதென் கையி
லமைத்தனுவின் சந்தமையுங் கண்டாய்—சமைத்த
திருநெடுந்தேர் பூட்டழித்த சேவடியாய் நீயென்
பெருநெடுந்தே ரூரப் பெறின். 11

—பெருந்தேவனார்.

## 8. மனோன்மணீயம்

வழுதியின் வீரமொழிகள்

[*சீவக வழுதிக்கும் சேரமன்னனுக்கும் போர்மூண்டது. அப்பொழுது வழுதி தன் படை வீரர்களைக் கூட்டுவித்து வீரவுரை யாற்றுகின்றான். 'வேள்வித் தீயைவிட நாட்டுப் பற்றால் எழும் சினத்தீயே வானவர்க்கு உவப்பானது. அத்தீயினுக்கு நம் எதிரிகளே விறகாகட்டும். இன்று நீங்கள் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் உங்கள் புகழை யுகந்தோறும் சொல்லிக்கொண்டே யிருக்கும். 'பாண்டியர் உரிமைப் பண்பினர்; அவர்தம் மானவுணர்வைத் தீண்டாதீர்; சுதந்தரமே அவர்க்குயிராகும்; இதனைக் கனவிலும் மறவாதீர், என முரசொலி எல்லார்க்கும் எடுத்துரைக்கும். போரிற் படுங்காயங்கள் வெற்றித் திருமகள் தந்த முத்தங்களாகும். இது போர்க்குறிக் காயமன்று; புகழின் காயம். புண்ணன்று; புகழின் கண், நம் பரம்பரையினர் நாடோறும் அனுபவிக்கும் சுதந்தரம் நம் முன்னோர் தந்ததென எண்ணி யெண்ணி மகிழ்வர். உலகில் பிறந்தவரெல்லாம் பிறந்தார் எனப்படுவரோ? புகழுடம்பு பெற்றவரே பிறந்தவராவர். நாளை யெய்தும் புகழில் ஆயிரத்தில் ஒரு கூறுதானே எனக்கு வாய்க்கும் என்று அழுக்காறுங் கொள்ளுகின்றேன். அதனால் எவரேனும் உயிர்க்கஞ்சுவோர் உளராயின் கூறுக; அவரைக் காப்பான இடத்தில் அமர்த்திவிடுவோம். எத்தனையோ பெண்கள் அவர்கட்குக் காவலாக இருப்பர்' என நயமபட வீரவுணர்ச்சியை மூட்டினான்.*]

வானோர் உவக்குந் தீ

அந்தணர் வளர்க்குஞ் செந்தழல் தன்னிலும்
நாட்டபி மானமுள் மூட்டிய சினத்தீ
யன்றோ வானோர்க் கென்றுமே உவப்பு
வந்தவிக் கயவர் நுஞ் சிந்தையிற் கொளுத்திய
வெந்தழற் கவரே யிந்தன மாகுக

### முரசொலி முழக்கம்

இன்றுநீர் சிந்து மிரத்தமோர் துளியும்
நின்றுகம் பலவும் நிகழ்த்துமே இந்தப்
பாண்டிய ருரிமை பாராட்டும் பண்பினர்
நீண்டன்மின் திருந்தலீர் அவர்தஞ் செருக்கு
சுதந்தர மவர்க்குயிர் சுவாசமற் றன்று
நினையுமின் நன்றாய்க் கனவினு மிதனை
யெனமுர சறையுமே எத்திசை யார்க்கும்

### அழியா முத்திரை

இத்தனிப் போரினீ ரேற்றிடுங் காயஞ்
சித்தங் களித்துச் செயமா துமக்கு
முத்தமிட் டளித்த முத்திரை யாகி
யெத்தனை தலைமுறைக் கிலக்காய் நிற்கும்

### இரந்துகோட்டக்க புண்

போர்க்குறிக் காயமே புகழின் காயம்
யார்க்கது வாய்க்கும் ஆஆ நோக்குமின்
அனந்தந் தலைமுறை வருந்தனி மாக்கள்
தினந்தினந் தாமனு பவிக்குஞ் சுதந்தரம்
தந்ததம் முன்னோர் நொந்தபுண் ணெண்ணிச்
சிந்தையன் புருகிச் சிந்துவர் கண்ணீர்
என்றா லட்புண் ணிரந்துகோட் டக்க
தன்றோ அறைவீர் ஐயோ அதுவும்
புண்ணோ புகழின் கண்ணே யெவரே
புண்படா துலகிற் புகழுடம் படைந்தார்

### பிறந்தார் எனப்படுவோர்

புகழுடம் பன்றியிவ் விகழுடம் போமெய்
கணங்கணந் தோன்றிக் கணங்கண மறையும்
பிணம்பல இவரெலாம் பிறந்தா ரென்பவோ
உதும்பர தருவி லொருகனி யதனுட்
பிறந்திறு மசக மிவரினுங் கோடி
பிறந்தா ரென்போர் புகழுடன் சிறந்தோர்
அப்பெரும் புகழுடம் பிப்படி யின்றிதோ
சுலபமாய் நுமக்கெதி ரணுகலால் துதித்துப்
பலமுறை நுமது பாக்கியம் வியந்தோம்

*நல்ல அழுக்காறு*

ஒழுக்கமற் றன்றது வெனினு மும்மேல்
அழுக்கா றுஞ்சிறி தடைந்தோம் நும்மொ
டித்தின மடையு மிணையிலாப் பெரும்புகழ்
எத்தனை யாயிர மாயிரங் கூறிட்
டொத்ததோர் பங்கே உறுமெனக் கெனவே
ஓடுமோர் நினைவிங் கதனால் வீரர்காள்

*வஞ்சப் புகழ்ச்சி*

நீடுபோர் குறித்திவ ணின்றோர் தம்முள்
யாரே யாயினுஞ் சீராந் தங்க
ளுயிருடம் பாதிகட் குறுமயர் வுன்னிச்
சஞ்சல மெய்துவோ ருண்டெனிற் சாற்றுமின்
வஞ்சக மில்லையென் வார்த்தையீ துண்மை
மானமோ டவரையிம் மாநக ரதனுட்
சேமமா யின்றிருத் திடுவந் திண்ணம்
உத்தம மாதர்க ளுண்டுமற் றுங்கே
எத்தனை யோபே ரிவர்க்கவர் துணையாம்.

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

# IV. பல்சுவை

## 1. புறநானூறு

### (அ) நல்ல நிலம்

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. 1

—ஔவையார்.

திணை : பொதுவியல் துறை : பொருண்மொழிக் காஞ்சி

### (ஆ) செல்வத்துப் பயன்

தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்
உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே. 2

—மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்.

திணையும் துறையும் அவை

## 2. வருணனை

### (அ) மழை

வெட்டி யடிக்குது மின்னல் — கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது
கொட்டி யிடிக்குது மேகம் — கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா — என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத் திசையு மிடிய — மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா.

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

### (ஆ) இரவும் பகலும்

சுருள்படு பழுதை விரிபட வரவென
மருள்படச் செய்யும் மாலைவந் துற்றது
கதிர்மதி காணாக் காரிரு ளாட்சி
எதிர்மறைப் பொருளா யெங்கும் படர்ந்தது
கொடுங்கோ லாட்சி நெடும்பக லில்லாது
மடம்படு மாந்தர் மதியொளி பெறுங்கால்
படும்படு மந்தக் கொடும்பரி ணாட்சி
உயிர்வரி னுக்குற ளோடுதல் போலக்
கதிர்வர வறிந்து காரிரு ளோடிப்
பதுங்கி மறைந்தது பகலவன் வளர்ந்தான்.

—முடியரசன்

## 3. சிட்டுக் கவி

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிற
கன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிந்திடு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையி னுரிமையி னுதவி யணிதிகழ்
குருமா மணிதிகழ் குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பா லன்பன் றன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

—மதுரைச் சொக்கநாதர்

## 4. இரட்டுற மொழிதல்

எழுமலைச் சிலேடை வெண்பா

### (அ) ஞானியர்க்கும் ஆலையர்க்கும் சிலேடை

துக்கமற்ற ஞானியருஞ் சூழ்தருநாட் டாலையரும்
இக்கட்டுத் தீர்க்கு மெழுமலையே — தக்கனைமுன்
னேமோ தரன்முகுந்தன் எல்லவருந் தானானன்
தாமோ தரன்முகுந்தன் சார்பு. 1

(ஆ) தவத்தோர்க்கும் வட்டிக்கடைக்காரருக்கும்

நாடுந் தவத்தினரும் நன்குவட்டிக் கீகுநரும்
ஈடேற்றங் கொள்ளு மெழுமலையே—சேடனையோர்
பாயாக்கத் தான்கடலுட் பள்ளிகொண்டான் பங்கயனும்
சேயாக்கத் தான்பொற் சிலை. 2

அ. கணபதிக் கவிராயர்.

## 5. சிற்றிலக்கியம்

### (அ) குற்றாலக் குறவஞ்சி

நாட்டுவளம்

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்
ஒடுங்கக் காண்பது யோகிய ருள்ளம்
வாடக் காண்பது மின்னார் மருங்குல்
வருந்தக் காண்பது சூலுளைச் சங்கு
போடக் காண்பது பூமியில் வித்து
புலம்பக் காண்பது கிண்கிணிக் கொத்து
தேடக் காண்பது நல்லறக் கீர்த்தி
திருக்குற் றாலர்தென் னாரிய நாடே. 1

—திரிகூட ராசப்பக் கவிராயர்.

### (ஆ) தமிழ்விடுதூது

தமிழின் பெருமை

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென்ற—சொற்குள்ளே
எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற
வல்லா யுனக்குரைக்க வல்லேனோ—சொல்லியவுன்
ஈரடிக்குள் ளேவுலக மெல்லா மடங்குமெனின்
நேரடிக்கு வேறே நிகருண்டோ—ஓரடிக்கோர்
ஆயிரம் பொன்னிறைக்கு மையரை வீதியிலே
போயிரந்து தூதுசொல்லப் போக்கினேன்—ஆயிருந்தும்
மாண்பாயோர் தூதுசொல்லி வாவென்பே னென்வருத்தம்
காண்பாயென் பெண்மதிநீ காணாதே. 2

## 6. வழிபாட்டுப் பாடல்கள்

### (அ) திருவருட்பா

தருவளர் நிழலே நிழல்வளர் சுகமே
தடம்வளர் புனலே புனல்வளர் நலனே
திருவள ருருவே யுருவள ருயிரே
திருநட மணியே திருநட மணியே. 1

—இராமலிங்க அடிகள்.

### (ஆ) திருமால் அருள்வேட்டல்

சாதி மதங்கள் தலையெடுத்தே
தரணி யழிக்கும் நிலையறிவாய்
நீதி நெறிகள் குன்றிவரல்
நிமலா அறிவாய் இடர்களைவாய்
ஆதி யந்த மில்லாத
அரசே அன்பே ஆண்டகையே
சோதி அல்லிக் கேணிமகிழ்
சுகமே பார்த்த சாரதியே. 2

—திரு. வி. கலியாணசுந்தரனார்.

### (இ) வேதநாயகர் பாடல்

கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான் புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
துதிசெயும் தருக்க ளெல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும்
பூதந்தம் தொழில்செய் தேத்தும்
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்
அகமேநீ வாழ்த்தா தென்னே. 3

—வேதநாயகம் பிள்ளை.

### (ஈ) நபிநாயக மான்மிய மஞ்சரி

ஒன்றுதெய்வ மொன்றுமத மொன்றுமக்கள் சாதியென
நன்றுபெற வோதியவை நாட்டிநவில் நான்மறையுங்
குன்றுபெறு தீபமெனக் கோத்தளித்துக் காத்தவுங்கள்
துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கெளிதேயோ. 4

—சதாவதானி செய்குதம்பிப் பாவலர்.

# குறிப்புரை

## செய்யுட் பகுதி

## I. வாழ்த்து

### (அ) கடவுள் வாழ்த்து

குறிப்பு :

கடவுள் வாழ்த்துப் பாடல் தாயுமான சுவாமி பாடல் என்னும் நூலில், 'பொன்னை மாதரை' என்னும் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டது. தாயுமானவர் சோழநாட்டுத் திருமறைக்காடு என்னும் ஊரில், கேடிலியப்பப் பிள்ளைக்கும் கஜவல்லியம்மையாருக்கும் பிறந்தவர். இவர் காலம் கி. பி. 17ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும். 18 ஆம் நூற்றாண்டென்றும் சிலர் கருதுகின்றனர். மௌன குருவிடம் உபதேசம் பெற்றவர். திருச்சிராப்பள்ளியில் ஆண்டுவந்த விசயரங்க சொக்கநாத நாயக்கரிடம் பணி புரிந்தவர். மனைவியின் பெயர் மட்டுவார்குழலி. இராமநாதபுரத்திலுள்ள இலட்சுமிபுரமெனப்படும் காட்டூருணியில் இறைவனடி எய்தினர். இவர் தம் பாடல்கள் படிப்பதற்கு எளியன; பத்திச் சுவையூட்டுவன; இறைத் தன்மையை நன்கு விளக்குவன. சமரச நிலையை யுணர்த்துவன.

அருஞ்சொற்பொருள் :

ஒளியை-ஒளிவடிவாகிய இறைவனை; மெய்யினை-உண்மைவடிவான வனை; நண்ணுகின்றவர்-அணுகும் அடியார்; எண்ணியெண்ணி-அடுக்குத் தொடர்; இரவும் பகலும்-உம்மை எண்ணும்மை.

### (ஆ) மொழி வாழ்த்து

குறிப்பு :

மொழி வாழ்த்துப் பாட்டு மாரிவாயில் என்னும் நூலிலிருந்து எடுக்கப் பட்டது. ஆசிரியர்: நாவலர் ச. சோமசுந்தர பாரதியார். இவர் சட்டக் கல்வி பயின்றவர்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணிபுரிந்தவர்; சிறந்த சொல்லாற்றலும் அஞ்சா நெஞ்சமும் வீரப் பொலிவும் கொண்டு விளங்கினவர்; ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியவர். பசுமலையில் வாழ்ந்து வந்தவர்.

அருஞ்சொற்பொருள் :

நாவலந் திவு-இந்தியா; நாயகம்-தலைமை; ஒளிர்வாள்-விளங்குபவள்; கவின்-அழகு; கருவுயிர்த்த-ஈன்ற; காரிகை-பெண். சிவபெருமானைப் பரவைபால் தூது செல்ல வைத்ததையும், திருமால் பசுந்தமிழ்ப் பின் சென்றதையும் நினைவிற் கொண்டே 'கடவுளர்க்கு ஏவல்தரும் இறைவி' எனப்பட்டது.

## (இ) நாட்டு வாழ்த்து

குறிப்பு :

'அகிலும் தேக்கும்' எனத் தொடங்கும் பாட்டு, பாரதிதாசன் அவர்களால் பாடப்பட்ட பாடலின் ஒருபகுதி. இவர் கனக சுப்புரத்தினம் என்னும் இயற் பெயரினர். பாண்டிச்சேரியைச் சார்ந்தவர்; ஏராளமான பாடல்களை இயற்றித் தமிழர் நெஞ்சங்களில் நிலைத்து நிற்பவர்; புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் போற்றப்பட்டவர். இவர்தம் துணைவியார் பழனியம்மாள் என்னும் பெயரினர். தந்தையின் பெயர் கனகசபை முதலியார். காலம்: 29-4-1891 — 21-4-1964 பாரதிதாசன் கவிதைகள், பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு தமிழியக்கம் முதலான நூல்கள் பலவற்றைத் தந்தவர்.

அருஞ்சொற்பொருள் :

அகில்-ஒருவகை மரம்—மணந்தரும் புகைக்குரியது; முகில்-மேகம்; மணக்கும்-மணம் வீசும்; அழியாக் குன்றம்-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

## பாரத தேவி

குறிப்பு :

இப்பாடலை இயற்றியவர் சி. சுப்பிரமணிய பாரதியார். பெற்றோர்: சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மையார். ஊர்: எட்டயபுரம். விடுதலை வேட்கை, நாட்டுப்பற்று, மொழிப்பற்று இவற்றை இவருடைய பாடல்களிலே பரக்கக் காணலாம். எளிய இனிய சொற்களால் ஆனவை இவர் பாடல்கள். காலம்: 11-12-1882 — 11-9-1921.

அருஞ்சொற்பொருள் :

பாரதநாடு பராசக்தியாக உருவகஞ் செய்யப்பட்டுள்ளது. காலன்—எமன்; கம்பனம்—நடுக்கம்; நீலக்...கோலத்தினள்-கடல் போன்ற கரிய நிறத்தையுடையவள்; மூன்று நேத்திரம்—முக்கண்; காலக்...இட்டாள்—காலங்கடந்தவள் என்னுங்குறிப்பு; காற்படின்-காலில் வீழ்ந்து வணங்கினால், பாரததேவியின் திருவடியை வணங்கினால் எமனும் நம்மைக் கண்டு நடுங்குவன்; அவ்வாறிருக்க வேறொரு பகையும் உளதோ என்றவாறு.

வினாக்கள் :

1. நான் தொழுந் தெய்வம்-என்று தாயுமானவர் எவரைக் கூறுகின்றார் ?

2. தமிழ்க்கன்னி எவ்வெவ் வியல்பினள் ?

3. தமிழ்நாட்டின் வளங்களை எழுதுக.

4. பாரதநாடு எவ்வாறு உருவகிக்கப்படுகிறது ? அவள் காற்படியின் விளையும் பயன் யாது ?

# II. அறவுரை

## 1. திருக்குறள்

குறிப்பு :

குறள் வெண்பாக்களால் ஆகிய நூல். திரு என்னும் அடைமொழி பெற்றது. தமிழர்தம் தலையாய நூல் இது. அதிகாரத்துக்குப் பத்துப் பத்துப் பாடல்களாக 133 அதிகாரங்களையுடையது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பிரிவுகளையுடையது.

இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர்காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்றும் அதற்கு முன்பென்றுங் கூறுவர். இவர் வரலாறு சரியாகத் தெரியவில்லை. ஆயினும் பல புனைகதைகள் வழங்கி வருகின்றன.

அருஞ்சொற்பொருள் :

1. நீந்துவர்-கடப்பர்; நீந்தார்-நீந்தமாட்டாராய் அழுந்துவர். இறைவனடி (சேர்ந்தார்) பிறவிப் பெருங்கடலை நீந்துவர்; சேராதார்—அக் கடலை நீந்தார். சேர்ந்தார் என்பது சொல்லெச்சம் பிறவி, கடலாக உருவகஞ் செய்யப்பட்டமைக் கேற்ப இறைவனடி புணையாக உருவகஞ் செய்யப்படாமையினால் இஃது ஏகதேசவுருவகம்.

2. கெடுப்பதூஉம்-பெய்யாமற் கெடுப்பதும். சார்வு-துணை. எடுப்பதூஉம்-பெய்து வாழவைப்பதும். கெடுப்பதூஉம், எடுப்பதூஉம்-இன்னிசையளபெடைகள். மற்று-வினைமாற்றுப் பொருளில் வந்தது, எல்லாம் வல்லது மழை என்றபடி.

3. மாசு-குற்றம், ஆதல்-ஆகுக. ஆகுல நீர-ஆரவாரத்தன்மையுடையன. பிற-அறமல்லாத சொல்லும் வேடமும். ஆதல்-வியங்கோள் வினைமுற்று.

4. அன்று-இறக்குங்காலை. அறிவாம்-செய்வோம். என்னாது-எனக் கருதாமல். மற்று-அசைநிலை. பொன்றுங்கால்-(உடல்) அழியும்போது. பொன்றா-அழியாத. பொன்றா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

5. வீழ்நாள்-(அறஞ்செய்யாது) கழியும் நாள். படாஅமை-உண்டா காதவாறு. நன்று-அறம். வாழ்நாள்-பிறவி. படாஅமை-இசை நிறையளபெடை.

6. என்புஇலது-எலும்பில்லாத உடம்பு; புழு முதலியன. அன்பு இலது-அன்பற்ற உயிர். அறம்-அறக்கடவுள். என்பு-எலும்பு என்பதன் மரூஉ. இச் செய்யுள் உவமையணி.

7. யாக்கை அகத்து உறுப்பு-உடலின்கண் நின்று (இல்லறத்திற்கு) உறுப்பாகிய அன்பு. புறத்து உறுப்பு-இடம், பொருள், ஏவல் செய்வார் முதலாயின. எவன் செய்யும்-இல்லறத்திற்கு என்ன பயனைத் தரும்.

8. வித்து-விதை நெல். விருந்தோம்பி-விருந்தினரைப் பேணி. மிச்சில்-மீதம். மிசைவான்-உண்பான். புலம்-விளைநிலம். தானே விளையும் என்பது கருத்து.

9. செல்விருந்து-தன்னிடத்து வந்த விருந்து. வானத்தவர்க்கு விருந்து என்றது மறுபிறப்பில் தேவனாவன் என்றவாறு.

10. துணை-அளவு. பயன் தெரிவார்-பயனை அறிந்தவர். துணையா-துணையாக என்பதன் தொகுத்தல் விகாரம்.

11. கொன்ற அன்ன-கொன்றாலொத்த. இன்னா-தீயன. செயினும்-செய்தாலும். ஒன்று நன்று-(அவர் செய்த) ஒரு நன்மையை. உள்ள-நினைக்க. கொன்றன்ன-தொகுத்தல் விகாரம்.

12. ஒருமை-ஒரு பிறவி. ஐந்து-ஐம்பொறிகள். அடக்கல்-அடக்கிக் கொள்ளுதல். எழுமை-எழுபிறப்பு. ஏமாப்பு-அரண்.

13. யா-(காக்கவேண்டிய) எல்லாவற்றையும். சொல் இழுக்குப் பட்டு-சொற்குற்றம் உண்டாகி. சோகாப்பர்-தாமே துன்புறுவர்.

14. குடிமை-உயர்குடிப் பிறப்பு. *இழுக்கம்-ஒழுக்கத்திற் றவறுதல்.

15. ஒழுக்கத்தின்-ஒழுக்கத்தினால். இழுக்கத்தின்-ஒழுக்கந் தவறுவதனால். எய்தாப் பழி-அடாத பழி.

16. அழுக்காறு-பொறாமை. திரு செற்று-செல்வத்தை அழித்து. தீயுழி-நரகம். அழுக்காறு இருமையுங் கெடுக்கும் என்பதாம்.

17 அவ்விய நெஞ்சத்தான்-பொறாமை யுடையவன். செவ்வியான்-மனநலம் உடையவன். நினைக்கப்படும் - (காரணம் பழவினை என) ஆராயப்படும்.

18. தாம் உடைமை-தமது செல்வத்தை. வன்கணவர்-அருளில் லாதவர்.

19. இரத்தலின் – இரத்தலை விட. மன்ற – உறுதியாக. நிரப்பிய-தேடி நிரப்பி வைத்தவைகளை. தமியர் உணல்-தனித்திருந்து உண்ணல்.

20. சாதலின்-சாதலைப்போல. இன்-ஐந்தனுருபு ஒப்புப் பொருளில் வந்தது. இயையாக்கடை-இயலாவிடின்; வினையெச்சம். இனிததூஉம்-இன்னிசை யளபெடை.

21. மனத்தொடு வாய்மை-மனத்தொடு பொருந்த உண்மையை. தவத்தொடு தானம்-தவமும் தானமும். செய்வாரின் தலை-செய்பவரை விடச் சிறப்புடையன். செய்வாரின்-இன் உருபு உறழ்ச்சிப் பொருளில் வந்தது. அகத்தாற் செய்வதே சிறப்புடைத்து என்றவாறு.

22. மெய்யா-மெய் நூல்களாக. பிற-பிற அறங்கள். வாய்மையின் நல்ல-வாய்மையினும் நல்லனவாகிய. எனைத்தொன்றும்-எவ்வகையாலும்.

23. சேர்ந்தாரைக் கொல்லி-நெருப்பு. இனம்-உறவு, நட்பு ஆகிய. ஏமப் புணை-காப்பாகவுள்ள தெப்பம் போன்றவர். சுடும்-அகற்றிவிடும்.

24. இணர் எரி-பல சுடர்களையுடைய பெருநெருப்பில். வெகுளாமை புணரின்-அவனை வெகுளாமை கூடுமாயின்.

25. மாசு அற்றார்-குற்றமற்றவர்; மனந்தூயவர் கோள்-கொள்கை.

26. அறிவான்-அனுபவித்து அறிபவன். மன் உயிர்க்கு-நிலைபேறுடைய பிறவுயிர்களுக்கு. இன்னா-இன்னாதன. என் கொலோ-யாது காரணத்தால்.

27. அற்கா இயல்பிற்று-நிலையாத இயல்பினையுடையது. அற்குப-நிலைபெற்ற அறங்களை; பலவின்பாற் பெயர். ஆங்கே-அப்பொழுதே. செயல்-செய்க-அல்ஈற்று வியங்கோள்.

28. சாக்காடு-இறப்பு. உறங்குதலும் விழித்தலும் இயல்பாகவும் விரைவாகவும் மாறிமாறியும் வருதல்போலப் பிறப்பும் இறப்பும் வரும் என்பதாம்.

29. தாம் இன்புறுவது – தாம் இன்புறுவதற்குக் காரணமாகிய கல்விக்கு. உலகு இன்புறக் கண்டு-உலகத்தார் இன்புறுதலைக் கண்டு. காமுறுவர் - மேலும் மேலும் அதனையே விரும்புவர். உலகு - இடவாகு பெயர்.

30. செவிக்கு உணவு-கேள்வி. வயிற்றுணவினும் செவியுணவே சிறந்ததென்றவாறு.

31. கற்றிலன் ஆயினும்—உறுதி நூல்களைத் தான் கல்லாதவனாயினும். கேட்க—கற்றுணர்ந்தவர் சொல்லக் கேட்டறிக. ஒற்கத்தின்—மனத் தளர்ச்சியில். ஊற்று ஆம் துணை—பற்றுக்கோடாகும். ஊன்று ஊற்று எனத் திரிந்து நின்றது. ஊற்று—பற்றுக்கோடு; ஆகுபெயர். கேட்க—வியங்கோள்.

32. செவியிற் சுவை—செவியால் நுகரப்படும் சொற்சுவை பொருட் சுவை. வாய் உணர்வு—வாய்ச் சுவைகளை உணரும் உணர்வு. அவியினும்—செத்தாலும். செவிச் சுவை அறியார் செத்தாலும் வாழ்ந்தாலும் ஒன்றுதான். செவியின்—செவியால்.

33. அற்றம் காக்கும் கருவி—இறுதி வாராமற் காக்கும் கருவி. செறுவார்க்கு—பகைவற்கு. அழிக்கலாகா உள் அரண் என மாற்றுக.

34. மனந் தூய்மை—அறியாமை நீங்கல். செய்வினை தூய்மை—நல்வினை செய்தல். இனந் தூய்மை தூவா—இனந் தூய்மை பற்றுக்கோடாக. தூவாக என்பதில் 'க' தொக்கது. (தொகுத்தல் விகாரம்).

35. ஆக்கம்—செல்வம். மன்னுயிர்—நிலைபேறுடைய உயிர்.

36. பீலி—மயிலின் தோகை. சாகாடு—வண்டி. இறும்—முறியும். சால—மிகுதியாக. பெயின்—ஏற்றினால். ஒருவன் வலியனாயினும், எளியரென்று பலரோடும் பகைமை கொண்டால் அவ் வெளியர் ஒன்றுகூடியவிடத்து வலியன் அழிந்துபடுவன் என்பதாம். இது பிறிது மொழிதல் அணி. சாகாடும் என்பதில் உம்மை சாகாட்டின் வலிமை மிகுதியைக் குறித்தது.

37. அளவு அறிந்து—பொருளின் எல்லையறிந்து, உளபோல—உள்ளன போலத் தோன்றி. இல்லாகி—இல்லையாகி. தோன்றாக் கெடும்—தோற்றமுமில்லாமற் கெடும்.

38. காதன்மை—அன்புடைமை. கந்தா—பற்றுக் கோடாக; காரணமாக. அறிவறியார்—அறிய வேண்டுவனவற்றை அறியாதவரை. தேறுதல்—தெளிதல்.

39. தேரான்—ஆராயாமல். ஐயுறவும்—ஐயப்பாடும். தீரா இடும்பை—நீங்காத் துயரம். தீரா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

40. வான் நோக்கி—மழையை நோக்கி. உலகு—உலகத்து உயிர்கள். கோல் நோக்கி—செங்கோன்மையை நோக்கி. எடுத்துக் காட்டுவமை அணி.

41. இறை—அரசன். வையகம்—வையகத்தை. முறை—அவன் செங்கோன்மையே. முட்டாச் செயின்—இடையூறுவரினும் கோடாமல் செய்தால். முட்டாது என்பது முட்டா என வந்தது செய்யுள் விகாரம். (ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்)

42. வேலொடு நின்றான்-கள்வன். இடு-பொருள் தா என வேண்டுதல். கோலொடு நின்றான் இரவு-ஒறுத்தல் தொழிலுடன் நிற்கும் அரசன் பொருள் வேண்டுதல். உவமையணி.

43. இடும்பை-துன்பம். படாஅ-இசை நிறை யளபெடை. சொற்பொருள் பின்வருநிலையணி.

44. விழையான்-விரும்பாதவனாகி. இடும்பை இயல்பு என்பான்-துன்பம் வருதல் இயல்பு என்று கருதுபவன்.

45. அதனால்-அச்சொல்லால். சுட்டுச் சொல் செய்யுளில் முன் வந்தது. காத்து ஓம்பல்-(சோர்வு) நிகழாமல் போற்றிக் காக்க. ஓம்பல்-உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று.

46. உறவரினும்-மிகுதியாக வரினும். துணிவாற்றி-துணிவுடன் இன்பம் பயக்கும் வினை-பயன்தரும் செயல்களை.

47. எனைத்திட்பம்-படை, அரண், நட்பு முதலிய வலிமைகள். வினைத்திட்பம் வேண்டாரை-வினைத்திட்பத்தை விரும்பாத அமைச்சரை. உலகு வேண்டாது-உயர்ந்தோர் மதியார்.

48. அரம்-அரத்தின் கூர்மை. மரம்-ஓரறிவுயிராகிய மரம்.

50. விழைவதூஉம் விட்டேம் என்பார்-யாவரும் விரும்பும் உணவையும் விட்டோம் என்னும் துறவியர். விழைவதூஉம்-இன்னிசை யளபெடை.

வினாக்கள் :

1. பிறவிப் பெருங்கடலை நீந்துபவரும் நீந்தாதவரும் யார் யார் ?
2. வான் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது ?
3. அறன் வலியுறுத்தல் பற்றிய வள்ளுவர் கருத்தைத் தொகுத்து எழுதுக.
4. அன்புடைமை பற்றிய வள்ளுவர் கருத்தைத் தொகுத்து எழுதுக.
5. விருந்தோம்பலின் சிறப்பை வள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார் ?
6. செய்ந்நன்றி யறிதல் பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?
7. அடக்கமுடைமை பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?
8. ஒழுக்கமுடைமை பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?
9. அழுக்காறாமை பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?
10. ஈகையைப் பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.
11. வாய்மை பற்றி வள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.
12. வெகுளாமை பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?
13. இன்னா செய்யாமை பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?

14. நிலையாமை பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?

15. கல்வியின் சிறப்பை வள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார் ?

16. கேள்வி பற்றிய வள்ளுவர் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

17. அறிவுடைமை பற்றி வள்ளுவர் கூறுவது யாது ?

18. சிற்றினஞ் சேராமை பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?

19. வலியறிதல் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?

20. தெரிந்து தெளிதல் பற்றி வள்ளுவர் கூறுவன யாவை ?

21. செங்கோன்மையின் சிறப்புக்களை வள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார் ?

22. கொடுங்கோன்மை பற்றி வள்ளுவர் கூறுவதுயாது ?

23. இடுக்கணழியாமை பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?

24. சொல்வன்மை வேண்டுவோர் யாது செய்தல் வேண்டும்? ஏன்?

25. வினைத்திட்பம் பற்றிய வள்ளுவர் கருத்துக்கள் யாவை ?

26. மக்கட் பண்பில்லாதவர் எத்தகையவர் ?

27. உழவின் சிறப்பைப் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை ?

28. பின்வரும் அணிகளைத் திருக்குறளிலிருந்து எடுத்துக்காட்டுக்கள் தந்து விளக்குக.

1. ஏகதேச உருவக அணி.
2. உவமை அணி.
3. பிறிது மொழிதல் அணி.
4. எடுத்துக்காட்டுவமை அணி.
5. சொற்பொருட் பின் வருநிலை அணி.

## 2. இன்னிலை

இனியநிலையைக் கொடுப்பதால் இந்நூல் இன்னிலை என்று பெயர் பெற்றது. இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுக்குள் ஒன்றாகும் என்பர். சிலர் அவற்றின் வேறாயது என்றுங் கூறுவர். இதனைப் பாடியவர் பொய்கையார்; தொகுத்தவர் மதுரையாசிரியர்; அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், வீட்டுப்பால் என நான்கு பகுதிகளையுடையது இந்நூல். மொத்தம் நாற்பத்தைந்து செய்யுட்களே இந்நூலில் உள்ளன.

அருஞ்சொற்பொருள் :

1. உடைமை-செல்வம். அருது-இடைவிடாமல். ஈட்டல்-ஈட்டுக. யாண்டும் உறுதுணையாம்-எங்கும் தக்க துணையாகும். உடைமையராக-செல்வராக. இன்று-இன்றி; இல்லாமல். சுற்றம் உடையவரும்-சுற்றத்தாரும். வேறுபடும்-வேறாவர்.

ஈட்டல்-வியங்கோள் வினைமுற்று. இன்றி என்னும் வினையெச்சம் இன்று எனத்திரிந்து நின்றது.

2. கடல் முகந்து-கடல்நீரை மொண்டுகொண்டு. நீம்பெய்யலை ஊழ்க்கும்-(உப்பை நீக்கி) நல்ல மழையைப் பெய்யும். எழிலி-மேகம். மடன்-மடமை. கோது-அறியாமை. ஏமம்-இன்பம். மாண்புறுத்தலும் ஏமம் படைத்து ஆக்கலும் பண்பறிந்தோர் சால்பாகும். எடுத்துக்காட்டுவமையணி.

வினாக்கள்:

1. செல்வம் உண்மையாலும் இன்மையாலும் விளைவது யாது ?

2. அறிஞர் கடமைகள் யாவை ? இங்கு எடுத்துக் காட்டப்பட்ட உவமை யாது ?

3. 'கடன் முகந்து'-என்ற பாடலில் அமைந்த அணியாது ?

## 3. பழமொழி

ஒவ்வொரு பழமொழியை இறுதியில் கொண்ட நானூறு வெண்பாக்களை உடைய நூலாகையால் இது பழமொழி என்று வழங்கப்படுகிறது. ஆசிரியர் பாண்டிய நாட்டைச் சார்ந்த முன்றுறைக்கு அரசராக விளங்கிய முன்றுறையரையனார். காலம்: கடைச்சங்க காலம் என்பர். பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று

அருஞ்சொற்பொருள் :

1. ஆற்றவும்-மிகுதியும். தமவே-அவருடைய நாடுகளேயாகும். ஆயினல்-அங்ஙனமாயின். ஆற்று உணா-வழியிற் கொண்டு செல்லும் கட்டமுது. வேண்டுவது இல்-வேண்டியதில்லை. 'கற்றார்க்கு ஆற்றுணா வேண்டுவதில்' என்பது பழமொழி.

2. ஆற்றார் எனினும்-அறத்தைச் செய்யாரெனினும், சிறந்தவற்றால்-சிறந்த நெறிகளால். கலை தாங்கி நைவது போலும் நுசுப்பினாய்-மேகலை தாங்குவதால் இறுவது போலும் இடையினையுடைய பெண்ணே; மகடூஉ முன்னிலை. கேள்-சுற்றத்தார்- கேள்-ஆகுபெயர். 'நல்லறம் செய்வது செய்யாது கேள்' என்பது பழமொழி.

3. தமராய்-உறவினர்போல். மிக்கார் என்று-குணத்தினால் மிக்கவரென்று. தேறார்-தெளிந்து நட்புச் செய்யார். கொக்கு ஆர் வளவயல் ஊர-கொக்கு மிகுந்த வளநிறைந்த ஊரையுடையவனே; ஆடூஉ முன்னிலை அக்காரம்-சர்க்கரை, ஆல்-அசை நிலை- 'தினலாமோ அக்காரம் சேர்ந்த மணல்' என்பது பழமொழி.

வினுக்கள் :

1. கல்வியறிவுடையார் எய்தும் சிறப்பு யாது ?

2. அறத்தின் மேன்மையைப் பழமொழி எவ்வாறு இயம்புகிறது ?

3. 'அக்காரஞ் சேர்ந்த மணல்'-இவ்வுவமையை விளக்கி உவமேயத்துடன் பொருத்திக் காட்டுக.

## 4. நாலடியார்

இது, நான்கு அடிகளையுடைய வெண்பாக்களால் ஆன நூலாதலின் நாலடியார் என்னும் பெயர் பெற்றது. இது வேளாண் வேதம் எனவும் கூறப்படும். அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்களாக நாற்பது அதிகாரங்களை யுடையது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளையுடையது ஜி. யு. போப் என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. ஆசிரியர்: சமண முனிவர் பலர். காலம்: கடைச் சங்க காலம் என்பர். இதனைத் தொகுத்தவர் பதுமனுர் என்பவராவார். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று.

அருஞ்சொற்பொருள் :

1. சொல் அளவு அல்லால்-சொல் மாத்திரம் அன்றி. தொல் சிறப்பின்-பழமையான சிறப்புடைய. ஒண்பொருள்-ஒளி பொருந்திய செல்வம். ஆள்வினை-முயற்சி. பொருள், தவம், கல்வி, ஆள்வினை இவற்ருல் குலம் மேன்மையுறும் என்றவாறு. என்ற இவற்ருன் என்பதில் அகரம் தொகுத்தல் விகாரம்.

2. கல்லா-சிறந்த நூல்களைக் கற்று. தலையாயர்- உத்தமர். நல்லவை-அறத்தாற் பெற்ற பொருள்களை. துவ்வா-அனுபவித்து. இடைகள்-மத்திமர். கடைகள்-அதமர். உண்ணேம்-உண்ணப் பெற்றிலோமே. ஆரப் பெறேம்-நிறையப் பெற்ரேமில்லையே. முனிவு-வெறுப்பு. கண்பாடு - உறக்கம். பெறேமியாம்-பெறேம்+யாம். கல்லா, துவ்வா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள்.

3. அழல்-வெயில்; வெம்மை. மண்டு போழ்தின்-மிகுந்த காலத்தில். நேர் ஒப்ப தாங்கி-ஒருபடித்தாய்க் காத்து. பழுமரம்-பழுத்த மரம். துய்ப்ப-அனுபவிக்க. வருந்தி-முயன்று. கடன்-கடமை.

வினுக்கள் :

1. குலம் எவ்வெவற்ருல் மேன்மை பெறுகின்றது ?

2. தலை, இடை, கடை மக்கள் இயல்புகள் யாவை ?

3. நல்லாண்மகனுடைய கடமை யாது ?

## 5. ஆசாரக்கோவை

மக்கள் ஒழுக வேண்டிய ஒழுகலாறுகளைக் கோவைப்படுத்திக் கூறுவதால் இந்நூல் ஆசாரக்கோவை என்னும் பெயர் பெறுகிறது. இது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. நூறு பாடல்களையுடையது. ஆசிரியர்: வண்கயத்தூர் என்னும் ஊரினரான பெருவாயின் முள்ளியார். காலம்: கடைச்சங்க காலம் என்பர்.

அருஞ்சொற்பொருள் :

1. வைகறை யாமம்–விடியற்காலமாகிய பின் சாமம். ஒண்பொருள்–ஒள்ளிய பொருளுக்கு வருவாயான செயல்கள். வாய்வதில்–வாய்ப்புடைத்தாவதோடு.

2. பிறப்பு–நற்குடிப் பிறப்பு. நெடு வாழ்க்கை–நீண்ட வாழ்நாள். வனப்பு–அழகு. நிலக்கிழமை–நிலத்துக்கு உரிமை. மீக்கூற்றம்–புகழ். முலக்கணத்தால்–முறையாக. எய்துப–அடைவர்.

3. சொல் சோர்வு–சொல் தவறுதல். வைதல்–திட்டுதல். நிலைமை–பதவி. ஆண்மை–ஆற்றல். தக்க செயல்–தகுதியுடையனவாகச் செய்க.

வினாக்கள் :

1. வைகறைப் பொழுதில் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் யாவை ?

2. ஒழுக்கமுடையார் எய்தும் பயன்கள் யாவை ?

3. எவ்வெவற்றிற்கேற்ப எவ்வெவற்றைச் செய்தல் வேண்டும் ?

## 6. சிறுபஞ்சமூலம்

கண்டங் கத்தரி வேர், சிறு வழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சி வேர் என்னும் ஐந்து வேர்களைக்கொண்டு செய்யப்பட்ட மருந்து, உடற்பிணியை நீக்கி நலத்தைக் கொடுப்பதுபோல, இந்நூலில் வரும் ஒவ்வொரு செய்யுளும் கூறும் ஐந்தைந்து கருத்துக்களும் அறியாமையை அகற்றி அறிவு நலத்தைக் கொடுப்பதால் இந்நூல் சிறுபஞ்சமூலம் என்று பெயர் பெறுகிறது. பஞ்சமூலம்–ஐந்து வேர். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. ஆசிரியர்: காரியாசான்.

அருஞ்சொற்பொருள் :

1. முன் பொருள் செய்யாதார் – முதுமை வருமுன்பே பொருள் தேடி வைக்காதவர். ஆதர் – அறிவிலார். துன்பம் இலேம் – (முன்பு செல்வமுடையால்) ஒரு துன்பமும் இல்லாதிருந்தோம். வனப்புடையேம் அழகு உடையவராயிருந்தோம்.

2. வனப்பு – அழகு. உகிர் – நகம். செயிர் – குற்றம். சொல்லின் வனப்பு – சொல்வன்மையான் வரும் அழகு புறத்துறுப்புக்களால் உண்டாகும் அழகு அழகன்று;–நூலொடு பொருந்திய சொல்வன்மையால் வரும் அழகே அழகு என்றவாறு.

வினுக்கள் :

1. தேவர், பூதர், ஆதர், எருது எனப்படுவார் யார் யார் ?
2. எவை வனப்பல்ல ? எது வனப்பாகும் ?

# III. தொடர் நிலைச் செய்யுள்

## 1. சிலப்பதிகாரம்

சிலம்பால் விளைந்த வரலாற்றைக் கூறும் நூலாதலின் இது சிலப்பதி காரம் என்னும் பெயர் பெற்றது. சிலம்பு + அதிகாரம். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐம் பெருங் காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க் காப்பிய மெனவும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் கூறப்படும்; புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று பிரிவுகளைக் கொண்டது; நம் பாடப் பகுதி புகார்க் காண்டத்தில் உள்ளது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்; உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்னும் மூன்று உண்மைகளை விளக்குவதே சிலம்பின் நோக்கம். ஆசிரியர்: இளங்கோ வடிகள், இவர் செங்குட்டுவன் தம்பி. இமயவரம்பன் நெடுஞ்சேரலாத னுக்கும் நற்சோணைக்கும் மகனாகத் தோன்றியவர். சைன சமயத்தவர். காலம்: கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

அருஞ்சொற்பொருள் :

1. இலவந்திகை–அரசர்க்குரிய சோலை. எயில்–மதில். 2 தாழ் பொழில் – மரங்கள் தாழ்ந்த சோலை. தண்பதப் பெருவழி – புனலாடச் செல்லும் பெருவழி. 3. வாயில்–கரை. கடைமுகம்–சங்க முகத்துறை. 4. குடதிசைக் கொண்டு – மேற்கு நோக்கி. 5 கோடு – கரை. 6. காவதம் – காத தூரம். கவுந்திப் பள்ளி – கவுந்தியடிகள் எழுந்தருளி யுள்ள பள்ளி. 7. பொதும்பர்–சோலையில். ஆங்கண்–அப்பொழுது. 8. இறும்–இற்றுவிடும் எனத் தக்க. நுசுப்பு–இடை, இனைந்து–வருந்தி. 9. நறும் பல் கூந்தல் – நறிய பலவாகிய கூந்தலையுடைய கண்ணகி. உயிர்த்து–மூச்செறிந்து. 10. முதிராக் கிளவியின்–மழலைச் சொற்களால். எயிறு–பற்கள். 12 மதுரை அணிமையிலுள்ளது என்பான் முப்பது என்றது ஆறைந்து எனக்கூறினன். உம்பர்–அப்பால். 13. ஐங்கூந்தல்–

ந்து பகுப்பாகிய கூந்தலையுடைய கண்ணகியே-நணித்து-(அணிமையில்) உள்ளது. நக்கு-நகைத்து. 14 தேமொழி-கண்ணகி. சிறையகம்-பள்ளியகம். 15 ஐயை தலைவி. 17. பெருமகன் திருமொழி அருக தேவன் ஆகமக் கூற்று. 18. உறுகண்ணாளர்-தீவினையாளர் அல்லது வறியவர். இன்-ஒப்புப் பொருளில் வந்தது. 19. கடை கழிந்து-புறம் இடம் விட்டு நீங்கி. 20. உரையாட்டு-சொல்லத் தக்கது. 21. வரை பொருள் வேட்கையேன்-பொருளீட்டும் விருப்பினேன்.

22. பாடகம்-சிலம்பு. பரல்-பருக்கைக் கற்கள். உழவா-வெல்ல மாட்டா. 24. செவ்வி - தன்மை, அறிகுநர் யாரோ - (ஊழின்வலியை) அறிவார் யாரோ. 25. ஒழிக என-செல்லுதல் தவிர்க எனத் தடுப்பினும். 27. அறிவன்-அருகதேவன். 28. மதுரைக்கு - மதுரைக்குச் செல்ல. 30. போதுவல் - செல்வேன். போதுமின் - வருவீர். 33. தோளி-தோள்களையுடையவள்.

34. கோவலன்-விளி. 35. ஏதம்-துன்பம். யாங்கும்-எவ்விடத்தும். கேண்மோ - கேட்பாயாக. 36. வெயில் நிறம் - வெயிலின் தன்மை. பெருஅ-இசைநிறை யளபெடை. 37. தண்டலை-சோலைவழி. 38. பக-பிளக்க, அகழ் - தோண்டப்பட்ட 39. தாது - மகரந்தம். பொங்கர் - பழம்பூக்கள். 40. பொய்யறை-பொய்க்குழி. போற்று மாக்கள்-கவனித்துச் செல்லா மாந்தர். 42 செம்மலின்-பழம் பூக்களினின்றும். ஒதுங்கினர்-ஒதுங்கி; முற்றெச்சம். 43. தேம் பழம் தேன் ஒழுகும் பலாப்பழம். பகை-பகைபோலாகி. 44. மயங்கு-கலந்த. அரில்-பிணக்கு. வலயம்-தோட்டம் அல்லது பாத்தி. 45. பலவின் பரல்-பலாச் சுளையின் விதையாகிய பரல்கள்.

46. கேள்வ-கணவ. 47 படர்குவம்-செல்வோம். 48 இலஞ்சி-குளங்களில். 49. வாளை, மலங்கு-மீன் வகைகள். 50. செறு-வயல் விலங்க-குறுக்காக. 53. சுரும்பு - வண்டு. கலக்கும் - கலந்துவிடும் 54. வேட்கையின்-வேட்கையினாலே, அஞர்-சோர்வு. 55. குடங்கை-அகங்கை. நொண்டு-முகந்து; முகந்து, மொண்டெனத் திரிந்து பின் நொண்டென்றாயிற்று. அருக சமய அறநூல்கள் தேனுண்டலைக் கடிகின்றன. 56. குறுநர்-களைப்பறிப்பார். 58. நீர் அஞர் எய்தி-நீவிர் சோர்வுற்று. வண்டுகளை மிதித்தலால் உயிர்க்கொலை நேர்ந்துவிடுமே என்றவாறு.

60. கரை இயக்கம்-கரைவழி. 61, பொறிமாண் அலவன்-புள்ளி களின் அழகினையுடைய நண்டு, நந்து நத்தை. 62. ஊழ் அடி ஒதுக்கத்து-முறையாக அடியிட்டுச் செல்லுதலால். நோய் - அவற்றிற்குண்டாகும் துன்பம். 64. அல்லது + யாங்கணும் = அல்லதியாங்கணும், இகரம் குற்றியலிகரம். 65. அயல்படக் கிடந்த-வேறுபடக்கிடந்த. 66. நெறி இரும் குஞ்சி - நெளிந்த கரிய குஞ்சியினையுடைய கோவலனே.

**வெய்யோள்** - விருப்பத்தினையுடைய கண்ணகி. 67. குறி-குறிப்பாலே. **குறுகாது** - சாராது.

68. தோம் - குற்றம். கடிஞை - பிச்சைப் பாத்திரம். சுவல்-தோள். **அறுவை-உறி.** 69. பீலி-மயில் தோகை. 70. மொழிப் பொருள். பொருண் மொழியாகிய. 71. சிறப்பின்-சிறப்பினையுடைய ஒழுக்கத்துடன், படர் - செல்லுதல். 72. முறம் செவி வாரணம்-முறம்போலும் செவியையுடைய யானை. சமம்-போரில். முருக்கிய-கெடுத்த. புறம் சிறை வாரணம் - புறத்தே சிறகினையுடைய கோழி. கோழி என்னும் பெயரினையுடைய உறையூர்.

**வினாக்கள் :**

1. கோவலனும் கண்ணகியும் எவ்வெவற்றைக் கடந்து கவுந்திப் பள்ளியை அடைகின்றனர் ?

2. கவுந்தியடிகளின் வினாவும் கோவலன் தந்த விடையும் யாவை ?

3. 'தொடி வளைத் தோளி துயர்தீர்த்தேன்'—இடமும் பொழுதுஞ் சுட்டி விளக்குக.

4. சோலை வழியில் நேரும் துன்பங்கள் யாவை ?

5. வயல் வழியிற் செல்லுங்கால் விளையும் ஏதங்கள் யாவை ?

6. கவுந்தியடிகள் வழியின் அருமைகளாகக் கூறியவற்றைத் தொகுத்துப் பதினைந்து வரிகளில் எழுதுக.

## 2. மணிமேகலை

இஃது ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. மணிமேகலை என்பவளது வரலாற்றைக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. இந்நூல் பௌத்த மதக் கொள்கைகளைத் தழுவியது. ஆசிரியர்: மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவர் மதுரையில் கூல வாணிகம் செய்தவரென்றும் சீத்தலை என்னும் ஊரினரென்றுங் கூறுவர். கடைச் சங்கப் புலவருள் ஒருவராக எண்ணப்படுபவர். இளங்கோவடிகள் காலத்தவர்.

**அருஞ்சொற்பொருள் :**

1. பழுது—குற்றம். காட்சி - தோற்றம். பீடிகை - பீடம். 2. தேவர் கோன் - இந்திரன். 4. தரும தலைவன்—புத்ததேவன். நோன்பினரே பீடிகையைக் காண்டற்குரியர்; கண்டு பழம் பிறப்புணரப் பெறுவர். பைந்தொடி—விளி. 8. அறமொழி-தருமபதம். 9. ஒருதலை-உறுதியாக. ஆங்கனமாகிய—அத்தன்மையை உடையையாகிய. 11. பெயர்—புகழ். 12. மயங்கிய—கலந்துள்ள. 13. இலஞ்சி—பொய்கை. 14. இருது இளவேனில் – இளவேனிற் பருவத்து. இரண்டிரண்டு மாதங்கள்

கொண்டது இருது. எரிகதிர் இடபத்து—கதிரவன் மிக்க வெம்மை செய்யும் வைகாசி மாதத்தில். 15. ஒருபதின்மேல்............அகவையில்—பதின் மூன்று நட்சத்திரங்கள் சென்ற பின்பு நட்சத்திரங்களுள் நடுவணதாகிய விசாக நட்சத்திரத்தில். அஃதாவது பதினான்காவது நட்சத்திரமாகிய விசாகம் என்றவாறு, கார்த்திகை முதலாக எண்ணுங்கால் இவ்வாறு வரும். பண்டைக் காலத்தில் இவ்வாறே எண்ணப்பட்டதாகச் சோதிட நூல் கூறும். 17 போதித் தலைவன்—அரசமரத்தடியில் ஞானம் பெற்ற புத்தன். அமுதசுரபி, முன்னர் ஆபுத்திரன் கையில் இருந்தது. 21. நின் றைங்கு—நின்னிடம். 22. பெய்த—இட்ட. ஆருயிர் மருந்து — சோறு. 24. தொலைவு இல்லா—(சோறு) குறையாது. 25. கோதை—மாலை; விளி. 26 அறவணன்—அறவண அடிகள், இதன் திறம்—இதன் வரலாறு 27. அவள்—தீவதிலகை. இளங்கொடி—மணிமேகலை.

28. தொழுதனள்—தொழுது; முற்றெச்சம். 30. கோமுகி—கோமுகி என்னும் பொய்கை. 32. மரபின்—மரபினையுடைய. 34. மாத்திரை இன்றி—அளவின்றி.

35. மாரன்—மன்மதனை (ஆசையை). 36. தீநெறியாகிய கடும் பகை. கடிந்தோய்—விலகியவனே. 37. அறம்—அறமுண்டாக. 38. துறக்கம்—சுவர்க்கம். 39. எண் பிறக்கு ஒழிய இறந்தோய்—மக்களுடைய எண்ணங்கள் எட்டாமற் பின்னிடுமாறு மேம்பட்டவனே. இறத்தல்—கடத்தல். 40. கண்—ஞானக்கண். 42 வாய்மொழி—உண்மை. 43, 44. நரகர் சிலரை உய்வித்தற் பொருட்டுப் புத்தர் நரகத்திற்குச் சென்ற கதையும் கருடனால் நாகர்களுக்குண்டாய துன்பத்தைப் போக்க அவர்களுக்குத் தருமோபதேசஞ் செய்த கதையும் கூறப்பட்டுள்ளன. உரகர்—நாகர். 46. ஆயிழை—மணிமேகலை. 48 நவை—குற்றம். 49. சேயிழைக்கு—மணிமேகலைக்கு. உரைக்கும்—சொல்லுவாள்: செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று.

50. விழுப்பம்—மேன்மை. 51. கல்விப்புணை—கல்வியாகிய தெப்பம் விடூஉம்—கெடுக்கும்; இசைநிறை யளபெடை. 52. நாண் அணி—நாணமாகிய அணி. 55. இசை—புகழ். அளவைக்கு—அளத்தற்கு.

57. கரத்தலின்—மறைந்துபோனமையால், 58. அரசைத் துறந்து வந்த விசுவாமித்திரன். 60. ஆற்றுவது—பசியை நீக்கும் உணவு. காணான்—காணாமல்; முற்றெச்சம். 61. நாய் ஊன்—நாயின் புலாலை. 62. இந்திர சிறப்பு—உணவு கொள்ளுமுன் தேவர்க்குப் பலியிடுதல். 63. வானவர் பெருந்தகை—இந்திரன். 65. விளையுள்—விளைவு.

66. ஆற்றுநர்—செல்வர். அறவிலை பகர்தல்—அறத்தை விற்றல். வாழ்க்கை களைவோர் மேற்று எனக் கொண்டு கூட்டுக. 69. மண் திணி ஞாலம்—அணுக்கள் செறிந்த நிலவுலகம். 71. உயிர் கொடுத்தல்—உயிரைக் கொடுத்தல்; உரவோய் ஆகி - அறிவினை உடையளாகி.

72. கயக்கு-கலங்குதல், கண்டனை-காண்; அஃதாவது செய்க. தெளிவு பற்றிக் கண்டனை என இறந்த காலத்தாற் கூறப்பட்டது.

**வினாக்கள் :**

1. தீவதிலகை அமுத சுரபியைப்பற்றி மணிமேகலையிடம் கூறியன வற்றைப் பதினைந்து வரிகளில் தொகுத்தெழுதுக.

2. 'நின்னுங்கு வருவது போலும்'—இடஞ்சுட்டி விளக்குக.

3. அமுதசுரபியின் தன்மை யாது ?

4. பாத்திரம் பெற்ற மணிமேகலை புத்ததேவனை எவ்வாறு புகழ்ந்து போற்றுகின்றாள் ?

5. பசிப்பிணியின் கொடுமைகளை விவரிக்க.

6. விசுவாமித்திரன் உற்ற பசிக் கொடுமையை எழுதுக.

7. உண்டி கொடுத்தலின் சிறப்பாகத் தீவதிலகை உரைத்ததை எழுதுக.

## 3. பெரிய புராணம்

பெரியர் + புராணம் = பெரியபுராணம். செயற்கரியன செய்த பெரியார்களுடைய வரலாறு கூறும் நூல். திருத்தொண்டர் புராணம் எனவும் பெயருண்டு. சைவத் திருமுறைகளில் பன்னிரண்டாந் திருமுறையாகும் இது. சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பிகள் செய்த திருத்தொண்டர் திருவந்தாதியும் இதற்கு முதல் நூல்களாம். ஆசிரியர்: சேக்கிழார். அருண்மொழித் தேவர் என்பது இவர்தம் இயற்பெயராகும். ஊர் : தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூர். கி. பி. பதினோராம் நூற்றாண்டென்றும் பன்னிரண்டாம் நூற்றாண்டென்றும் இவர் காலம் கூறப்படுகிறது. அநபாய சோழனிடம் முதலமைச்சராக விளங்கியவர். இவருக்கு உத்தம சோழ பல்லவராயன், தொண்டர்சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு.

**அருஞ்சொற்பொருள் :**

1. மண்ணின் துகளைத் தவிர வேறு துகள் (குற்றம்) இல்லாத. மல்கி-நிறைந்து. சென்னி—உச்சி, பதிகள்—ஊர்கள், மன்னி—நிலைபெற்று.

2. பாலிக்கும்-காக்கும், நெறிச்சிவம்—சிவநெறி.

3. நடை மரபு—ஒழுக்க மரபு, குடி நாப்பண்-குடிகளுக்கிடையே, விலக்கு இல்—நீங்காத. மனை ஒழுக்கம்—இல்லற நெறி. குறுக்கையர்குடி—புகழனார் தோன்றிய குடிப்பெயர்.

4. தோன்றல்—பெருமையிற் சிறந்தோர் ஒக்கல்-சுற்றத்தார். திக்கு நிலவும் பெருமை—எட்டுத்திசையும் விளங்கிய பெருமை.

5. பொருவு இல் – ஒப்பில்லாத. அகவயினில் – உள்ளிடத்தில். திரு–இலக்குமி.

6. அலகு இல்–அளவில்லாத, மருள் நீக்கி–அறியாமை இருளைக் கெடுத்து, கதிர்–சூரியன்.

7. காதலனார்–அன்புக்குரிய மகன். மங்கலங்கள்–மகப்பேற்றுக்குச் செய்ய வேண்டிய மங்கல விழாக்கள். மேதகு–மேன்மையுடைய. ஏதம்–குற்றம், கிளை–உறவினர். குழவிப் பதம்–பிள்ளைமைப் பருவம்.

8. அண்ணல்-சிவபெருமான். மௌலி-மகுடம். புரவலன்-அரசன்.

9. ஆண்டகைமைத் தொழில்-ஆண்மைக்குரிய போர்த் தொழில். அடல் அரி ஏறு–வலிமை மிக்க ஆண் சிங்கம். வனப்பு–அழகு. பொருவு இல்-ஒப்பில்லாத, மகள் கொள்ள–பெண்கொள்ள. காதலினால்–அன்பினால்.

10. மண இசைவு–பெண் கொடுக்க இசைந்ததை. வதுவை–திருமணம். மாறு–பகைமை.

11. உற்றுழிவினை-துன்பம் வந்தபொழுது உதவும் போர்த்தொழில். சமர்-போர். போர்த்துறை-புறப் பொருட்டுறைகள்.

12. அணங்கு அனையாள்-திலகவதியார். தீய அரும் பிணி–கொடிய நீங்கரிய நோய். உழந்து–துன்புற்று.

13. துகள்–தூசு. பெற்றிமை–இயல்பு.

14. பயந்த–பெற்ற. பேதுறும்–துன்புறும்.

15 முருக்கி–அழிந்து, பெருவார்த்தை–இறந்தார் என்ற சொல்; மங்கல வழக்கு. தலம்–ஊரார்; ஆகுபெயர்.

16. அனை–அன்னை. வந்து + அவர்தம் + அடியிணை.

17. அத்தன்–தந்தை. நீப்பன்–நீக்குவேன். இடர்–துன்பம்.

18. தயா–கருணை. மணிநூல்–மங்கல நாண். இம்பர்–இவ்வுலகில். உம்பர் உலகு–தேவருலகம்.

19. மாசுஇல்–குற்றமில்லாத. காசினி-உலகம். நிதி-செல்வம். ஆசு இல்–குற்றமில்லாத. பந்தர்–பந்தல்; மொழியிறுதிப் போலி.

20. கா–சோலை. தொட்டு – தோண்டி. மேவினர் – விருப்புடன் வந்தவர்.

வினாக்கள் :

1. குறுக்கையர் குடியின் சிறப்பினை எழுதுக.
2. கலிப்பகையாரின் இயல்புகள் யாவை ?

3. கலிப்பகையார் உயிர்நீத்த செய்தி கேட்ட திலகவதியார் நிலைமையினை எழுதுக.

4. திலகவதியாரிடம் மருணீக்கியார் வேண்டிக்கொண்டதென்ன?

5. மருணீக்கியார் மனத்துயரை மாற்ற யாது செய்தனர்?

6. 'யானும் முன்னம் உயிர்நீப்பன்'—இடஞ்சுட்டி விளக்குக.

## 4. கம்பராமாயணம்

கம்பரால் இயற்றப்பட்ட இராமாயணம் ஆதலால் கம்பராமாயணம் எனப்பட்டது. இராமன் வரலாற்றை அறிவதற்கு இடமாக இருப்பதால் இராமாயணம் எனப்பட்டது. இராமாவதாரம் எனக் கம்பர் வழங்குவர். வான்மீக ராமாயணம் இதற்கு முதனூல் என்பர். பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தைக் காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறுபிரிவுகளையுடையது. ஒட்டக் கூத்தரியற்றிய உத்தரகாண்டத்தையும் சேர்த்து ஏழெனவுங் கூறுவர். கம்பர், சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர். சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனவும் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனவுங் கூறுவர்.

அருஞ்சொற்பொருள் :

1. நிற்றி-நிற்பாயாக. நெடியவன்-இராமனை. குறுகினன்-வந்துள்ளான். தாயின்-தாயைப்போல. எற்று-மோதுகின்ற. நாவாய்-படகு.

2. அழைத்தி-அழைத்து வருக. பரிவினன்-விருப்பத்தையுடையவன். குஞ்சி-தலைமுடி.

3. இருத்தி-இரு. நீத்த-கடந்த. அருத்தியன்-அன்பன். திருத்தினன்-செவ்விதின் ஆக்கி; முற்றெச்சம். விருத்தம்-முதுமை. முறுவல்-புன்னகை.

4. சீர்த்த-சிறந்தன. பரிவு-அன்பு. பவித்திரம்-தூயது.

5. ஏறுதும்-கடப்போம். யாணர்-புதுமை. சாருதி-வருவாய்.

6. காதலன்-அன்பனாகிய குகன். ஈர்கிலா-பறித்தெறியாத. தீர்கிலேன்-இறந்தேனல்லேன்.

7. கோதை-மாலை. குரிசில்-சிறந்த ஆண்மகன்.

8. அழைத்தனன்-அழைத்து; முற்றெச்சம். ஆழி-கடல். துடி-ஒருவகைப் பறை. சிலை-வில். வீக்கி-இறுகக்கட்டி.

9. நியமம்-கடன், மரபுளி-முறைப்படி. வைகல்-கழிவு நாள். வேலை-கடல். அமுது அனாள்-சீதை. பாயல்-படுக்கை. வரி-வரிந்து கட்டிய. இமைப்பிலன்-இமையாது; முற்றெச்சம்.

10. மற்றவள்-மூதேவி. இறைஞ்சி-வணங்கி. தவிசு-இருக்கை. துயில் தரும்-உறங்கும். கணீர்-கண்ணீர்; தொகுத்தல் விகாரம்.

11. தும்பி-யானை. குழாத்தின்-கூட்டத்தைப் போல. அம்பி-தோணி. குன்றின்-குன்றைப்போல.

12. துறக்கம்-சுவர்க்கம். மறக்குமா-மறக்குமாறு.

13. செஞ்செவே-செம்மையாக. செல்வன்-கதிரவன். நோக்கிய-நோக்கி; செய்திய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். விரிந்த-மலர்ந்தன. அஞ்சன நாயிறு-கரிய சூரியன். ஞாயிறு நாயிறெனத் திரிந்து நின்றது. வதனம்-முகம்.

14. அலரா-இல்லாத. புகலிடம்-வாழிடம். தார்-மாலை குறை விலெம்-குறைவில்லாது. அடியோம்-அடியவர்களாகிய எம்மை என்னு-என்று.

15. நுகர்தல்-துய்த்தல். உளதனையும்-உள்ளவரையும். எம்பால்-எம்மிடம்.

16. துகில்-ஆடை. மஞ்சம்-கட்டில். புரை-குடில். கலி-ஒலி.

17. செய்குநர்-செய்வோர். உய்குதும்-உய்வுபெறுவோம். வைகுதி-தங்குவாய்.

18. கேளா-கேட்டு; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நின்னுழை-நின்பால். யாம் + அப்புண் ணரியநதி. குறுகுதும்-திரும்ப வருவோம்.

19. நெறி இடும் நெறி-வழியமைக்கும் முறை. நேடினேன்-தேடி. நறவு-தேன்.

20. கல்லுவென்-தோண்டுவேன். கவலை-கவர்த்த வழி. புனல்-நீர். வில்லினம்-வில்வீரர் கூட்டம். வெருவலென்-அஞ்சேன்.

21. ஒருவலென்-நீங்காமல். போதுவென்-வருவேன்.

22. அமலன்-குற்றமற்றவன்; இராமன். இளவல்-தம்பி. நுதலவள்-சீதை. கேள்-உறவு.

23. உன்னேல்-நினையாதே. முடிவு உளது என உன்னு அன்பு-முடிவிலா அன்பு.

24. படர்-துன்பம். உம்பி-உன்தம்பியாகிய இலக்குவன். பகை யா-பகையாக யாவை யுள.

25. அங்கு உள கிளை-அயோத்தியிலுள்ள உறவினர். உம்பி-உன் தம்பியாகிய பரதன். இங்கு-கங்கைக்கரையிலுள்ள காட்டில். காவற்கு + யார்-காவற்கியார்; குற்றியலிகரம். இசையாய்-சொல்லுவாய். இது கா-ருத்தனைக் காப்பாற்று.

வினாக்கள் :

1. 'நின்னைக் காணக் குறுகினன்'-இடஞ்சுட்டி விளக்குக.

2. குகன் கொணர்ந்த காணிக்கையை ஏற்றுக்கொண்டு இராமன் கூறியன யாவை ?

3. 'கண்ணீர்கிலாக் கள்வனேன்'-இடஞ்சுட்டி விளக்குக

4. இடியுடை மேகம், அருவிசோர் குன்று-இவ்வுவமைகளை விளக்கி உவமேயங்களுடன் பொருத்திக் காட்டுக.

5. இலக்குவன் காவல் புரிந்த நிலையை எழுதுக.

6. கதிரவன் தோற்றம் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது ?

7. இராமனைத் தன்னூரிலேயே தங்குமாறு குகன் வேண்டுவதை விவரிக்க.

8. குகன் தன்னையும் உடன் அழைத்தேகுமாறு இராமனை வேண்டுதலையும் அதற்கு இராமன் தந்த மறுமொழியையும் தொகுத்துப் பதினைந்து வரிகளில் எழுதுக.

## 5. இரட்சணிய யாத்திரிகம்

இஃது ஒரு கிறித்துவ சமயக் காப்பியம். இரட்சணியத்தையடைய விரும்பிய ஆன்மாவின் மோட்ச யாத்திரையைப்பற்றிய நூலாதலின் இப்பெயர் பெற்றது. ஜான் பனியன் என்பார் ஆங்கிலத்தில் இயற்றிய மோட்சப் பிரயாணம் என்னும் நூலைத் தழுவி எழுதப்பட்டது. இந்நூல் ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் என ஐந்து பருவங்களைக் கொண்டது. நம் பாடப் பகுதி குமார பருவத்தில் உள்ளது. ஆசிரியர்: ஹென்றி ஆல்பிரேட் கிருஷ்ண பிள்ளை. இவருடைய ஊர் திருநெல்வேலியைச் சார்ந்த இரட்டியாபட்டி. பெற்றோர்: சங்கரநாராயண பிள்ளை, தெய்வநாயகி அம்மையார். வைணவராகப் பிறந்து கிறித்துவ சமயத்தைத் தழுவியவர். காலம்: கி. பி. 1827—3—2—1900. இவர் இயற்றிய பிறநூல்கள்: இரட்சணிய சமய நிர்ணயம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய குறள் என்பன.

அருஞ்சொற்பொருள் :

1. வல்லான்—இயேசுநாதர்.

2 செவ்வங்கி-சிவப்பாடை ஆகடியம்-ஏளன மொழி, தெவ்வர் - பகைவர், கவ்வை நகர்-துன்பத்திற்குள்ளான எருசலேம் நகர். கலுழ-அழ.

3. வெய்ய-சுமையான. அலசி-அலைந்து. மறுகு-வீதி.

4. மங்கலை-கற்புடைய. காதலன்-மகன்.

5. நந்தா-குறையாத. நறு-தேன். சிந்தாகுலம்-கவலை.

7. குழல்–ஊசி. குருத்துவம்-மகத்துவம். கரந்து-மறைந்து. மகவு-மகன். பசுந்தோகை-மரியன்னை. சாம்பி-வாடி.

8. செருசலை-எருசலேம் நகர். மைப்படு-அறியாமை நிறைந்த.

9. குருசு–சிலுவை. துலக்கமுற–பலிக்க

10. சதைப்புண்டு–நைந்து பாடு–துன்பம்.

வினாக்கள் :

1. இயேசுவை எவ்வாறு கட்டிக்கொண்டு போனார்கள் ?

2. சிலுவையைச் சுமந்துசெல்லும் இயேசுவின் நிலைமையினை எழுதுக.

3. தள்ளாடி வரும் ஐயனைக் கண்டோர் புலம்பலை எழுதுக.

4. இயேசுவை எந்நிலையில் சிலுவையில் அறைந்தனர் ?

5. சிலுவையில் அறையப்பட்ட போது இறைவனிடம் இயேசு வேண்டிக்கொண்டதென்ன ?

## 6. சீறாப்புராணம்

சீறத் என்னும் அரபுச் சொல் சீறா எனத் தமிழில் வரும் இச் சொல்லுக்கு வாழ்க்கை வரலாறு என்று பொருள். முகம்மது நபியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூல் விலாதத்துக் காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் என மூன்று பிரிவுகளை உடையது. எட்டயபுர அவைக்களப் புலவராக விளங்கிய உமறுப் புலவர் இதன் ஆசிரியர். தந்தை சேகு முதலியார். கடிகை முத்துப் புலவரிடம் பயின்றவர். அப்துல் காசிம் என்பவரால் ஆதரிக்கப்பட்டவர். காலம்: கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற்பொருள் :

1. யாய்–என் தாய். சந்ததி–மகன். நந்தல் இல்–கேடில்லாத.

2. விதிகள் + யாவும். பேதைமை–அறியாமை.

3. இனையன – இவைபோல்வன. தொக்க – தொகுத்துவைத்த. பேழை–பெட்டகம். தெருள்வன்–தேடுவேன்.

4. ஆடகம்–பொன். முத்திரைகள் தம்மால்–முத்திரைகள் இட்டிருந்தமையால். பேதுற்றேன்–மயங்கினேன்.

5. ஐயம்–சந்தேகம். எம்மான்–என் தந்தை

6. கனகம்–பொன். நிதியம்–செல்வம். இழை-நகைகள். எள்ளல்-நினைத்தல். மல்லல்–வளப்பம்.

7. கபடு-வஞ்சனை. தேவதத்தின் மார்க்கம் - தெய்வ மார்க்கம். வழுக்கி-இகழ்ந்து.

8. நெறியால்-சமயக்கோட்பாடுகளால். வியன்-சிறந்த.

9. வெறியினால்-மயக்கத்தில். வல்லே-விரைந்து.

10. விறல்-வல்லமை. வீறு-மேன்மை

**வினாக்கள் :**

1. கபுகாபு தன் இளமைப் பருவத்தைப் பற்றிக் கூறுவதை எழுதுக.

2. கபுகாபு முத்திரையிட்ட செப்பினை எவ்வாறு கண்டான் ?

3. முத்திரைச் செப்பைப் பற்றிக் கபுகாபு வினவியபொழுது, அவன் தந்தை கூறியன யாவை ?

4. கபுகாபு, கடுதாசியில் வாசித்தவை யாவை ?

## 7. பெருந்தேவனார் பாரதம்

பெருந்தேவனார் என்பவரால் இயற்றப்பட்ட பாரதம் ஆதலின் இப் பெயர் பெறுகிறது. இந்நூல் வெண்பாக்களால் ஆக்கப்பட்ட நூலாதலின் பாரத வெண்பா எனவும் இந்நூல் அழைக்கப்பெறும். ஆயினும் இடை யிடையே அகவலும் விருத்தமும் காணப்படுகின்றன. பாட்டும் உரையும் கலந்து ஆக்கப்பட்டுள்ளமையால் இதனை 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என ஆன்றோர் கூறுவர். ஆசிரியர் கி. பி. 9ஆம் நூற்றாண்டில் தெள்ளாறெறிந்த மூன்றாம் நந்திவர்மன் காலத்தவர் எனக் கூறுவர் அறிஞர்.

இந்நூல் முழுமையும் இப்பொழுது நமக்குக் கிடைத்திலது. உத்தி யோக பருவம், வீடும பருவம், துரோணபருவம் என்பனவே கிடைத் துள்ளன. நம் பாடப் பகுதி உத்தியோக பருவத்துள் அமைந்ததாகும்.

இவரே யன்றிப் பாரதக் கதையைக் கடைச் சங்கப் புலவராகிய பெருந்தேவனார் என்பவரும் வில்லிபுத்தூராழ்வார் என்பவரும் பாடியுள்ளனர்.

**அருஞ்சொற்பொருள் :**

1. தாமரையாள்-இலக்குமி. கோள் நாகம் ஏந்தினான்-பாம்புக் கொடியையுடைய துரியோதனன். மாமகரம்-பெரிய சுறுக்கள். வண்டு-சங்குகள். வரைக்கு-கரையில்-உருபுமயக்கம். மால் ஓதம்-கரிய கடலலைகள். ஊடாடும்-வீசும். தண் + துவரை-குளிர்ந்த துவாரகாபுரி.

2. கால் + நாட்டி = கானாட்டி. அமளி-கட்டில். மால்-கண்ணன்.

3. மால் யானை-மதமயக்கமுடைய யானை. போந்து-புறப்பட்டு. மஞ்சு அனையான்-மேகம் போன்ற கண்ணன்.

4. பள்ளியுணர்தல்-கண் விழித்தல்.

5. என் போந்தவாறு-வந்த காரணம் என்ன. ஆழியான்-சக்கரத்தையுடையவன்.

6. போர் ஆளுமாறு-போர் செய்ய. புரிந்தார்-விரும்பினர். எமக்கா-எமக்காக; தொகுத்தல் விகாரம்.

8. சூரியன் வாக்கினால் சொன்னான். அதற்கு முன்பு நான் நோக்கினால் குறிப்பாக உணர்த்திவிட்டேன் என விசயன் கூறுகின்றான். நொய்தாமோ-எளிதாமோ. அமர்-போர். பூமகள்-இலக்குமி.

9. ஆல்-அசைநிலை. பெய்கழலாய்-வீரக்கழலணிந்த துரியோதனனே. கருமம்-செயல்.

10. படை-போர்க்கருவி. ஏந்தல்-தொடாதே.

11. தனு-வில். சந்து-(நாண்) ஓசை.

வினாக்கள் :

1. கண்ணன் பொய்த்துயில் கொள்ளக் காரணம் என்ன?

2. இருவீரும் வந்த காரணமென்ன என்று வினவிய கண்ணனுக்கு இருவரும் தந்த மறுமொழிகள் யாவை?

3. இருவர் வேண்டுகோளையும் கேட்டுக் கண்ணன் யாது கூறினன்?

4. கண்ணன் கருத்துரைத்த பின்னர் இருவரும் யாது வேண்டினர்?

## 8. மனோன்மணீயம்

இது, சீவக வழுதியின் மகளாகிய மனோன்மணி என்பவளுடைய வரலாற்றைக் கூறும் நூலாதலின் இப்பெயர் பெற்றது. இஃது இலக்கியச் சுவை மலிந்த நாடக நூல். இஃது எளிமையும் இனிமையும் பொருந்திய நடையழகுடையது; கருத்துச் செறிவுடையது; லார்டு லிட்டன் என்பார் இயற்றிய The Secret way என்னும் ஆங்கில நூலைத் தழுவி எழுதப் பெற்றது. இதனுள் தத்துவக் கருத்துக்களும் இயற்கைப் புனைவுகளும் செறிந்து, மிடைந்து காணப்படுகின்றன. இதன் ஆசிரியர் இராவ்பகதூர் பெ. சுந்தரம் பிள்ளை எம். ஏ., அவர்கள். இவர் திருவனந்தபுரத்தைச் சார்ந்த ஆலப்புழை என்னும் ஊரினர்; பெற்றோர்: பெருமாள் பிள்ளை, மாடத்தி அம்மாள்; இவரியற்றிய பிற நூல்கள்: நூற்றொகை விளக்கம், திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி. இவர் தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். காலம் : கி. பி. 1855—1897.

அருஞ்சொற்பொருள் :

இந்தனம் – விறகு. உகம் – யுகம். நீண்டன்மின் – தொடாநீர். செயமாது-வெற்றிமகள். இலக்கு - அடையாளம். காயம்-புண். காயம்-உடல் கோள்தக்கது-கொள்ளத்தக்கது. உதும்பரதரு – அத்திமரம். அசகம்-கொசு. சஞ்சலம்-துன்பம்.

வினக்கள் :

1. வானோர்க்கு உவப்பாகிய தீ எது?
2. போரில் சிந்தும் இரத்தத்துளி எவற்றை முரசறைந்து கூறும்?
3. இரந்து கோட்டக்க புண் எது? ஏன்?
4. புகழுடம்புபற்றிச் சீவக வழுதி கூறியன யாவை ?
5. சீவக வழுதி அழுக்காறு கொள்ளக் காரணம் என்ன?
6. சீவக வழுதி வஞ்சப்புகழ்ச்சியாக உரைத்தவை யாவை?
7. சீவக வழுதி கூறிய வீரவுரையைத் தொகுத்துக் கட்டுரை வடிவில் எழுதுக.

# IV. பல்சுவை

## 1. புறநானூறு

புறப்பொருளைப் பற்றிக் கூறும் 400 பாடல்களைக் கொண்ட நூலாதலின் இப்பெயர் பெற்றது. புறம் + நானூறு. அறத்தையும் பொருளையும் பற்றிக் கூறுவது புறம் எனப்படும். இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. காலம் : கி. பி. இரண்டாம் நூற்றாண்டு. பண்டைத் தமிழர் பண்பாடுகளையும் அரசர், வள்ளல் வரலாறுகளையும் இதன் வாயிலாக அறியலாம்.

அருஞ்சொற்பொருள் :

1. நாடு ஆக-நாடேயாயினும் ஆகுக. ஒன்றோ என்பன எண்ணிடைச் சொற்கள். அவல்-பள்ளம். மிசை-மேடு. நல்லை-நன்மையுடையாய். நிலன்-நிலம் என்பதன் போலி.

பொதுவியல் : புறப்பொருட்டிணைகளாகிய வெட்சி, கரந்தை முதலிய திணைகளிற் கூறுதொழிந்தனவும் அவற்றிற்குப் பொதுவாக இருப்பனவும் ஆகிய செய்திகளைக் கூறுவது.

பொருண்மொழிக் காஞ்சி : சான்றோர், உயிர்கட்கு இம்மையினும் மறுமையினும் நன்மை தருவனவாகத் தாம் தெளிந்த பொருளைத் தெரிவிப்பது.

2. வளாகம்-உலகம். குடை-குடையால் நிழற்றிய. ஒருமை-ஒரு தன்மை. நடுநாள்யாமம்-இடையாமம். துஞ்சான்-துயிலாதவனாகி. கடுமா-விரைந்த செலவினையுடைய விலங்கு. ஒருவன்-வேடன். நாழி-நாழியளவினதாகிய உணவு: ஆகுபெயர். ஓரொக்கும்-ஒரே தன்மையனவே. துய்ப்பேம்-நாமே நுகர்வோம். தப்புந-தவறுவன.

## 2. வருணனை

திரை—அலை. குடைதல் – துளைத்தல். கனைத்தல் – முழங்குதல். இப்பாடலில் உலக வழக்குச் சொற்கள் பயின்று வந்துள்ளன.

2. இரவும் பகலும் என்ற பகுதி. கவிஞர் முடியரசனால் இயற்றப் பட்ட பூங்கொடி என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இவர்தம் பெற்றோர்: சுப்புராயலு, சீதாலட்சுமி அம்மையார். மதுரை மாவட்டத் திலுள்ள பெரியகுளம் என்னும் ஊரிற் பிறந்தவர். காரைக்குடி மீ. சு. உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிகின்றார். 7–10–1920இல் பிறந்தவர்.

அருஞ்சொற்பொருள் :

பழுதை—கயிறு, பட அரவு-படத்தினையுடைய பாம்பு. இருள் ஆட்சி—இருளின் ஆட்சி. எதிர்மறைப் பொருளாய்—மக்கட்கு எதிரிடையாக, கொடும்பர்—கொடியர். உயிர்...ஓடுதல்—உயிரெழுத்து முதன் மொழி வரும்பொழுது நிலைமொழியிலுள்ள குற்றுகரம் ஓடும்.

## 3. சீட்டுக் கவி

கவிதை வடிவிலே எழுதப்படும் கடிதம். மதுரைச் சொக்கநாதர் திருமுன்பு யாழ்வாசித்துக் கொண்டிருந்த பாணபத்திரர், தம் வறிய நிலையை இறைவனிடம் முறையிட, அதனைக் கண்ணுற்ற இறைவன், பத்திரருடைய வறுமையைப் போக்கவேண்டிச் சேர மன்னனுக்கு எழுதி யனுப்பியது இது. தனிப்பாடற்றிரட்டில் உள்ளது இப்பாடல்.

அருஞ்சொற்பொருள் :

மலி-பொருந்திய. புரிசை-மதில். கூடல்-மதுரை. பயில்—பொழில்-(அன்னம்) நிறைந்த சோலை. ஆலவாயில் – திருவாலவாய் என்னுங் கோவில். கொண்டலைப்படி என – மேகம் போல. ஒருமை – மனஒருமை. உரிமையின் – தகுதிக்கேற்ப. குரு—நிறம். செரு மா—போர் யானை. உகைக்கும்—செலுத்தும். பண்பால் – பண்ணின் பகுப்பு. தன்போல் – உன்னைப்போல. தன்பால்—உன்னிடம், மாண் பொருள்—மிக்கபொருள்.

## 4. இரட்டுற மொழிதல்

### எழுமலைச் சிலேடை வெண்பா

உடுமலைப்பேட்டையைச் சார்ந்த எழுமலை வேங்கடாசலப்பெருமாள் மீது பாடப்பட்ட சிலேடை வெண்பா. சிலேடை-இருபொருள் அமையப் பாடுவது. இதன் ஆசிரியர் கொங்கு நாட்டைச் சார்ந்த சிற்றூரினர். அணிமைக் காலத்தவர். பலபொருள்படப் பாடல் இயற்றுவதிலே வல்லவர் என்பது இவர்தம் பாடல்களால் அறியக் கிடக்கின்றது.

அருஞ்சொற்பொருள்:

1. ஞானியர் இக்கட்டு தீர்க்கும்-மெய்ஞ்ஞானிகள் துன்பங்களைத் தீர்க்கின்றன. ஆலையர் இக்கு அட்டுதீர்க்கும்-கரும்பாலையில் உள்ளோர் கருப்பஞ்சாற்றைப் பாகம் பண்ணி முடிக்கின்ற. தக்கனை-தக்கன் என்னும் ஓர் அசுரனை. முன்னே மோது அரன்-முன்பு கொன்ற சிவனும். முகுந்தன்-குபேரனும். தாமோதரன் முகுந்தன்-தாமோதரனாகிய முகுந்தன். சார்பு-சார்ந்திருக்கும் இடம்.

2. தவத்தினர் ஈடேற்றம் கொள்ளும்-தவமுனிவர் உயர்வடையும். வட்டிக்கு ஈகுநர் ஈடு ஏற்றம் கொள்ளும்-வட்டிக்கடைக்காரர் அடகு அதிகமாகப் பெறுகின்ற. சேடன்-ஆதிசேடன். பாய்-படுக்கை. பங்கயன்-நான்முகன். சேய் ஆக்கத்தான்-பிள்ளைச் செல்வத்தையுடையவன். சிலை-மலை.

## 5. சிற்றிலக்கியம்

### குற்றாலக் குறவஞ்சி

குற்றாலக் குறவஞ்சி என்பது குற்றாலநாதர் மேல் பாடப்பட்ட குறவஞ்சி நூல் என விரியும். 96 வகைச் சிறுநூல்களுள் ஒன்று குறவஞ்சியாகும். ஆசிரியர்: திரிகூட ராசப்பக் கவிராயர். ஊர்: தென்காசிக்கருகிலுள்ள மேலகரம். காலம்: 250 ஆண்டுகட்கு முன்.

இப்பாடல் நாட்டுவளங் கூறுவது.

அருஞ்சொற்பொருள்:

வெள்ளம் ஓடுமேயன்றி அங்கு வாழும் மக்கள் அஞ்சி ஓடார்; யோகியர் உள்ளம் ஒன்றே புலன் வழிச் செல்லாது ஒடுங்கிக் கிடக்கும்; எவரும் ஒடுங்கார் (மெலிந்திரார்). ஓடுதலும் ஒடுங்குதலும் வாடுதலும் வருந்துதலுமாகிய கேடுகள் மக்களிடையே காணமுடியாது என நாட்டு வளங் கூறியவாறு.

### தமிழ்விடு தூது

மதுரைச் சொக்கநாதர் மீது அன்புகொண்ட பெண்ணொருத்தி, தமிழைத் தூதாக விடுத்த செய்தியைக்கூறும் நூல். தூது என்பது தொண்ணூற்றாறுவகைச் சிறு நூல்களுள் ஒன்றாகும். இதன் ஆசிரியர் பெயர் சுவடியிற் கிடைத்திலது. சொற் சுவையும் பொருட் சுவையும் நிறைந்தொளிரும் கலிவெண்பாவினால் ஆக்கப்பட்டது இந்நூல்.

அருஞ்சொற்பொருள்:

கரை ஏற்ற-ஈடேற்ற. ஈரடி-திருக்குறள். உலகம் அடங்குதல்-உலகத்தார் உள்ளுவ வெல்லாம் அடங்குதல், நேரடி-நான்கு அடிப்பாக்களாலாகிய நாலடியார். ஐயர்-திருவாரூர்த் தியாகேசர். ஐயரைத் தூது போக்கியது-சுந்தரமூர்த்தி நாயனாருக்காகப் பரவைநாச்சியார்பால் சிவபெருமான் தூது சென்றது. என் வருத்தம்-என் துயரநிலை.

# 6 வழிபாட்டுப் பாடல்கள்

## திருவருட்பா

திரு + அருள் + பா. இறைவன் திருவருளைப் பாடுகின்ற பாட்டு; இறைவன் திருவருளால் பாடப்பட்ட பாட்டு. ஆசிரியர்: இராமலிங்க அடிகள். இவர்தம் பெற்றோர்: இராமையா பிள்ளை, சின்னம்மாள். ஊர்: சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூர். காலம்: 1823—1873. இவர்தம் பாடல்கள் உள்ளத்தை உருக்குவன; இனிமையும் எளிமையும் உடையன; சீர்திருத்தக் கருத்துக்களும் சமரச சன்மார்க்க நெறியும் நிறைந்தன.

அருஞ்சொற்பொருள் :

தரு-மரம். தடம்-பொய்கை புனல்-நீர்

## திருமால் அருள்வேட்டல்

திருமாலுடைய அருளை வேண்டுதல் ஆசிரியர்: திரு வி கலியாண சுந்தரனார். இவர், அரசியல், மொழி, தொழிலாளர் இயக்கம், சமயம் முதலிய எல்லாத் துறைகளிலும் உண்மைப் பணிபுரிந்தவர். நாவன்மை, பாவன்மை, எழுத்தாற்றல் மிக்கவர். எளிய வாழ்வினர், தூய உள்ளத்தினர். சமரச நோக்குடையவர் பழமைக் கருத்துக்களுள் தள்ளுவன தள்ளிப் புதுமைக் கருத்துக்களுள் கொள்ளுவன கொள்ளும் கோட்பாடுடையர். திருமால் அருள் வேட்டல் என்னும் நூலிலிருந்து எடுக்கப் பட்டது இப்பாடல். காலம்: 1883—1954.

அருஞ்சொற்பொருள் :

தரணி-உலகம் குன்றிவரல்-குறைந்து வருதல். நிமலா-குற்றமற்ற இறைவனே. இடர்-துன்பம். ஆண்தகையே-ஆண்களிற் சிறந்தவனே (புருடோத்தமனே). அல்லிக்கேணி-சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி. பார்த்தசாரதி-அங்கே கோவில்கொள்ளும் இறைவன் பெயர்.

## வேதநாயகர் பாடல்

வேதநாயகர் திருச்சிராப்பள்ளிக்கு அணிமையிலுள்ள குளத்தூரில் பிறந்தார். இசைத்தமிழ்ப் பாடல்கள் பல பாடியுள்ளார். தமிழில் 'நாவல்' முதன் முதலில் எழுதியவர் இவரே. நீதிபதியாகப் பணியாற்றியவர். கிறித்துவ சமயத்தவராயினும் சமரச நோக்குடையவர். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையுடன் தொடர்பு கொண்டவர். நீதிநூல் முதலிய நூல்களை இயற்றியவர்.

அருஞ்சொற்பொருள் :

புட்கள்-பறவைகள். சுதி-இசை. தரு-மரம். அலர்-மலர். பூதம்-ஐம்பூதங்கள்; நிலம், நீர், தீ, காற்று, வான். வாழ்த்தா(த)து என்னே.

### நபிநாயக மான்மிய மஞ்சரி

நபி நாயகத்தின் பெருமைகளைக் கூறும் நூல். இதனை இயற்றியவர் சதாவதானி செய்குதம்பிப் பாவலர். இவர் நாஞ்சில் நாட்டு நாகர் கோவிலைச் சார்ந்த கோட்டாறு என்னும் பகுதியில் பிறந்தவர். தந்தையார் பெயர் பக்கீர் மீரான் நினைவாற்றல் திறங்காட்டிச் சதாவதானி என்னும் சிறப்புப் பெற்றார். இவர் உரையாசிரியராகவும் நூலாசிரியராகவும் சொல்வன்மையுடையராகவும் விளங்கினார். இலக்கண இலக்கியப் பயிற்சி மிக்காராய்ப் பல பொருளமையப் பாடும் ஆற்றலுடன் விளங்கினார். சமயப் பொது நோக்கினராகவும் விளங்கினார். காலம்: 1874—1950.

**அருஞ்சொற்பொருள் :**

குன்றுபெறு தீபம்-மலையிலிட்ட விளக்கு. கோத்து-கோவை செய்து. துன்றும்-நிறைந்த. எளிதேயோ-எளிதே.

**வினாக்கள் :**

1. எத்தகைய நிலம் நல்ல நிலம் என்று கூறப்பெறும்?
2. செல்வத்துப் பயன் யாது? ஏன்?
3. மழை பெய்யுங் காட்சி பாரதியாரால் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
4. இரவின் வருகையும் பகலவன் தோற்றமும் ஆசிரியரால் எவ்வாறு புனைந்துரைக்கப்பட்டுள்ளன?
5. சீட்டுக்கவி, இரட்டுற மொழிதல்—இவற்றை விளக்குக.
6. மதுரைச் சொக்கநாதர் சீட்டுக் கவியிற் குறிக்கப்பெற்ற பொருள் யாது?
7. சிலேடையை விளக்குக:- இக்கட்டுத் தீர்க்கும், ஈடேற்றங் கொள்ளும்.
8. குறவஞ்சி கூறும் நாட்டு வளத்தை எழுதுக.
9. தமிழ்விடு தூது, தமிழின் பெருமைகளாகக் கூறுவன யாவை?
10. இராமலிங்கர் இறைவனை எவ்வெவ்வாறு குறிக்கின்றார்?
11. திரு. வி. க. பார்த்தசாரதியிடம் வேண்டுவது யாது?
12. உலகத்துப் பொருள்கள் கடவுளைப் போற்றுவனவாக வேதநாயகர் எவ்வாறு கூறுகின்றார்?
13. நபி நாயகத்தின் மாபெருமை எத்தகையது?

## உரைநடைப் பகுதி

# 1. பயிர் வண்டும் படர் கொடியும்

டாக்டர். ரா. பி, சேதுப் பிள்ளை, பி ஏ., பி. எல்.

### வேங்கை மரம்

''வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ்செய் குற்றாலம்''

என்று பிள்ளைப்பெருமான் போற்றும் பெருமை வாய்ந்த திரிகூட மலையின் ஒருசார் ஓங்கி வளர்ந்த ஒரு வேங்கை மரம் விண் அளாவி விளங்கிற்று, அதன் மருங்கே முளைத்தெழுந்த ஒரு மெல்லிய பூங்கொடி அவ்வேங்கையின் அழகிய கொம்புகளில் பின்னிப் படர்ந்து செழித்து வளர்வதாயிற்று. மஞ்சு தோய வளர்ந்து மாண்புற்று இலங்கிய வேங்கையின்மீது அவ்விளங் கொடி வரி வரியாய்ச் சுற்றிப் படர்ந்த கோலம் கண்டோர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் தன்மை வாய்ந்து விளங்கிற்று. அவ் வேங்கையின் பூங்கொடிகளில் தீங்குயில்கள் மணந்து மகிழ்ந்தன; வண்டினங்கள் பண்ணமைந்த இசைபாடி மலர்களின் மதுவை மாந்திக் களித்தன.

''தீங்குயில் மணந்துதேன் துஞ்சவண்டு பாண்செய
வேங்கை நின்று பொன்உகுக்கும்''

என்று சிந்தாமணி ஆசிரியர் வியந்துரைத்த இயற்கை அழகு அளவிலா உவகையளித்தது.

### நிலையாமை யுணர்வு

அவ் வேங்கை மரத்தின் அடிப்புறத்தில் ஆழ்ந்து அகன்ற ஓர் ஆறு அணிபெறச் சென்றது. மலையிடைப் பிறந்து சவியுறத் தெளிந்து, ஆழ்ந்து அமைந்து ஆன்றோர் மனம்போல் அவ்யாறு அழகுற நடந்து சென்றது. அம் மலையில் வீசிய மெல்லிய இளங்காற்றில் வேங்கையின் பூங்கொம்புகள், அசைந்து பொன்மலர் சொரிந்தன. இளங்கொடி வேங்கையின் கிளைகளில் இனிதாய்த் துவண்டது. இளந்திரைகள், ஆற்றில் அலைந்து இன்புற்று இலங்கின. அப்போது சேய்மையில்

ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது. அதன் தன்மையை மனத்தாற் கருது முன்னரே கடுங்காற்று வேகமாய்ச் சுழன்று வீசத் தலைப் பட்டது. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல் வீசிய புயல் காற்றின் வெம்மையால் மலைப் பொருள்கள் எல்லாம் மயங்கிச் சுழன்றன. அக் கடும் புயலின் வேகத்திற்கு ஆற்ருது மலையே நிலைகுலைந்தது. வெறிகொண்ட புயலில் அகப்பட்ட வேங்கை மரம் வேரோடு அற்று அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து பூத்துச் செழித்து விளங்கிய வேங்கை விழுவதைக் கண்ட எமது உள்ளம் வெதும்பியது. உலகப் பொருள்களின் நிலையாமையை நினைந்து நெஞ்சம் உலைந்தது.

### வண்டும் பைங்கொடியும்

இவ்வாறு வேங்கை சாய்ந்து, வேகமாய்ச் செல்லும் ஆற்றில் விழுந்தபோது, அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரற்று அம்மரத்தோடு ஆற்றில் மயங்கி விழுந்தது. ஆயினும் அவ் வேங்கையில் தீந்தேனுண்டு திளைத்த வண்டுகள் மரத்தோடு பூவும் மாளக் கண்டு, நிலை யழிந்த வேங்கையை நீத்து ஆர்த்தெழுந்து அயல் நின்ற மற்ருேர் மலரில் சென்று சேர்ந்தன. இதனை நோக்கியபோது மதுவுண்டு மயங்கும் வண்டின் இழிகுணம் மனத்தை வாட்டி வருத்தியது.

> "காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
> மேலாடு மீனில் பலராவர்—ஏலா
> இடர்ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
> தொடர்புடையேம் என்பார் சிலர்"

என்னும் பெரியாரது மொழிகளின் பொருளைத் தெள்ளிதில் தெரிந்தோம். கெடுமிடத்துக் கைவிடும் கருவண்டு போலாது பெருந்துயர் நேர்ந்தபோதும் பிரியாத பெருந்தன்மை வாய்ந்து திகழ்ந்த பூங்கொடி அருங்குல மங்கையர் போல் அமைந்து விளங்கிற்று. வேரூன்றி முளைத்த இடத்தினின்றும் படர்ந்து போந்து வேங்கையைப் பற்றித் தளிர்த்து வளர்ந்த கொடியின் தன்மை, மணப்பருவம் வாய்ந்த மங்கை பிறந்த மனையினின்றும் போந்து தலைமகனைச் சேர்ந்து வாழும் தகைமையில் அமைந்

திருந்தது. பூங்கொடி படர்வதற்கு ஏற்ற கொழு கொம்பாய் அமைந்த பெருமை சான்ற வேங்கையின் தோற்றம், ஆண்மை யும் பெருமையும் பொருந்தித் திகழும் தலைமகனது விழுமிய கோலம்போல் விளங்கிற்று. அவ் வேங்கையில் நன்றாகப் படர்ந்து அதன் கிளைகளுக்குப் புதியதோர் அழகு அளித்த கொடியின் கோலம், தலைமகனுடன் ஒன்றி வாழ்ந்து இல் வாழ்க்கைக்கு அழகளிக்கும் குலமங்கையின் குணத்தை விளக்கி நின்றது. இன்னும் வேங்கை துயருற்று ஆற்றில் விழும் நிலையில் அதனோடு தானும் வீழ்ந்து துயருற்ற கொடி யின் தன்மை, தலைவன் துயருறும்போது தானும் துயருறும் நிறை அமைந்த மங்கையின் மனப்பான்மையை விளக்கி நின்றது. இத்தகைய பெருமை, கற்பமைந்த மாதர் வாழ்க்கை யில் கவின் பெற விளங்கக் காணலாம்.

## இராமனும் சீதையும்

தேனடைந்த சோலைத் திருநாடு துறந்து கானகம் செல்ல இசைந்த கமலக் கண்ணன், தலைமகளாகிய சீதையினிடம் விடைபெறுமாறு அவள் மாளிகைக்குச் சென்றான். அங்கு அறமே உருவாயமைந்த திருமகளைக் கண்டு ''மாதே! இணை யற்ற என் தம்பி இந்நாட்டை அரசாள்வான். நான் தாய் தந்தையரது ஆணையைத் தலைமேற் கொண்டு வெளியே போந்து மலைவளங்கண்டு வருவேன். நான் வரும் அளவும் நீ வருந்தாதிரு'' என்று மொழிந்தான். அம்மாற்றம் கேட்ட மங்கை, நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றேனும், நாடாளும் நற்பதத்தை இழந்தான் என்றேனும் வருந்தினாள் அல்லள். ஆயினும் ''நீ வருந்தாதே! நான் உன்னை விட்டுப் பிரிவேன்'' என்று நாயகன் உரைத்த சொல் நஞ்சுபோல் மங்கையின் நெஞ்சை நலிவுறச் செய்தது.

''நாய கன்வனம் நண்ணலுற் றான்என்றும்
மேய மண்இழந் தான்என்றும் விம்மலள்
நீவருந் தலைநீங்கு வன்யான் என்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்''

என்று கவியரசராகிய கம்பர் மங்கையின் மனப்பான்மையை மாண்புற விளக்கிப் போந்தார். இவ்வாறு மயங்கித் தளர்ந்த

மங்கையை நோக்கி மன்னவன், ''மாதே! பஞ்சினும் மெல்லிய உன் கமலபாதம் வெம்மை நிறைந்த கானகத்தில் தோய்ந்து வருந்தும்; கதிரவன் கொடுமையால் கானகக் கற்களெல்லாம் கனல் உமிழும்; அக்கொடிய சூடு உன்னுல் தாங்குதற்கு அரிதாகும்'' என்று வனத்தின் வெம்மையை மங்கை அறியுமாறு எடுத்துரைத்தான். அப்போது மையறு மனத்தளாய மங்கை''ஐய,நின் பிரிவினும் சுடுமோ அப்பெருங்காடு'' என்று,

''அத்துன்பத்திற்கு இணையாய
துன்பம் வேறில்லை யென்றும்''

வினவினுள். தலைவனைப் பிரிவதே பெருந்துன்பம் என்று நிறையமைந்த மாதர் கருதுவர் என்பதற்குச் சீதை ஒரு சிறந்த சான்ருய் அமைகின்ருள்.

## நளனும் தமயந்தியும்

இவ்வாறே கலியின் கொடுமையால் நாடும் பீடும் இழந்து கல்லும் முள்ளும் நிறைந்த கானகம் நோக்கிச் சென்ற நளன் தன்னேடு போந்த தமயந்தியின் மென்மை நோக்கி மனம் நொந்து விதர்ப்ப நாட்டிற்குச் செல்லும் வழியைக் கண்ட போது, ''மாதே! உன் தந்தையின் ஊருக்குச் செல்லும் வழி இதுவே'' என்று எடுத்துரைத்தான். அதுகேட்ட மங்கை மனம் பொருது அழுது,

''ஆங்கது கேட்டலும் அழுது மாழ்கிநொந்து
ஈங்குநின் அடியனேன் பிழைத்தது யாதுகொல்
பூங்கழற் குரிசிலோய் பொறியி லேன்தனை
நீங்கவோ இவ்வுரை நிகழ்த்தினுய் என்ருள்''

என்று கவி கூறுமாறு தயங்கித் தலைவனைப் பிரியாது பின் தொடர்ந்து சென்ருள் என்று இனிது அறியப்படுகின்றது.

## கோவலனும் கண்ணகியும்

இன்னும் பெற்ருேர் சேர்த்து வைத்த பெருஞ்செல்வம் எல்லாம் பொதுமாதிடம் இழந்து வறியனுய், மாடமதுரையில் மனையாளது மணிச்சிலம்பை விற்று வாணிகம் செய்யுமாறு புகார் நகரின்றும் போந்த கோவலனைப் பிரியாது பின்னே சென்று, கடுமையார் கானகத்தில் கமல பாதமும் மெல்லிய

மேனியும் தளர்ந்து வருந்த, அத்துயரைப் பொறுத்து, தலைவனது துயரைக் கண்டு தளர்ந்த கண்ணகியின் பெருமையை,

"கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்கு துயர்எய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி"

என்று சிலப்பதிகாரம் இனிது எடுத்துரைக்கின்றது. இவ்வாறு மண்மகளும் அறியாத வண்ணச் சீறடிகள் வருந்தக் கானகத்தில் நடந்து கணவன் துயர் களைந்த கண்ணகியின் பெருமையைக் கோவலன் கண்டு மனங் குழைந்தான்.

"நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங்கு என்துயர் களைந்த
பொன்னே கொடியே புனைபூங் கோதாய்"

என்று புகழ்ந்து போற்றினுன்.

குலமாதர் நெறி

இவ்வாறு கணவனைப் பிரியாத பெருவாழ்வு வேண்டி இறைவனை வாழ்த்துவதே நிறை அமைந்த மாதர் நெறியாகும். இத்தகைய மாதர் கணவரோடு இன்பமும் துன்பமும் ஒருங்கே நுகர்ந்து அவர் ஆவி துறப்பின் அந்நிலையே உயிர் நீப்பர் என்பதும் அறியப்படுகின்றது. நீரில் அமைந்து வாழும் நீல மலர் அந்நீர் வற்றியபோது அவ்விடத்தே வற்றி உலரும் தன்மை போல், கற்பமைந்த மங்கையர் கணவன் வாழுங் காலத்து அவனுடன் இனிது வாழ்ந்து, அவன் அழியும் காலத்துத் தாமும் அகமகிழ்ந்து அழிவர். இத்தன்மை வாய்ந்த குலமாதர் நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்புநோக்கிக் கம்பர் அமைத்துள்ள கற்பனை, தேன் எனத் தித்திக்கும் தகையதாகும்.

"நிலம ரங்கிய வேரொடு நேர்பறித்து
அலம ரும்துயர் எய்திய ஆயினும்
வலம ரங்களை விட்டில மாசிலாக்
குலம டந்தையர் என்னக் கொடிகளே"

என்னும் கம்பர் கவியில் அமைந்துள்ள சொல் நயமும் பொருள் நயமும் ஆயுந்தோறும் அளவிறந்த இன்பம் பயப்பனவாகும்.

## இருமையும் இன்பந் தருவது

ஆகவே அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல், இடர் உற்றபோது நீங்கும் வுண்டனேயாரோடு இணங்காது இணை பிரியாத இயல்பு அமைந்த கொடியன்னரைத் துணையாகக் கோடலே இருமையும் இன்பம் தருவதாகும் என்னும் உண்மை இனிதறியப்படும்.

**அருஞ்சொற்பொருள் :**

வம்பு - மணம்; கொம்பு - கிளை; கோலம் - அழகு; பிள்ளைப் பெருமான் - திருஞானசம்பந்தர்; மஞ்சு - மேகம்; மாந்தி - பருகி; சவி - அழகு; திரை - அலை; வெம்மை - கொடுமை; காலாடுபோழ்து - செல்வம் மிகுந்த காலத்து; ஏலா - பொருந்தாத; பொறி – நல்வினை; ஏத்தும் - புகழ்கின்ற; நீப்பர் - விடுவர்; அரங்கிய - பொருந்திய.

**வினக்கள் :**

1. ஓங்கி வளர்ந்த வேங்கையின் காட்சியை விளக்குக.

2. வண்டும் பற்றிப் படர்ந்துள்ள பைங்கொடியும் நமக்கு அறிவுறுத்தும் உண்மைகள் யாவை? தனித்தனியே விளக்குக.

3. இராமன் சீதையிடம் கூறிய செய்தி யாது?

4. சீதையின் நெஞ்சினை நஞ்சுபோல் நலிவுறுத்தியது எது?

5. சீதை எதற்குச் சான்றாய் இலங்குகின்றாள்?

6. நளன் தமயந்தியிடம் கூறியது யாது? அதற்கு அவள் கூறிய மாற்றம் யாது?

7. கண்ணகியின் பெருமையைச் சிலப்பதிகாரம் எங்ஙனம் எடுத்துரைக்கின்றது?

8. கண்ணகியைக் கோவலன் எங்ஙனம் பாராட்டினான்?

9. குலமாதர் நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்பிட்டுக் கம்பர் கூறுந்தன்மையை விளக்குக.

10. இருமையும் இன்பந்தருவது எது?

## 2. பொன் காத்த கிழவி

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஐயம்பேட்டைக்கு அருகில் காவிரியாற்றின் தெற்கே குடமுருட்டி யாற்றுக்கு வடகரையில் உள்ளிக்கடை என்னும் சிற்றூர் ஒன்று உண்டு. அதில் உள்ள அக்கிரகாரத்தில் முற்காலத்தே பெரும்பான்மை எண்ணாயிர வகுப்புப் பிராமணர்களும், சிறுபான்மை வேறு வகைப் பிராமணர்களும் வாழ்ந்து வந்தார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் அந்த எண்ணாயிர வகுப்பின ருள்ளே பெருஞ்செல்வர்களுடைய குடும்பம் ஒன்று இருந்தது. அக்குடும்பத்தினருக்கு மிகச் சிறந்த நிலங்களும் பெருந் தொகையாகிய செல்வமும் இருந்தன. அவர்களிடமிருந்த பணத்தைப் பிற்காலத்தில், சகோதரர்கள் முகக்கும் அளவை யால் அளந்து பிரித்துக்கொண்டார்களென்று சொல்லு வார்கள். ஆதியில் அந்தச் சகோதரர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள்.

அவர்கள் தம்முடைய பணத்தைப் பெரிய குடங்களிற் போட்டு வைப்பது வழக்கம். அவற்றை நிலத்திற் புதைத்து வைப்பார்கள். ஒரு குடத்துக்கு இவ்வளவு ரூபாய் என்ற கணக்கு உண்டு.

ஒரு சமயம் உள்ளிக்கடைக்குச் சில கல் தொலைவில் உள்ள ஓர் ஊரில் வசித்து வந்தவரும், முற்கூறிய குடும்பத் தினருக்கு நெருங்கிய உறவினருமாகிய ஒரு செல்வர் வீட்டில் ஒரு திருமணம் சிறப்பாக நடைபெற்றது. ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு இன்றி விசேட நாள்களில் உறவினர்களை அழைப்பதும், அவர்களுடைய வீட்டிற்கு உறவினர்கள் எல்லாரும் சென்று தம்மாலான உதவிகளைச் செய்வதும், அக்காலத்து வழக்கங்கள். ஆதலின் உள்ளிக்கடையிலிருந்து அக்குடும்பத்திலுள்ளவர்கள் திருமணம் நடைபெற்ற ஊருக்குச் சென்றுவிட்டனர். வீட்டிற்குக் காவலாக ஒரு கிழவியையும்,

அவளுக்குத் துணையாக வேலைக்காரர் சிலரையும் வைத்து விட்டுச் சில நாள்களில் திரும்பி வருவதாகச் சொல்லி அவர்கள் போனார்கள்.

திருமணத்தின் நான்காவது நாள் இரவு மிகவும் சிறப்பாக ஊர்வலத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் காட்சியைக் கண்டுகளிக்க வேண்டுமென்றே சுற்றுப் புறத்திலுள்ள சிற்றூர்கள் பலவற்றிலிருந்தும் மக்கள் வந்து கூடினார்கள். உள்ளிக்கடையில் கிழவியுடனிருந்தவர்கள் அன்றிரவு மட்டும் போய் ஊர்வலத்தைப் பார்த்துவிட்டு வருவதாக அவளிடம் உத்தரவு பெற்றுப் போய்விட்டார்கள். அதனால் வீட்டில் கிழவி மட்டும் அன்றிரவு தனியே இருக்க நேர்ந்தது.

அக்குடும்பத்தில் அளவற்ற பணம் உண்டென்பதை அறிந்த திருடர்கள் சிலர் எப்படியேனும் அவ்வீட்டிற் புகுந்து கொள்ளையடிக்க வேண்டுமென்று பல நாளாக எண்ணி இருந் தார்கள்; எப்பொழுதும் பலர் கூடியிருக்கும் அவ்வீட்டிற் புகுவது இடர்ப்பாட்டிற்கு ஏதுவாகும் என்பதை அறிந்தவர்க ளாதலின் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார்கள்.

அயலூரில் நடைபெறும் திருமணத்தின் பொருட்டு எல்லாரும் வீட்டை விட்டு வெளியூருக்குச் சென்றிருப்பது அத்திருடர்களுக்கும் எவ்வகையாலோ தெரிந்துவிட்டது. ஆதலின், 'இதுவே நம் எண்ணம் கை கூடுவதற்கு நல்ல சமயம்' என்றெண்ணி அன்றிரவு அவ்வீட்டிற்குச் சென்று கொள்ளையடிக்க ஏற்பாடு செய்தார்கள்.

பத்துத் திருடர்கள் ஒன்று சேர்ந்து அன்றிரவு நடு யாமத்தில் உள்ளிக்கடைக்கு வந்தனர். ஏணியைச் சார்த்தி வீட்டிற்குள்ளே முற்றத்தின் வழியே இறங்கினார்கள். யாரேனும் சிலர் அங்கே இருத்தல் கூடுமென்பது அவர்கள் எண்ணம். விளக்கை ஏற்றிப் பார்த்தார்கள். அவர்கள் கண்ணில் ஒருவரும் படவில்லை. அப்பால் ஓரிடத்தில் ஒரு கிழவி மட்டும் படுத்திருப்பதைக் கண்டார்கள்.

கிழவியோ அன்றிரவு ஒரு நிமிடமும் தூங்கவில்லை. திருடர்கள் வந்ததை அவள் அறிந்துகொண்டு, கூச்சலிடாமல் தூங்குகிறவளைப் போலவே சிறிதும் படபடப்பின்றிப் படுத்திருந்தாள். திருடர்கள் அவளை அணுகி எழுப்பினார்கள். அவள் திடீரென்று திடுக்கிட்டு எழுபவள்போல எழுந்து, "நீங்கள் யார்? தெரியவில்லையே" என்றாள்.

**திருடர்கள்:** உன்னைத்தவிர இங்கே இன்னும் யார் யார் இருக்கிறார்கள்? அதை முதலில் சொல்லிவிடு. கூச்சல் போடாதே; போட்டால் உடனே உன் கழுத்தைத் திருகிக் கொன்றுவிடுவோம். இந்த வீட்டிலுள்ள பணத்தைத் திருடிக் கொண்டு போவதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம்.

**கிழவி:** அப்படியா, நல்லது; அப்படித்தான் செய்ய வேணும்! அப்படித்தான் செய்யவேணும்! நல்ல முடிவு செய்தீர்கள்.

கிழவி இவ்விதம் சொல்லிக்கொண்டே சிரித்தாள்.

**திருடர்கள்:** என்ன பாட்டி? எங்களை ஏளனம் செய்கிறாயே!

**கிழவி:** இல்லை; இல்லை. எதற்காக உங்களை நான் ஏளனம் செய்கிறேன்? இந்த வீட்டுப் பிள்ளைகள் செய்யும் கொடுமைகளை என்னால் பொறுக்கமுடியவில்லை. நான் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறேன். வேளைக்குச் சோறு போடுவதில்லை; கட்டுவதற்குப் புடைவை வாங்கித் தருவதில்லை; ஏதாவது வேண்டுமென்று கேட்டால் என்னைக் கோபித்துக் கொள்ளுகிறார்கள்; சில சமயங்களில் அடித்தும் விடுகிறார்கள்; இதனால் ஒரு நாளைக்கு நூறு தடவை என் உயிர் போய்ப்போய் வருகிறது. எப்படியோ நாளைக் கடத்திக் கொண்டு வருகிறேன். இதைக்காட்டிலும் உங்கள் கையால் மரணம் நேரிட்டால் அதுவே எனக்கு நல்லது. யாருக்காக நான் இனி இவ்வுலகத்தில் இருக்கவேண்டும்? இந்தப் பாவிகள் என்னைப் படுத்திவைக்கும் பாட்டுக்கு இந்தப் பணத்தை எந்த மகராசனாவது வந்து வாரிக்கொண்டு

போகமாட்டாளுவென்று என் வயிறெரிய ஒவ்வொரு நாளும் மனத்திற்குள் வேண்டிக்கொண்டு இருந்தேன். நல்ல வேளே யாக இன்று நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்.

திருடர்கள் இதைக்கேட்டு மிக்க வியப்படைந்தார்கள். அவர்களுள் சிலருக்கு மனதிற்குள் சிறிது இரக்கமும் உண்டாயிற்று.

**திருடர்கள்:** இங்கே இன்னும் யார் இருக்கிருர்கள்?

**கிழவி:** நான் மட்டுமே இருக்கிறேன். இதிலேயே பார்த்துக்கொள்ளுங்கள். ''ஏதடா, கிழவி தனியே இருக் கிருளே! ' அவளுக்கு யாராவது துணேயாக இருக்க வேண்டாமா!'' என்றுகூட அவர்கள் நினேக்கவில்லே. அவர்கள் மட்டும் திருமண விருந்து சாப்பிடுவதற்குப்போய் விட்டார்கள். எனக்கோ இங்கே கண்ணுந் தெரியவில்லே; காதும் கேட்கவில்லே; காலோ தள்ளாடுகிறது. இந்த நிலேயில் நாளுகச் சமைத்துக்கொண்டு எப்படிச் சாப்பிடுவது? இந்த நான்குநாளாக ஆகாரமே இல்லே; வயிற்றைப்பிடித்துக் கொண்டு தெய்வமே என்று கிடக்கிறேன். ஒவ்வொரு கணமும் சாபம் இட்டுக்கொண்டும் இருக்கிறேன். அந்தச் சாபத்தின் பலளுகத்தான் கடவுள் உங்களே அனுப்பியிருக்கிருர். வேணும், நன்ருக வேணும்! இங்கே ஒரு துரும்பைக்கூட நீங்கள் பாக்கி வைக்காமல் எடுத்துக்கொண்டு போங்கள்! அப்பால் இவர்கள் சோற்றுக்கும் தண்ணீருக்கும் என்னேப் போலவே திண்டாட வேணும்! அதை நான் கண்ணுலே பார்க்கவேணும்!

**திருடர்கள்:** அவர்கள் பணத்தை எங்கே வைத்திருக் கிருர்கள் தெரியுமா?

**கிழவி:** தெரியாமல் என்ன? நன்ருகத் தெரியும். என் வீட்டுக்காரர் சம்பாதித்த சொத்துத்தானே இவ்வளவும். நான் தான் இத்தனே பணத்தையும் ஆண்டுகொண்டிருந்தேன். இப்பொழுது நண்டல் வண்டல்களெல்லாம் அதிகாரத்துக்கு வந்துவிட்டன! ஏனென்று கேட்பார் இல்லாமல் நான் நிற்கிறேன்.

இந்த வார்த்தைகளைச் சொல்லும்போதே கிழவி தேம்பித் தேம்பி அழலானாள்.

**திருடர்கள்:** அழாதே பாட்டி! அழாதே! பணம் எங்கே இருக்கிறது? சொல்.

**கிழவி:** பணம் அதோ அந்த அறையில் இருக்கிறது. அதன் சாவியும் என்னிடத்திலேதான் இருக்கிறது. வாருங்கள் காட்டுகிறேன்.

கிழவி இவ்வாறு சொல்லிவிட்டு ஓர் அறையைத் திறந்து திருடர்களை உள்ளே அழைத்துச் சென்றாள். அவர்கள் யாவரும் ஒருங்கே அவ்வறைக்குள் நுழைந்தார்கள். அவர்களுள் ஒருவனை மற்றொருவன் நம்பவில்லை. தனக்குத் தெரியாமல் வேறொருவன் அதிமாகப் பணத்தையெடுத்து ஒளித்து வைத்துக்கொள்ளக் கூடுமென்று ஒவ்வொருவனும் எண்ணினான்.

கிழவி நடக்கும்போது கீழே விழுந்துவிடுவாளோ என்று திருடர்கள் எண்ணினார்கள். அறைக்குள்ளே சென்று ''இங்கேதான் கீழே புதைத்திருக்கிறார்கள். இங்குள்ள பானைகளில் சில சொத்து இருக்கும்'' என்றாள் கிழவி. தரையைத் தோண்டுவதற்குத் திருடர்களிடம் கருவியொன்றும் இல்லை. ''கடப்பாரை இல்லையா?'' என்றார்கள் திருடர்கள். 'இதோ நான் கொண்டுவந்து தருகிறேன்' என்று சொல்லிக் கிழவி மெல்லச் சுவரைப் பிடித்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்தாள். கதவின் சங்கிலியைப் பிடித்து நிலைக்கு வெளியில் கால் வைத்தாளோ இல்லையோ, அவளுக்கு இருந்த தளர்ச்சி மாயமாய்ப் பறந்தோடிவிட்டது. சடக்கென்று கதவை யிழுத்துச் சங்கிலியை மாட்டிப் பூட்டிவிட்டாள்.

அப்பால் வீட்டிற்கு வெளியே ஓடிவந்து, தெருவில் நின்று கூச்சல்போட ஆரம்பித்தாள். ஒருவர் பின் ஒருவராக அக்கிரகாரத்தில் உள்ளவர்களும், குடியானவர்களும் கூடிவிட்டார்கள். எல்லாரும் உள்ளே புகுந்து கதவைத் திறந்து திருடர்களைச் சூழ்ந்துகொண்டனர். ஊரினருடைய பெருங்

கூட்டத்தினருக்கு நடுவே அந்தத் திருடர்கள் என்ன செய்ய முடியும்? அவர்கள் யாவரையும் ஊரார் பிடித்துக்கட்டி ஐயம்பேட்டையிலிருந்த காவல் நிலையத்திற்குக் கொண்டு போனார்கள். விசாரணை நடைபெற்றது. திருடர்கள் தண்டனை அடைந்தனர்.

கிழவி திருடர்களைப் பிடிப்பதற்குச் செய்த திறமையை அவள் கூறக்கேட்ட யாவரும் வியந்தனர். அக்காலத்தில் தஞ்சாவூரிலிருந்த கலெக்டர் இதைக்கேட்டு, வியப்புற்று மிகவும் பாராட்டி அவளுக்கு ஒரு பொற் பதக்கம் அனுப்பினார்.

**வினாக்கள் :**

1. உள்ளிக் கடையிலுள்ள செல்வர் வீட்டில் கிழவி மட்டுந் தனித்திருக்கக் காரணமென்ன ?

2. கிழவி, திருடர்களை எவ்வாறு அகப்படுத்தினாள் என்பதைச் சுருக்கி எழுதுக.

# 3. மார்கோ போலோவும் தமிழ் நாடும்

பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், எம். ஏ , பி எல்., எம். ஓ. எல்.

*(மார்கோ போலோ 13ஆம் நூற்றாண்டில் தமிழ் வாழ்க்கையைப்பற்றி எழுதிவைத்த குறிப்புக்கள்)*

இந்தியாவைச் செல்வப் புதையல் என மேனாட்டார் கருதி வந்தனர். பலர் அங்கிருந்து இங்கு வந்து, இந்த நாட்டினைப் பற்றிப் பல குறிப்புக்கள் எழுதிவைத்துள்ளனர். அலெக்ஸாண்டருக்குப்பின் இந்த நாட்டினோடு மேனாட்டின் தொடர்பு வளர்ந்தது. உரோமப் பேரரசு சாய்ந்ததும், மேனாட்டில் இருள் மூடியது. இந்திய வெறிகொண்டு கொலம்பசும் வாஸ்கோடகாமாவும் புறப்படுவதற்குமுன், கீழ் நாடுகளைப் பற்றிய பேரவாவினை மேனாட்டில் கிண்டியவர் மார்கோபோலோ என்பவராவர். இவர் இத்தாலியில் வெனிஸ் மாநகரத்தில் 1254 இல் பிறந்தார். இவருடைய தந்தையும் சிறிய தந்தையும் உயர்குடியிற் பிறந்த வணிகர்கள். 1260இல் இவ்விருவரும் சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்; இரண்டாம் முறை இவர்கள் 1271இல் புறப்பட்டபோது மார்கோபோலோவையும் அழைத்துக்கொண்டு சென்றனர்; 24ஆண்டுகள் சுற்றியபின் 1295இல் ஊர் திரும்பினர். ஜெனோவாவுக்கும் வெனிசுக்கும் நடந்த போரில், மார்கோபோலோ சிறைப்பட்டார். ஆனால் வெற்றி வெறியால் தலைமயங்காமல், ஒரு நன்மை செய்தனர் ஜெனோவா நகரத்தினர்; மார்கோ போலோ கூறும் கதைகளை எல்லாம் ருஸ்தி செல்லோ என்பவரைக் கொண்டு எழுதுவித்தனர். நோபெல் பரிசு பெற்ற பெர்ல்பக் என்ற அம்மையார் இவரை முந்த முதல் தோன்றிய உலகக் குடிமகன் (First World Citizen) என்பர். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனக் கொண்டு மேனாட்டில் இருந்து புறப்பட்டுக் கீழ் நாடெல்லாம் சுற்றி வந்த ஒரு பரந்த உள்ளம். கண்டதனை எல்லாம் குழந்தை மனத்தோடு கண்டு களித்த ஊக்கம், இதனை எல்லாருக்கும் சொல்லவேண்டும் எனப் பொங்கி எழுந்த அன்பு இவையே இவர் நூலை இன்னும் வாழ்விக்கின்றன. சீனப் பேரரசர் குப்லாகானைப் பற்றி இவர் எழுதியன

புராணம்போல் ஆய்விட்டன. இவர், நம் தமிழ் நாட்டிற்கும் வந்தனர். இவர் கண்டவற்றை ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகளுக்குப் பின், நாம் இன்று படிப்பது இன்பந்தருவ தொன்றும். சோழப்பேரரசு வீழத் தொடங்கியபோது கட்டற்றுக் கிடந்த தமிழ் நாட்டினையே இவர் கண்டார். தமிழ் நாட்டினை ''மாபர்'' என்று அரேபியக் கப்பலோட்டிகள் வழங்கிவந்தனர். சுந்தரபாண்டியன் சீரும் சிறப்பும் பெற்ற காலம் அது. தமிழ் நாட்டினைப் பற்றி மார்கோ போலோ எழுதியுள்ளதனைக் கீழே மொழிபெயர்த்துத் தருகின்றோம்.

''இலங்கைத்தீவினைவிட்டு மேற்காக 96கிலோமீட்டர்கள் (60 மைல்) கப்பலில் போனதும் மாபர் (தமிழ் நாடு) என்ற பெரிய நாட்டினை அடைவீர். இஃது ஒரு தீவு அன்று; பெரிய இந்திய கண்டத்தின் ஒரு பகுதியே ஆகும். உலகில் செல்வத் திலும் மாட்சிமையிலும் இது தலைசிறந்த நாடாகும். இதனை நான்கு அரசர்கள் ஆண்டு வருகின்றார்கள். இவர்களில் தலையாயவன் பெயர், ''செந்தர் பாண்டி''(சுந்தர பாண்டியன்) என்பதாம். இவனுடைய நாட்டில், மாபர்க்கும் ஜைலன் (சிலோன்—இலங்கை) தீவுக்கும் இடையே உள்ள வளைகுடா விலேதான் முத்துக் குளிக்கும் துறை உண்டு. அங்கே தண்ணீர் 12—15 ஆள் ஆழத்திற்குமேல் இராது; சில இடங்களில் 2 ஆள் ஆழத்திற்குமேல் இல்லை. முத்துக் குளிக்கும் தொழில் கீழே கண்டபடி நடைபெறுகிறது.''

''ஒரு சில வணிகர்கள் தனித்தனிக் கூட்டாக வர்த்தகக் குழுக்களாகச் சேர்வார்கள். இவர்கள் பல பல அளவில் உள்ள பல கப்பல்களையும் படகுகளையும் வேலைக்கு வைத்துக் கொள்வார்கள். இவற்றில் தரைப் பாரஞ் சாம்பிக் கயிறுகளும் உண்டு. இவற்றால் நங்கூரம் பாய்ச்சிவிட்டுக் கப்பலில் எளிதில் ஏறிக் கடலில் போகலாம். இந்தக் கப்பல்கள் முத்துள்ள சங்குகளைக் குளித்து எடுக்கும் கலையில் வல்லவர் களை வேலைக்கு அமர்த்திக்கொண்டு செல்லும். இந்தச் சங்கு களை வலைப் பை வழியாக மேலே கொண்டுவருவர். இந்தப் பைகள் முத்துக்குளிப்போர் உடம்பில் கட்டியிருக்கும். இவர்கள் தண்ணீருக்குள் மூச்சுவிட முடியாதபோது, நீர்

மட்டத்தின் மேலே வருவர்; சில நேரம் கழித்து மறுபடியும் குளிப்பர். இப்படிப் பலமுறை நிகழும். இவர்கள் இந்த வேலையில் நாள் முழுவதும் விடாப்பிடியாக ஈடுபடுவார்கள். எல்லா நாடுகளுக்கும் வேண்டும் அளவு சங்குகளை இவர்கள் ஒரு பருவத்திற்குள்ளேயே தங்கள் முயற்சியால் சேர்த்துவிடு வார்கள். இந்த வளைகுடாவில் உள்ள முத்துத்துறையில் கிடைக்கும் முத்துக்கள் பெரும்பான்மையும் உருண்டை யாகவும் நல்ல ஒளியுடையனவாகவும் உள்ளன. பெருவாரி யாகச் சங்கு எடுக்கும் இடம் தாய்நாட்டிலேயே இருக்கிறது. இதற்குப் பெதெலா என்று பெயர். இங்கிருந்து இந்தத் துறை தெற்கே 96 கிலோ மீட்டர்கள் (60 மைல்) வரை நீண்டு செல்கிறது.''

''இந்த வளைகுடாவில் ஒருவகைப் பெரிய மீன்கள் நிறைந்து கிடக்கின்றன. இவை குளிக்கிறவர்களை அடிக்கடி கொன்று தொலைக்கின்றன. இதற்காகச் சில மந்திரக்காரர்களை இந்த வணிகர்கள் தங்களோடு அழைத்துச் செல்கிறார்கள். இவர்கள் பார்ப்பனக் குடியைச் சேர்ந்தவர்கள். தங்களுடைய மந்திர வித்தையால் இந்த மீன்களை வசியம் பண்ணித் தங்கள் விருப்பப்படி நடக்கச் செய்து ஒரு கேடும் விளையாதபடி இவர்கள் தடுக்கின்றார்கள். முத்துக் குளிப்பது பகலில்தான் நடக்கும். ஆகையால் இவர்கள் மாலையில் மந்திர சக்தியைச் செலுத்தாமல் விட்டு விடுவார்கள். இராக் காலத்தைப் பயன்படுத்திக்கொண்டு முத்துச் சங்குகளைத் திருட வந்து குளிக்கும் வஞ்சகர்கள், மந்திரக் கட்டில்லாத இந்த மீன்கள் நடையாடுவதற்கு அஞ்சி, அவ்வாறு செய்ய முனையாது விட்டுவிடுவார்கள் என்பது இவர்களுடைய எண்ணம். இந்த மந்திரக்காரர்கள் இதைப் போல எல்லா வகையான பறவைகளையும் விலங்குகளையும் வசியம் செய்யும் கலையிலும் கைதேர்ந்தவர்கள்.''

''முத்துக் குளிப்பது ஏப்ரல் மாதத்தில் தொடங்கும்; மே மாதம் நடுவரை நடைபெறும். இத்தொழிலில் ஈடுபடும் உரிமையை அரசனிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ள வேண்டும். இந்தத் தொழிலில் வருவாயில் பத்தில் ஒரு

பங்கே அரசனுக்குத் தரும் விலையாகும்; மந்திரக்காரனுக்கு இருபதில் ஒரு பங்கு சேரும். எனவே, வணிகர்களுக்கே இதனால் பெரிய ஊதியம் உண்டு. மேலே சொல்லிய பருவ காலம் முடிவதற்குள், சங்குகளும் அந்த இடத்தில் குளித்தாய் விடும். பின்னர்க் கப்பல்களை அவர்கள் வேறு இடத்திற்குக் கொண்டு செல்வர்; இந்த வளைகுடாவிலிருந்து 480 கிலோ மீட்டர் தூரம் போவர்; அங்கே செப்டம்பர் மாதத்தில் தங்கத் தொடங்கி அக்டோபர் மாதம் நடுவரை இருப்பர். அரசன் மேற்கண்டவாறு பத்தில் ஒரு பங்கு முத்துக்களைப் பெறுவ தோடு நல்ல வடிவாய் உள்ள பெரிய முத்துக்களையும் பொறுக்கி எடுத்துக்கொள்ளலாம். அவற்றிற்கு அவன் நிறையப் பணம் தருவதால், அவற்றை அவனிடம் கொண்டு போய்க் காட்டுவதில் வணிகர்கள் கசப்பு ஒன்றும் கொள்வதில்லை.''

''நாட்டின் இந்தப் பகுதியில் உள்ளவர்கள், மானத் திற்காகக் காக்கவேண்டும் உறுப்புக்களை மட்டும் சிறு துணியால் மறைத்துக் கொண்டு மற்றைப்படி ஏறக்குறைய நிருவாணமாகப் போகின்றார்கள். ''அரசன், விலையான துணிகளை உடுத்திக் கொண்டிருக்கிறான்'' என்பது தவிர, அவன் ஒன்றும் பிறரைவிட மிகுதிப்படியாக உடை யணிந் திருப்பதில்லை; ஆனால் பலவகை அணிகலன்களைப் பூண்டு பிறரினும் பெருந்தன்மையாகச் சிறந்து விளங்குகிறான்; விலையேறிய நீலம், பச்சை, கெம்பு முதலிய இரத்தினங்கள் நிறைந்த கழுத்துப் பட்டை (கண்டசரம்) பட்டு நூலில் முத்தும் கெம்பும் கோத்துக் கழுத்திலிருந்து மார்புவரை தொங்கும் மாலை (ஹாரம்; இரட்டை மணிமாலை) இவற்றை அணிந்திருக்கிறான். இந்த மாலையில் மணிகள் 104. (108 என்பதனை மறந்து 104 என எழுதுகிறார் மார்கோ போலோ) 104 என்ற எண்ணுக்குக் காரணம் உண்டு. அரசனுடைய சமய முறைப்படி ஒவ்வொரு நாளும் தன் கடவுளை நோக்கி அத்தனை முறை மந்திரம் செபம் செய்ய வேண்டும். அவனுடைய முன்னோர், என்றும் இதிலிருந்து தவறியதே இல்லை. இந்த மந்திரம், ''பகஉதா'' என்ற சொல்லே ஆம். (பகஉதா என்பது பகவத் என்பதனைக் குறிக்கலாம்;

''பகவான்'' எனத் தமிழில் வழங்கும் இந்தச் சொல்லைக் கேட்டது நினைவில் இருந்திருக்கலாம். பாண்டியர்கள் சைவர்கள்; ஆதலின் ''நமச்சிவாய'' என்ற மந்திரத்தினையே செபித்திருப்பார்.) இந்த மந்திரத்தினை இவர்கள் 104 (108) முறை செபிக்கின்றனர். பொன்னால் செய்து முத்தும் மணியும் கொண்டு புனைந்த தோள்வளைகள் மும்மூன்றினைத் தோளில் அரசன் அணிந்திருக்கின்றான்; அவ்வாறே புனைந்துள்ள பொன் பட்டைகளை (கழல் சிலம்பு முதலியவற்றை)த் தன் காலில் மூன்று வேறு இடங்களில் பூண்கின்றான்; கால் விரல் களிலும் கை விரல்களிலும் மதிப்பிட முடியாத மோதிரங்களை அணிந்து கொண்டிருக்கிறான். இந்த இரத்தினங்களும் முத்துக்களும் இவனுடைய நாட்டுப் பொருள்கள் ஆதலின், இவ்வளவு பெருமிதமான அரசச் சின்னங்களை அழகாக வெளிக் காட்டிக்கொள்வது இந்த அரசனுக்கு மிக மிக எளிதாம்.''

''அரசன் தன்னைச் சுற்றிப் பல வீரர்களை வைத்திருக் கிறான். ''இம்மைக்கும் மறுமைக்கும் அரசனுக்கு வேலைக் காரர்'' என்ற சிறப்புப் பெயர் அவர்களுக்கு உண்டு. அவர் மெய்காப்பாளராய் அரண்மனையில் அரசனது திருமேனியைக் காக்கின்றனர். உலாப் போகும்போது பக்கத்தில் குதிரை யேறிச் செல்கின்றனர். எப்பொழுதும் அரசனுடனேயே செல்கின்ற உடனுறை சுற்றம் அவர்களே ஆவர். அவர்கள் அரசாங்கத்தில் எல்லாத் துறைகளிலும் மிக்க அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். அரசன் இறந்ததும் அவனுடலைக் கொளுத்தும் சடங்கு நடைபெறும்போது, அந்த உண்மைச் சேவகர்கள் அந்தத் தீயில் குதித்து அரசனது உடலோடு எரிந்து சாம்பராவார்களாம். மறுபிறப்பிலும் அவனுடைய உடனுறை சுற்றமாகத் தொண்டாற்ற இவ்வாறு செய்வார்களாம்.''

''கீழேகண்ட வழக்கமும் இதேபோல் வழங்கி வருகின்றது. அரசன் இறந்தால் அவனுக்குப் பின் அரசனாகும் அவனுடைய மைந்தன், முன்னவன் விட்டுப்போன பண்டாரத்தை (பொக்கி ஷத்தை)த் தொடுவதே இல்லை. நாடு முழுவதும் தனக்கு

முழு உரிமையோடு வந்தபின்னர்த் தன் தந்தையைப்போலத் தானும் பெரிய பண்டாரத்தை நிரப்ப ஆற்றலற்றுப் போனதாகத் தன் ஆளும் திறமையிலேயே குறையாய் முடியும் எனக்கருதியே இவ்வாறு மைந்தன் நடந்து வருகின்றனனும். இந்த மனப்போக்கின் காரணமாகத் தலைமுறை தலைமுறையாய் அளவற்ற செல்வம் சேர்ந்துவருகிறது என்று மக்கள் கருதுகிறார்கள்.''

''இந்த நாட்டில் குதிரைகள் பிறந்து வளர்ந்து பல்கிப் பெருகுவது இல்லை. அரசனும் அவனுடைய மூன்று தம்பிமாரும் ஆர்மஸ், தியூவார், பெசார், ஆதென் என்ற இடங்களிலுள்ள வணிகர்களிடமிருந்து குதிரைகள் வாங்கப் பெரும் பணத்தொகையைச் செலவிடுகின்றார்கள். இந்த வணிகர்கள் 5,000 வரை குதிரைகளை இறக்குமதி செய்து, ஒவ்வொரு குதிரையையும் 500 பொன்னுக்கு விற்பதால் இந்த நாட்டிற்குக் குதிரைகளைக் கொண்டுவரும் வாணிகத்தில் பெரிய செல்வம் படைக்கின்றார்கள். அந்தக் குதிரைகளைச் சரிவரப் பாதுகாக்கவோ, வேண்டும் மருந்துகளைத் தரவோ தக்கவர்கள் இல்லாமையால் இது காரணமாகவே ஆண்டின் முடிவில் அவற்றில் 300 கூட உயிரோடு இருப்பது இல்லையாம் என்று பலர் கூறுகின்றனர். அதனால், அவற்றுக்குப் பதிலாக ஆண்டுதோறும் குதிரைகளைப் புதியனவாக வாங்கக் கட்டாயம் ஏற்படுகிறது. ஆனால், இந்த நாட்டின் தட்ப வெப்ப நிலை இந்த வகையான குதிரையினத்திற்குப் பிடிக்கவில்லை. அதனாலேயே, இங்கே குதிரைகளைப் பிறக்கச் செய்வதும் வளர்ப்பதும் அருமை ஆகின்றன. அரிசி தவிர வேறு தானியங்கள் இந்த நாட்டில் விளையாமையால், இந்தக் குதிரைகளுக்குத் தீனியாகச் சோறு தீற்றிய இறைச்சியையும் வேறு வகையாகச் சமைத்த உணவுகளையும் கொடுத்து வருகின்றனர்.''

''கீழே கண்ட வியப்பான வழக்கம் இந்த நாட்டில் வழங்கி வருகிறது: குற்றவாளி, வழக்கு முடிந்ததும் கொலைத் தண்டனையை ஏற்றுக் கொலைக்களத்துக்குப் போகும் போது குறிப்பிட்ட தெய்வத்திற்குத் தன்னைப் பலியிட விரும்பினால் அதனைத் தெரிவித்து விடுவான். உடனே

அவனுடைய உறவினரும் நண்பரும் ஒருவகை நாற்காலியில் அவனை அமர்த்தி அவன் கையில் நன்ருகக் கூர்தீட்டி உறுதியாக இருக்கும் பன்னிரண்டு கத்திகளைக் கொடுத்து விடுவார்கள்; நகரத்தைச் சுற்றி இவ்வாறு அவனைத் தூக்கிச் செல்லுவார்கள்; உரத்த குரலில், 'இந்த வீரப் பெருமகன் கடவுள் மேலுள்ள அன்பின் மேலீட்டால் தானே தன்னைப் பலி கொடுக்கப் போகின்ருன்' என்று பறையறைவார்கள். தண்டனை நிறைவேற்றும் களத்திற்கு வந்ததும், அவன் இரண்டு கத்திகளை விரைந்து எடுத்து, 'இந்தத் தெய்வத்திற்கு என்னைப் பலி கொடுக்கப் போகிறேன்' என உரத்துக் கூவி, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடையிலும் குத்திக் கொள்வான்; இரண்டை வயிற்றிலும் இரண்டை மார்பிலும் குத்திக்கொள்வான்; ஒவ்வொரு முறை குத்திக் கொள்ளும் போதும், முன் சொல்லிய சொற்களைச் சொல்லிக்கொண்டே ஒரு கத்தி தவிர மிகுதியை எல்லாம் இவ்வாறு தன் உடலின் பல உறுப்புக்களிலும் குத்திக்கொள்வான்; பிறகு கடைசிக் கத்தியை நெஞ்சிற்குத்திக் கொண்டு உடனே மாய்ந்துவிடுவான். இந்தக் காட்சி நடந்தேறி முடிந்ததும், அவனுடைய சுற்றத்தார் பெரிய வீருப்போடும் களிப்போடும் சென்று அவனுடைய உடலை நெருப்பிற்கு இரையாக்குவர். அவனுடைய மனைவி, தன் கணவன் மேலுள்ள அன்பு காரணமாக அந்தத் தீயில் விழுந்து அவனோடு சாம்பராவாள். இத்தகைய உறுதிப்பாட்டினைக் காட்டும் பெண்களைச் சமுதாயம் மிகவும் பாராட்டுகிறது. அவ்வாறு செய்ய அஞ்சும் பெண்களையோ மிகவும் பழிக்கின்றது.''

அருஞ்சொற்பொருள் :

இம்மை - இப்பிறவி; மறுமை - மறுபிறவி; திருமேனி - உடல்; உடனுறை சுற்றம் - எப்பொழுதும் தன்னோடிருக்கும் சுற்றம்; சாம்பர் - சாம்பல்; தீற்றிய - கலந்த; வீருப்பு - பெருமிதம்.

வினுக்கள் :

1. ஜெனேவா நகரத்தினர் செய்த நன்மை யாது ?

2. மார்கோ போலோ எழுதிய நூல், நிலைத்து வாழ்வதற்குக் காரணங்கள் எவை ?

3. மாபர் - என்று யார் எதனை வழங்கி வந்தனர்?

4. முத்து வணிகர்களுடன் மந்திரக்காரர்கள் செல்லக் காரணம் என்ன?

5. முத்துக் குளிக்கும் தொழில் வருவாயில், யார்யாருக்கு எவ்வெவ்வளவு பங்கு சேரும்?

6. தமிழகத்தாரின் ஆடையணிகளைப்பற்றி மார்கோபோலோ குறிப்பிடுவனவற்றைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

7. மெய்காப்பளரைப் பற்றி மார்கோ போலோ எழுதிய குறிப்பு யாது?

8. அரசர்களிடத்துத் தலைமுறை தலைமுறையாகச் செல்வம் குவியக் காரணமென்ன?

9. தமிழக அரசர் ஆண்டுதோறும் குதிரைகள் வாங்கக் காரணம் என்ன?

10. கொலைத்தண்டனை பெற்ற குற்றவாளிகளைப்பற்றி, மார்கோ போலோ குறிப்பிடுவதை எழுதுக.

11. முத்துக்குளிக்குந் தொழிலைப்பற்றி மார்கோ போலோ எழுதியவற்றைத் தொகுத்துச் சுருக்கி வரைக.

# 4. ஓவியக்கலைஞர்—இரவிவர்மா

பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரை, எம். ஏ., எல். டி.

## பாரதியார் பாராட்டு

''இயற்கையில் அழகு எங்கும் கனிந்து தவழ்கின்றது. மலரிலே அது புன்னகை பூத்துக் குலுங்குகிறது. நீலவானிலே அது களிநடம் புரிகின்றது; மாதர்தம் முகங்கள்தோறும் அது தண்ணிலவொளி வீசுகின்றது. இங்ஙனம் இயற்கை தன் அழகு வண்ணத்தை யெல்லாம் காட்டிக் களிகூருவது எதற்குத் தெரியுமா?'' என்று ஒரு கேள்வி கேட்கிறார் கவிஞர் பாரதி. ''உலகப்புகழ் பெற்ற கலைஞன் இரவிவர்மன், இந்த மெய் வண்ணங்களை யெல்லாம் காணட்டும்; கண்டு மகிழ்ந்து, தன் மைவண்ணங்களைத் தோய்த்துக் கைவண்ணம் தீட்டிக் காட்டட்டும். இதுவே இயற்கையின் உட்கோளாயிருக்க வேண்டும்'' என்று அவரே தம் கேள்விக்குக் கவிநயம் பட ஒரு மறுமொழியும் தந்து சொல்லுகிறார். கவிஞர் பாரதியின் இத்தற்குறிப்பேற்ற அணி நயம், கலைஞரின் கலை நயத்தை எவ்வளவு திறம்பட எடுத்துக் காட்டுகிறது! காவியக் கலைஞரால் இத்தகு சீரிய பாமாலை சூட்டிப் பாராட்டப் பெற்ற ஓவியக் கலைஞர், இரவிவர்மா.

## புகழ் பரப்பிய கலைஞர்

இரவிவர்மா மலையாள நாட்டில் பிறந்தவர். மன்னர் குடி மரபில் பிறந்து வளர்ந்தவர். ஆனால் அவர் கலைவனப்பு, மலையாள நாட்டெல்லையையும் மன்னர் பெருமக்கள் மரபெல்லை யையும் தாண்டி, தமிழகத்தின் மக்கட் கவிஞன் பாரதியின் உள்ளத்தை அளாவிற்று. அது மட்டுமன்று; இரவிவர்மா தென்னாட்டுக்கு உரியவர். தென்னாட்டின் தலைசிறந்த ஓவியக் கலைஞர். ஆனால், அவர் புகழொளி, தென்னாடெங்கும் பரவியதுடன் நிற்கவில்லை. வடநாட்டிலும் பொங்கி வழிந்தோடிற்று. அது கீழ்நாடு கடந்து, மேலை நாடுகளிலும் பரந்தது. தென்னாட்டுக் கலைஞர் எவரும் அவரைப் போல

வடநாட்டில் புகழ் பரப்பவில்லை. அதுபோலவே, கீழ்நாட்டுக் கலைஞர் எவரும் அவரளவு மேல்நாடுகளில் புகழ் பெறவில்லை என்று துணிந்து கூறலாம்.

**மக்கள் கலைஞர்**

அவர் மன்னர் மரபுக்குரியவராயிருந்தாலும், மன்னர் பெருமக்கள் மாளிகைக்குரிய கலைஞராய் அமைந்து விடவில்லை. மன்னர் மாளிகைகளிலும், பெருமக்கள் மாடங்களிலும் அவர் கலைப்படைப்புக்கள் எந்த அளவுக்கு மதிப்புப் பெற்றனவோ அதிலும் பன்மடங்காக அவை பொதுமக்கள் இல்லங்களில் பாராட்டப் பெற்றன. பொது மக்களும் அவற்றைப் பேரளவு விரும்பி வாங்கினர். அவரளவு மக்கள் உள்ளங்களில் ஊடாடி, அவர்கள் இல்லங்களில் நிலவி அணி செய்து, அவர்கள் பண்பாட்டை வளர்த்த வேறொரு கலைஞனைத் தென்னாட்டிலோ வடநாட்டிலோ காணமுடியாது. மன்னர் குடியிற் பிறந்தும் அவர் பேரளவில் மக்கள் கலைஞராகவே விளங்கினார் என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று வேண்டியதில்லை.

**கையாண்ட கலைப்பண்பு**

கலையுலகில் கீழ்நாட்டில் இரவிவர்மாவுக்குப் பல வகைகளில் சீரிய தனிஇடம் உரியது. கீழ்நாட்டுக் கலைஞர் எவரும் அவரைப்போல் மேல்நாடுகளில் புகழ்பெற்றது இல்லை. இதற்கு ஓர் இயற்கையான காரணமும் உண்டு. அவர் மேனாட்டு முறைகளைத் திறம்படக் கையாண்டார். ஆனால் அவர் மேனாட்டு முறைகளைக் கையாண்டதனால் அவர் பண்பு மேனாட்டுப் பண்பாய் விடவில்லை. மேனாட்டு முறையின் உதவிகொண்டே, அவர் கீழ்நாட்டுப் பண்பைத் திறம்பட வகுத்துக் காட்டினார். அதன் மூலம் அவர் மேனாட்டவர் போற்றுதலை மட்டுமே பெற்றிருந்தால், நாம் அவர் கலையை உலகக் கலையென்றே கூறுவோம்; ஆயினும் அயல்நாட்டுக் கலையென்றே நாட்டுவோம்! ஆனால், உண்மை நிலை இதுவன்று. அவர் மேனாட்டில் கலைவல்லுநரால் பாராட்டப் பெற்றது போலவே இந்தியா முழுவதும் மக்களிடையே பேராதரவு பெற்றார். எனவே, அவர் பொதுப்பட மக்கள்

கலைஞரும் உலகக் கலைஞரும் மட்டுமல்லர்; சிறப்பாகக் கீழ்நாட்டுக் கலைஞராகவும், தென்னாட்டுக் கலைஞராகவும் போற்றத்தக்கவரேயாவர்.

### முன்னணிக் கலைஞர்

காலத்தாலும், வரலாற்றாலும், மரபாலும், இரவிவர்மா தற்கால இந்தியக் கலைஞரிடையே ஒரு வழிகாட்டியும் முன்னணி விளக்கமும் ஆவர். அவர் வாழ்ந்த காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அந்நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பொதுவாக இந்தியாவின் கலை மரபு தளர்வுற்று நலிந்துவிட்டது. தென்கோடியில் மரபாறுது நிலவிய ஒரு சிற்றிழையைக் கைக்கொண்டு, இரவிவர்மா அதைத் திறம்படப் பேணி வளர்த்தார். அவர் கொடுத்த புத்துயிரால் அது புது வாழ்வு பெற்றுத் தென்னாட்டின் கலை மரபை வளர்த்தது; வடநாட்டிலும் கலையில் மக்கள் ஆர்வத்தைத் தூண்டிப் பெருக்கிப் புதிய கலை மலர்ச்சிக்கு வழி வகுத்தது. இங்ஙனம் அவர் தென்னாட்டின் கலைத்துறை மலர்ச்சிக்குத் தந்தையாகவும், வடநாட்டின் கலை மலர்ச்சிக்கு முதல் தூண்டுதல் தந்த முன்னணிக் கலைஞராகவும் திகழ்கின்றார்.

### படைப்பு முறை

கலை மக்களுக்காக என்று கொண்டவர் இரவிவர்மா. கலை கலைஞருக்கு மட்டுமே என்றோ, கலைக்கூடங்கட்கு மட்டுமே என்றோ அவர் கருதவில்லை. எனவே, அவர்தம் கலையழகு, கலைத்துறை வல்லுநர் மட்டுமே காணக்கூடிய மறையழகாகவோ பொதுமக்களுக்கு எட்டாத மாயச் சரக்காகவோ அமையவில்லை. மற்ற கீழ் நாட்டுக் கலைஞர் பலரைப்போல, அவர் வடிவைப் புறக்கணித்து வடிவு கடந்த தற்புனைவுப் பண்புகளிலும் கற்பனைகளிலும் மட்டும் கருத்தூன்றவில்லை. வடிவழகிலும் அவர் கருத்துச் செலுத்தினர்; வடிவழகின் மூலமாகவே கருத்தழகிலும் அவர் உள்ளம் தோய்ந்தது. இதனால் அவர் கலைப்படைப்புக்கள் எவர் கண்களையும் எளிதில் கவர்ந்தன. கவர்ந்த பின் அவர்கள் கருத்தையும் அவற்றில் நிலைக்கவைத்தன. அவரைத் தனிச் சிறப்புப்பட மக்கட் கலைஞராக்கியது இப்பண்பே எனலாம்.

**கலையின் கூறுகள்**

கலைத்துறை ஆராய்ச்சியாளர் கலை மரபின் வரலாற்றை இரண்டு கூறுகளாக வகுப்பர். ஒன்று மேலை உலக மரபு; மற்றொன்று கீழை உலக மரபு. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மேலை உலக மரபொன்றையே கலை மரபாக மதித்தனர். கீழ் நாட்டுக் கலையை அவர்கள் கருதவில்லை. இதற்குக் காரணம் யாதெனில், அவர்கள் கலையாராய்ச்சிக்குரிய விதியமைதியும், இலக்கணமும் அந்நாட்டின் கலை இலக்கியத்தைக் கலைப்படைப்பைப் பின்பற்றி அமைந்திருந்தன என்பதே. இலக்கியங் கண்டதற்கே இலக்கணம் அமைய முடியும் என்ற பண்டைத் தமிழர் நுண்கருத்தை உணராமல், அவர்கள் தம் இலக்கணத்தின் அமைதிகொண்டு கீழ்நாட்டுக் கலையை அளக்க முற்பட்டனர்.

எடுத்துக்காட்டாக, மேனாட்டுக் கலைஞர் தம் கலைப் படைப்புக்களைத் திரைச்சட்டத்தில் அல்லது அட்டைச் சட்டத்தில் தீட்டுவர். அதில் தம் பெயரைப் பெரும்பாலும் பொறிப்பர்; தத்தம் தனித் திறங்களை வற்புறுத்திக் காட்டுவர். இதனால் கலைஞருக்குத் தக்கபடி கலையும் வேறுபட்டதாய் அமைந்தது.

ஆனால், கீழ் நாட்டிலோ ஓவியங்கள் கல்லிலும் சுவரிலும் மட்டுமே தீட்டப்பட்டன. கலைஞன் பெயரோ தனித்திறமோ வெளிப்பட வழியில்லை. பெரும்பாலும் கலை இலக்கணத்தின் கட்டுப்பாடு காரணமாக, கலைஞர் திறமை ஒன்று நீங்க, வேறு எந்தப் பண்பு வேறுபாட்டுக்கும் வழி இருப்பதில்லை. எனவே, மேனாடுகளில் ஒரே காலத்தில், ஒரே இடத்திலுள்ள இரண்டு கலைஞர்களின் பண்பு வேறுபாட்டைக்கூட, கீழ் நாட்டில் இரு வேறு காலங்களில் இருவேறு இடங்களில் உள்ள இரு மரபுகளிடையே காண்பது அரிது.

**சங்க இலக்கியங்களின் தன்மைகள்**

கீழ் நாட்டுக்கும் மேல் நாட்டுக்கும் நாகரிகத் துறையிலும் கலைத்துறையிலும் உள்ள வேறுபாடுகளைப் போலவே, வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இவ்விரண்டிலும் வேறுபாடு

உண்டு. எடுத்துக்காட்டாக இலக்கியத் துறையில், தென்னாட்டிலக்கியங்கள் வடநாட்டிலக்கியங்களைக் காட்டிலும் பழமையும் வளமும் பரப்பும் தனிப்பண்பும் உடையவை யென்பதைக் காணலாம். மேலும், தமிழில் பிற்கால இலக்கியத்தையும் சங்க இலக்கியத்தையும் ஒப்பிட்டுக் காண்போர், பின்னதன் கலவைப் பண்பையும் முன்னதன் தனிப் பண்பையும் வேறுபிரித்துக் காணக்கூடும். இலக்கியத்திலுள்ள இவ்வேறுபாடே நாகரிகத்திலும் கலையிலும் பண்பிலும் உள்ள வேறுபாட்டை நன்கு குறித்துக் காட்டுகின்றது. சங்க இலக்கியம் இயற்கையோடும் வாழ்வோடும் ஒட்டியது; சமயக் கருத்துக்கள் உடையதாயினும் சமயச் சார்பற்றது; தற்புனைவும் அணியழகும் நிறைந்ததாயினும் இயற்கை வாய்மை கடவாதது. பொருந்தாக் கற்பனைக்கு அதில் இடமில்லை. கலைத்துறையிலும் வடநாட்டுக் கலை, தென்னாட்டுக்கலை ஆகியவற்றின் வேறுபாடு இத்தகையதே யாகும். தென்னாட்டுக்கலை வாழ்க்கையையும் இயற்கை வாய்மையையும் பேணுவது; அது கற்பனைகளில் உலவுவதன்று.

**அருஞ்சொற்பொருள் :**

மெய் வண்ணங்கள் - வடிவில் உள்ள அழகுகள்; மை வண்ணங்கள் - பலவகையான வண்ணக்குழம்பு; கைவண்ணம் - கைத்திறமை; பேரளவு - மிகுந்த அளவு; நலிந்துவிட்டது - அழிந்துவிட்டது; பேணி - போற்றி; கடவாதது - தாண்டாதது.

**வினாக்கள் :**

1. இரவிவர்மாவைப் பாரதியார் எவ்வாறு பாராட்டியுள்ளார் ?

2. இரவிவர்மா புகழ் பரப்பிய கலைஞர், மக்கள் கலைஞர் என்பதைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

3. இரவிவர்மாவின் கலைப்பண்பை விளக்குக.

4. இரவிவர்மாவின் கலைபற்றிய கருத்தை விரிவாகக் குறிப்பிடுக.

5. கலைமரபின் இரண்டு கூறுகள் யாவை? அவற்றுள் சிறந்தது எது என்பதைப் புலப்படுத்துக.

6. சங்க இலக்கியங்களின் தன்மைகள் யாவை ?

---

## 5. நாவலர் நாட்டாரய்யா அவர்கள்

பேராசிரியர் திரு. ராம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ.

### தலையாய செல்வம்

செல்வங்கள் பலதிறத்தன. பொருளுடைமை தான் செல்வம் என்று பொதுவாகக் கொள்ளப் பெறுகின்றது. என்றாலும், நமது நீதி நூல்களும் இலக்கிய நூல்களும் அன்புச் செல்வம், அருட்செல்வம், மக்கட் செல்வம், மனச் செல்வம், புத்தகச்செல்வம், வித்தகச் செல்வம் முதலிய பல செல்வங்களும் உண்டு என்பதனை உணர்த்தி வருகின்றன. வித்தகம் என்பது ஞானம்; ஞானம் என்பது நல்லறிவாகும்; சென்ற விடத்தால் செலவிடாது நன்றின்பால் உய்க்கும் நல்லறிவாகும்; மனம் போன போக்கில் நமது புலன்களைப் போகவிடாது, நிலமறிந்து செலுத்தும் குதிரைப் பாகனைப் போலப் புலம் தெரிந்து நம்மைச் செலுத்தும் நல்லறிவாகும். இந்த வித்தகச் செல்வத்தை உலையாத முயற்சியோடு பேணி வளர்த்த பெருந்தகைச் செல்வர்களுள் சிறந்த செல்வர் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் ஆவர்.

### தோற்றமும் பெயரும்

திருவையாற்றை அடுத்த நடுக்காவேரி என்னும் பதியிலே வேங்கடசாமி நாட்டார் அவர்களின் பாட்டனார் வீரு நாட்டார் அவர்கள் வாழ்ந்து வந்தார். கற்றவர்களிடத்து மிக்க அன்புடையவர். தம் மக்களாகிய முத்துசாமி நாட்டார், சொக்கலிங்க நாட்டார் என்ற இருவருக்கும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் செய்தார்.

அவருடைய மக்களில் மூத்தவர் முத்துசாமி நாட்டார். அவர் நாள்தோறும் நீராடி நண்பகலிலும் இரவிலுமாக இரு வேளைமட்டும் உண்ணும் வழக்கமுடையவர்; தெய்வ பக்தியில் திளைத்தவர். இவருடைய வாழ்க்கைத் துணைவி தைலம்மாள் குடித்தனத்தைச் செவ்வனே நடத்திவந்தனர். இவர்களுக்கு மக்கள் எண்மர். இவர்களுள் நமது வித்தகச் செல்வர்

1884இல் பிறந்தார். வேங்கடசாமி நாட்டாருக்கு முதலில் இடப்பெற்ற பெயர் சிவப்பிரகாசம். இளம் பருவத்தில் காலில் ஒரு கட்டி உண்டாகி வருத்தியது. அதனால் மனம் வருந்திய பெற்றோர், மருத்துவரைக்கொண்டு அதனைக் கிழிக்கச் செய்து ஆற்றினர்; திருப்பதிக்கு முடிவைத்துப் பெயரையும் வேங்கடசாமி என மாற்றினர் என்பர்.

### திண்ணைப் பள்ளிக் கல்வி

இவர் திண்ணைப் பள்ளிகளில் கல்வி பயிலத் தொடங்கினார். அதில் நெடுங்கணக்குப் பயின்ற பின்னர் இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று என்பவற்றைச் சிற்சில நாள்களில் பயின்று முடித்தார். அதன் பின்னர் இவருடைய தந்தையார் கருத்தின்படி ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்களைப் படித்தார்.

திண்ணைப் பள்ளிக் கல்வியைத் தொடர்ந்து **சாம்பமூர்த்தி ஐயர்** அவர்களால் நடத்தப்பெற்ற தொடக்கப்பள்ளியில் நான்காம் வகுப்பு வரை பயின்றார். வீட்டுத் திண்ணையில் வழக்கமாகப் படிக்கப் பெற்று வந்த சில **புராணக் கதைகளை** விருப்புடன் கேட்பார்.

### வித்தகத்திற்கு வித்து

பள்ளிப் படிப்பை விட்டபின்பு இவருடைய தந்தையாரிடத்துத் **திருப்புகலூர் அந்தாதி, திருச்செந்தில் நிரோட்டக யமக வந்தாதி, வெங்கைக்கோவை** என்னும் பிரபந்தங்களையும், **நைடதத்தின்** முற்பகுதியையும் பாடங்கேட்டு அறிந்தார். நைடதத்தின் பிற்பகுதியையும், கம்பராமாயண, வில்லிபாரதப் பகுதிகளையும் தந்தையார் முன் பொருளுணர்ச்சியோடு படிப்பார். அக்காலத்து இவருக்கு வயது பதினாறு. **சூடாமணி** நிகண்டில் பதினோராம் தொகுதி முழுமையும் இவருக்கு மனப்பாடம். இவர் **போப்பையர் சிற்றிலக்கணம்** பயின்றிருந்தார். **நன்னூல்** பாயிர இயலிலும், எழுத்தியலிலும் உள்ள சூத்திரங்களைத் தாமாகவே மனப்பாடம் செய்திருந்தார். செய்யுள்களின் பொருளைக் கூடியவரையில் சரியாய் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் இவருக்கு இருந்தது.

### சங்கத் தேர்வுகளில் வெற்றி மேல் வெற்றி

அக்காலத்தில் தொடக்கப் பள்ளிகளின் மேற் பார்வையாளராயிருந்த திருவாளர் சாமிநாத முதலியார் அவர்களின் தூண்டுதலால் மதுரைச் சங்கத் தேர்வுகளில் கலந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வேங்கடசாமி நாட்டார் அவர்களுக்குத் தோன்றுவதாயிற்று. **"பிரவேச பண்டிதம்"**, **"பாலபண்டிதம்"**, **"பண்டிதம்"** என்ற மூன்று தேர்வுகள் இருந்தன. ஒவ்வொரு தேர்வுக்குமுரிய நூல்கள் மிகப்பல; அதுவரை கேட்டறியாதன. பிரவேச பண்டிதத் திற்குப் படிப்பதென உறுதி செய்து படித்து வந்தார். தேர்வுக்குரிய நான்மணிக்கடிகையும், அணி இலக்கணமும் வாங்கிக் கொள்ளக் கூடாமையால் அவற்றை இரவலாகப் பெற்றுக் கையால் எழுதி வைத்துக்கொண்டு படிப்பா ராயினர். அவ்வாண்டில் எண்மர் தேர்வுக்குச் சென்றனர். அவருள் இருவர் முதல்வகுப்பில் தேர்ந்தனர். அவ்விருவருள் நம் நாட்டார் ஒருவர். மதுரைத் தமிழ்ச் சங்கவிழாவில் தேர்வின் பொருட்டு ஏற்படுத்தியிருந்த பரிசேயன்றி இலக்கணத்திற்கெனச் சிறப்புப் பரிசு ஒன்றும் பெற்ருர். பரிசாகப் பெற்ற தொகை முழுவதையும் கொண்டு அடுத்த தேர்வுக்குரிய நூல்களை அப்பொழுதே வாங்கினுர். பின்னர், பால பண்டிதத்திற்குரிய பாடங்களை முன்போலவே ஊக்கத் துடன் கற்ருர். அடுத்த ஆண்டிலேயே தேர்வு எழுதினுர். அவ்வாண்டில் பாலபண்டிதத் தேர்வில் நாட்டார் ஒருவரே தேறினுர். அதுவும் முதல் வகுப்பில் தேறியிருந்தார். தேர்வுகளில் நாட்டார் சிறப்பாகத் தேறியபடியால் அளவற்ற மகிழ்ச்சி அடைந்த திரு. சாமிநாத முதலியார் மூன்ருந் தேர்வாகிய பண்டிதத் தேர்வையும் தொடர்ந்து நிறைவேற்றத் தூண்டினுர். நாட்டாரும் மிக முயன்று உழைத்து அதிலும் முதன்மையாகத் தேறினுர்; தோடா முதலிய பொற் பரிசு களையும் பெற்ருர்.

### ஆசிரியர் வேங்கடசாமி

1908ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி எஸ். பி. ஜி. கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த பிச்சை இபுராகிம்

புலவரவர்கள் தாம் கல்லூரிக்குப் போக முடியாதவாறு பிணியுற்றிருந்தார். வேங்கடசாமி நாட்டாரை வரச் செய்து தமக்கீடாகத் தமிழாசிரியராக இருத்தற்குத் தகுதியுடையவர் இவரே என அக்கல்லூரித் தலைவர் ஷேராக்குத் துரைக்குக் கடிதம் எழுதினார். தலைவரும் இவரை அன்புடன் ஏற்று அலுவல் அளித்தார். நாட்டார், கல்லூரி மாணவர் மகிழும்படி திறமையாகக் கற்பித்தார்.

நாட்டார் பாடங்கற்பிக்கும் காலங்களில் அவருடைய தோற்றப் பொலிவும் இன்சொல்லும் சோர்விலாத சொல் வன்மையும் குணநலங்களும் மாணவரின் உள்ளங்களைக் கவர்ந்து விடும். மாணவர் இவரிடத்து அளவற்ற அன்பும், மதிப்பும் கொண்டிருந்தனர். கல்லூரிப் பாடப் படிப்பின் தொடர்பாகத் திருவள்ளுவர், கம்பர் முதலாய புலவர்களையும் மருத்துவம் வானநூல் முதலிய கலைகளையும் சைவம் வைணவம் முதலிய கலைகளையும் வேளாண்மை, வணிகம் முதலிய தொழில்களையும் மற்றும் அறிவு வளர்ச்சிக்குரிய பல திறப்பட்ட பொருள்களைப் பற்றியும் விரிவுரையாற்றி மாணவரின் பொது அறிவை வளர்ப்பார். நாட்டார் தம் மாணவர் பலர் முதன்மையாகத் தேறிப் பதக்கமும் பரிசும் பெறுவர். தமிழ் காரணமாகக் கல்லூரிக்குச் சிறந்த பெயர் உண்டாயிற்று. கல்லூரித் தலைவரும், ஏனைய ஆசிரியர்களும் நாட்டாரிடத்தில் மேன்மேல் அன்பும், நன் மதிப்பும் உடையவர் களாயினர். 1933ஆம் ஆண்டுவரை நாட்டார் அவர்கள் எஸ்.பி.ஜி. கல்லூரியில் பெரும் புகழுடன் பணியாற்றினார்கள். அந்த ஆண்டு அந்தக் கல்லூரியை அதிகாரிகள் மூடிவிடவே, நாட்டார் அவர்கள் வேறு தக்க இடம் நாட வேண்டிய தாயிற்று.

### அண்ணாமலை அழைப்பு

அந்த ஆண்டிலேயே இவரது சேவைக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடம் அமைந்தது. புலவர்களுக்கும், இளங்கலைஞர்களுக்கும் பாடம் கற்பிக்கும் புதிய வேலையை ஏற்றுப் பணியாற்றினார். அங்கும் மாணவர் உள்ளங்களை வழக்கம்போல் கொள்ளை கொண்டார். பண்டிதமணி,

இராகவ ஐயங்கார், கந்தசாமியார் முதலிய பெரும்புலவர்கள் குழுவில் விளங்கிய பெரும்புலவரான நாட்டார் அவர்களின் தொடர்பால் தமிழ்ப் பல்கலைக்கழகம் பேரும் புகழும் பெற்று வளர்ந்தது. நாட்டாரிடத்து நல்லெண்ணங் கொண்டிருந்த அதிபர்கள் இவருக்கு ஓய்வு பெறுங்காலம் வந்துற்ற பின்னரும் வேலை நீடிப்புத் தந்தனர்.

### கல்லூரித் தலைவர்

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தோற்றுவித்த கரந்தைப் புலவர் கல்லூரியில் செந்தமிழ்ப் புரவலர் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் கேட்டுக் கொண்டபடி தலைவராக இருக்க இசைந்து ஊதியங் கருதாமல் பணியாற்றி வந்தனர். நாட்டாரவர்கள் தலைமையில் கல்லூரி நல்ல வளர்ச்சியுற்றது. நாட்டார் கண்காணிப்பில் இருந்த மாணவர்கள், அவரிடம் பாடங்கேட்ட மாணவர்கள் தாங்கள் நாட்டார் மாணுக்கர் என்று சொல்வதில் ஒரு தனிப்பெருமை கொள்வர்.

### நாவலர் பெருந்தகை

நாட்டார் சொற்பொழிவும் செய்யும்போது தாம் கூற எடுத்துக்கொண்ட பொருளைத் தெளிவும், இனிமையும் அமைந்த குரலில் இயம்புவர். குறித்த கால அளவில் பேசி முடிப்பார்.· பேசும்போது நடித்தல், கையாட்டல், கனைத்தல், அசைத்தல் போன்ற செயல்களை அவரிடம் காண்பது அரிது. கூறியது கூறுர். ஒருமைப் பன்மை மயக்கம் இராது. இலக்கண வழு இராது. உயர்ந்த தனித்தமிழ் நடையில் பேசுவார். பேசியதை அப்படியே அச்சுக்குக் கொடுக்கலாம். இவரது சொற்பொழிவைக் கேட்டுச் சென்ற டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் சென்னையிலிருந்து எழுதிய கடிதத்தில் ''நீங்கள் செய்த அரிய சொற்பொழிவு யாவர்க்கும் மிக்க இன்பத்தை விளைவித்ததாதலின் எல்லாரும் மகிழ்ந்து கொண்டே யிருக்கிறுர்கள். எல்லாருடைய மனத்தையும் அது கவர்ந்துவிட்டது'' என்று குறித்திருக்கின்றுர்கள்.

ஆங்காங்கே தலைமைதாங்கி நடாத்திய ஆண்டு விழாக்கள் ஒருபுறமிருக்க, சென்னைப் பல்கலைக் கழகத்தின்

சார்பில் இவர் நிகழ்த்திய தொல்காப்பிய ஆராய்ச்சி உரைகள் அறிஞரால் பெரிதும் பாராட்டப்பெற்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பில் நிகழ்த்திய சிலப்பதிகார ஆராய்ச்சி உரைகளும் அவ்வாறே பாராட்டப்பெற்றன. 1939இல் இவர் இலங்கை சென்று ஆங்குள்ள விவேகானந்த சங்கம் முதலியவற்றில்-திறம்படச் சொற்பொழிவாற்றித் திரும்பினர். 1940இல் சென்னையில் கலித்தொகை மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்தினர். அதே ஆண்டில் திருப்பதியில் நடந்த அனைத்திந்திய பத்தாவது கீழ்த்திசைக்கலை மாநாட்டில் வஞ்சி மாநகரைப் பற்றிய சொற்போரில் கலந்து கொண்டார். அதை அடுத்து, சென்னையில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில் நல்லறிஞர் கூடி இவருக்கு "நாவலர்" பட்டம் வழங்கினர்.

### எழுத்துப் பணி

இவர் எழுதிய நூல்கள் வேளிர் வரலாறு, கபிலர், சோழர் சரித்திரம், கண்ணகி சரித்திரம், கள்ளர் சரித்திரம் என்பன. இவையேயன்றி கீழ்க்கணக்கு நூல்களுக்கும் மூதுரை முதலிய நீதிநூல்களுக்கும், திருவிளையாடற் புராணம், சிலப்பதிகாரம், அகநானூறு, மணிமேகலை முதலிய பெரு நூல்களுக்கும் விழுமிய தெளிவுரை எழுதியுள்ளார்கள். இவர் எழுதியுள்ள கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப் பெற்ற சிலவும், இவர் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து பேசிய உரைகள் சிலவும் கோவை செய்யப் பெற்றுக் கட்டுரைத் திரட்டு என்ற பெயரில் இருபாகங்களாக வெளியிடப் பெற்றுள்ளன.

### நாவலரின் நற்குணங்கள்

நமது நாவலர் நாட்டார் பல நற்குணங்களுக்கும் உறையுள் ஆவர். வெகுளி என்பதே சிறிதும் இல்லாதவர். பொறுமையை அணியாகக் கொண்டவர். யாவரிடத்தும் புன்னகை தவழும் முகத்தோடு இன்சொலால் இயம்பும் இயல்பினர். எவரிடத்தும் இரக்கம் கொண்டு உறுதுணை செய்யும் உளநலமுடையவர். கற்பிக்கும் ஆற்றல் நன்கு கைவரப் பெற்றவர். சமய நூல்களுக்கும் பக்திப் பனுவல்

களுக்கும் பொருள் கூறுங்கால் அன்பினால் கண்ணீர் பெருக்குவார். கேட்பாரையும் கசிந்துருகச் செய்துவிடுவார், அத்தகைய கனிந்த சொல்வன்மையுடையவர். இறைவனிடத்து இளமை தொட்டு வளர்ந்த இடையறுப் பேரன்பு உடையவர். மறக்குலத்து வந்த மாண்பினராகவே மாணவர்க்கு வீரத்தைப் புகட்டுவதில் பெருவிருப்பு உடையவர். குற்றங் கண்டவிடத்து இடித்துரைத்துத் திருந்த வழிகாட்டும் பெருந்தகையார். அறநாட்டமுடைய நாட்டார் பயனில் சொல் பேசுதல், வீண் பொழுது போக்குதல், பிறர் ஆக்கம் கண்டு அழுக்காறு கொள்ளல் முதலிய தீய இயல்புகள் அணுகுதற்குச் சிறிதும் இடங்கொடாதவர்.

## நாட்டார் காட்டும் வழி

தமிழைக் காத்து வளர்த்தற்குரிய வழிகளை ஆன்றோர்கள் நமக்கு அவ்வப்போது எடுத்துக்கூறி நம்மைச் செயல்படுத்தி வருகின்றார்கள். இம்முறையில் வேங்கடசாமி நாட்டாரவர்கள் தமிழைக் காக்க எடுத்துக் காட்டும் வழியைக்கண்டு அவர் கூறும் அநுபவ உரைகளுக்குச் செவிமடுத்து அவற்றின் வழி நின்று செயலாற்றிப் பயன் பெறுவோமாக! அவர் கூறுகின்றார்.

''பிறமொழிச் சொற்களை எடுத்துக்கொள்வது குற்றமின்றாயினும், அவற்றை வரம்பின்றிப் புகுத்துவது தமிழின் தூய்மையையும் அழகையும் சிதைத்து அதன் தொன்று தொட்ட மாண்பினைக் கெடுப்பதாகும் என்பதைக் கருத்தில் இருத்தல் வேண்டும். இக்காலத்துப் புதிய கலைகள் பலவும் எழுதுதற்குச் சொற்கள் பல வேண்டும் என்பது உண்மையாயினும், அதன் பொருட்டுத் தமிழினைத் துருவி யாராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்டலும் அவை போதாவிடத்துத் தமிழ்ப் பகுதியினின்று புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதலும், இன்றியமையாத வழிப் பிறமொழிச் சொற்களை ஏற்றுக் கொள்ளுதலுமே அறிவும் ஊக்கமும் முயற்சியும் உடையார்க்கு அழகாவனவாம். அந்நெறியே கலைப்பயிற்சியை எளிதாக்குவதுமாம்.

இனி, பிறமொழிச் சொற்களை இரவல் வாங்குமிடத்து அவற்றைத் தமிழ் இயல்புக்கு ஏற்ற ஓசையினவாகத் திரித்துக் கொள்ளுதல் ஆன்றோர் கைக் கொண்ட நெறியாகும். கல்வியிற் பெரியாராகிய கம்பர், இலக்குவன், வீடணன் என்றிவ்வாறாக வடசொல் உருவினைத் தமிழ் இயல்புக்கேற்ப மாற்றியுள்ளமை காண்க. கிறித்துவ வேதப் புத்தகத்தை மொழிபெயர்த்தோர் இயேசு, யோவான், யாக்கோபு என்றிங்ஙனம் தமிழ் இயல்புக் கேற்பச் சொற்களைத் திரித்தமையால் அதன் பயிற்சிக்குக் குறை உண்டாயிற்றில்லை. ஒவ்வொரு மொழியிலும் இவ்வியல்பு காணப்படும். ஆகவே பிறமொழிகளில் உள்ளவாறே அச்சொற்களைத் தமிழில் வழங்க வேண்டுமென்பது நேர்மை ஆகாது.

கொச்சையாகவும் வழுப்படவும் பேசுவதனையே நல்ல நடையெனக் கொண்டாடி அப்படியே எழுத வேண்டுமெனக் கூறுவார் சிலருமுளர்; அவ்வறிஞர்களே ஆங்கில மொழியில் அவ்வாறு பேசுவதோ எழுதுவதோ செய்தால் எவ்வகை மதிப்பினை எய்தலாகும் என்பதனைச் சிந்தித்தல் வேண்டும். வாழைப்பழம் என்பது வாளைப்பளம் எனவும் வாயப்பயம் எனவும் வாழைப்பஷம் எனவும் ஒவ்வொரு பக்கத்தில் பேசப் படுகின்றது. இழுத்துக்கொண்டு என்பது இஸ்துகின்னு என்று பேசப்படுகின்றது. இவற்றையெல்லாம் இலக்கியத்தில் ஏற்றுக்கொள்வது எங்ஙனம்? சில விதிகளை அனுசரித்து இயல்பாக மாறி வருகின்ற போலியும் மரூஉவும் முதலியன ஏற்றுக்கொள்ளத்தக்கவையே.

ஓர் ஆற்று வெள்ளத்தைக் குறுக்கே அணையிட்டுத் தடுத்து நிறுத்துதல் கூடாதாயினும் அதன் போக்கிலேயே சென்று பாழாகாதபடி கரைகோலி நேரிதிற் செலுத்தி, கண் வாய்களின் வழியே நீரைப் பாய்ச்சிப் புலங்களை விளைவித்தல் அறிவுடைமையாகும். அவ்வாறே மொழியினையும் சில வரம்புகட்குட்பட்டு வளரும்படி செய்து மக்கட்குப் பயன் விளைத்தல் வேண்டும்.''

அருஞ்சொற்பொருள் :

நன்றின்பால் – நன்மையின் இடத்து; புலன் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்கள்; பதி–ஊர்; சாது–துறவி; பாமர நடை–பேச்சு வழக்கு; தோடா–பதக்கம்; சஞ்சிகை–செய்தி இதழ்; உறையுள் – இருப்பிடம்; வெகுளி – சினம்; பனுவல் – நூல்; இடித்துரைத்தல் – வன்சொற் கூறிக் கடிதல்; வழு – குற்றம்; புனல் – நீர்; கனல் – தீ; தழல் விடுதல் – சுடர் விடுதல்.

வினாக்கள் :

1. நமது நீதிநூல்கள் கூறும் பல்வகைச் செல்வங்கள் யாவை ?

2. நாட்டார் அவர்களின் இளமைப் பெயர் யாது ? அப்பெயர் ஏன் மாற்றப் பெற்றது ?

3. நாட்டார் அவர்கள் இளமையில் இலக்கிய இலக்கண அறிவு வளர்ச்சி பெற்றது எவ்வாறு ?

4. நாட்டார் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வுகளில் வெற்றிபெற்றமையைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

5. நாட்டார் அவர்கள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தமையைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

6. நாட்டார் அவர்களின் சொற்பொழிவு எவ்வாறு இருக்கும் ?

7. நாட்டார் அவர்களுக்கு 'நாவலர்' என்னும் பட்டம் வழங்கப் பெற்றமையை விளக்கு.

8. நாவலர் நாட்டார் அவர்கள் இயற்றிய நூல்களையும், உரை எழுதிய நூல்களையும் கூறுக.

9. நாவலர் நாட்டார் அவர்களிடம் அமைந்த நற்குணங்கள் யாவை ?

10. பிறமொழிச் சொற்களைத் தமிழில் எடுத்தாளுதல்பற்றி நாவலர் நாட்டார் அவர்களின் கருத்துக்கள் யாவை ?

11. பிறமொழிச் சொற்களை இரவல் வாங்குமிடத்துப் பின்பற்ற வேண்டியமுறை யாது ?

12. கொச்சையாகவும் வழுப்படவும் பேசுதலைப்பற்றிய நாவலர் நாட்டார் அவர்களின் கருத்துக்கள் யாவை ?

# 6. உழவப் புலவன்

டாக்டர். வ. சுப. மாணிக்கம், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச். டி.

**களம் :** அரசவை.

**காலம் :** காலை.

**கூற்று :** கிள்ளிவளவன் என்ற சோழனும், நப்பசலையார், கோவூர் கிழார், நல்லிறையனார், தாயங்கண்ணனார் என்ற புலவர்களும், நாகனார் என்ற உழவப் புலவரும்.

**கிள்ளி :** புலவர் பெருமக்களே! சின்னாட்களாக உங்களைக் காணப்பெறாது கவன்றேன். இன்று ஒருமுகமாகக் காணப்பெற்றமையான், பேருவகை எய்தினேன். உங்கட்கு யாவரும் கேளிர். அவர் வாழ்க்கைத் தீதும் நன்றும் உள்ளபடி அறிந்துகொள்ளும் ஆர்வம் உடையவர்கள். உங்களுக்கு யாதும் ஊர். நாடோடிகள் போலச் சென்று சுற்றிப் பரந்த அறிவுடையவர்கள். ஆதலின் நீவிரன்றே எம் குடிமக்களின் துயர்காணவும், என் நாட்டின் நிலை காணவும் வல்லீர். பழியேல் அஞ்சாது எதிர்த்து இடித்துக் கூறவல்ல தறுகண்மையும், புகழேல் எஞ்சாது மனமார வாழ்த்தவல்ல பேராண்மையும் ஆகிய இருபண்புகளும் நாட்டிற்கு வேண்டும். இன்றேல், அரசு என்ற ஊர்தி பள்ளத்துப் புக்குப்பட்டுவிடும்; அன்றி மேடு ஏறமாட்டாது பின்வாங்கும். தான்பட்ட துயரை என் எதிரே வந்து மனங்கொளச் சொல்லும் பிறப்புரிமை என் நாட்டு ஒவ்வொரு குடிக்கும் உண்டு என்பது யாராலும் அறியப்பட்ட தொன்று. அவ்வுரிமையை மக்கள் யாரும் செலுத்தவில்லை. அதற்குக் காரணம், அவர்கள் இதுவரை துன்பம் யாதும் உறவில்லை என்று ஆகுமா? யான் அவ்வாறு கருதேன். மக்கட்குப் பிறவி இருக்கும்வரை துன்பமும் பிறத்தல் இருக்கும் என்ற தெளிவானன்றே பிறப்புரிமை என்று ஒன்று விதிக்கப்பட்டது. என் குடிமக்கள் தம் அறியாமை காரணமாகவும், தம்முட் பகை காரணமாகவும், என் வினையாளர் நடந்துகொள்ளும் போக்கு

காரணமாகவும், நான் செய்த விதி காரணமாகவும் உழக்கும் துன்பங்கள் பல. அவற்றை அவர் தம்மினும் விரைந்து வந்து என் உளம்பதியப் புலவர்கள் செவியுறுத்துகின்றனர். 'யானை வரும் பின்னே மணியோசை வரு முன்னே' என்ற இயற்கைப்படி, புலவர் முன்வந்து உரைக்கும் சிறப்புரிமை யன்றோ, நாட்டு மக்கள் தம் பிறப்புரிமையை மறக்கச் செய்தது. உழைப்பவனுக்குத் தன் குடி முழுதும் காக்கும் உணவிற்குப் பஞ்சமில்லை போலப் பெரியாரைத் துணைக்கொண்ட அரசனுக்குத் தன் நாடு முழுதும் காக்கும் அறிவிற்குப் பஞ்ச மில்லை. ஆக்கம் அதர்வினவிச் செல்லும் என்றால், அறிவும் என் அவை வினவி வருமன்றோ? அஃறிணைப் பொருள்களின் உள்ளங்களையும் தம் உள்ளத்தால் அறியவல்ல மதுகையுடைய நீங்கள் சென்ற ஊர்களிற் கண்ட குறை யாதுமுண்டேல், கேட்கப் பெரிதும் விரும்பினன்.

**கோவூரார் :** அரசே! வாழ்க. நின் நிழல் வாழ்வார் உழைப்பிற்கேற்ற உணவும் உணவிற்கேற்ற உழைப்பும், கனவு தோன்றாத உறக்கமும் சிறக்க வாய்ந்தவராதலின், பசியறியாமையும் பிணியறியாமையும் உடையர். உயிருட னிருந்தாரேனும், பொருளில்லாதார்க்கு இவ்வுலகத்து வாழ் வில்லை என்று கருதி, வழியல்லாத வழியானும் அதனையே குவிக்கும் வேட்கை மக்கட்கு இயல்பில் எழும். அம் மனப் பான்மையை அறிந்தே, நீ முட்டுப்பாடின்றிப் பொருள் பெறு மாறு எல்லாக் குடிகட்கும் தொழில் வகுத்துக் கொடுத்திருக் கின்றாய். அவரவர் செய்த வினையின் பயனை அவரவரே நுகருமாறு விதிகோலியும் இருக்கின்றாய். ஆதலின் நின் மக்கள் பொருட்பகையறியார். பொருளுடன் வாழ்ந்தாரேனும் புகழில்லாது இறந்தாரை இத்தமிழகத்துப் புலவர், பாட்டினில் பிறந்த பதிவு செய்யார் என்று எண்ணி உண்மை மயங்கி அறங்கடந்தும் புகழ்காணும் மதிநுட்பம் மக்கட்கு உண்டு. அவ்வுண்மையை அறிந்தே உரிமைக்காக, வேற்றுப்பகைக்கு உயிர் கொடுக்கும் மறமும் புகழைத் தரும்; ஒற்றுமைக்காக, வீட்டுப் பகைக்கு மானம் ஒன்றினை விடாது பொருள் முதலாய எதனையும் விட்டுவிடுங் கொடையும் புகழைப் பயக்கும் என்று

புலவர்கள் வழிகாட்டியிருக்கின்றனர்: அதனுல், நின் மக்கள் புகழ்ப்பகை யறியார்.

நின் நாடோ எனின், ஒரு பெண் யானை படுத்துக் கிடக்கும் சிறிய இடத்து, ஏழு ஆண் யானைகளை உண்பிக்கும் அளவான நெல் விளைக்குங் காவிரி சூழ்ந்த நாடு. ஆதலின், உழைப்பார்க்கு உணவுப் பஞ்சமில்லை. நின் குடி மக்களோ எனின், தமிழ் வழங்கும் நாட்டகத்தே பிறப்பும் இறப்பும் வேண்டும் என்ற பெரும் பற்றுளர்; ஆதலின், நாட்டிற்குக் காவற் பஞ்சமில்லை. நீயோ எனின் குருளையைப் புறங்காக்கும் புலிபோலவும், குட்டியை அகத்தெடுத்துக் காக்கும் குரங்கு போலவும், குடிகளின் புறமும் அகமும் காப்பவன்; ஆதலின், நின் அரசில் செம்மைப் பஞ்சமில்லை. நின்னிடத்துக் குறை யுடையார் பகைவருமிலர்.. அவரும் வேண்டும் பொழு தெல்லாம் தோற்க நின் பகையைப் பெறுகின்றனர் அன்றே.
(அப்பொழுது வெள்ளைக்குடி நாகனுர் உள்ளே நுழைகின்றுர். அரச னிடம் முறைவேண்டுவோர் இருப்பதற்கென ஓரிடம் உண்டு. அப் பக்கத்து அமர்கின்றுர்.)

**பசலையார் :** கோவே! வாழ்க! நின் மக்கள் பசியறியார் பிணியறியார், பகையறியார் என்றுர் கோவூர் கிழார். இவ்வறியாமை மூன்றும் வாழ்க. (எல்லாரும் சிரித்தல்) இம்மூன்றுமன்றிப் பிறிதொரு அறியாமையும் மக்களிடம் வாழ்கின்றது. அதுதான் கல்விப் பசி அறியாமை. இவ்வறி யாமை அகலவேண்டாவா? வயிற்றுப்பசி சோறு உண்டால் நீங்கும். கல்விப் பசி அறிவை உண்ண உண்ண மிகப் பசிக்கும். வயிற்றுத் தீ தணிக்கும் நாடு வளநாடே. கல்வித் தீ பரப்பும் நாடோ நிலைநாடு. நின் மறவர்களிற் பலர், கூற்றுவனை விருந்தாக ஏற்று உயிர்ச்சோறு ஊட்டும் ஆண்மையாளர்கள்; ஆயின் என்! தம் பெயர் எழுதத் தெரியாத தற்குறியாளர். நின் குடிமக்களிற் பலர் திருக் குறளில் சொல்லப்படும் அறங்கட்கு இலக்கியமாகும் பெரு மக்கள்; ஆயின் என்! எழுத்துக்களைக் கீறிய கோடுகள் என மயங்கும் குழந்தைகள். ஒரு மகனுக்கு நோய் நீக்கி உடலை வளர்க்கும் தொழிலிருந்தாற் போதுமா? அறியாமை நீக்கி

உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் கல்வியும் வேண்டுமன்றோ? ஒரு நாடு கேவலம் தொழிலையே வளர்க்க நினைப்பது ஒருவன் உடலையே வளர்க்க நினைப்பதை ஒக்கும். எவ்வளவுதான் முயன்றாலும் எவ்வெவற்றை உண்டாலும் உடல் குறிப்பிட்ட எல்லையளவு பெருகிப் பின் குறையைக் காண்கின்றோம். அது போலத்தானே ஒரு நாடும். மலை, ஒருநாட்டின் வளர்ச்சிக்கு அறிகுறியா? அன்றிக் கடல் தாழ்ச்சிக்கு அறிகுறியா? புற வளர்ச்சிக்கு ஓர் எல்லையுண்டு; அகவளர்ச்சிக்கு எல்லை இல்லை; ஆதலின், நாட்டின் நிலையான வளர்ச்சிக்குக் கல்வியே உயிர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

**கிள்ளி :** பசலையார் கருத்து என்னெஞ்சிற் பசுமரத் தாணிபோற் பதிகின்றது. நீருஞ் சோறும் ஏனை உயிர்கள் போல மக்கட்கு இன்றியமையாதவையேயாம். என்றாலும் அவை வாழ்வின் குறிக்கோளாகுமா? இதனைப் பரப்ப அரசு யாது செய்யவேண்டும்?

**பசலையார் :** நின் மறவர்கள் படைக்கலம் பயின்று பயின்று உயிர்களைக் கொடுத்துக் கொடுத்து வீரவுணர்ச்சியைக் கற்க வில்லை. உயிர்களைக்கொடுத்த அஞ்சாத நெஞ்சினோர்க்குப் பிறந்தமையினாலே மறத்தன்மையை இயல்பிற் பெற்ற கல்லா மறவர்கள். அதுபோல நின் குடி மக்கள் கல்லாத் தொழி லாளிகள். செய்திறம் வாய்ந்த தொழிலாளர் குடும்பத்துப் பிறந்து வளர்ந்த முறையினாலேயே தாமும் தொழிலில் வல்ல வர்கள். அவ்வன்மை அவர்களுக்கு ஏடு கற்ற கல்வியான் அமைந்ததன்று. ஆதலின் மறவர்க்கும் ஏனை மக்கட்கும் தாம் செய்யும் தொழிலைப்பற்றிய அறிவு வேண்டும். ஊர் தோறும் அவ்விடத்து இருக்கும் தொழிலுக்கேற்ற தொழிற் கல்விக் களங்களை அரசு அமைத்தல் முதற்கடன். அதன் பின்னர், வாழ்வினைப் பற்றியும் உலகம் பற்றியும் கற்பதற்கு அறிவுக் கல்வி நிலையங்கள் நிறுவுதல் வேண்டும். (நின்று பேசியவர் இடத்தில் அமர்கின்றார்.)

**கோவூரார் :** (பசலையாரைப் பார்த்து) உரிய போழ்தில் அரிய கருத்தை வெளியிட்டீர். (கை குலுக்குகின்றார்.)

வளவ! நின் நாடு ஆண்டுகள் பலவாக அமைதி பெற்றிருக்கின்றது. பகைவரும் கொடுக்கு நறுக்கப்பட்ட தேள் போலாயினர். பசலேயார் சொல்லிய அறியாமைப் போரைத் தொடங்க இது நல்ல காலமெனக் காண்க.

**கிள்ளி:** ஆம்; இஃது ஏற்றகாலமே. வில்லும் வேலுங் கொண்டு அறியாமையை வெல்லுதல் முடியாது. சொல்லும் நூலுங்கொண்டே அறியாமையைப் புறங்காட்டச் செய்ய முடியும். இப்போருக்குப் புலவர்களே மறவர்கள். அம் மறவர்களுக்குத் தானைத் தலைவர் நப்பசலேயாரே. (எல்லாரும் கைதட்டல்.)

**இறையனர்:** வேந்தே! மலே என்ற சொல் சிறியது. அதனுட்பொருள் பரப்பினும் உயரத்தினும் பெரியது. அது போலவே பசலேயார் சொல்லிய சொற்கள் எண்ணத்தக்கன வாயினும், அவற்றினுட்பொருள் நாடுமுழுவதும் பரவத்தக்க எல்லாரையும் உயர்த்தத்தக்க சிறப்புடையது என்று அறிதல் வேண்டும்.

**கிள்ளி:** அக்கருத்தின் சிறப்பை நாடு அறியச் செய்தல் நம் கடன்.

**இறையனர்:** நாடறியச் செய்வதன் முன், அதன் சிறப்பை நாமறிதல் நல்லது அரசே! சான்றோர்கள் "தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்து" என்றும், 'தமிழ் நிலேபெற்ற தாங்கரு மரபின், மகிழ்நனே மறுகின் மதுரை' என்றும் பாண்டியனேத் தமிழனுகப் புகழ்கின்றனர். 'தண் புனற் காவிரிக் கிழவனே' எனவும், 'ஒரு பிடி படியுஞ் சீறிடம் எழுகளிறு புரக்கும் நாடு கிழவோய்' எனவும் நின்னே வளவனுகப் புகழ்கின்றனர். இதன்கண் ஓர் உண்மையைக் காணலாம்.

**கிள்ளி:** உண்மையின்றி உரைப்பார்களா? சான்றோரும் மறவரும் உழவரும், நாட்டிற்கு அறிவும் உடம்பும் உயிரும் போல்வர். மதுரைத் தமிழ், வஞ்சிமறம், புகார்வளம் என்று விதந்து புலவர்கள் காட்டுவதன் நோக்கம், தமிழகம்

பாதானுங் குறைவற்ற நாடு என்று சுட்டுவதற்கேயன்றே? அஃதன்றி, ஓரரசின்கண் ஏனையிரண்டும் இல என்று இழித்துக் காட்டுவதோ அவர் நோக்கம்? அதுவே கருத்தாயின், பிழையெனக் கூறவும் வேண்டுமோ?

**இறையனர்:** இப்பொழுது உள்ளபடியை நோக்கின், நின் கருத்து, பிழையில்லை; எனக்கும் உடன்பாடே. என்றும் உள்ள இயற்கை நோக்கின் அவர் கருத்தும் பிழையில்லை. புலியும் யானையும் உருமிப் பொரும் கரடும் முரடும் கொண்ட மலைநாடு, மறத்தை மாந்தர்க்கு இயற்கையில் பிறப்பிக்கும் இடமென அறிக. நீரும் மண்ணுங் கலந்து நிலமகளை மெல்லியளாக்கும் மருதநாடே வளநாடு என்று அறியாதார் யார்? புலவர்கள் வந்து ஒருங்கு கூடி அளவளாவிக் கற்றதை விரிக்கும் அவைக்களம் உடைய பாண்டியநாடு தமிழினை எளிதாகப் பரப்ப வல்லதன்றே? ஆதலின் வையைநாடன் கல்வி வளர்க்கும் முறையைக் காவிரி நாடன் மேற்கொள்ளல் சாலச் சிறந்தது என்று வேண்டிக் கொள்கின்றேன்.

**கிள்ளி:** அறியாமை என்னும் இருளை அகற்றுதல் வேண்டும்; அறிவொளியைப் பெருக்குதல் வேண்டும் என்பது என் உணர்ச்சியைத் தொட்ட கருத்தேயாம். ஆயின், கல்வியைப் பரப்ப என்னிடம் தோற்ற பகையரசன் முறையைக் கைக்கொண்டால், அவன் எள்ளி இறும்பூது எய்தானு? சோழர் குடிப்பெருமை சிறுமையடையாதா? நாட்டிற் கல்விக் குறைவு உண்டு என்று கண்ட உங்கள் அறிவு அரசிற்கு மானக்குறைவை உண்டுபண்ணுது என்று நம்புகின்றேன்.

**கண்ணனர்:** வேந்தே! நீயும் உன் குடிமக்களும் நாங்களும் இன்புறும் தென்றல், பொதிய மலையிற் பிறப்பினும், அது பகைவன் உடைமையோ? பாண்டியன் ஈண்டுச் செல்லவிடாது விலக்க நினைப்பின், அவ்வாற்றலுக்குக் கட்டுப்பட்டுப் பரவாது நிற்குமோ தென்றல்? அன்றி, நாம் பகைவன் பொருளென வரவேற்க விழையாது தடுக்க நினைப்பின், அதற்கு உடன்பட்டுப் பின்வாங்குமோ தென்றல்?

வஞ்சியான் மலையிற் பிறந்து வரும் நீரே காவிரி என்று நாம் அறியாதவர்களா? அறிந்தும் அந்நீரைப் பயன் கொள்ளுவதால், வந்த சிறுமை தினையளவேனும் இல்லையே. "வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி" என்று புலவர் புகழ்ந்தது பொய்ப்புகழ்ச்சி யன்றே! காற்றும் நீரும் மக்களின் பொதுவுடைமை என்று காண்பாய். அதுபோல அறிவும் ஒரு நாட்டின் தனிப்பொருளன்று. அது பரவுதலுக்கு எல்லையுமின்று. ஒருவர் தா என்று கேட்ப, மற்றவர் கொள் என்று கொடுக்கும் பொருளுமில்லை; ஆதலின், அறிவு உலகத்தார்க்கே பொதுமை. நின்னுட்டிற் பிறந்த நாங்கள் பெற்ற அறிவுக்கு வழிவழி வளர்ந்த முத்தமிழ் நாட்டுக் கல்வியே தாயன்றோ! சோழர்குலப் பெருமையும் மறப்பெருமையும் வளர்தற்குக் காரணமாயோர், மற்று நின் பகைவேந்தர்தாம் என்று நீ நன்கு அறிவை.

மூவேந்தர் நாடும், மறம், வாணிகம், சூழ்ச்சி, அரசியலமைப்பு, வரிவிதிப்பு, மணவுறவு முதலான வளர்ச்சிக்கு ஒன்றையொன்று தழுவி நிற்கின்றன என்பது கண்கூடு. இன்பத்தைப் பெருக்கிக் கொள்வதற்குக் காதலர்கள் இடையிடையே ஊடற்பிரிவு கொள்வர். அதுபோல முத்தமிழ் நாடும் தம்முட் பகை கொள்ளுதல் மானத்தைப் பெருக்கிக் கொள்ளுவதற்கேயாம்.

**இறையனர்:** ஆம்; மூவேந்தர் ஊடினுலும் காதலர் போல் அவ்வூடல் நீட்டிப்பதில்லை. போருக்குப்பின் மகளைக் கொடுத்து மணமுறை கொள்கின்ற இன்பந்தானே நாம் காண்கிறோம்.

**கிள்ளி:** (சிரித்துக்கொண்டு) மூவேந்தர் ஊடல் மகட் கொடையாலும் நீங்கும்; அயல் நாட்டவரோடு போர்ப் புணர்ச்சி கொள்ளவும் அவ்வூடல் நீங்கும்.

**பசலையார்:** ஆதலின், பாண்டியநாடு ஆண்மைக்குப் பகைநாடேயன்றி அறிவுக்குப் பகை நாடன்று என்பது வெள்ளிடைமலை (எல்லாருங் கை தட்டல்.)

**அருஞ்சொற்பொருள் :**

கவன்றேன் - கவலைப்பட்டேன்; ஒருமுகம் - ஒருசேர; கேளிர் - உறவினர்; தறுகண்மை - அஞ்சாமை; உழக்கும் - அடையும்; மதுகை-வலிமை; முட்டுப்பாடு - வறுமை; குருளை - குட்டி.

**வினாக்கள் :**

1. புலவரியல்பாகக் கிள்ளி கூறியன யாவை?

2. கிள்ளி வளவன் ஆட்சிச் சிறப்பைக் கோவூரார் எவ்வாறு விளம்புகிறார்?

3. கிள்ளியின் நாட்டில் பஞ்சமில்லாமையைக் கோவூரார் எவ்வாறு நயம்படக் கூறுகின்றார்?

4. கல்வியின் சிறப்பைப் பசலையார் எங்ஙனம் விளக்குகின்றார்?

5. சேர, சோழ, பாண்டிய நாடுகள் எவ்வெவற்றாற் சிறந்தன? அவை சிறப்புறக் காரணம் என்ன?

6. கல்வியறிவு உலகுக்குப் பொதுமை என்பதனைக் கண்ணனார் எவ்வாறு விளக்குகிறார்?

# 7. ஐக்கிய நாடுகள் சபை

திரு. ரா. நடராசன், பி. ஏ., பி. டி.

மிகப் பழங்காலந்தொட்டே உலகின் எல்லாப் பகுதி களிலும் எல்லாக் காலங்களிலும் போர்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. பண்டைய அரசர்கள், அண்டை அயல் நாடுகளின்மீது போர் தொடுத்து, அவற்றைத் தம் ஆட்சியின் கீழ்க்கொண்டு வருவதைத் தமக்குப் பெருமை என்றெண்ணி வந்தனர். இவ்வாறு வலியார் மெலியார்மேற் பொருதல் யாண்டும் நிகழ்ந்து வந்த செயலாகும். மன்னன் ஒருவன் இவ்வழியில் புகழடையக் கருதினுகில் அதை நிறை வேற்றுகையில் எத்தனை ஆயிரம் மக்களைக் காவு கொடுத்து அப்புகழை எய்தவேண்டியிருக்கும்! இக்கொடிய விளைவு பற்றிய எண்ணமும், அதனடியாகப் பிறக்கும் ஈவிரக்கமும் அவனுக்குத் தோன்றுவோ ?

அஃது எவ்வாறுயினும் இதுகாறும் மனித வரலாற்றின் பெரும்பகுதி போர்களின் வரலாருகவும், பேரழிவின் வரலாருகவும் காட்சி தருகின்றது. மனிதன் அறிவிலும் நாகரிகத்திலும் முன்னேறுவதற்கேற்பப் போர் முறையிலும் அழிப்புத் திறத்திலும் தன் வல்லமையை மேன்மேலும் வளர்த்துக்கொண்டு வருகிருன். போக்கு வரவுச் சாதனங் களும், செய்தியைப் பரப்பும் சாதனங்களும் வெகுவாக முன் னேறிய காரணத்தால், போர்களும் உலகின் ஒரு கோடியி லிருந்து மற்றொரு கோடிக்கு விரைவில் பரவுகின்றன; போர்க் களங்களும் விரிவடைகின்றன. போர்கள் முதலில் தரையில் நிகழ்ந்தன. பின்னர், கடலில் நிகழ்ந்தன. இந்த நூற்றுண் டில், வானிலும் நிகழ்கின்றன. இனிமேல் அண்டவெளியிலும் அண்டை மண்டலங்களிலும் போர் தொடுப்பினும் தொடுக்கலாம்.

இந்தப் போர்களினுல் பழிபாவமற்ற எண்ணற்ற இளைஞர் கொல்லப்படுவதோடு எங்கணும் சொல்லொணுத் துன்பங்

களும் உடன் விளைகின்றன. கணவனை யிழந்த காரிகை யரும், தந்தையை யிழந்த சேயரும், அங்கமிழந்த அகதிகளும் எண்ணற்றோராவர். பஞ்சம் பரவும்; நோய்கள் பிணிக்கும்; தொழில்கள் அழியும்; கலைகள் மறையும். இந்த அவல நிலையைத் தடுப்பதற்காக அவ்வப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் விரிவான முயற்சி, நிலையான முயற்சி இரண்டு உலகப் பெரும் போர்களை அடுத்தே மேற்கொள்ளப்பட்டது. முதல் உலகப் போருக்குப் பின்னர், அமைதியைக் காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச சங்கம் நிலைக்கவில்லை.

இரண்டாம் உலகப் போரின் பயங்கர நாசத்தைக் கண்ணுற்ற உலகத் தலைவர்கள் இனிமேலாயினும் மனித வினத்தைப் பேரழிவினின்றும் காக்கப் போர்கள் நிகழாதவாறு தடுக்கவேண்டுமெனக் கருதினர். இப்போதுள்ள படைக் கருவிகளின் அழிவுத் திறம் சொல்லுந்தரத்ததன்று; நொடிப் பொழுதில் உலகின் உயிர்களையெல்லாம் அழிக்கவல்லன. மனிதப்பூண்டே அற்றுவிடும் அளவுக்கு அணு ஆயுதங்களும் பிற ஆயுதங்களும் மலிந்து விட்டன. ஆகவே உலகை எப்படியாவது அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்று உறுதி பூண்டார்கள் சில உலகப் பெரியார்கள்.

அதற்கிணங்க 1945 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோ நகரில் ஒரு மாநாடு கூட்டினார்கள். என்றென்றும் போர் நிகழாதவாறு தடுப்பதும், போர் மூளுவதற்கான காரணங்களை அகற்றுவதும் அவர்களது முதன்மையான நோக்கங்களாம். அவற்றைக் குறித்து நிரந்தரமான ஓர் உலக அமைப்பைப் படைப்பதெனத் தீர்மானித்தனர். அதுவே ஐக்கிய நாடுகளின் சபையாகும்.

இச்சபையின் முக்கிய நோக்கங்களாவன :

(1) நாடுகளுக்கிடையே தோன்றும் சண்டை சச்சரவுகளை வன்முறையிலின்றிச், சமாதானமாகத் தீர்த்து வைத்தல்.

(2) எல்லா நாடுகளின் பிரதேச உரிமையையும் சுதந்தரத்தையும் காத்தல்.

(3) உலக மக்களிடையே நேசப்பான்மையை உண்டாக்கிக் கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் வளர்த்தல்.

(4) எவ்வித வேற்றுமையும் பாராட்டாது, பின்தங்கிய நாடுகளைப் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், உணவு உற்பத்தி ஆகிய துறைகளில் மேம்பாடடையச் செய்து அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.

ஐக்கிய நாடுகள் சபை 1945 ஆம் ஆண்டு அக்டோபர் 24 ஆம் நாள் செயற்படத் தொடங்கியது. இன்று இதன் பொதுச் சபையில் 122 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. எல்லாருக்கும் சமமான வரக்குரிமை உண்டு. ஐ. நா. சபை முக்கியமான ஆறு பிரிவுகளைக் கொண்டு பணியாற்றுகின்றது.

அவையாவன :

(1) பொதுச் சபை
(2) பாதுகாப்புச் சபை
(3) சமூகப் பொருளாதாரச் சபை
(4) பொறுப்பாட்சிச் சபை
(5) உலக நீதி மன்றம்
(6) ஐ. நா. அலுவலகம்

ஐக்கிய நாடுகளின் சபை நடவடிக்கைகளை ஐந்து மொழிகளில் நடத்துகின்றனர். சீனம், பிரஞ்சு, ஆங்கிலம், ரஷியம், ஸ்பானியம் ஆகியவை அம்மொழிகள்.

**ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை :**

இச்சபையின் உறுப்பினராக இருக்கும் எல்லா நாடுகளின் பிரதிநிதிகளையும் கொண்டது இப்பேரவை. ஒவ்வொரு நாடும் ஐந்து பிரதிநிதிகளை இச்சபைக்கு அனுப்பலாம். எனினும் ஒரு நாட்டுக்கு ஒரு வாக்குத்தான் உண்டு. முக்கியமான தீர்மானங்கட்கு மொத்த வாக்குகளில் மூன்றிலிரண்டு பங்கு ஆதரவு வேண்டும். இச்சபை ஆண்டுக்கொருமுறை கூடும். ஆண்டுக்கொரு தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவர். 1953 ஆம் ஆண்டில் நம் நாட்டைச் சேர்ந்த திருமதி விசயலட்சுமி பண்டிட் இச்சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமது திறமையினால் தமக்கும் தம் தாய் நாட்டுக்கும் மேலாம் புகழைப் பெற்றார்.

**பாதுகாப்புச் சபை**

இப்போது இச்சபையில் 15 உறுப்பு நாடுகள் உள்ளன. அவற்றுள் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா, ரஷியா, சீனு ஆகியவை நிலேத்த அங்கம் உடையவை. ஏனைய உறுப்பு நாடுகளைப் பொதுச்சபை இரண்டாண்டுகட்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கும். இச்சபை மிகவும் பொறுப்பு வாய்ந்தது. போர் மூளாதவாறு தடுத்தல், அமைதியை நிலைநாட்டல், வரம்புமீறிய நாடுகளின்மீது இராணுவ நடவடிக்கை எடுத்தல், பொருளாதாரத் தடை விதித்தல் ஆகியவை இச்சபையின் முக்கியமான பணிகளாம். இச்சபையின் முடிவுகட்கு நிரந்தர உறுப்பு நாடுகள் அனைத்தும் ஒப்புதல் அளித்தாலன்றி அம்முடிவுகள் செல்லுபடியாகா. நிரந்தர உறுப்பான எந்த ஒரு நாடும் மற்ற நாடுகளின் முடிவைத் தகர்க்கலாம். இவ்வுரிமையை 'வீட்டோ' (Veto) என்பர். இச்சபை மாதம் இருமுறை கூடும்.

**சமூகப் பொருளாதாரச் சபை**

இது பொதுச் சபையினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட 18 உறுப்பினர்களைக் கொண்டது. இதன் உறுப்பினர்கள் மூன்ருண்டுகட்கொரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். உலக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், கல்வி, பொருளாதார சுகாதாரத் துறைகளில் மேம்பாடடையப் பாடுபடுதல், வேற்றுமைகளைக் களைந்து அடிப்படை உரிமைகளையும் சுதந்தரங்களையும் பாதுகாப்பது இச்சபையின் பணிகளாம்.

**பொறுப்பாட்சி மன்றம்** (தருமகர்த்தா சபை)

சுய ஆட்சி பெருத நாடுகள், முன்னேற்றம் அடையாத நாடுகள் ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பை இச்சபை மேற்கொள்கின்றது.

**உலக நீதி மன்றம்**

இம்மன்றம் ஹாலந்து நாட்டிலுள்ள திஹேக் என்னும் நகரில் அமைந்துள்ளது. இதில் பதினைந்து நீதிபதிகள் பணியாற்றுகின்றனர். இவர்கள் பொதுச் சபையாலும்

பாதுகாப்புச் சபையாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நாடுகளிடையே ஏற்படும் வழக்குகளை இந்நீதி மன்றம் விசாரிக்கிறது.

### ஐ. நா. அலுவலகம்

இவ்வலுவலகம் நியூயார்க்கு நகரில் உள்ளது. இதனை இயக்கும் மேலதிகாரிக்குச் 'செனரல் செக்கரட்டரி' என்று பெயர். இவர் ஐந்தாண்டுகட்கு ஒருமுறை பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் பொதுச்சபையால் நியமிக்கப் படுகிறார். இப்பொழுது இப்பதவியை வகிப்பவர் எல்லா நாட்டவராலும் நன்கு மதிக்கப்படுகிற திரு. ஊதாண்ட் எனப்படும் பர்மியர். ஐ. நா. அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டது. பன்னூட்டினைச் சேர்ந்த பல்லாயிரம் ஊழியர் இதன்கண் வேலை பார்க்கின்றனர்.

மேற்கூறிய சபைகளைத் தவிர வேறு சில முக்கியமான பணிகளைச் செய்யும் கிளைகளும் உள்ளன.

### உலகத் தொழிலாளர் சங்கம்

தொழிலாளர்களின் நலனில் இச்சங்கம் அக்கறை காட்டு கிறது. இதன் அலுவலகம் ஜினிவாவில் உள்ளது.

### ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகம்

இது நாடுகளிடையே அறிவியல், கலை, கல்வி மேம்பாட் டுக்காக உழைக்கின்றது. இது பாரிசில் உள்ளது.

### உணவு விவசாயச் சங்கம்

உலக மக்களின் மொத்த உணவுத் தேவையைக் கருத்தில் கொண்டு, உணவு உற்பத்தி நிலைமையினை ஆராய்ந்து, உணவுப்பொருட் பெருக்கத்துக்கு வழிமுறை காண்பது இச்சங்கத்தின் சீரிய பணியாகும்.

### உலக சுகாதாரச் சங்கம்

உலக மக்களின் சுகாதாரத்தைப் பேணுதல், கொள்ளை நோய்களை ஒழித்தல், அதற்கான ஆராய்ச்சிகளை நடத்துதல்

ஆகியவை இதன் பேருதவியாகும். இதன் அலுவலகம் ஜினிவாவில் உள்ளது.

பீகிங் நகரைத் தலைநகராகக் கொண்ட பொதுவுடைமை சீனு இதுகாறும் ஐக்கிய நாடுகளின் சபையில் அங்கம் பெற வில்லை. போர் இன்றியமையாதது, தேவையானது என்ற கோட்பாட்டைக் கொண்டியங்குவதாலும் அச்சபையின் கோட்பாடுகளை மீறுவதாலும் அதனைச் சேர்த்துக்கொள் வதைப் பெரும்பாலோர் எதிர்க்கின்றனர். பார்மோசா தீவிலுள்ள தேசீயச் சீனுதான் அங்கம் பெற்றுள்ளது.

மேற்கூறியவாறு பல்லாற்றானும் உலக மக்களின் நன்மைக்காகவும் மேம்பாட்டுக்காகவும் பாடுபடுகின்ற இச் சபையுடன் ஒத்துழைத்து இதனை வலுப்படுத்துவதன் மூலம் மனித சமுதாயம் நலமும் வளமும் பெற்றுத் திகழும் ஒரு குடும்பம் என்பதை இச்சபை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

**அருஞ்சொற்பொருள் :**

யாண்டும் - எங்கும்; காவு - பலி; அண்டை மண்டலம் - சந்திர மண்டலம் முதலியன; பரிந்துரை - சிபாரிசு; மன்பதை - மக்கட் சமுதாயம்.

**வினுக்கள் :**

1. 'வலியார் மெலியார்மேற் பொருதல் யாண்டும் நிகழ்ந்து வந்த செயலாகும்'—இஃது எவ்வாறு பொருந்தும்?

2. மனிதன் முன்னேற முன்னேறப் போர்களும் எவ்வாறு வளர்கின்றன?

3. போரினுல் விளையும் தீமைகள் யாவை?

4. ஐ. நா. சபை எவ்வாறு, எப்பொழுது, எங்கே தோற்றுவிக்கப் பட்டது?

5. ஐ. நா. சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை?

6. ஐ. நா. சபையின் உட்பிரிவுகள் யாவை?

7. பாதுகாப்புச் சபையின் அமைப்பு முறைகளை எழுதுக.

8. ஐ. நா. அலுவலகம் எங்குள்ளது? அதன் பொதுச் செயலாள ராக இப்போது பணியாற்றுபவர் யார்?

# 8. பன்னாட்டு நாகரிகம்

திரு. பா. சூரியநாராயணன். எம். ஏ., (வரலாறு) எம். ஏ., (அரசியல்)

## உண்மை நாகரிகம்

இந்நிலவுலகின்கண் மக்கள் தோன்றிய காலமுதல் இந்நாள் வரையிலும், வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும், தங்கள் அறிவினாலும் திறத்தாலும் செய்துகொண்ட வசதிகளையே 'மக்களது நாகரிகம்' எனக் குறிப்பிடுவார்கள் வரலாற்றாசிரியர்கள். அரசியல், சமுதாயம், பொருளியல், சமயம், நுண்கலைகள், (இசை, சிற்பம், ஓவியம் போன்றவை) இலக்கியம் முதலிய துறைகளிலெல்லாம் மக்களது அறிவு வளர, அவர்களுடைய திறத்தினால் தோற்றுவிக்கப்பட்ட புதிய படைப்புக்களையே 'நாகரிகம்' என வழங்குவர் மேலைநாட்டு வரலாற்றாசிரியர். அறிவு வளர்ச்சியும் வசதிப் பெருக்கமும் மட்டுமே மக்களது உண்மையான நாகரிக வளர்ச்சியைக் காட்டுவனவல்ல; அவர்களது உள்ளம் 'இரக்கம்' என்னும் சிறந்த பண்பினால் வளர்க்கப்பட்டிருப்பதுதான் அவர்களுடைய உண்மையான நாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகும். இதனை வள்ளுவப் பெருந்தகையார் சிறப்பித்துக் கூறும் 'கண்ணோட்டம்' (இரக்கம்) என்னும் தலைப்புப் பாக்களிலிருந்து அறியலாம். மேலை நாட்டவர் கருத்தின்படி 'நாகரிகம்' என்பதற்குப் பொருள் கொண்டு, உலக நாகரிகத்தின் தோற்றுவாய்களாகக் கூறப்படுகின்ற எகிப்திய, சுமேரிய, பாபிலோனிய, சிந்துவெளி நாகரிகங்களின் சில சிறப்பியல்புகளை நாம் சீர்தூக்கிக் காணலாம்.

## எகிப்து வாழ்க்கை முறை

கி. மு. 5000இல் வளமிக்க நைல் ஆற்று வெளியில் குடியேறிய **வெள்ளைக்காகேசிய** இனத்தவரே நைல்வெளி நாகரிகத்தை வளர்த்தவர்கள். குட்டையான உறுதியான, உடலுள்ள இம்மக்கள் சப்பை மூக்கும், நீண்டு ஒடுங்கிய தலையும், கரிய மயிரும் உடையவர்கள். இவர்களது அரசர்

களுக்காக எழுப்பப்பட்ட கல்லறைச் (பிரமிட்) சுவர்களிற் காணப்படும் ஓவியங்கள் இவர்களது நாகரிகத்தை அறிய உதவுகின்றன. நைல் ஆற்றில் பல இடங்களில் கரையில் இருந்து கால்வாய்களை வெட்டி, வெள்ளப் பெருக்குக் காலத்தில் தண்ணீரைக் கால்களின் வழியாகக் கொண்டு போய் உணவுப் பொருள்களைப் பயிரிட்டனர். கரை அமைப் பதையும் கால்வாய்களைக் காப்பதையும் அரசாங்கமே கண்காணித்தது. அதற்குரிய வரியும் குடிமக்கள் விளைவித்த கோதுமை, சணல்நார் முதலிய பொருள்களாகவும் ஆடு மாடு களாகவுமாகக் கொடுக்கப்பட்டது. சணலிலிருந்து ஆடை நெசவு செய்தனர். வேலைப்பாடமைந்த மட்கலங்கள் செய்யவும், கண்ணாடியினால் பொருள்கள் செய்யவும் அறிந் திருந்தனர். பொன்னினால் சிறு அணிகலன்களைச் செய்து அணிந்தனர். மரம், யானைக் கொம்பு, பொன், வெள்ளி, தோல் இவற்றைக் கொண்டு நாற்காலி, படுக்கைகள் முதலிய வற்றைச் செய்தனர். துடுப்புக்களை வைத்துத் துழாவிக் கொண்டு கடல் கடந்து செல்லும் தோணிகளை மரத்தால் அமைத்தனர். அவற்றால் அவர்கள் நடுத்தரைக்கடலைக் கடந்து **சிரியா, கிரீட்** நாடுகளோடு வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டனர்.

**எகிப்தின் கட்டடக்கலை**

இவ்வுலக வாழ்க்கைக்குப்பின் உயிர் மீண்டும் வாழும் தன்மையுடையதென அவர்கள் நம்பினர்; எனவே அவர்களில் இறந்தோரைப் பல வசதிகளோடு புதைத்துக் கல்லறைகளை எழுப்பினர். அரசர்களது உடலைப் புதைக்கும்போது, அதற் கருகிலுள்ள அறையில் மறு வாழ்க்கைக்கு உதவுவதற்காக உணவு, அணிகள், படைக்கலங்கள் முதலியவற்றை வைப்ப தோடு, அவர்களுக்கு வேலை செய்வதற்காக, இம்மையில் தொண்டு செய்த அடிமைகளைக் கொன்று புதைத்து வைப்பது முண்டு. **கர்னுக்** என்னுமிடத்தில் கட்டப்பட்ட கோயிலும், **லுக்சார்** என்னுமிடத்தில் காணப்படும் அரசர்களது கல்வெட்டுக்களடங்கிய கோயிலும், தூண்களடங்கிய பெருங் கூடமும் கட்டடக்கலையில் எகிப்தியரது தேர்ச்சியைக்காட்டு

கின்றன. சிங்கத்தின் உடலும், மனிதனின் தலையும் உடைய உருவமொன்றை (Sphinx) கி. மு. 2160இல் செய்துள்ளனர்; மரத்திலும், கல்லிலும் பல அரசரது உருவங்களைச் செய்தனர்.

## இறைவழிபாடு

எகிப்தியர் பல கடவுள்களை வணங்கினர்; நைல் ஆறு, பகலவன், ஆசிரிஸ், பல ஆவிகள், விலங்குகள் முதலியவற்றை வணங்கினர். இவர்களுக்காக எகிப்திய அரசர்கள் பெருங்கோயில்களை எடுப்பித்துப் பலிகள் கொடுத்து விழாக்கள் நடத்தினர். பொதுவாக அவர்கள் கடவுளைப்பற்றிக் கொண்டிருந்த கருத்து அச்சம் ஊட்டுவது. பல கடவுள் வணக்கத்தையும், கொடிய வழிபாட்டு முறைகளையும் நீக்கி, ஒரே கடவுள் பகலவனே எனவும், அவனும் எவ்வுயிரிடத்தும் அன்பும் பரிவும் உடையவனெனவும் கருத்தை மாற்றி, அதற்கொப்பக் கொடிய வழிபாடுகளை நீக்கி அன்புச் சொற்களால் வழுத்துவதற்காகப் பாடல்களை எழுதிச் சமயத்துறையில் பெரும் புரட்சியொன்றைச் செய்தவன் கி. மு. 1375இலிருந்து கி. மு. 1358 வரை எகிப்தை ஆண்ட அரசனாகிய நான்காம் **ஆமன்காட்டப்** என்பவன் ஆவான். இவனுடைய செம்மையான சமயக் கருத்துக்களுக்காக இவனைப் புகழ்ந்து பேசுகின்றார் **டேவிஸ்** என்னும் வரலாற்றாசிரியர். எனினும் எகிப்தியப் பொது மக்கள் இச்சீர்திருத்தக் கருத்துக்களைப் புரிந்து கொள்ளாமல் புறக்கணிக்கவே, இவனுக்குப்பின் வந்த **டூடன்காமன்** என்னும் அரசன் பழைய கடவுள்களும், கூளிகளும் வாழும் கோயில்களைத் திறந்துவிட்டுப் பழைய கொடிய வழிபாடுகளை வளர விட்டான்!

## சுமேரியா

எகிப்திய நாகரிகத்தைப் போலவே பழமையிலும், சிறப்பிலும் விளங்குவது சுமேரிய நாகரிகம்; இது மேற்கு ஆசியாவிலுள்ள டைகிரிஸ், யூப்ரடீஸ் ஆறுகளுக்கு இடையேயுள்ள செழிப்புமிக்க வெளியில் கி. மு. 5000இல் சுமேரியரால் தோற்றுவிக்கப்பட்டது. இவரும் எகிப்தியரைப்போல் **செமிடிக்** இனத்தவரல்லர்; கருமையும் வெளுப்பும் கலந்த நிறமுடையவர்; எகிப்தியர் நாட்டுப் புறங்களிலிருந்து

நாகரிகத்தை வளர்த்தனர்; சுமேரியரது நாகரிகம் நகரங்களில் தோன்றி வளர்ந்தது: இவ்வாற்று வெளியில் எழுந்த நகரங்களாகிய **நிப்பூர், ஊர், எரெக்** என்பவை நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கின.

## வாழ்க்கைமுறை

முதலில் புற்களாலும், களிமண் சுவர்களாலும் வீடுகள் அமைத்துக்கொண்ட இம்மக்கள் நாளாவட்டத்தில் வெயிலில் காயவைத்த செங்கற்களைக் கொண்டு வீடுகள் கட்டிக் கொண்டனர். ஆறுகள் தரும் செழிப்பான வண்டல் மண்ணில் கோதுமை, பார்லி, அத்திப்பழம் முதலியவற்றைப் பெருவாரியாகப் பயிரிட்டனர்; உலகிலேயே முதன் முதலில் கோதுமை பயிராகியது இவ்வாற்று வெளியில்தான் என்பது வரலாற்ருசிரியர்களுள் சிலர் கருத்து. இவையும், பேரீச்சம் பழம், மீன். ஊன் இவையும் இவர்களது உணவு. தூண்டில் முள், வலை முதலியவற்றைக் கொண்டு மீன் பிடித்தனர். சக்கரங்களைச் செய்து வண்டிகளை ஓட்டத் தெரிந்த முதல் மக்கள் சுமேரியரே. ஆறுகளையும் கால்வாய்களையும் அடுத்த பசும்புல் வெளிகளில் ஆடுமாடுகளை மேய்த்து, ஆட்டு மயிரைக்கொண்டு கம்பள ஆடை நெய்தனர். பின்னுல் பருத்தி ஆடையும் நெய்யக் கற்றுக் கொண்டனர். துணிகளுக்கு அழகிய வண்ணங்களைக் குழைத்துச் சேர்க்கும் தொழிலை யறிந்தனர். பொன், வெள்ளி அணிகலன்களும், செம்பு, கல் கருவிகளும் அவர்களிடையே வழக்கத்திலிருந்தன. தங்களை வடக்கு, வடகிழக்கு, வடமேற்குப் பகுதிகளிலிருந்து அடிக்கடி தாக்கித் துன்புறுத்தி வந்த காட்டுமிராண்டிகளிடம் இருந்து காப்பதற்காக ஈட்டி, கேடயம் முதலிய போர்க் கருவிகளைச் சுமேரியர் வைத்திருந்தனர்.

## எழுத்தும் இறைவழிபாடும்

முதலில் கருத்துக்களைச் சிறு படங்களாக எழுதிய இம்மக்கள், பிற்காலத்தில் 350 வகையான ஒலி வகைகளைக் காட்டும் குறியீடுகளை ஆப்பு வடிவத்தில் எழுதினர். அவர்கள் தங்களது நூல்களைக் களிமண் தகடுகளில் எழுதினர். வணிகர் வைத்திருந்த களிமண் தகடுகள் இந்தியருக்கும்

சுமேரியருக்குமுள்ள வாணிகத் தொடர்பைக் காட்டுகின்றன. இந்திய விலங்குகளின் வடிவங்களும் அவற்றில் வரையப் பட்டுள்ளன. சுமேரிய சமுதாயத்திலும் அரசர், செல்வர், பூசாரிகள், வணிகர் தொழிலாளர், அடிமை என்ற வகுப்புக்கள் உண்டு. சுமேரியர் 'என்லில்' என்ற நிலக்கடவுளையும், 'எங்கி' என்ற நீர்க்கடவுளையும் வணங்கினர். என்லில் எல்லம் என்னும் மலைநாட்டுக் கடவுளாகையால், அக்கடவுளுக்கு உயர்ந்த கோபுரங்களமைத்துக் கோயில் கட்டினர். இறப்புக்குப்பின் உயிர், வாழுந்தன்மையது எனச் சுமேரியரும் எண்ணி இறந்தவருக்குரிய உணவு, கருவி முதலியவற்றையும் உடலோடு புதைத்தனர். அரசர், அரசியரின் கல்லறைகள் வேலைப்பாடு அமைந்தவை. ஊர் என்னும் இடத்திலுள்ள அரசர் கல்லறைகளில் அரசரது அணிகலன்கள், கருவிகள் முதலியவை காணப்படுகின்றன.

## ஆட்சிமுறை

சுமேரியர் நகர் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தனி அரசன் உண்டு; அவனே அவ்வூருக்குத் தலைமைப் பூசாரி யாகவும் சில சமயங்களில் இருப்பதுண்டு. இந்நகர்களுக்கு இடையே சண்டைகள் தோன்றினாலும், ஆற்றுக் கால்வாய் களையும், கரைகளையும் செப்பனிட்டுக் காக்கும் பொறுப்பில் யாவரும் ஒத்துழைப்பர். கி. மு. 2750இல் **அக்கேடியர்** என்னும் செமிடிக் இனத்தவர் சுமேரியரோடு கலந்து நாகரிகத்தை ஏற்றனர். ஒரு பேரரசாகச் சுமேரியர் விளங்கினர். பல பிரிவுகளாகப் பேரரசு பிரிக்கப்பட்டு ஆளப் பட்டது. வரிப்பொருள் விளைபொருளாகவும், ஆடு, மாடு களாகவும் வாங்கப்பட்டு அரசாங்கக் களஞ்சியங்களிலும் பட்டிகளிலும் சேர்க்கப்பட்டது. பாபிலோன் என்னும் நகரம் அக்கேடியர் தலைவன் **சார்கான்** என்பானால் நிறுவப்பட்டுப் பேரரசின் தலைநகரமாயிற்று. பொருள்களை நிறுக்கவும், அளக்கவும் கருவிகள் செய்யப்பட்டன. இவைகளைச் சரிபார்க்கவும், அரசாங்கப் பொருள்களின் வரவு செலவுக் கணக்கைச் சரிபார்க்கவும் அலுவலாளர்கள் இருந்தனர். சீட்டுப் போட்டுப்பார்த்து, வேலைக்கு அமர்த்தும் முறையும்

சுமேரியரிடை இருந்ததாகத் தெரிகிறது. பின் காலத்திய **அசீரியர், பாரசீகர், கிரேக்கர்** சுமேரிய நாகரிகத்தைக் கைக்கொண்டு பரவச் செய்தனர்.

**பாபிலோனியா**

கி. மு. 2200இல் பாபிலோனிய நகரை மையமாகக் கொண்டு பரவி வாழ்ந்த செமிடிக் இனத்தவரான **அமோரைட்** மக்கள் நாகரிக வளர்ச்சிக்குரிய முயற்சிகளில் ஈடுபட்டனர். சுமேரிய நாகரிகத்தின் வளர்ச்சியே பாபிலோனியரின் நாகரிகமாகும். சிந்து வெளியில் உள்ளவர்களைப் போலவே இவர்களும் நீண்ட அகன்ற தெருக்களும், பெரிய வீடுகளு முள்ள ஊர்களை அமைத்தனர். பயிர்த்தொழில், பருத்தி ஆடை நெசவு முதலியன இவர்களது தொழில்கள். இவர் களுடைய அரசரில் ஒருவனுன **அம்முராபி** என்பான் தனது மேற் பார்வையிலேயே பழத்தோட்டங்களையும் காய்கறித் தோட்டங் களையும் பயிராக்கி, ஆடுமாடுகளையும் வளர்த்தனன். வண்டல் மண் மிக்க இவ்வெளியில் கற்கள் கிடைப்பதரி தாகையால் கல் உருவங்கள் செய்யப்படவில்லை.

**இறைவழிபாடும் கல்வியும்**

சுமேரியக் கடவுள்களையும், போர்க்கடவுளாகிய **மார்டுக்,** காதற் கடவுளாகிய **இஷ்டார்** ஆகியோரையும் இவர்கள் வழிபட்டனர். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு தனிக் கடவுள் உண்டு. கோயில்களை வாணிகத் தொழில், பணம் கொடுக்கல் வாங்கல் செய்தல், கல்வி பயிற்றல் முதலிய தொழில்கள் நடைபெறுமிடங்களாகவும் பயன்படுத்தினர். நூற்றுக்கு இருபது விகித வட்டியில் பணம் கடனாகக் கொடுக்கப்பட்டது. சுமேரிய எழுத்துக்கள் 350உம் சிறுவர் சிறுமியர் கற்றனர். ஆசிரியர்களே அரசாங்க அலுவலாள ராகவும், பூசாரிகளாகவும் தொழில் செய்தனர். வானில் உள்ள விண்மீன்களின் இருப்பையும், போக்கையும் கணித் தறிந்து, வாழ்வின் எதிர்கால நிகழ்ச்சிகளைக் கூறும் சோதிடக் கலையை முதன் முதலில் தொடக்கி வைத்தவர் பாபிலோனியரே.

### திருமண முறை

பாபிலோனிய சமுதாயத்தில் செல்வர், நடுவகுப்பார், அடிமைகள் என்ற பிரிவுகளுண்டு. செல்வரிடத்துக் குற்றஞ் செய்தோருக்கு இரட்டிப்புத் தண்டனை உண்டு. பொருள்களை வாங்கும் செல்வரும் இரட்டிப்பு விலை கொடுக்க வேண்டும். அடிமைகளுக்கு மற்றவருடன் மண உறவுகொள்ளும் உரிமையைச் சட்டம் அளித்தது. மணத்தில் சமயச் சடங்குகளில்லை. மனைவி என்ற நிலையை அடைந்து விட்டதாகச் சான்று இதழ் ஒன்று அவர்களுக்கு அளிக்கப்பட்டது. மணமகன் பெண்ணின் தந்தைக்குப் பரிசு கொடுப்பதும், மணப்பெண் தன்னுடன் வீடு, தோட்டம், அடிமைப் பெண், நகைகள் முதலியவற்றைப் பரிசாகக் கொண்டு வருவதும் பழக்கத்திலிருந்தன. மணமுறிவைப் பெண் விரும்பினால், அவள் கொண்டுவந்த பொருள்களில் பாதியை மணமகன் வீட்டுக்காரர் வைத்துக் கொள்ளுவார். குழந்தைகளை எடுத்து வளர்க்கும் உரிமை இருந்தது. பெண்களுக்குத் தந்தை, கணவர் ஆகியோரின் செல்வத்தில் பங்குபெறும் உரிமை இருந்தது.

### ஆட்சி முறை

பாபிலோனிய அரசரில் பெரியவன் அம்முராபி என்பான் கி. மு. 2100இல் ஆட்சி செய்தவன்; ஒரு கல்லில் அவன் பகலவக் கடவுளிடமிருந்து சட்டங்களைப் பெறுவதாக ஓவியம் வரையப்பட்டுள்ளது; அதன் கீழே அவன் தொகுத்து வைத்துள்ள சட்டங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. ஆட்சி அலுவலாளரை நிறுவிக் கைக்கூலி பெறுவோரை ஒறுத்து ஆட்சி செய்தான். நெறிமுறை மன்றங்களை அமைத்துச் சிறு குற்றங்களுக்கும் கடும் தண்டனைகளை அளித்தான். பல்வேறு தொழிலாளர்களுக்குக் கூலியும் இவனது சட்டத் தொகுப்பில் வரையறை செய்துள்ளான்.

### சிந்துவெளி நாகரிகம்

சுமேரிய, பாபிலோனிய நாகரிகங்களைப் போலக் காலத்திலும், தன்மையிலும் ஒத்து விளங்குவது நம் நாட்டுச்

சிந்து வெளியில் கி. மு. 3500இல் தோன்றிய நகர நாகரிகம். பஞ்சாப், சிந்து நிலப்பிரிவுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள **மொகஞ்சதாரோ, ஹாரப்பா** நகரங்களே இதற்குச் சான்று. நீண்ட நேரான, அகன்ற தெருக்கள், பெரிய வீடுகள், ஒவ்வொன்றிலும் குளிப்பதற்குக் கிணறு, அறைகள், கழி நீர்க்கால்கள், ஊருக்குப் பொதுவான குளிக்கும் குளங்கள் ஆகிய வசதிகள் இம்மக்களின் தூயவாழ்க்கை விருப்பத்தை விளக்குகின்றன. கோதுமை, பார்லி, பருத்தி பயிரிடல், நெசவு, மேற்காசியாவுடன் வாணிகம், செம்பு, கல், பொன், வெள்ளி, மரம் இவற்றில் கருவிகளும் கலன்களும் செய்தல், சிறுவர்களுக்கு வேண்டும் சிறு வண்டிகள், ஊது குழல், சிற்றுருவங்கள், கோலி முதலியன செய்தல், கல்லிலும், வெண்கலத்திலும் உருவங்கள் செய்தல் முதலியன இவர்களது தொழில்கள். அவர்களது களிமண் தகடுகளில், மூன்று முகங்களையுடைய ஓர் ஆணின் உருவம், மீன், திமிலுள்ள காளை முதலியவை வரையப்பட்டுள்ளன. ஒரு பெண் கடவுளையும் முத்தலை ஆண் கடவுளையும், திமில் காளையையும், இலிங்க வடிவிலுள்ள கற்களையும் வழிபட்டனர் இம்மக்கள்; சிறு படங்களையே இவர்கள் எழுத்துக்களாக எழுதினர். இவர்களது வழிபாட்டு முறையே பிற்காலத்தில் ஆரியரால் விரிவாக்கப்பட்டது. குதிரையும் இரும்பும் இவர்கள் அறியாதன. எனவே இவர்களுடைய நாகரிகத்தைச் சுமேரிய நாகரிகத்தைப் போலவே வெண்கலக் கற்கால நாகரிகம் எனக் குறிப்பிடுவர். இதனை (வேதகால இந்திய ஆரிய நாகரிகமே என ஒரு சிலர் குறிப்பிட்டாலும், சிந்து வெளி மக்களின் எழுத்து அமைப்பும், சமய வழிபாடும், நகரச் சிறப்பும், அவர்களது நாகரிகத்தை இந்தியாவின் மூத்த குடியினரான தமிழ் அல்லது திராவிடரின் நாகரிகமே எனக் காட்டும் என்று அண்மையில் காலஞ் சென்ற வரலாற்றுப் பேராசிரியர் **ஈராசு** பாதிரியார் கூறியது கவனிக்கத்தக்கது.

**அருஞ்சொற்பொருள்:**

வண்மையான — வளமையான; கால்கள் — வாய்க்கால்கள்; வழுத்துவதற்கு—வாழ்த்துவதற்கு; கூளி—பேய்; ஒறுத்து — தண்டித்து;

**வினாக்கள் :**

1. உண்மை நாகரிகம் எது ?

2. எகிப்தியரின் உருவ அமைப்பையும் அவர்களின் வாழ்க்கை முறையினையும் எழுதுக.

3. எகிப்தியரின் கட்டடக் கலையைப்பற்றி எழுதுக.

4. எகிப்தியரின் இறைவழிபாட்டு முறையை எழுதுக.

5. சுமேரியர் உருவ அமைப்பையும் அவர்களின் நாகரிகத் தோற்றத்தையும் எழுதுக.

6. சுமேரியரின் வாழ்க்கை முறையை எழுதுக.

7. சுமேரியரின் எழுத்து முறையையும் இறைவழிபாட்டையும் எழுதுக.

8. சுமேரியரின் ஆட்சி முறையை எழுதுக.

9. பாபிலோனியா நாகரிக வளர்ச்சி எத்தகையது ?

10. பாபிலோனியரின் கல்வியையும் இறை வழிபாட்டையும் எழுதுக.

11. பாபிலோனியரின் திருமண முறையைப்பற்றி எழுதுக.

12. பாபிலோனியரின் ஆட்சி முறையைப் பற்றி எழுதுக.

13. சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் எவை? அவற்றின் அமைப்பு எத்தகையது ?

14. சிந்துவெளி மக்களின் தொழிலையும் இறைவழிபாட்டையும் எழுத்துக்களையும் பற்றி எழுதுக.

15. சிந்துவெளி நாகரிகம் எவருடைய நாகரிகம் என்பதை விளக்குக.

# 9. யாழ் எங்கே ?

வித்துவான் திரு. இராம. பெரியகருப்பன், எம். ஏ.

## பெருமை

'ஏழிசையாய் இசைப்பயனாய்' இறைவனைக் காட்டுவது நம் தமிழ். 'தமிழோடு இசைபாட' மறந்தறியாப் பண்பினர் நம் தமிழர். கல்லிலும் இசை வடித்த கலைத்திறன் சான்றது நம் தமிழ்நாடு !

## இசையும் இயற்கையும்

தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி அனைய பல இசைக் கருவிகளையும் அவை ஒவ்வொன்றிலும் பற்பல வகைகளையும் நாம் பெற்றிருந்தோம். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயரிய ஏழிசைகளையும், அவை முந்நிலைப்பட்டு இருபத்தொரு மூர்ச்சனைகளாகும் வகைகளையும் அறிந்திருந்தோம். பண் பற்றியும், திறம் பற்றியும், இவற்றால் பிறக்கும் பண்வகைகள் பற்றியும் இலக்கணம் வகுத்திருந்தோம். இடம், நேரம், பொருளுக்கேற்ற பண்வகைகளைப் பெற்றுப் பாடி அனுபவித்து வந்தோம். தமிழன் இவ்வனுபவ முதிர்ச்சியினால் இயற்கையிலேகூட இவ்விசை மரபு புலப்படுத்துவதைக் கற்பனை செய்து பாடி மகிழ்ந்தான். குயில் கூவுதலைப் பாட்டாகவும், மயில் ஆடுவதை நாட்டியமாகவும், தென்றலிசைப்பதைக் குழலாகவும், வண்டொலிப்பதை யாழாகவும், அருவி முழங்குவதை முழவாகவும் கற்பனை செய்து மகிழ்ந்து அவற்றைத் தம் பாடல்கள்தோறும் குறித்துச் சென்றனர் நம் முன்னோர். இக்கற்பனைகளைப் பழந்தமிழரின் இசைக்கலை வாழ்வின் நிழற்படம் என்றால் மறுப்பவர் இருக்க மாட்டார்கள். மறுப்பவர் உண்டானால் கண்ணாடி காட்டும் தம் நிழல் உருவைக் கண்டும் தாமிருப்பது பொய்யென மறுப்பவர்க்கு அவர்கள் ஒப்பாவார்.

## யாழ் இழப்பு

ஆயினும் பயன் என்ன ? இசைக் கருவிகளை, இசை மரபை, இசைத் தமிழை இழந்த நிலையில் நாம் இன்று

இருக்கிறோம். இசைக் கலையும் நம்மிடம் இருந்ததெனக் கூறத்தக்க அடிப்படைகள் சில நம்மிடம் உளவே தவிர, அவற்றின்மீது வளர்ந்து ஓங்கி நின்ற அரண்களை இழந்து விட்டோம்.

முன்பு இசைக் கலையின் உயிர்நாடியாக 'யாழ்' என்னும் கருவி திகழ்ந்தது; அக்கருவியை இயக்குவதிலே திறமை மிக்கதாய்ப் 'பாணர்குடி' எனும் கலைஞர் பரம்பரை ஒன்று வாழ்ந்தது. கால வெள்ளத்தில் படிப்படியாக இப்பாண் குலமும் யாழும் தமிழ்ப்பண் மரபும் மறைந்து போயின. நமது 'கலையிழப்பு' வரலாற்றில், உள்ளம் உருக்கும் உச்சி நிலையில் நிற்பது 'யாழ் இழப்பு' வரலாறேயாகும்.

## தோற்கருவி

மிகப் பழங்காலத்தில் வாழ்ந்த தமிழன் விலங்குகளின் தோலை மரங்களில் காயப்போட்டு வைத்தான். அவற்றில் உலர்ந்த குச்சிகள் காற்றசைவால் உராயும் போதெல்லாம் ஓர் ஒலி எழக்கேட்டான். அதைப்பற்றி எண்ணினான்; தோற்கருவிகள் தோன்றின.

## துளைக்கருவி

காடுகளில் வளர்ந்து நின்ற மூங்கிலில் வண்டுகள் துளை யிட்டுச் செல்ல, அத்துளை வழியே புகுந்து சென்ற கோடை யவ்வளி குழலிசையைக் காட்டியது. அதைப்பற்றிச் சிந்தித் தான்; குழலும் துளைக் கருவிகளும் பிறந்தன.

## நரம்புக் கருவி

கையில் வில்லை எடுத்துக்கொண்டு, காட்டில் வாழும் விலங்குகளை வேட்டையாடினான் தமிழன். அவ்விலங்குகளைக் குறி பார்த்து அம்பைத் தொடுத்து, நாண் ஏற்றி விடும் போதெல்லாம், சுண்டிவிட்ட அந்நாண் ஓர் இனிய ஓசை எழுப்பக் கேட்டான்; மனம் மகிழ்ந்தான்; வில்லிற் பூட்டிய

நரம்பினுல் கொலே முடிப்பதை விட்டு, இசை வடிப்பதை ஆராய்ந்தான். வில் யாழும், யாழ் வகைகளும், நரம்புக் கருவிகளும் உருவாயின.

### யாழின் இன்றியமையாமை

முறையே இவற்றை முழவு, குழல், யாழ் என 'ழ' என்ற தமிழ்ச் சிறப்பெழுத்தைப் பொருத்திப் பெயரிட்டு, இவை தமிழருடையன என 'முத்திரை' பொறித்து வைத்தான் பழந் தமிழன். இவற்றுள் 'யாழ்' இன்பம் தருவதாய், இசையின் அடிப்படையாய்ப் பிறவற்றிற்குத் தலைமை உடையதாய்ப் போற்றப் பெற்றமையை இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன. சங்கப் பாடல்களில் இசைக் கருவிகளேப்பற்றிக் குறிப்பிடப் படும்போதெல்லாம் யாழுடன் குழலோ யாழுடன் முழவோ யாழ், குழல், முழவு என்னும் மூன்றுமோ சேர்த்தே கூறப் படுகின்றன. எவை இல்லேயேனும் யாழ் இல்லா இசை அரங்கோ, பிற கலேயரங்கோ அன்று நடந்ததில்லே.

### யாழ் வகை

வரலாற்றுக்கு எட்டாத காலத்தில் தோன்றிய யாழ், கி. பி. 6ஆம் நூற்றுண்டு வரை கிளேத்துப் பல்கிப் பரவி விளங்கியது. வில்யாழ், சீறியாழ், பேரியாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ், மகரயாழ் என யாழ் வகைகள் பலவாகப் பெருகியிருந்தன. குறிஞ்சியாழ், முல்லேயாழ், மருதயாழ், நெய்தல் யாழ், பாலேயாழ் என அவ்வந் நிலக் கருப்பொருள் வகைகளாக யாழ் வழங்கிற்று. ஆயிரம் நரம்புடைய யாழும் இருந்ததெனக் கேள்விப்படுகின்றோம். எழில் மிக்க யாழின் உருவம் அமராவதி நகரச் சிற்பத்தில் செதுக்கப் பெற்றுள்ளது.

### இலக்கியத்தில் யாழ்

யாழின் இன்னேசை சங்க இலக்கியம் அனைத்திலும், பிற்கால இலக்கியங்களிலும் வண்டின் 'ரீங்கார' ஒலிக்கு ஒப்புமையாக, ஒருபடித்தாகக் கூறப்பட்டுள்ளது. மிஞிறு என்ற தேன்வண்டு முரலுவது போல யாழ் இசைக்கும் என ஒரு சங்கச் செய்யுள் சுட்டுகிறது.

மேலும் 'நல்யாழ்' (பதிற்றுப் பத்து—41); 'நல்யாழ்' (புறம் 170) என்றாற்போல யாழைப்பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் நன்மை அடைகொடுத்துக் கூறியுள்ளமையை நோக்கினால், பழந்தமிழர் யாழிடத்துக்கொண்டிருந்த நல்லார்வமும், நற்பற்றும் தெற்றென விளங்கும். 'யாழ்' ஒரு தெய்வம் எனவும் போற்றப்பெற்றுள்ளது.

**யாழ் மறைவிற்குக் காரணங்கள் :**

யாழை இயக்குவதில் தனித் திறன் பெற்றிருந்தவர் பாணர் ஆவர். பிற பல இசைக் கருவிகளை இயக்குபவர்களை விடப் பாணருக்கு ஏற்பட்ட புகழும் செல்வாக்குமே யாழின் அன்றைய பெருமையை விளக்கும். இங்ஙனம் ஒரு கலைக்கு ஒரு பிரிவினர் என ஒதுக்கியமையே, பிற்காலத்தில் அதன் மறைவை விரைவுபடுத்தும் கருவியுமாயிற்று. நாட்டியக் கலையை ஒரு சாரார்க்கு உரியதென ஒதுக்கி வந்தமையால் அக்கலை நலிவுற்றதும், தமிழைப் ''பண்டிதர்களுக்கே'' உரியதெனச் சில காலத்திற்கு முன்வரை ஒதுக்கியமையால் அதன் வளர்ச்சி நிலைகுன்றியிருந்ததும் இதனோடு ஒருசேர வைத்து எண்ணற்பாலன. பாணரின் சமுதாயச் செல்வாக்கை ஒழித்து, அவர்களைத் தாழ்வுப்படுத்திப் புறக்கணித்தமையே மிகச் சிறந்த யாழையும் கைவிடக் காரணமாயிற்று எனலாம்.

இங்ஙனம் வாழ்வோடு கலந்து, இமயம் முதல் குமரிவரை யாழ் பரவியிருந்தது. வட நாட்டின் வீணை எனும் கருவியைச் சீர்திருத்திக் கொள்ளவும் உதவிற்று. பல்லவர் காலத்தில் தான் 'வீணை' தென் திசையை எட்டிப்பார்த்தது. பல்லவ மன்னன் மகேந்திரப் போத்தரையன் வீணையை இயக்குவதில் வல்லவனாக விளங்கினான். அவன் 'பரிவாதினீ' என்ற வீணையைத் திறம்பட இயக்கினான். குடுமியான் மலையிலுள்ள கல்வெட்டுக்களில் 'வீணை'யைப் பற்றிய விவரங்களை அவன் செதுக்கி வைத்துள்ளான். அவன் சமணனாக இருந்தமையால் பிற மதத்தார் தழுவிய யாழுக்குப் பகையாக வீணையைச் சிறப்பித்தான். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' அல்லவா? இதனால் யாழும், அதைத் தழுவி நின்ற தமிழிசையும் புகழ் மங்கின.

சில காலம் யாழும் வீணையும் ஆங்காங்கு உலவின. பின்னர் ஆட்சியாளர் கையிலிருந்த வீணை நிலைக்க, மக்கள் கையிலிருந்த யாழ் நழுவி வீழ்ந்தது. யாழும், யாழ் வழிப்பட்ட பண்முறையும், அதனை அறிந்திருந்த பாண்குடியும் படிப்படியாக முற்றும் அழிந்து ஒழிந்தன. பின்னர் கி. பி. 14, 15ஆம் நூற்றாண்டுகளில் வேரூன்றிய விசயநகரப் பேரரசர் காலத்தில் தமிழிசையிருந்த இடத்தில் தமிழுக்குப் பதிலாகத் தெலுங்கும், இசைக்குப் பதிலாக 'சங்கீதமும்' இடம் பெறலாயின. 'ஆக்ஸ்போர்டு' பல்கலைக் கழகப் பதிப்பகத்தார் வெளியிட்ட 'இந்தியக் கலைமுது நிதியம்' என்னும் நூலில் ''கி. பி. 6ஆம் நூற்றாண்டில் புத்த மதத்தோடு யாழும் மறைந்தது'' என்று கூறப்பெற்றுள்ளது. கி. பி. 7ஆம் நூற்றாண்டினராகக் கருதப்படும் திருநாவுக்கரசர் ''மாசில் வீணையும்' என்று பாடியிருப்பதால், அவர் காலத்திலேயே பல்லவர்கள் வீணையை நிலைநாட்டி விட்டனர் என அறியலாம்.

இங்ஙனம், குடியிருந்தவனுக்கு வீடு உரிமை ஆனாற்போலவும், கடன் வாங்கியவனுக்கு முதல் உரிமையானாற்போலவும், யாழிருந்த இடத்தில் வீணையும், தமிழிசையிருந்த இடத்தில் பிற இசையும் உரிமை பெறலாயின.

**யாழும் வாழ்வும்**

ஒரு காலத்தில் காதலனின் கையிலிருந்து காதலிக்குக் களிப்பூட்டிய யாழ், குழந்தையின் மழலை மொழியோடு போட்டியிட்டுக்கொண்டு ஒவ்வொரு குடும்பத்திலும் நின்று நிலவிய யாழ், இவ்வுலகக் கவலையை அகற்றி மிக இனிய இசையால் உள்ளத்தை உருக்கி வானிலே மனித மனம் வட்டமிட வைத்த யாழ், கடவுள் அன்பர்களை நெகிழ்வித்துத் திருக்கோயில்களை வலம் வந்து நிலைபெற்றிருந்த யாழ் மறைந்தது. கைக்குப் பெருமையும், காட்சிக்கு அழகும், காதிற்கு இனிமையும், காதலர்க்குக் கவர்ச்சியும், அடியார்க்கு அருளும், மற்றவர்க்கு மகிழ்ச்சியும், தந்து வந்த கலைக் கருவூலமாகிய யாழ் மறைந்தது. முத்தமிழில் ஒன்றை, இசைக் கலையைத் தன்னோடு இணைத்துக் காத்து வந்த யாழ் மறைந்தது. ஆம். கடலில் முக்குளித்து எடுத்த நன்முத்து, கரையேறு முன்

கைநழுவிப் போய்விட்டது. தென்றலில் கலந்து வந்த இனிய மலர் மணம், திடீரென வீசிய புயலில் கலந்து மறைந்து விட்டது.

அருஞ்சொற்பொருள் :

ஏழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், (ச—ரி—க—ம—ப—த—நி); மூர்ச்சனை - நெட்டுயிர்ப்பு; கோடை அவ்வளி - கோடைக் காற்று; புறக்கணித்தமை - ஒதுக்கியமை; மகேந்திரப் போத்தரையன் - மகேந்திர வர்மன்; பாண் குடி - பாணர் குலம்; (புறம் - புறநானூறு).

வினாக்கள் :

1. பழந்தமிழர்கள் இசையையும் இயற்கையையும் இணைத்து வாழ்ந்தனர் என்பதை விளக்குக.

2. கலை யிழப்பு வரலாற்றில் 'யாழ் இழப்பே' பேரிழப்பு என்பதை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார் ?

3. தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி—இவைகள் தோன்றிய வரலாற்றைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

4. யாழின் இன்றியமையாமையை எழுதுக.

5. யாழின் வகைகள் யாவை ?

6. இலக்கியங்களில் யாழ் எவ்வாறு சிறப்பிக்கப் பெற்றுள்ளது ?

7. யாழ் மறைந்ததற்குரிய காரணங்களைத் தொகுத்து 15 வரிகளில் எழுதுக.

8. யாழ், வாழ்வில் இடம் பெற்றிருந்ததை ஆசிரியர் எவ்வாறு கூறுகிறார் ?

# 10. சிந்தையள்ளும் சீரு

திரு சி. நயினர் முகம்மது, எம். ஏ.

## உமறுப் புலவரின் பரம்பரை

சீருப்புராணம் இசுலாம் கண்ட இன்பத் தமிழ்க் காப்பியமாகும். சீருப்புராணம் இயற்றிய **உமறுப் புலவர்** நபிநாயகமவர்களின் அன்பைப்பெற்ற பெரியாரின் மரபிலே தோன்றியவர். **செய்கு முகம்மதலி** எனும் பெரியார், இவரின் தந்தையாவர். தமிழகத்தே வணிகம் குறித்து அரேபியாவிலிருந்து வந்த பரம்பரையைச் சேர்ந்தவர். அத்தர் போன்ற மணப் பொருள்களை மன்னர்க்கும் மற்றோர்க்கும் தந்து மணம் பரப்பியவர். இவருடைய பிள்ளையும் கவிதை மணம் பரப்பும் கவிஞராக விளங்கினர்.

## எட்டையபுர மன்னர்

முடியுடை மூவேந்தரும் குறுநில மன்னரும் போற்றி வளர்த்த தமிழுக்கு ஆங்கில ஆட்சியிலே அரசின் ஆதரவு இல்லை. என்றாலும், பாளையப்பட்டைப் புரந்த பாளையக்காரர்களும் பெருநிலக்கிழாரும் தமிழ் வளர்க்கும் பணியில் தலைப் பட்டார்கள். அவர்களுள் எட்டையபுரத்து மன்னர்களும் முன் நின்றனர்.

> "சொன்னலமும் பொருணலமும் சுவைகண்டு
> சுவைகண்டு துய்த்துத் துய்த்துக்
> கன்னலிலே சுவையறியுங் குழந்தைகள்போல்
> தமிழ்ச்சுவை........."

தேர்ந்தார்கள்.

## கடிகைமுத்துப் புலவர்

இவர்தம் அவைக்களப் புலவராகக் **கடிகைமுத்துப் புலவர்** விளங்கினர். கவிதைத் தேன் பாய்ச்சி எட்டப்பனைக் களிப்பில் திளைக்கச் செய்து வந்தார். கவிமணங் கமழும் கடிகைமுத்துப் புலவரும் நறுமணப் பொருள் வணிகர் சேகு முதலியாரும் அன்பால் பிணைக்கப் பெற்ற நண்பராயினர். வணிகரின் மகன்

உமறு அழகிய உருவும் அறிவின் செறிவும் இளமையின் வளமையும் இனிய இயல்பும் அமைந்த அருமை இளைஞர். இளைஞரின் தோற்றப் பொலிவால் கவரப்பெற்ற புலவர், சுடர்வீசும் மணியாக ஒளியேற்றுவதற்குரிய வயிரமொன்று கிடைத்ததெனக் கருதினார். பட்டை தீட்டும் பணியைத் தொடங்க முற்பட்டார். உமறின் கலைப் பயிற்சியைத் தாமே மேற்கொண்டார். இதுகண்ட வணிகர் பெரிதும் மகிழ்ந்தார்.

**உமறு கல்வி கற்றல்**

உமறு 'இருவென இருந்து சொல்லெனச் சொல்லி... செவி வாயாக நெஞ்சு களனாக'த் தமிழமுது உண்டார். தமிழ் இலக்கிய இலக்கணக் கடல் நீந்தி ஒரு கரையும் கண்டார். இளமையிலேயே புலமையினை வளமுறப் பெற்றார்.

**புலமை வெற்றி**

பெரும் புகழ்பெற்ற அருஞ் சான்றோரின் வாழ்விலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளே வாழ்வின் திருப்பங்களாக அமைந்துள்ளன. பொன் சுட்டால்தானே சுடர்வீசும்! சோதனைகள் வந்துற்றபோதே, சான்றோர்தம் புகழும் பரவுகிறது! **வாலைவாருதி** என்னும் வடநாட்டுப் புலவனொருவன் புலமைப் போர் செய்து புகழை நாட்டிவந்தான். எட்டையபுரத்திற்கும் வந்து வாது செய்ய முற்பட்டான். கடிகைமுத்துப் புலவர் வாலைவாருதியோடு வாது செய்ய வேண்டுமென மன்னரும் உரைத்து விட்டார். மந்திரமும் தந்திரமும் கொண்டு புலவர் பலரை வென்று வந்த வாலைவாருதியோடு வாது செய்ய வேண்டிய நிலை புலவருக்கு நேர்ந்தது; உடல் நிலையும் குலைந்திருந்தது. குறிப்பிட்ட காலமும் வந்தது. கடிகைமுத்துப் புலவர் புலமைப் போரில் கலந்துகொள்ள இயலாமைக்குப் பெரிதும் வருந்தினார்; கவலையின் உருவாக இருந்தார். ஆசிரியரின் கவலையைக் கண்ட இளம் மாணவர் அவைக்களம் சென்று அரியேறுபோல வாலைவாருதியை வென்று வெற்றி முரசு கொட்டி அனைவரையும் வியப்புக்கடலில் மூழ்கச் செய்தார். அன்றுமுதல் ஆசிரியரின் ஆசிபெற்று அவைக் களப்புலவராக அமர்ந்து அரசவையின் அன்பைக் கவர்ந்தார். கவிதையமுதை எட்டப்பனுக்கு நாள்தோறும் வழங்கி வந்தார்,

### சீருப்புராணம் இயற்றுதல்

**வள்ளல் சீதக்காதி,** நபிநாயகத்தின் வரலாற்றைக் காப்பிய மாக வடித்துத் தருகின்ற கவிஞரைத் தேடிக்கொண்டிருந்தார். உமறுவின் உயரிய புலமையைக் கண்டு வள்ளல் உள்ளம் மகிழ்ந்தார். கவிஞரை அழைத்துக் காப்பியம் பாடச் செய்தார். அந்தோ! புலவரையும் இரவலரையும் ஏங்க விட்டுச் சீதக்காதி இறுதி எய்திவிட்டார். மண்ணுலகில் மாரியென வாரி வழங்கிய வள்ளல் விண்ணகத்தில் வண்மை செய்யச் சென்றனர் போலும்! கதிரவனைப் பிரிந்து, காரிருளில் சிக்கிய நிலமடந்தை போல் துன்புற்றார் புலவர். நிலமகளை விழுங்கி நிற்கும் பேரிருளைத் தண்ணிலவு வீசிடும் வெண்ணிலா அகற்றிவிடுமல்லவா? புரவலரை இழந்து புலம்பி நின்ற புலவருக்கு அஞ்சற்க என்று அபயக்குரல் எழுப்பினார் **அபுல் காசிம்.** வள்ளல் அபுல் காசிமின் பெருந் துணையால் அருந்தமிழ்க் காப்பியத்தைக் கவிஞர் இயற்றினார். புரவலரின் பெருங் கருணையால் பரங்கிப்பேட்டையில் கவிஞர் காப்பியத்தை அரங்கேற்றினார்.

### சீருவின் சிறப்பியல்பு

சீருப் புராணம் என்பது சீரு, புராணம் என இரு சொற் களாக விரியும். சீரு என்னும் சொல் அரபிச் சொல்லாகும். வரலாறு என்பது இதன் பொருளாகும். புராணம் என்றால் பழைய வரலாறு என்று பொருள். ஆகவே, இத்தொடர் நபிநாயகத்தின் வரலாறு என்ற பொருளைக் குறிக்கும். சீரு என்பது ஜீராவின் திரிபு எனக் கொண்டோமாயின் பாகென இனித்திடும் பாடல்கள் பயின்றிடும் காப்பியமெனப் பொருள் படும். இதனைத் தமிழ்ச் சொல்லாகக் கொண்டால் சீர் + ஆ என்றும் விரியும். சீர் ஆ! என்று பிரிந்து வியப்புணர்ச்சி யைப் பெருக்குகிறது. ஆ! எவ்வளவு சிறப்புடைத்து இது! என வியக்கத்தகும் இலக்கியப் படைப்பே, இக்காப்பியம்.

### காப்பியம் தொடங்கும் மரபு

பாட்டோ காப்பியமோ மங்கலச் சொல்லால் தொடங்கப் பெறுதல் தமிழ் மரபாகும். இந்நூல் திரு என்னும் சொல்லை

முதலாகக் கொண்டுள்ள தனிச் சிறப்பைப் பெறுகிறது. திரு எனும் சொல் அழகு, செல்வம், கண்டாரைக் கவர்ந்திடும் இயல்பு எனும் பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. உமறு பயந்த உயர் காப்பியம் 'திருவினும் திருவாய்' எனத் தொடங்கிப் பீடுநடை போடுகிறது.

### தமிழ்ப் பண்பு

இது பிறமொழிப் பெயரினைக் கொண்டிருந்தாலும் தன்மையில் தமிழ்ப் பண்பையே கொண்டிருக்கின்றது. அரேபியா பாலைவனத்தைப்பற்றி நாட்டுப் படலத்தே பாடவந்த புலவர், தமிழகத்தின் சோலையையே கூறுகின்றனர். ஈச்சமரமும், சைத்தூன் மரமும் பரவலாகக் கொண்ட மணற் பரப்பில், தமிழகத்தே நிறைந்துள்ள அகிலும் அசோகும், சண்பகமும் சந்தனமும், வேங்கையும் கோங்கும், குங்குமமும் குறிஞ்சியும் செழித்து வளர்ந்திருக்கும் காட்சியைக் காட்டுகிறார். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய ஐந்திணை நிலங்களும் அமைந்துள்ளன என்றும் கூறுகின்றார். அரேபியாவைப் பற்றிப் பாடவந்த புலவர், தமிழ் நாட்டையே காட்டிவிட்டார் என்பது மட்டுமன்றி அங்குள்ள பண்பாட்டிலே பழக்க வழக்கங்களிலே தமிழ் மணங் கமழ்ந்திடவும் செய்துவிட்டார்.

### நபிகள் தோற்றம்

காப்பியமெனும் கன்னிக்குத் தன்னேரிலாத் தலைவன் வேண்டும். இவ்வருங்காப்பியத்தின் தலைவர், நபிநாயகம் ஆவார். இவர் அரேபிய நாட்டிலே அப்துல்லா என்பார்க்கும் ஆமினா அம்மையார்க்கும் ஒரே மகனாகத் தோன்றினார். இவர் பிறப்பின் சிறப்பைக் கூறவந்த கவிஞர்,

நெறிநிலை திரியா மருண்மதம் மிகுந்து
நெடுநிலம் எங்கணும் பரந்து
துறவறம் தவறி இல்லறம் மடிந்து
சுடரிலா மணியது போலக்
குறைபடுங் காலம் இருளெனுங் குபிரின்
குலமறுத் தறநெறி விளக்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல
முகம்மது நபிபிறந் தனரே!

என்று பாடிக் கவிரசம் தந்து பரவசமடைகிறார்.

அறம் தவறி மறம் தழுவி அழிவிலே வீழ்ந்து மக்கள் துன்புறுகின்ற காலத்திலேதான் சீர்திருத்தம் தேவைப் படுகிறது. சீர் கெட்டுச் சிதைவுற்ற மக்களைச் சீர்திருத்தவே சீர்திருத்தவாதிகள் தோன்றுவார்கள்; சிறந்து வாழ வழி வகுப்பார்கள். ஒரு சீர்திருத்தவாதி தோன்றியுள்ளார் என்றால் மூன்று கருத்துக்கள் முன்னிற்கும். அவையாவன : அவர் தோன்றிய காலத்து மக்களின் நிலை, அந்நிலைக்குரிய காரணம், அவர் பிறப்பால் அமைந்த சிறப்பு. இவ்வொரு பாடலிலே இம்மூன்று கருத்துக்களும் ஒருங்கே பொருந்தியுள்ளன.

நெடுநிலமெங்கும் நெறிநிலை திரிந்திருந்தது; மருள் மிகுந்த மதங்கள் மலிந்திருந்தன; துறவறம் தவறியிருந்தது; இல்லறமும் கெட்டிருந்தது; இத்துன்பநிலைக்குக் காரணம் தூய கடவுள் வணக்கத்தை விட்டுப் பிறவற்றை வழிபட்டு வந்தார்கள்; உலகைக் கவ்வியிருக்கும் இருட்கூட்டம் முழுமதி கண்டதும் மறைந்துவிடும்; அதுபோல இவ்வுலகைக் கவ்வி யிருந்த குபிரெனும் இருட்கூட்டம் அகன்றிட முகம்மது நபி பிறந்தனர் என்று கூறுகின்றார். ஆனால், நபி நாயகத்திற்கு முழுமதியை உவமை கூறும்போது கவிஞர் மிக நுட்பமாகச் சொற்களை அமைக்கின்றார். மதியென்று மட்டும் கூறாது கலையெலாம் நிரம்பிய முழுமதியென்று சொல்லுகின்றார். மேலும், முழுமதியிடத்துக் களங்கம் உண்டு. 'முழுமதிபோல்' என்று மட்டும் கூறிவிட்டால் மனிதப் புனிதராய நபிநாயகத் திடமும் களங்கமிருப்பதாகக் கருதப்படும். எனவே எச்சரிக்கையாக 'மறுவிலா தெழுந்த முழுமதிபோல, முகம்மது நபி பிறந்தனரே' என்று கூறிய நயம் இன்பம் பயப்பதாகும். இதன் மூலம் நாயகத்தின் பிறப்பால் நானிலம் சிறப்படைந்தது என விளைவையும் கூறிவிடுகின்றார்.

**கற்பனை வளம்**

பொருளே உயிராகவும் சொல்லே உடலாகவும் கொண்ட கவிதைக் காரிகைக்குக் கற்பனையே நல்லுடையாக அமை கின்றது. கற்பனையற்ற கவிதை உடையற்ற பெண் போன்றே வனப்பற்றிருக்கும். கவிதைக் கன்னிக்குக் கண்ணைக் கவரும் வண்ண உடைகளை உடுத்தியுடுத்திக் களிக்கின்றார் கவிஞர்.

நாட்டுப் படலத்திலே ஒரு பாடல். மழை சோவென்று பெய்தது; ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. ஏரி, குளம் போன்ற நீர்நிலைகள் நிரம்பிவிட்டன; தடாகத்தே மலர்ந்துள்ள தாமரையும் குவளையும் கருத்தைக் கவர்கின்றன; கன்னியர் தண்ணீரில் மூழ்கிக் குளிக்கின்றனர். இப்பின்னணியிலே— இதோ, ஒரு பெண்! நாவல் மரம் கனிந்து குலுங்குகின்றது; அவள் நாவில் எச்சில் ஊறுகிறது; கனியுதிர்க்க மரத்திலே கல் எறிகிருள்; கனிகள் உதிர்ந்தன; கனியைச் சுவைக்கும் வேட்கையினுல் கனியொன்றைக் கையில் எடுத்தாள்; பறந்தது அக்கனி; ஆம்! இறகை விரித்து இன்ப கீதம் இசைத்துப் பறந்துவிட்டது அவள் கருதி எடுத்த கனி; வியப்பாக இருக்கிறதல்லவா? ஆனுல், கனி பறக்கவில்லை; கனி போன்ற கரிய வண்டே அது; துணுக்குற்ருள்; கையை உதறினுள்; மெய் பதறினுள்; நெஞ்சம் பதைபதைத்து நின்ருள்; தரையில் சிந்திக் கிடக்கும் சுவை மலிந்த நாவற் கனிகளைத் தொட்டாளில்லை; காரணம் மருட்சி தந்திடும் மதுகரங்களோ என்ற கலக்கந்தான். இதைச் சொல்லோவிய மாகத் தீட்டிக் களிக்கின்ருர் கவிஞர்.

மறிந்து தூங்கிய நாவலின்
கனியையோர் மங்கை
யெறிந்து பார்மது கரத்தினைக்
கரத்தினு லெடுப்பப்
பறிந்து போதலிற் றுணிக்கின்கை
யுதறிமெய் பதறிச்
செறிந்து சூழ்தரச் சொரிந்தமைக்
கனியையுந் தீண்டாள்.

இது போன்றே எழில் மலராக, இனிய கனியாக, இன்பச் சுனையாகப் பல பாடல்கள் உள்ளன, இக்காப்பியச் சோலையிலே.

**அருஞ்சொற்பொருள் :**

துய்த்து-நுகர்ந்து; கன்னல்-கரும்பு; அவை-சபை; களன் ஆக - இடமாக; அபயக்குரல்—காக்கும் சொல்; கவின் ஆர்—அழகு நிறைந்த; மருள்—மயக்கம்; குபிரின் குலம்-இருள் என்னும் கூட்டம்; களங்கம்—

கறை, குற்றம்; நானிலம்–உலகம்; வனப்பு–அழகு; சுவைமலிந்த – சுவை நிறைந்த; மருட்சி - மயக்கம்; மதுகரம் – வண்டு; மறிந்து தூங்கிய – நிறைந்து தொங்கிய; கரம் – கை.

**வினக்கள் :**

1. உமறுப் புலவரின் பரம்பரை எத்தகையது?

2. தமிழ் வளர்த்த மன்னர்களைப்பற்றிக் குறிப்பிடுக.

3. கடிகை முத்துப் புலவரைப்பற்றியும், அவரிடம் உமறு கல்வி பயின்ற முறையைப் பற்றியும் எழுதுக.

4. உமறுப் புலவரின் புலமை வெற்றியை எழுதுக.

5. உமறுப் புலவர் சீறாப் புராணம் எழுதி முடித்ததை எழுதுக.

6. சீறு என்பதின் சிறப்பியல்பு யாது?

7. காப்பியத் தொடக்கத்தின் மரபு யாது?

8. சீறாப்புராணத்தில் தமிழ்ப்பண்பே உள்ளமையைக் குறிப்பிடுக.

9. நபிகள் தோன்றிய வரலாற்றைப் பதினைந்து வரிகளில் எழுது.

10. உமறுப் புலவரின் கற்பனை வளத்தைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

# 11. அணுவின் ஆற்றல்

திரு. பெ. தங்கராசன், எம். ஏ.

அணு மிகவும் சிறியது; ஆனல் அதன் ஆற்றலோ அளவிட முடியாதது. அணுவைப் பிளக்கப் பூதம் வெளிப் பட்டது என்று வேடிக்கையாகக் கூறுவதுண்டு. இந்த அணு எத்தகையது, அதன் ஆற்றல் எத்தகையது என்று பார்ப்போம். இவ்வுலகின்கண்ணுள்ள எல்லாப் பொருள் களையும் 92 தனிப் பொருள்களாக (Elements) அடக்கி விடலாமென்றும், தனிப்பொருள்களை முறைப்படி பலவாருகச் சேர்த்து எப்பொருளையும் பெறலாமென்றும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தார்கள். தனிப் பொருள்கள் அணுக்களால் ஆக்கப்பட்டனவென்றும், இவ்வணுக்கள் பிரிக்கப்பட முடியாதவையென்றும் நெடுங்காலமாகக் கருதப்பட்டது. அணு பிளக்க இயலாதென்று கிரேக்க விஞ்ஞானி டெமாக்ரிடிஸ் என்பவர் சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்தார். 1810ஆம் ஆண்டில் டால்டன் என்ற விஞ்ஞானி எந்தத் தனிப் பொருளையும் பகுத்துக்கொண்டே சென்ருல் இறுதியில் பகுக்க முடியாத ஒரு சிறு துகள் கிடைக்குமென்றும், அத்துகளே அணு என்று விளக்கம் தந்தார். அணுக்களின் அமைப்புப்பற்றி விஞ்ஞானிகள் பலர் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தினர்கள்.

1908ஆம் ஆண்டு லார்டு ருதர்போர்டு என்னும் ஒப்பற்ற விஞ்ஞானி அணுவைப் பற்றிய சில உண்மைகளை அறிவித்தார். அணு, பிளக்க முடியாத பொருள் அன்று என்றும், அது புரோட்டான் (Proton) எலெக்ட்ரான் (Electron) என்ற பகுதிகளால் ஆக்கப்பட்டதென்றும் கூறினர். அணுவின் மத்தியில் சில புரோட்டான்களும் எலெக்ட்ரான்களுமாகச் சேர்ந்து, நியூகிளியஸ் (Nucleus) என்ற உட்கரு தங்கியிருக்க, அதைச் சுற்றிப் பல எலெக்ட் ரான்கள் சுற்றிக் கொண்டேயிருக்கின்றன. சூரியனை மையமாகக்கொண்டு கிரகங்கள் யாவும் எவ்வாறு சுற்றி

வருகின்றனவோ, அதே மாதிரி மத்தியிலுள்ள உட்கருவைச் சுற்றி எலெக்ட்ரான்கள் சுற்றுகின்றன. எலெக்ட்ரான்கள் எதிர்முக (Negative) மின்சாரமேறிய பகுதிகளாகும். மத்திய கரு, நேர்முக (Positive) மின்சாரமேறிய பகுதியாகும். சுற்றிவரும் எலெக்ட்ரான்களின் எண்ணிக்கையையும், மத்தியிலுள்ள கருவையும் பொறுத்துத் தனிப் பொருளின் தன்மை, எடை முதலியன மாறுபடுகின்றது என்று அணுவைப் பற்றிப் புதிய கோட்பாட்டை ருதர்போர்டு உலகுக்குத் தெரிவித்தார். இந்த அணுக் கருவில் ஏராளமான ஆற்றல் கட்டுண்டிருப்பதாகவும், அணுக் கருவைப் பிளந்து மாபெரும் ஆற்றலை வெளிப்படுத்தக்கூடுமென்றும் கூறினார். எல்லா அணுக்களும் தங்களின் கருக்களில் பேராற்றலைத் தேக்கி வைத்திருக்கின்றன. சில அணுக்கள் தங்கள் ஆற்றலைத் தாமாகவே வெளியிட்டுக் கொண்டேயிருக்கின்றன. யுரேனியம், ரேடியம், தோரியம் முதலிய பொருள்களிலிருந்து இடைவிடாது ஆற்றல் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

1896ஆம் ஆண்டு பெக்குரல் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி யுரேனியக் கூட்டுப் பொருள்களின்மேல் சோதனை செய்தார். இருளிலும் கூட அப்பொருள்கள் ஒளி வீசுவதைக் கண்டார். புகைப்படத் தட்டுக்கள் யுரேனியத்திலிருந்து வெளிப்படும் கதிர்களால் தாக்கப்படுவதைக் கண்டார். இக் கதிர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை யென்றும் கண்டார். யுரேனியத்திலிருந்து வெளிப்பட்ட கதிர்களை ஆல்பா (Alpha) பீட்டா (Beta), காமா (Gamma)க்கதிர்கள் என்று அழைத்தார். ஆல்பாக் கதிர்கள் நேர்முக மின்சாரம் கொண்டவை; கனமிகுந்தவை. அவைகளின் வேகம் ஒரு செகண்டுக்கு 32,200 கிலோ மீட்டர்கள். பீட்டாக் கதிர்கள் எதிர்முக மின்சாரங்கொண்டவை. ஒளியைப்போல் செகண்டுக்கு சுமார் 2,63,340 கிலோ மீட்டர்கள் செல்லும் வேகமுடையன. இவைகளுக்குப் பொருள்களின் வழியாக ஊடுருவிச் செல்லும் சக்தி மிக அதிகம். காமாக் கதிர்கள் மின்சார மற்றவை. மிகவும் சக்தி வாய்ந்தவை. எக்ஸ் கதிர்களின் (X-rays) தன்மையுடையவை.

யுரேனியத் தாதுக்களை ஆராய்ந்து கொண்டிருந்த பேராசிரியர் குயூரியும், அவர் மனைவி குயூரி அம்மையாரும் யுரேனியத்தைவிடப் பல்லாயிரமடங்கு ஆற்றல் வாய்ந்த கதிர்களைக் கொண்ட ரேடியம் என்னும் தனிப் பொருளை 1910ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்கள். ஒரு ரேடியம் அணுக்கருவில் 226 புரோட்டான்களும் 138 எலெக்ட்ரான்களுமிருக்கின்றன வென்றும், அதைச்சுற்றி 88 எலெக்ட்ரான்கள் சுற்றுகின்றன வென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. ரேடியம் அணுக்கள் இடையருது ஆற்றல் மிக்க கதிர்களை வெளியிட்டுக்கொண்டேயிருக்கின்றன. இக்கதிர்கள் பல பொருள்களைத் துளைத்துச் செல்லக்கூடியவை. எனவே விஞ்ஞானிகளில் பலர் இத்தகைய கதிர்களைக்கொண்டு அணுவைப் பிளக்க முயன்றனர்.

இக்கதிர்களைவிட மிகவும் ஆற்றல் படைத்த நியூட்ரான் (Neutran) என்னும் நடுவணுவை 1932ஆம் ஆண்டு சாட்விக் என்பவர் கண்டுபிடித்தார். இதில் மின்சாரமில்லை. இதன் எடை ஏறக்குறைய புரோட்டானின் எடைக்குச் சமம். அதாவது எலெக்ட்ரானைப்போல 1840 மடங்கு அதிக எடை உள்ளது. அணுவிலுள்ள புரோட்டான் நியூட்ரான் ஆகியவைகளின் எடையே அணுவின் மொத்த எடையாகும். நீரகத்தின் (Hydrogen) கருவில் ஒரே ஒரு புரோட்டான்தானிருக்கிறது. நியூட்ரான் இல்லை. ஹீலியத்தில் (Helium) இரண்டு புரோட்டான்களும், இரண்டு நியூட்ரான்களுமிருக்கின்றன. சாதாரண யுரேனியத்தில் 92 புரோட்டான்களும், 146 நியூட்ரான்களுமிருக்கின்றன. இதை யுரேனியம் 238 என்று அழைக்கிறோம். யுரேனியம் 235இல் 92 புரோட்டான்களும் 143 நியூட்ரான்களுமிருக்கின்றன. சாட்விக் கண்டுபிடித்த நியூட்ரானும் சைக்ளோட்ரான் என்னும் கருவியும் அணுவைப் பிளக்க உதவுகின்றன. ஜோலியோ, பெர்மி என்ற விஞ்ஞானிகளிருவரும் நியூட்ரானைக்கொண்டு யுரேனிய அணுக்களைச் சிதைத்து அவற்றை மிகுந்த கதிரியக்கமுள்ள அணுக்களாக மாற்றினார்கள். இதையடுத்து ஆட்டோஹான், ஸ்ட்ராஸ்மன் என்னும் விஞ்ஞானிகள் யுரேனிய அணுக்களின் சிதைவால் ஏராளமான ஆற்றலைப் பெறலாமென்று காட்டி

ஞர்கள். இவ்வாறு அணுவைப் பிளந்து காட்டிய பின்னர் விஞ்ஞானிகள் உலகின் வரலாற்றை அணுவின் ஆற்றலினுல் மாற்றியமைக்கலாமென்று எண்ண முற்பட்டனர்.

ஆட்டோபிரிஷ் என்பவரும், விஸ்மெயிட்னர் என்ற அம்மையாரும் யுரேனிய அணுவினைப் பிளப்பதால், மிகுந்த ஆற்றல் வெளிப்படுகிறதென்றும், 1 கிராம் யுரேனியத்தைப் பிளப்பதில் 200,000,000 மின்னணு வோல்ட் வெளிப்படுகிற தென்றும் கூறினுர்கள். யுரேனியத்தை நியூட்ரான் உதவியால் தாக்கிப் பிளக்கும்போது மேலும் இரண்டு நியூட்ரான்கள் தோன்றி, அவைகள் இரண்டு அணுக்கருக்களைப் பிளக்க, இரண்டு நியூட்ரான்கள் ஒவ்வொரு பிளப்பிலும் வெளிப் படுகின்றன. இத்தகைய விளைவு, சங்கிலித் தொடர் விளைவு எனப்படும். இவ்வாறு யுரேனிய அணு பிளக்கப்படும் பொழுது பேராற்றல் வெளிப்படுகிறது.

இத்தகைய பேராற்றலினுல் அரிய பெரிய காரியங்கள் நடைபெறுவதற்கு ஏதுவுண்டு. நாட்டு மக்களின் வாழ்க்கை வசதிகள், பொருளாதார முன்னேற்றம் முதலியன ஏற்படுவ தற்கு உற்பத்திப் பெருக்கம் அவசியம். உற்பத்தி பெருக வேண்டுமாயின் நாட்டில் விளைச்சல் அதிகப்படுத்தப்பட வேண்டும். தொழில்கள் வளம்பெற்றுப் பெருகவேண்டும். தொழிற் பெருக்கம் ஏற்படுவதற்கு அணுவாற்றல் மிகுந்த அளவில் உதவி செய்யும். அணுவின் ஆற்றலினுல் பிரயாணிக் கப்பல்கள், வானவூர்திகள், இரயில்கள், மோட்டார்கள், விண்வெளி இராக்கட்டுகள் முதலியவைகளை இயக்க விஞ்ஞானிகள் தீவிரமாக முயன்று வருகின்றனர். இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் பல நாடுகளில் அணு ஆலைகளை ஏற்படுத்தி ஏராளமான ஆற்றலைப் பெற்று மக்கள் தொழில் துறைகளில் முன்னேறி வருகின்றனர்.

நம் இந்தியாவிலும் சுமார் 3 கோடி ரூபாய் செலவில் டிராம்பேயில் ஓர் அணுநிலையம் நிறுவப்பெற்றுள்ளது. அப்சாரா, ஜெர்லினு அணுத் திட்டங்களும் நிறைவேறி வருகின்றன. நமது நாட்டிலும் அணு ஆற்றல் குழு அமைக்கப்

பெற்றுச் செயற்பட்டு வருகிறது. அணுவாற்றல் குறைந்த செலவில் மக்களுக்குக் கிடைக்க நம் அரசாங்கம் முயன்று வருகிறது.

அணுவாற்றல் தக்காரிடம் ஒப்படைக்கப்பட்டால் பல நன்மைகள் ஏற்படும். தகுதியில்லாத மக்களிடம் அணு வாற்றல் சிக்கினுல் உலகத்திற்கே மாபெருங்கேடாக அமையும். இரண்டாவது உலகப்போரில் ஹிரோசிமா, நாகசாகி முதலிய ஜப்பானிய நகரங்கள் அழிவதற்கு அணுக் குண்டின் ஆற்றலே காரணம். எனவே அணுவின் ஆற்றலே ஆக்க வேலைகளுக்கே பயன்படுமாறு செய்வது நன்மக்களின் கடமையாகும். அணுவின் ஆற்றலைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, நன்மை பயக்கக்கூடிய முறையில் பயன் படுத்துவோமாக.

**விஞக்கள் :**

1. அணு என்ருல் என்ன? இதனை யார் எப்பொழுது கண்டு பிடித்துக் கூறினுர்?

2. லார்டு ருதர் போர்டு என்பவர் அணுவைப் பற்றிக் கருதுவது யாது?

3. பெக்குரல் என்பார் சோதனையின் முடிவுகள் யாவை?

4. குயூரி தம்பதிகள் ஆய்ந்து கண்ட முடிவு யாது?

5. சாட்விக் என்னும் விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு யாது?

6. அணுவாற்றலை எவ்வாறு பயன்படுத்தலாம்? ஏனைய நாட்டினர் எவ்வாறு பயன்படுத்துகின்றனர்?

# 12. பொங்கல் விழா

வித்துவான் திரு. மு. அருணசலம் பிள்ளை

மக்கள் பலர் ஒருங்கு கூடி மகிழ்ந்து செய்யும் செயல்களெல்லாம் விழா என்று கூறப்பெறும். விழாக்கள் பண்டைக் காலந்தொட்டு நம் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன. அவற்றைப் பெருநாள், திருநாள், மங்கலநாள் என வழங்குதலும் உண்டு. அவ்விழாக்கள் எல்லாம் நாடாளும் அரசர் சார்பாகவும், கடவுளரோடு தொடர்பு கொண்டும், ஒவ்வொரு குடும்ப நிகழ்ச்சிகள் குறித்தும், இயற்கையாக நிகழும் பருவ நிலைகளை ஒட்டியும் பெரும்பாலும் நிகழ்வனவாம்.

## இயற்கை விழா

இயற்கையாக நிகழும் பருவ நிலைகளை ஒட்டி நடைபெறும் விழாக்களுட் சிறந்தது பொங்கல் விழாவாகும். இது தைத் திங்கள் முதல் நாளில் நாடு முழுதும் இக்காலத்திற் கொண்டாடப்பெறுகின்றது. மக்கள் வீடுகளைத் தீற்றியும் திருத்தியும் புதுக்குகின்றனர்; புத்தாடையுடுக்கின்றனர்; புதிதாக விளைந்து வந்த செந்நெல் அரிசியும் கன்னற்கட்டியும் சிறுபருப்பும் நறுநெய்யும் தீம்பாலும் பிறவும் சேர்த்துப் பொங்கல் செய்கின்றனர். ஞாயிற்று மண்டலத்திற்குப் படைத்துப் பிறர்க்கும் வழங்கித் தாமும் உண்டு களிக்கின்றனர். இவற்றை நோக்கும்போது புதிதாகக் கிடைத்த அரிசியைப் பொங்கல் செய்து உண்பதே பொங்கல் விழா என்ற எண்ணம் நமக்கு உண்டாகின்றது. இவ்விழா நெடுங்காலமாக இந்நாட்டில் நடைபெற்று வரும் ஒரு பெருவிழா என்ற நினைவும் உண்டாகின்றது. ஆயினும், பொங்கல் என்னும் இத்தூய தமிழ்ச் சொல் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளதா? உள்ளதாயின் எப்பொருளில் எடுத்தாளப் பெற்றுள்ளது? இப்பொங்கல் விழா பண்டைத் தமிழகத்திற் கொண்டாடப் பெற்றதா? என ஆராய்ந்து உண்மை காண முயலுதல் நன்றாகும். இக்

கட்டுரையின் நோக்கமும் அதுவேயாம். பொங்கல் என்பது முன்பனிப் பருவத்தின் இடைக்காலத்தில் தோன்றும் இயற்கையை ஒட்டி நிகழ்வதொன்று. அஃது இன்னதென அறிய வேண்டுமாயின் அதற்கு முன்னுள்ள பருவங்களையும் அவற்றின் இயல்புகளையும் ஓரளவு தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும்.

## ஆறு பருவங்கள்

காலம் என்பது எல்லையின்றி விரிந்து, பரந்து நிற்பதோர் அருவப் பொருளாயினும் அக்காலத்தின் வயப்பட்டு ஒழுகும் மக்கள் தங்கள் வாழ்க்கையை வளமுற நடத்துதற் பொருட்டு இயற்கையிற் காணப்படும் ஞாயிறு திங்கள், நாண்மீன் முதலியவற்றின் இயக்கங்களைக் கருவியாகக் கொண்டு, கண்ணிமைப் பொழுதினும் நுண்ணிய பல காலக்கூறு களையும், நாழிகை, நாள், திங்கள், யாண்டு, ஊழியென எண்ணப்படும் மிகப் பெரிய காலக்கூறுகளையும் வரை யறுத்துக்கொண்டனர். அவற்றில் ஞாயிறு தனக்குரிய சிங்கவோரைமுதல் திங்களுக்குரிய கடகவோரையீறாக உள்ள பன்னிரண்டு ஓரைகளிலும் இயங்கிவரும் கால எல்லையை ஓராண்டு என்றனர். ஓராண்டின் உட்பிரிவாகிய பெரும்பொழுதுகளையும், ஒரு நாளின் உட்பிரிவாகிய சிறு பொழுதுகளையும் ஐந்திணைகளுக்கும் உரிமைப்படுத்துக் கூற வந்த ஆசிரியர் தொல்காப்பியர் ''காரும் மாலையும் முல்லை'' எனவும் ''முல்லை முதலாச் சொல்லிய முறை'' எனவும் கார் காலத்தையும் முல்லைத் திணையையும் முதலிற் கூறியிருத்தலால் கார்காலத்தின் தொடக்கமாகிய ஆவணித் திங்களே ஆண்டின் தொடக்கம் எனக் கொள்ளுதல் பொருந்தும். தென் பாண்டி நாட்டிலும் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த பகுதிகளிலும் ஆவணிமுதல் ஆடியீறாக ஓராண்டு கணக்கிடப்பட்டு வருதலும் ஈண்டுக் கருதத் தக்கது.

ஆவணி முதலாகக் கொண்ட ஓராண்டுக் காலம் மழைக் காலம், பனிக்காலம், வெயிற்காலம் என ஒவ்வொன்றும் நந்நான்கு திங்களைக்கொண்ட மூன்று பருவங்களாக முன்பு

பகுக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒவ்வொன்றிலும் சிறுசிறு வேறுபாடுகளிருத்தல் கண்டு அவற்றை ஆறு பருவங்களாகப் பிரித்தனர். மழை பெய்யத் தொடங்குதலும், பெருமழை பெய்யினும் இடையிட்டுப் பெய்தலும் ஆகிய தன்மை பற்றி ஆவணி, புரட்டாசியாகிய இரு திங்களைக் கார்காலம் என்றும், அடுத்துள்ள ஐப்பசி, கார்த்திகையாகிய இரு திங்களில் இடையறாது மழை பெய்தலும், குளிர் மிகுதியாக இருத்தலும் பற்றி அவற்றைக் குளிர்காலம் என்றும் மழைக் காலத்தை இரு கூறுக்கினர். மார்கழி முதலிய நான்கு திங்களும் பனிக்காலமாயினும் ஞாயிறு படும் அந்தி நேரத்தில் பனி வீழ்தலும் இரவின் இறுதி நேரத்தில் பனிவீழ்தலும் ஆகிய வேறுபாடிருத்தல் கண்டு முன்னைய இரண்டு திங்களை முன்பனிக்காலமென்றும், பின்னைய இரு திங்களைப் பின்பனிக் காலமென்றும் பிரித்தனர். இவ்வாறே வெயில் வெப்பத்தின் குறைவு, மிகுதி குறித்துச் சித்திரை முதலிய நான்கு திங்கள் இளவேனில், வேனில் என இரண்டாகப் பகுக்கப்பட்டன.

இனி, பொங்கல் வருதற்கு முன்னுள்ள பருவங்களின் இயல்புகள் பண்டைக் காலத்தில் எவ்வாறிருந்தனவென்பதை அக்காலத்தில் தோன்றிய நூல்களின் வாயிலாகக் காண்போம்.

### வேனிற் பருவத்தின் இயல்புகள்

''வேனிற் காலத்து வித்திய தினைப் பயிர்கள் வெயில் வெப்பத்தால் வாடுதல் கண்ட குன்றவாணர்கள் மழை பெய்வ தற்காக மலையுறை கடவுட்குப் பலிதூவி வழிபட்டனர். வழிபாட்டின்பின் மழை மிகப் பெய்தமையால் இனி மழை வேண்டாவென மீண்டும் அக்கடவுளைப் போற்றினர். மழை நின்றமை கண்டு மகிழ்ச்சியுடையராய், விளைந்த தினைக் கதிரைக் கொய்து அடிசிலாக்கி அயின்றனர்'' என்று மலை நாட்டிலேயே தம் வாழ்நாளிற் பெரும் பகுதியைக் கழித்த கபிலர் கூறியுள்ளனர். இதனை நோக்கும்போது 'வேனிற்காலம் மழை பெய்தற்குரிய காலம் அன்றென்பதும், கடவுள் வழிபாட்டால் மழை பெய்ததென்பதும் புலனாகின்றன.

### கார்ப்பருவத்தின் இயல்புகள்

ஆவணி, புரட்டாசியாகிய கார்ப்பருவத்தில் இயல்பாகவே மழைபெய்யத் தொடங்குதலும், பெருமழை பெய்யினும் இடையிட்டுப் பெய்தலும் நிகழுமென்பது பின்வருவனவற்றால் அறியப்படுகின்றது.

''முல்லைக் கொடிகளில் கூரிய நுனியையுடைய அரும்புகள் தோன்றவும் தேற்ற, கொன்றை ஆகிய மரங்களில் பேரரும்புகள் முறுக்கவிழ்ந்து மலரவும் பழுக்கக் காய்ச்சிய இரும்பை முறுக்கி விட்டாற்போன்ற கரிய பெரிய கொம்புகளையுடைய கலைமான்கள் பரற்கற்களையுடைய பள்ளங்களில் ஓடும் நீரைப் பருகியும், வேனில் வெப்பத்தால் உண்டாய நீர் வேட்கை தணியாமையால் அப்பள்ளங்களை விட்டு விலகாமல் துள்ளித்திரியவும் காடுறை உலகம் நீரில்லாத வருத்தத்தை விட்டொழிக்கவும் மேகம் காற்றாலுந்தப்பட்டு விரைந்து விழும் துளிகளைச் சிதறி அக்காட்டினைக் கார்ப்பருவஞ் செய்தது'' என அகப்பாட்டு கூறுகின்றது. இதனால் கார் காலத்தில் இயற்கையாக மழை பெய்யத் தொடங்கும் என்பது தெரிகின்றது.

''ஞாயிற்றின் வெம்மையால் வருந்திய பெண் யானை வெள்ளத்திற் படிந்து களிற்றுடன் விளையாடவும் நிலத்திலும் வானத்திலும் நீர் நிறையவும் நாழிகை வட்டிலால் நாழிகை யறிதலின்றி ஞாயிறு உள்ள இடம் அறியப்படாமையால் உலகம் அஞ்சவும், கடல்நீரை முகந்து சூற்கொண்ட மேகம் எங்கும் பரந்து பெருமழை பெய்வதாயிற்று'' என அகநானூற்றில் நல்லந்துவனார் கூறியுள்ளார். இதனால் கார்காலம் மக்களும் மாக்களும் வரவேற்று மகிழும் வண்ணம் பெருமழை பெய்தற்கு உரிமையுடையதென்பது உணரப்படும்.

### குளிர்ப் பருவத்தின் இயல்புகள்

ஐப்பசி கார்த்திகையாகிய குளிர்காலம், விடாது மழை பெய்தலுடன் வாடைக் காற்றும் வீசும் காலமாகும். இக் குளிர்காலத்தின் இயல்பு பற்றிய சொல்லோவியத்தினைக் காண்போம்.

''ஆயர்கள் தம் ஆநிரைகளை மேடாகிய முல்லை நிலத்திலே மேயவிட்டு மிக்க குளிர் வருத்துவதால் கையை நெருப்பிலே காய்ச்சி அதனாற்பெற்ற வெப்பத்தைக் கன்னங்களிற் சேர்த்துப் பற்பறை கொட்டி நடுங்குகின்றனர். விலங்குகள் மேய்தலை மறந்து ஓடுகின்றன. மந்திகள் கூனிக் குறுகி நிற்கின்றன. மரங்களில் தங்கும் பறவைகள் வாடை தாங்கமாட்டாமல் நிலத்தில் வீழ்கின்றன. பசுக்கள் குளிர்மிகுதியால் கன்றுகளை உதைத்துத் தள்ளுகின்றன. பூந்தட்டில் வைத்துள்ள பிச்சியரும்புகள் மணங்கமழ்தலால் அந்திப்பொழுது வந்ததென்றறிந்து மகளிர் மனைகளில் விளக்கேற்றி வைத்து, நெல்லும் மலருந் தூவி இல்லுறை தெய்வத்தை வணங்குகின்றனர். மாடப் புறுக்கள் மன்றுகளிற் சென்று இரை தேடி யுண்ணுமல் கொடுங்கையைத் தாங்கும் பலகைகளில் கடுத்த கால்கள் ஆறும்படி மாறி மாறி இருக்கின்றன. பணிப்பெண்கள் சாந்தரைக்கும் அம்மியில் கத்தூரிக் கலவையை அரைக்கின்றனர். வடநாட்டார் கொண்டுவந்த சந்தனக் கல்லும் தென்றிசைச் சந்தனக் கட்டையும் பயன்படாமற் கிடக்கின்றன. மகளிர் தம் தலையிற் பூமாலை சூடாமல் மங்களமாகச் சில மலர்களையிட்டு முடிக்கின்றனர். மயிர்ச் சந்தனமாகிய விறகிலே நெருப்பை மூட்டி அதில் அகிற்கட்டையையும் கண்டசருக்கரையையுங் கூட்டிப் புகைக்கின்றனர். வேலைப்பாடமைந்த விசிறிகள் உறைகளுடன் சிலந்திநூல் சுற்றப்பட்டு முளைகளில் தூங்குகின்றன. மேல்மாடங்களில் தென்றல் வருவதற்கு அமைத்த சாளரக் கதவுகள் திறக்கப்படாமல் தாழிட்டுக் கிடக்கின்றன. கல்லென்ற ஓசையையுடைய சிறு துவலையை வாடைக்காற்று எங்கும் வீசுவதால் மக்கள் குளிர்ந்த நீரைப் பருகாமல் கொதிக்கும் நீரைப் பருகுகின்றனர். மலையுச்சியிலிருந்து வீழும் அருவிபோல் மாடத்து நிலா முற்றங்களிற் பெய்த மழைநீர் திரண்டு கூடல்வாயின் வழியே ஆரவாரத்துடன் முற்றத்தில் விழுகின்றன. இவ்வாறு காலமழை செறிந்து மலையைக் குளிர்விப்பது போன்ற கூதிர்க் காலமாய் நிலைபெற்றது'' என நக்கீரர் நெடுநல் வாடையில் வரைந்து காட்டிய சொல்லோவியத்தின் வாயிலாக அடை மழையும்.

குளிர்காற்றுங் கலந்த ஐப்பசி கார்த்திகைத் திங்களின் இயல்புகளையும் அக்காலத்து மக்களும் விலங்குகளும் பறவைகளும் அடைந்த வருத்தங்களையும் மனக்கண்ணுற் கண்டோம்.

**சங்க இலக்கியங்களும் பொங்கலும்**

இனி, அடுத்து வருவது மார்கழியும், தையும் ஆகிய முன்பனிப் பருவமாகும். பொங்கலும் அக்காலத்தேதான் வருகின்றது. அதனைப் பற்றி அறிவதற்கு அப்பொங்கல் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றுளதா ? உள்ளதாயின் எப்பொருளில் எடுத்தாளப் பெற்றுளது ? என்பவற்றை முதலிற் காண்போம்.

"...............பொங்கல் வெண்மழை
அகலிரு விசும்பில் துவலை கற்ப" (நெடுநல் 19–20)

"தைஇ நின்ற தண்பெயற் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குல்" (அகம்-24)

எனப் பல மேற்கோள்கள் பொங்கல் என்பது பற்றியும் அதன் இயல்புகள் குறித்தும் விளக்கமாகக் கூறுகின்றன.

இவற்றால், பொங்கல் என்பது பொங்கி எழுதலென்னும் தொழிலையுணர்த்தும் ஒரு பெயர்ச்சொல் என்பதும், அது மழை பெய்து ஓய்ந்த வெண்மேகத்திற்கு அடைமொழியாய்ப் புணர்க்கப்பட்டுள்ளதென்பதும், அம்மேகம் முன்பனிப் பருவத்தின் இடைக்காலமாகிய மார்கழியின் பிற்பகுதியில் தோன்றுமென்பதும், பிறவும் பெறப்பட்டன. இச்சொல் ஒரோவழித் தொழிலாகுபெயராய் வெண்மேகத்தையுணர்த்தலும் உண்டு.

இப்பொங்கல் தோன்றினால் மழை பெய்யாது என்பது மக்கள் அனுபவத்திற் கண்ட உண்மையும் நம்பிக்கையுமாகும். ஆதலின், அடைமழையாலும் குளிர் காற்றாலும் ஐப்பசித் திங்கள் முதலாக, மேகங்கள் மறைத்தலால் விசும்பைக் காணு

மலும், நீர் பரந்தொழுகலால் நிலத்தைக் காணுமலும் அல்ல லுற்று வருந்திய மக்கள் பொங்கியெழுந்த வெண்மேகத்தைக் கண்டு, பொங்கல் வந்தது பொங்கல் வந்தது என மகிழ்ந்து, இனி மழை பெய்யாதெனத் துணிந்து இடிந்தும் சிதைந்தும், கழுவாமலும் மெழுகாமலும் பலவாறு பழுதுபட்டுக் கிடந்த தத்தம் இல்லங்களைத் தீற்றியும் திருத்தியும் பூசியும் புதுக்கியும் கழுவியும் மெழுகியும் கோலஞ் செய்திருப்பர். தொழுவங் களில் அடைக்கப்பெற்றும் கட்டப்பெற்றுங் கிடந்த ஆடு மாடுகளைத் திறந்துவிட்டும், அவிழ்த்துவிட்டும் வெளியில் உலவி வரச் செய்திருப்பர். அவற்றைக் குளிப்பாட்டியும் தாம் நீராடியும் மகிழ்ந்து இருப்பர். பழைய மட்கலங்களை மாற்றிப் புதுக் கலங்களிற் பாற்சோருக்கிப் பகுத்துண்டும் இருக்கலாம். ஆனல் இது பற்றிய சிறு குறிப்பாயினும் பழந் தமிழ் நூல்களிற் காணப்படவில்லையென்பதும், பொங்க லென்னும் சொல் உணவிற்குப் பெயராக வழங்கப்படவில்லை யென்பதும் குறிப்பிடத் தக்கன.

இங்ஙனம் பண்டைக்காலத்து நிகழ்ச்சிகள் பலவற்றைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறும் சங்க இலக்கியங் களில், தைத்திங்கள் முதல் நாளில் பொங்கலிட்டனர் என்பதற்கும், பொங்கலெனும் சொல் உணவுக்குரிய பெயராக ஆளப்பட்டதற்கும் ஒரு சான்றும் அகப்படாமை வியப்பூட்டு கிறது. அதற்குக் காரணம் அக்காலத்தில் இன்றுள்ள வழக்கம் இல்லையென்பதே ஆகும். ஆயினும், ''உலகம் உவப்ப வலனேர்புதிரிதரு, பலர்புகழ் ஞாயிறு'' என்னும் திரு முருகாற்றுப்படையாலும், ''ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்'' என்னும் சிலப்பதிகார மங்கல வாழ்த்துப் பாடலாலும், ''ஆயிரங் கதிராழி ஒரு புறந்தோன்றகலத்தான்'' எனும் தொல்காப்பிய மேற்கோட் செய்யுளாலும் பிறவற்ருலும் ஞாயிற்று வாழிபாடு பண்டு தொட்டிருந்தது என்பது தெரிகிறது.

**வாழ்க வளர்க !**

காலந்தோறும் பழைய சொற்கள் மறைந்து புதிய சொற்கள் தோன்றுதலும், ஒரு பொருளை யுணர்த்தியசொல்

அப்பொருளை விட்டுப் பிறிது பொருளுணர்த்தி நிற்றலும் இயல்பாதல்போல, ஒருகாலத்தில் நடைபெற்ற வழக்க ஒழுக்கங்களிற் சில மற்றொரு காலத்தில் மறைந்து போதலும் மாறுபடுதலும் புதியன சில தோன்றுதலும் இயல்பேயாம். தைத்திங்கள் முதல்நாளில் பொங்கலிடுதலும், பொங்க லென்னுஞ் சொல் உணவை உணர்த்துதலும் பண்டைக் காலத்தில் இல்லையாயினும் அவ்விரண்டும் இன்றைய வழக்கில் இடம்பெற்று நிலைத்து விட்டன. அவற்றை மாற்றவும் மறைக்கவும் முடியாது. இப்பொங்கல் விழாவால் வீடுகள் புனிதமடைகின்றன. மஞ்சளும் இஞ்சியும் கன்னலும் கதலியும் நாட்டி மாவிலைத் தோரணங்கள் கட்டி மனையை மக்கள் அழகு செய்கின்றனர். புத்தாடையுடுத்துப் புதுக் கலங்களிற் பொங்கலிடுகின்றனர். நன்றி மறவாமைக்கு அறிகுறியாக ஞாயிற்று மண்டிலத்திற்குப் படைத்துத் தாமும் உண்டு பிறர்க்கும் வழங்கி உள்ளக் கிளர்ச்சியும் உவகையும் உறுகின்றனர். இதனை, உழவர் விழா, தமிழர் விழா, தமிழ் விழா என எப்பெயரிட்டழைப்பினும் குற்றமில்லை. குலம், மதம், கொள்கை முதலிய வேறுபாடின்றி நாடு முழுவதும் இவ் விழா கொண்டாடப் பெறுகின்றது. ஆதலின் இப்பொங்கல் விழாவை வரவேற்று வாழ்க வளர்க என வாழ்த்துவோமாக !

**அருஞ்சொற்பொருள் :**

தீற்றியும் – வண்ணம் பூசியும்; கன்னற்கட்டி – வெல்லம்; வழங்கி– கொடுத்து; அருவம் – உருவமில்லாதது; நாண் மீன் – விண் மீன்; நாழிகை – 24 மணித்துளிகள் (நிமிடம்); ஊழி – பல ஆண்டுகள் கொண்ட கால எல்லை; ஓரை – இராசி; ஞாயிறு படும் அந்தி - கதிரவன் மறையும் மாலை; முன்னைய இரண்டு திங்கள் – மார்கழி, தை; பின்னைய இரு திங்கள் – மாசி, பங்குனி; வித்திய – விதைத்த; குன்றவாணர்கள்– மலைவாழ் மக்கள்; அடிசில் – உணவு; அயின்றனர் – உண்டனர்; தேற்று – ஒருவகை மரம்; உந்தப்பட்டு–தள்ளப்பட்டு; இனிது உறையும்– இன்பமாக வாழும்; இரை – உணவு; கன்னல் - கரும்பு; கதலி–வாழை; முளை – சுவரில் அடிக்கப்படுவது.

**வினாக்கள்:**

1. இயற்கை விழாவாகிய பொங்கல் விழா எவ்வாறு கொண்டாடப்பெறுகிறது ?

2. காலத்தை எக்கருவியால், எவ்வாறு வரையறுத்தனர் ?

3. ஓர் ஆண்டை எவ்வாறு கணக்கிட்டனர் ?

4. பண்டைக் காலத்தில் எத்திங்கள் முதலாக ஓராண்டு கணக்கிடப்பெற்றது ?

5. ஓர் ஆண்டை எதன் அடிப்படையில் ஆறு பருவங்களாகப் பகுத்தனர் ?

6. வேனிற் பருவ இயல்பைக் கபிலர் எவ்வாறு கூறியுள்ளார் ?

7. கார்ப்பருவ இயல்பை அகப்பாட்டு எவ்வாறு கூறுகிறது ?

8. நல்லந்துவனார் கூறும் கருத்துக்கள் யாவை ?

9. குளிர்ப்பருவ இயல்புகளை நெடுநல்வாடை கூறும் முறையைப் பதினைந்து வரிகளில் எழுதுக.

10. சங்க காலத்தில் 'பொங்கல்' என்பதற்குப் பொருள் யாது ?

11. பொங்கி எழுந்த வெண்மேகத்தைக் கண்ட மக்கள் செய்யும் செயல்கள் யாவை ?

12. ஞாயிற்று வழிபாட்டிற்கு இலக்கியச் சான்றுகள் தருக.

13. பொங்கல் விழாவை வரவேற்று வாழ்க வளர்க என வாழ்த்தக் காரணங்கள் எவை ?

## 13. திரைப்படத்தால் விளைவது நன்மையா ? – தீமையா ?

திரு. ந. சக்திவேலு, பி. ஏ.

**செயலாளர்:** எழுத்தறிவிக்கும் இறைவர்களே, என் அன்புக்குரிய நண்பர்களே, உங்களனைவர்க்கும் முதற்கண் என் வணக்கத்தை உரித்தாக்கிக் கொள்கின்றேன். இன்று நிகழவிருக்கும் நம் மன்றத்தின் சொற்போர் அரங்கிற்கு நடுவராயிருந்து சிறப்புற நடாத்தித் தருமாறு, பேராசிரியர் திரு. நெடுமாறன், எம். ஏ., அவர்களை மாணவர் மன்றத்தின் சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.

**தலைவர் முன்னுரை:** பள்ளித் தலைவர்களே, பயிற்றுவிக்கும் ஆசிரிய நண்பர்களே, மாண்புடை மாணவர்களே, எல்லீர்க்கும் என் அன்பு கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கின்றேன். இன்று, உங்கள் சொற்போர் அரங்கிற்கு யான் நடுவராய் வீற்றிருப்பதைக் குறித்துப் பெரிதும் மகிழ் கிறேன். திரைப் படத்தால் விளைவது நன்மையா தீமையா என ஈரிருவர் எடுத்தியம்ப இருக்கின்றனர். உங்களைப் போலவே நானும் இவர்தம் சொல்லாற்றலைக் கேட்டு மகிழ விழைகின்றேன். இப்பொருள்பற்றி முதற்கண் நான் ஒன்றுங் கூறுதிருப்பதே முறை. அதனால் மாணவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன். முதலில் திரு. அறிவுடைநம்பி, திரைப் படத்தால் விளைவது நன்மையே என்று சொற்போரைத் தொடங்கி வைப்பாராக.

**அறிவுடைநம்பி:** ஒரு பாற்கோடா உயர் பெருந்தகை யாகிய நடுவர் அவர்களே, அறிவு நல்கும் ஆன்றோரே, மாற்றுக் கட்சி நண்பர்களே, அன்புத் தோழர்களே, அனைவரையும் தலை தாழ்த்தி வணங்குகின்றேன். சின்னாட் களுக்கு முன்னர் நம் பள்ளியில் காட்டப்பெற்ற படக்காட்சி யைக் காண நாம் அனைவரும் கூடியிருந்தோம். தீமையெனப் பேச முன்வந்துள்ள நண்பர்களும் அன்று முன் வரிசையில்

அமர்ந்து கண்டு களித்தமையும் குறிப்பிடத் தக்கது (கைதட்டல்). திரைப்படக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டும், உரையாடல்களையும், பாடல்களையும் செவியாரக் கேட்டும் சிந்தை களிகூரும் நிலையை அடைகின்றோம். ஆகவே, கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் ஒருசேர இன்பம் உண்டாக்குகிறது திரைப்படம் என்பதை உணர்கிறோம். பள்ளிகளில் படக்காட்சியும் ஒரு பாடப் பகுதியாகச் சேர்க்கப் பட்டிருப்பதிலிருந்தே அதனால் விளையும் நன்மைகளைத் தெற்றென உணர்கின்றோம். கற்றவர் மட்டுமே புத்தகங்களைப் படித்துணர முடியும்; சிலர் மட்டுமே சொற்பொழிவைக் கேட்டு மகிழ முடியும்; இசையும் அவ்வாறே. ஆனால் திரைப்படத்தை கற்றாரும் மற்றாரும் ஆயிரக்கணக்கான வராகக் கூடியிருந்து, ஒரே நேரத்திற் கண்டு களிக்க வாய்ப்புண்டு. புத்தகம் ஒருவரால் எழுதப்படுவது; சொற் பொழிவு ஒருவரால் நிகழ்த்தப்பெறுவது; இசை ஒருவரால் இசைக்கப் பெறுவது; திரைப்படக் கலையோ பலருடைய அறிவால், கூட்டுறவால் உருவாவது. ஆதலின் பலருடைய அறிவாற்றலையும் ஒருங்கே பெற்று மகிழத் திரையரங்கு துணை புரிகிறது. பொழுதை நன்முறையிற் கழிக்கப் பேருதவி செய்கின்றது. மாணவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய செய்திகளைப் படக்காட்சிகளின் வாயிலாகத் தெளிவாகவும் எளிதாகவும் அறிந்துகொள்ள முடியும், மாணவர்களுக்கு மட்டுமன்று, பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. திரைப்படத்தைப் 'பொதுமக்கள் புத்தகம்' என்றே கூறலாம். நேரிற் சென்று காணவியலாப் பொருள்களை, இடங்களைப் படக்காட்சிகளின் வாயிலாகக் கண்டு பயன் பெற முடியும். அயல் நாட்டுப் பழக்க வழக்கங்களையும் நிகழ்ச்சிகளையும் அறிந்துகொள்ள அது வாய்ப்பளிக்கிறது. இவ்வாறு திரைப் படம் பல்லாற்றானும் நன்மையே விளைத்து வருகிறது என்பது வெள்ளிடைமலை என மொழிந்து விடை பெறுகிறேன். வணக்கம்.

**ஆராவமுதன் :** சமன் செய்து சீர் தூக்கும் நடுவர் அவர்களே, அறிவூட்டும் பரம்பரையினரே, உடன் பயில்வோரே, அனைவர்க்கும் என் வணக்கம். நன்மை

எனப் பேசிய நண்பர், தமக்கே உரிய முறையில், உங்கள் மனத்தை ஈர்க்கச் சொல்வலை வீசினர். ஆனல் மாணவர் நிலைசாயவில்லை. திரைப்படத்தால் விளைவது தீமையே என அழுத்தமாகவும் திருத்தமாகவும் நான் கூற விரும்புகிறேன். நன்மை எனப்பேசியவர் பள்ளியிற் காட்டப்படும் கல்விப் படக்காட்சியைக் கூறுகிருரா? அரங்குகளிற் காட்டப்படும் கதை தழுவிய காட்சியைக் கூறுகிருரா? என்பதே புரியவில்லை. இரண்டையுமே குழப்புகிருர் (கைதட்டல்). இரு புலனுக்கும் நன்மை தருகிறது என்றும் குறிப்பிட்டார். இது முழுப்பொய். இளஞ் சிருரும் இன்று மூக்குக் கண்ணுடி போடுகின்ற நிலைக்கு வந்துவிட்ட நிலை எதனல் வந்தது? திரைப்படத்தாலல்லவா? நண்பர் கண்ணுடி போட்டிருக்கிருர் என்பதற்காகக் கூறவில்லை (கைதட்டல்). உண்மை நிலையை விளக்கினேன். காலம் பொன் போன்றது என்பர். அப்பொன்னுன காலத்தை, ஆயிரக்கணக்கான மக்கள், நாடோறும் பாழ்படுத்தி வருகின்றனர். மேலும் காசுங் கரியாகிறது. ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டும் இடித்துக் கொண்டும், முட்டிக் கொண்டும் தள்ளிக் கொண்டும் சீட்டு வாங்க முனைகின்றபொழுது எத்துணை இழப்புக்கள் நேரிடக் காண்கின்ருேம். வரிசையில் நின்று ஒழுங்குறச் செல்லும் பண்பைக் குலைத்து விடுகிறது. 'பொது மக்கள் புத்தகம்' என்று அவர் குறிப்பிட்டார். அது பொது மக்கள் பண்பாட்டைக் குலைக்கும் புதுக்கருவி என்றே நான் கூறுவேன். புத்தகத்தைக் கற்பதால், சொற்பொழிவைச் சுவைப்பதால், இசையைக் கேட்பதால் கெட்டார்கள் என இதுவரை கேள்விப்பட்டதேயில்லை. ஆனல் திரைப்படத்தால் தீமை பெருகிப் பரந்து விரிந்து வருவதை நம் மாணவர்களுடைய தோற்றமும் ஒப்பனையுமே தெள்ளத் தெளிய விளக்கி நிற்கின்றன. தலையலங்கோலம், ஆடைக்குறைப்பு இவற்றில் நம் மாணவர்தம் மாண்பு எங்கே? (கைதட்டல்). நகைச் சுவைக்காக நான் இதைக் கூறவில்லை. நாட்டின் போக்கைக் கண்டு, மனம் நைந்து கூறுகின்றேன். திரைப் படத்தால் சமுதாயமே சீரிழந்து வருகிறது என்பதைத் தாழ்மையுடன் வற்புறுத்திக் கூற விழைகின்றேன். நேரிற்

காணமுடியாதனவற்றைக் காண உதவுகிறது என்ற சிறு நன்மையை மட்டும் மனத்திற் கொண்டு, திரைப்படத்தால் நன்மைதான் விளைகிறது என்று வாதிடுவது, சொல்லாற்றலைக் காட்டுமே யன்றி, உண்மையை நிலைநாட்டுவதாகாது. திரைப்படத்தை உண்மை வாழ்க்கையென நம்பி வாழ முற்படுகின்றனர் பலர். சின்னஞ்சிறு வெள்ளை உள்ளங்களில் தீய கருத்துக்களை விதைத்து விடுகிறது திரைப்படம். மாணவர்களும் மற்றவர்களும் திரையுலகக் கலைஞர்களைத் தத்தம் தலைவர்களென எண்ணிக்கொண்டு, பூசல் விளைவித்து வருகின்ற நெடுநிலையையுங் காண்கின்றோம். இவ்வண்ணம் மக்கள் வாழ்வைச் சீர்குலைத்து வருவது திரைப்படமே! திரைக் காட்சியே! எனக்கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

**இங்கர்சால் :** நன்னெறிபற்றியொழுகும் நடுவர் அவர்களே, நல்லாசிரியப் பெருமக்களே, உண்மைகாணத் துடிக்கும் உயிர்த் தோழர்களே, வலையில் வீழாமல் துடிதுடிப்புடன் வாதிட்ட அன்பரின் கூற்றுக்களுக்கு மறுப்புரை கூற வேண்டிய பொறுப்புள்ள நிலையில் நான் இருக்கிறேன். கல்விப் படக் காட்சியையும் கதை தழுவிய காட்சியையுங் குழப்புவதாக நண்பர் குறை கூறினர். இரண்டுமே திரைப் படந்தான் எனத் தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு அவரை வேண்டிக்கொள்கிறேன். கண்ணாடி போட்டுக்கொள்வதைப் பற்றியும் நண்பர் குறிப்பிட்டார். படங்காணும் ஆர்வத்தால் சிலர், அடிக்கடி பார்ப்பதாலும் வேளைகெட்ட வேளையில் பார்ப்பதாலும் தாமே வலிந்து கண்ணைக் கெடுத்துக் கொள்கின்றனர் என்பதால் திரைப்படத்தின்மேல் பழிபோடக் கூடாது. அஃது உண்மையாயின் பார்ப்பவர் அனைவருக்குமே யல்லவா அக்கேடு நேர்தல் வேண்டும்? நண்பர் பேசும் முறையைக் கூர்ந்து நோக்கின், அவர் தவருமல் படம் பார்த்து வருகிருர் என்பது புலனுகின்றது. திரைப்படத்தால் கண்கெடுவது உண்மையானல், அவரும் கண்ணாடி போட்டுக் கொண்டிருக்கவேண்டும். இந்தச் சமயத்துக் காவாவது அதனை அணிந்துகொண்டு மெய்ப்பித்து இருக்கலாம் (வலுத்த கைதட்டல்). முறையறியார் சிலர்

முட்டிக்கொண்டும் தள்ளிக்கொண்டும் செல்கின்றூர்கள் என்ருல், அஃது அவர் பண்படா நிலையைக் குறிக்கின்றதே தவிரத் திரைப்படத்தின் தன்மையைக் குறிக்கவில்லை. திரைப் படமா அவ்வாறு கற்பிக்கிறது? அறிவியல் அறிஞரான எடிசன் பெருமகனுர், இதனைக் கண்டுபிடிக்கப்பட்ட பாட்டினையும் மறந்து, பலரும் ஒன்றுகூடி, அரும்பாடுபட்டுக் கண் துஞ்சாது, திரைப்படத்தை உருவாக்குகின்றனர் என்பதையும் மறந்து, தீமையே விளைகிறது என்று எளிதாகச் சொல்லிவிட்டார் நண்பர். ஒரு நாட்டு மக்களுடைய பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் காலத்தால் அழிந்து போகா வண்ணம் காத்துவைப்பது திரைக்கலையே. நடிப்பு வேறு, நடிகர் வாழ்வு வேறு. நடிப்பதைத்தான் நோக்க வேண்டுமேயொழிய, நடிகர்தம் வாழ்விற் புகுந்து காணக் கூடாது. மனிதமனம் விழைவது இன்பமொன்றையே. அவ்வின்பத்தை அளிக்கும் கருவிகளில் திரைப்படமே தலைசிறந்து விளங்குகிறது. ஒரு நாட்டின் உயர்வை எடுத்துக் காட்டுவது கலை என்பார்கள். அக் கலை வாழ, வளரத் திரைக்கலை ஓம்பப்படவேண்டும். அனைத்துக் கலைகட்கும் உறைவிடமாக உள்ளது இத்திரைக் கலை ஒன்றே. திரைக் காட்சியால் ஓரிரு தீமையுண்டாவதை முன்னிறுத்தி அக்கலையே தீது என முடிவுகட்டிவிடுவது நேர்மையன்று. தீயை உணவாக்கவும் பயன்படுத்தலாம்; ஒன்றை எரித்துச் சாம்பராக்கவும் பயன்படுத்தலாம். விளைவுகள், பயன்படுத்து வோரைப் பொறுத்ததேயொழிய அத்தீயின் மேலில்லை. எரித்தலைமட்டும் வைத்துக்கொண்டு தீயைப் புறக்கணித்து ஒதுக்கிவிடுவது முறையோ? அதுபோலக் குறைகளைத் திரைப்படத்தின் மேலேற்றிக் குறைகூறுவது பொருந்தாது. திரைப்படத்தால் அளப்பரிய நன்மைகளை உருவாக்கலாம் என்பது எல்லாராலும் அறியப்பட்ட உண்மையாகும் எனக் கூறி என்னுரைக்குத் திரையிடுகிறேன். வாழ்க திரைக்கலை. வணக்கம்.

**ஈசுவரமூர்த்தி:** நடுநிலை போற்றும் தலைவரவர்களே, அறப்பணி புரிந்தொழுகும் ஆசிரியப் பெருமக்களே, பட்டி மன்றத்துப் பாங்கறிந்தேறிய தோழர்களே, அமெரிக்காவில்

கருத்துப் புரட்சியுண்டாக்கிய இங்கர்சால் போல, உங்களிடத்தும் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கி விட்டார் நம் பள்ளி இங்கர்சால். திரைப்படத்தை உருவாக்குவோரால் தான் தீமைகள் விளைகின்றன என்ற கருத்தை நண்பர் வலியுறுத்திக் கூறினர். நான் அதை வரவேற்கிறேன். நன்மையினும் தீமையிற்றான் மனிதன் மனம் அழுந்தப் படிகின்றது. மனிதன் குறைவுடையன் என்பது தத்துவம். ஆகவே அவனல் உருவாக்கப்படுவது எவ்வாறிருக்கும் என்பதை நீங்கள் நன்கு உணர்வீர்கள். மக்கள் மனத்தை எளிதிற் கவர வேண்டும் என்பதற்காக எவ்வெவ்வாறே அவன் உருவாக்கி விடுகிறன். ஊதியம் ஒன்றே அவன் குறிக்கோள். அதனல் குறைகள், தீமைகள் மலிந்து விடுகின்றன. மக்கள் உள்ளத்தை மேலும் எவ்வளவு கெடுக்க முடியுமோ அவ்வளவு கெடுத்து விடுகிறன் மனிதன். ஒருகால், இறைவனே வந்து திரைப்படத்தை இயக்குவாராயின் குறையில்லாமல் எடுக்கலாம். அதுவரை தீமைகளே பரவிவரும். இஃது அறிவியல் அறிஞராற் கண்டுபிடிக்கப்பட்டது என்று நண்பர் கூறினர். அறிவியற் புலவன் கண்டுபிடிப்புக்கள் அத்துணையும் நல்லன என்பது அவர் துணிபுபோலும். உலகத்தையே ஒரு நொடியில் அழித்துப் பாழ்படுத்தும் அணுக்குண்டு, நீரகக் குண்டு, நச்சுத்திரவம் முதலியன வெல்லாம் அவன் உழைப்பால் உருவானவைதாம். இவை நல்லன என்று கூறிவிட முடியுமா ? தீ இயற்கைப் பொருள். திரைப்படம் செயற்கைப் பொருள். இயற்கையில் ஆக்கமும் அழிவும் இருக்கலாம். ஆனல், செயற்கையில் நன்மை யொன்றே இருத்தல் வேண்டும். தீமையிருப்பது தகாது. திரைப்படத்தில் தீமைதான் விஞ்சி நிற்கின்றது. ஆதலால் திரைப்படத்தால் விளைவது தீமையே என்று துணிந்து கூறுவேன். அனைவரும் இதனையே ஒப்புவர் எனக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

**தலைவர் முடிவுரை :** ஆசிரிய நண்பர்களே, செவிச் செல்வத்தின் செவ்வியறிந்தொழுகும் செம்மல்களே, திரைப் படத்தால் விளைவது நன்மையே என இருவரும், தீமையே என இருவரும் சொற்போர் புரிந்ததை நாம் கேட்டு மகிழ்ந்தோம். அறிவுடைநம்பி, ஆராவமுது, இங்கர்சால், ஈசுவர மூர்த்தி

இந்நால்வரையும் நான் மிகுதியும் பாராட்டுகின்றேன். அந்நால்வர் பெயரிலும் முதலெழுத்துக்கள் அ, ஆ, இ, ஈ என நெடுங் கணக்கு முறைப்படி அமைந்திருப்பதுபோலவே அவர் தம் பேச்சும் முறைப்படி இயல்பாகவே அமைந்திருக்கக் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். 'நன்றின்பால் உய்ப்பது அறி'வாகலின், மனிதன் நன்னெறியில் அறிவைச் செலுத்து வானேல் நன்மை விளையும்; தீ நெறியிற் செலுத்தின் தீமையே விளையும். இரு சாராரும் இருத்தலினால் இற்றை நாளில் திரைப்படத்தால் இரண்டையுமே காண நேரிடுகிறது. செயற்கரியன செய்து அரிதின் உருவாக்க வேண்டிய பல நன்மைகளை எளிதில் திரைப்படத்தால் உருவாக்கி விடலாம் என்பதை நாம் முதலில் மனத்தில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும். சமுதாயச் சீர்திருத்தத்தைத் திரைப்படம் செய்து வருவதுபோல் எதனாலும் செய்துவிட முடியாது. ஆயினும் சில குறைகள் இல்லாமலும் இல்லை. பொருந்தா உடை, உரைக்க முடியா ஒப்பனை, கருத்தில்லாக் கற்பனை, இழிநிலைக் காட்சிகள் இவைபோல்வன குறிப்பிடத்தக்கன. இவற்றைக் கொண்டு அக்கலையையே குறை கூறுதல் கூடாது. குறை நம்முடையதே. திரைப்படத்தை உருவாக்குவோரும் வரவேற்போரும் நாடு, மொழி, பண்பு, அறிவு, அறம் இவற்றை அடிப்படையாக, முதன்மையாக மனத்திற்கொள்ள வேண்டும். பொருளையும் இன்பத்தையும் இரண்டாவதாகத் தான் கருதுதல் வேண்டும். இந்நிலை உருவாகிவிடின் நன்மை ஒன்றையே விளைவாகக் காணமுடியும். ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கம் இருப்பதுபோல எதிலுமே நன்மை தீமை இருப்பது இயல்பு. தீது ஒரீஇ நன்று கோடலே அறிவுடைமையாகும். திரைப்படம் பொதுமக்கள் புத்தகமாகத்தான் இருக்கவேண்டும். அவ்வாறிருக்க வேண்டுமானால் படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், அறிஞர்கள், சான்றோர்கள் இத்துறையில் அக்கறை காட்ட வேண்டும். அக்கறை காட்டுவரேல் நன்மையா தீமையா என வாதிட வேண்டுவதில்லை. நன்மையே என அறுதியிட்டுக் கூற முடியும் எனக்கூறி, என் நன்றியையும் மகிழ்வையும் புலப்படுத்திக்கொண்டு இடம் பெயர்கிறேன். வணக்கம்.

**செயலாளர் நன்றி :** எங்கள் அழைப்பிற் கிணங்கி இவண் போந்து, தலைமை தாங்கி, நடுவர் இடத்தை அணி செய்த பேராசிரியர் அவர்கட்கும், கூட்டத்திற்கு வருகை புரிந்த பள்ளித் தலைவரவர்கட்கும் ஏனைய ஆசிரியர்கட்கும் சொற்போர் நிகழ்த்திய மாணவ நண்பர்கட்கும் மற்றையோர்க்கும் மன்றத்தின் சார்பாக நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். வணக்கம்.

**அருஞ்சொற்பொருள்:**

எல்லீர்க்கும் - உங்கள் அனைவர்க்கும்; ஒருபாற்கோடா-ஒருபக்கம் சாயாத; சின்னாள் - சிலநாள்; சிறார் - சிறுவர்; கண்துஞ்சாது - உறங்காது; ஓம்புதல் - காத்தல்; விஞ்சி - மிகுந்து; செவ்வி – தன்மை; ஒரீஇ - நீக்கி; கோடல் - கொள்ளுதல்; இவண் - இங்கு.

**வினாக்கள் :**

1. திரைப்படத்தால் விளைவது நன்மையே என்பதை அறிவுடை நம்பி எவ்வாறு நிறுவுகிறார் ?

2. திரைப்படம் பண்பாட்டைக் குலைக்கும் புதுக்கருவி என்பதற்கு ஆராவமுது தரும் விளக்கம் என்ன ?

3. திரைப்படத்தால் சமுதாயம் எவ்வாறு சீர்கேடடைகிறது ?

4. ஆராவமுதுக்கு இங்கர்சால் தரும் மறுப்புரைகள் யாவை ?

5. திரைப்படத்தால் விளையும் நன்மைகளை இங்கர்சால் எவ்வாறு எடுத்தியம்புகிறார் ?

6. திரைப்படத்தில் தீமைகள் மலிந்து வருவதற்கு ஈசுவரமூர்த்தி காட்டும் காரணங்கள் யாவை ?

7. அறிவியற் புலவர் கண்டுபிடிப்புக்களிலும் தீமை உண்டு என்பது எவ்வாறு நிலைநாட்டப்படுகிறது ?

8. திரைப்படத்தைப்பற்றித் தலைவர் கொண்ட கருத்துக்கள் யாவை ?

# 14. விபுலானந்தரின் நற்பண்புகள்

வித்துவான் திரு. ஆர். பழநியாண்டி முதலியார்

## தமிழ்த் தொண்டு

ஒவ்வொரு தமிழனும் தம் தாய்மொழிக்குத் தன்னால் இயலும் தொண்டினைச் செய்தல் வேண்டும் என்பது அடிகள் கருத்து. அதனை அவர் பல கூட்டங்களிற் கூறியுள்ளார். அவர் தம் வாழ்க்கையில் அதனைச் செய்து காட்டினார்; தம்மளவில் எல்லாத் தமிழ் நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றார்; ஆராய்ந்தறிந்த உண்மைகளை நூல்களாகவும் கட்டுரை களாகவும் வெளிப்படுத்தித் தமிழ் மக்கட்கு உதவினார். இறந்தொழிந்த தமிழ் இசை அறிவை 'யாழ் நூல்' வாயிலாகப் புதுப்பித்தார். இஃது ஒன்றே அப்பெரியார் பெயரை நிலை நிறுத்தப் போதியதாகும். அவர், தம்மைக் காணவரும் தமிழ் நண்பர்களுடன் தமிழ் நூல்களைப் பற்றியே பேசுவார்; அவற்றின் சிறப்பியல்புகளை அவர்கள் மனத்திற் பதிய வைத்துத் தமிழின்பால் பற்றுள்ளங்கொள்ளச் செய்வார். முற்றும் துறந்த முனிவராக இருந்தும் அவர் தாய்மொழி யினிடம் கொண்டிருந்த பற்று அளவிடற்கரியது என்பது அவர் வாழ்க்கையிலிருந்து நாம் நன்கு அறியலாம். அடிகளது தமிழ்நடை செய்யுள் நயம் பொருந்தியது; நல்ல தமிழ்ச் சொற்களைப் பெற்றது; படிக்கப் படிக்க இன்பம் அளிப்பது. அவர், ''தமிழர், சங்க நூல்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அவற்றின் சிறப்பை மேனாட்டாரும் பிறரும் அறியுமாறு செய்ய வேண்டும்'' என்று பல சமயங்களிற் கூறியுள்ளார்.

## அடிகளும் மறுமலர்ச்சிக்காரரும்

''இக்காலத்தில் எழுவாய், பயனிலைப் பொருத்தங்கூட இல்லாமல் தமிழ் எழுதும் மறுமலர்ச்சிக்காரர் பலரால் தமிழ் நடை வளர்ச்சி பெறாது. மறுமலர்ச்சி என்பது தமிழுக்கே சிறப்பாக உண்டான இலக்கண வரம்புகளை மீறி எழுதுவதும் பேசுவதுமாகும் என்று சிலர் நினைக்கின்றனர். பழைய

இலக்கியங்களில் இல்லாத மலர்ச்சியையா இந்த மறுமலர்ச்சிக்காரர்கள் கொண்டுவரப் போகிருர்கள்? பலர் நம் கருவூலங்களான பழந்தமிழ் நூல்களை வெறுக்கின்றனர்; அவற்றைத் தொடுவதும் இழிவு எனக் கருதுகின்றனர்; அத்தகையோர், கட்டுரைகளும் கதைகளும் பாட்டுக்களும் எழுதிக் குவிக்கின்றனர். அவையனைத்தும் மணமற்ற வெறும் காட்டுப் பூக்களே ஆகும். பழைய நூல்களில் ஊன்றிப் பயின்று தமிழ் மரபும் பண்பாடும் உள்ளத்தில் மலராவிடில், எழுத்திலும் பேச்சிலும் மறுமலர்ச்சி காண்பதருமை. காலப் போக்கிற்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்பத் தமிழ்நடை மலர வேண்டுவது வரவேற்கத் தக்கது. ஆயின் மரபும் ஒழுங்கும் தவறிப்போவது இயல்பில் அமைந்த அழகைச் சிதைப்பதாகும். அருமையாக எழுதக்கூடிய மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் தமிழ் இலக்கியங்களிற் பயிற்சி யின்மையாலோ பயிற்சிக் குறைவினுலோ சில இடங்களில் வழுக்கி வீழ்வதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் மனம் வைத்துத் தமிழ்நூற் பயிற்சி பெறின், அவர் தொண்டு சிறப்புறும். பழந்தமிழ் நூற் பயிற்சியுடைய புதுமை எழுத்தாளர்களே தமிழ்நாட்டுக்கு இப்பொழுது தேவையானவர்'' என்று அடிகள் அடிக்கடி கூறுவது வழக்கம்.

### அடக்கமுடைமை

அடிகள் மும்மொழிப் புலவர்; முற்றுந் துறந்த பெரியார் எனினும், அவர் தமக்குத் தமிழறிவை ஊட்டிய ஆசிரியர் களிடம் இறுதி நாள்வரை பேரன்புடனும் மரியாதையுடனும் நடந்து வந்தது குறிப்பிடத்தக்கது. செருக்குற்று, மற்றவரை இழிவாகக் கருதும் மனப்பான்மை அடிகளிடம் இருந்ததில்லை. கற்ருர் கல்லார், முதியவர் இளைஞர், வறியவர் செல்வர் ஆக அனைவரிடத்தும் இனிய முகத்துடன் பேசிப் பழகுதல் அவர் இயல்பு.

### பிறரை ஊக்குவிக்கும் பண்பு

பலர் தம் போன்ற புலவரைக் காணின் பொருமை கொண்டு அவர் முற்போக்கிற்கு ஊறு செய்தல் இயல்பு. ஆயின், சங்கப் புலவர்கள் ஒருவரையொருவர் பாராட்டியே

பேசியுள்ளனர். அடிகள் நிறைகுடம் ஆதலின், சங்கப் புலவரை ஒத்திருந்தார். தம்போன்ற புலவர்களை அவர்களது முயற்சியில் ஊக்கித் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துள்ளனர். நவநீதகிருஷ்ண பாரதியார் என்பவர் பாடிய பாக்களை 'உலகியல் விளக்கம்' எனப் பெயரிட்டுத் தாமே அதற்கு வாழ்த்துப் பதிகமும் வலிந்து தந்து அச்சிடுவித்து வெளிப்படுத்தினர். அந்நூற் பாக்களை ஆங்கிலத்தில் வரைந்து பாரதியார் புகழையும் பரப்பினர். இந்த உண்மையை நவநீதகிருஷ்ண பாரதியாரே ஒரு கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார்.

"எனது யாழ்நூலை அச்சிட அன்பர் ஒருவர் விரும்புகிருர்" என்று அடிகள் தம் நண்பர் ஒருவரிடம் குறிப்பிட்டார். அந்த நண்பர், "தாங்கள் அன்பர் சிறந்த படிப்பாளிபோலும்!" என்ருர். அடிகள், "அந்த அன்பர் பெரிய படிப்பாளியல்லர்; ஆயின் தமிழ் ஆர்வம் மிக்கவர்; நற்பண்புகள் பெற்றவர்; பெருஞ்செல்வர். தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் தமிழ் கற்ருர் பலருள்ளும் காணப்படும் பெருங்குறை ஒன்றுண்டு. அஃதாவது, பிறரிடம் நலன் எதுவும் காண விரும்பாமை ஆகும். அவர் பிறர்பாலுள்ள நலன்களைக்கண்டு பொருமை கொள்கின்றனர்; வெளியில் உதட்டளவில் புகழ்கின்றனரே தவிர உளமாரப் புகழ்வதில்லை. இதனுல் புலவர்கள் தம்முள் மன ஒற்றுமையின்றிச் சிதறுண்டு சிறப்பிழந்து தவிக்கின்றனர்" என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினுர்.

### ஏழை பங்காளர்

அடிகள் ஏழைகளிடம் எல்லையற்ற அன்பு கொண்டவர்; அவர்கள் முன்னேறத் தம்மால் ஆயினவெல்லாம் செய்து வந்தவர். அநாதை மாணவர் பலர் அவரால் கல்வியறிவு பெற்று நன்னிலையில் இருந்து வருகின்றனர். அடிகள் தாழ்த்தப்பட்ட மக்களிடம் பேரன்பும் கழிவிரக்கமும் கொண்டவர். அவர்கள் கல்வியறிவு பெறத் தம்மால் இயன்றவெல்லாம் சலியாது செய்தார். அண்ணுமலை நகருக்கு அருகில் இருக்கும் சேரியில் அவர் செய்த தொண்டு கொண்டே அவர் 'ஏழை பங்காளர்' என்று கூசாது கூறலாம்.

**சமயப் பற்று**

விபுலானந்த அடிகள் சைவசமயத்திற் பெரும் பற்றுக் கொண்டவர். சைவ மடங்களிடம் தொடர்பு கொண்டவர். திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார் கோவில் ஆதீனங்கள் அவரைப் பெருமைப்படுத்தின; அடிகளது யாழ்நூல் ஆராய்ச்சிக்கு வேண்டிய ஏட்டுச்சுவடி களை உதவின. அடிகள் சைவ சித்தாந்த சாத்திரங்களில் நல்ல பயிற்சியுடையவர். சைவ சித்தாந்த ஆண்டுவிழாக் கூட்டங்களில் தலைமை வகித்த பெருமை அவருக்கே உரியது. அவர் மதுரை மீனாட்சி அம்மன்மீது பெரும் பக்தி கொண்டவர். தாம் சொற்பொழிவாற்றுவதற்குமுன் கடவுள் வாழ்த்தாக மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் உள்ள ஒரு பாடலை அவர் பாடுவது வழக்கம். அடிகள் தில்லைக் கூத்தப்பிரானிடம் எல்லையற்ற பக்தி கொண்டவர்; இந்தியாவில் இருந்த காலங் களில் எல்லாம் தில்லைக்குச் சென்று சிலநாள்கள் தங்கி நடனப் பெருமானைத் தரிசிப்பது வழக்கம். சைவர்க்குத் தில்லை சிறந்த தலமாதல்போல, வைணவர்களுக்குச் சீரங்கம் சிறந்த பதியாகும். அங்கே கார்முகில் வண்ணன் கிடந்த கோலத்திற் காட்சி அளிக்கிறான். நமது அடிகட்கு அப்பெரு மானிடத்தும் ஈடுபாடு இருந்தது.

**கற்றுரைப் போற்றல் :**

'கற்றலிற் கற்றாரை வழிபடுதல் நன்று' என்று நமது அடிகள் அடிக்கடி கூறுவது வழக்கம். அப்பெரியார் சிறந்த தமிழ்ப் புலவர்களாகிய சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், டாக்டர். உ. வே. சாமிநாதையர், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், மறைமலை அடிகள் முதலிய பெருமக்களிடம் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். ''தமிழை நன்றாகப் படித்த இப்பெருமக்களை நீங்கள் யாத்திரையாகச் சென்று தரிசிக்க வேண்டும்; அவர்களுடன் சிறிது நேரம் பேசுவது பல நூல்களைப் படித்து அறிவதற்கு ஒப்பாகும்'' என்று அடிகள் தம் மாணவர்க்கும் ஈழநாட்டு நண்பர்கட்கும் கூறியுள்ளனர்.

## எல்லாரிடத்தும் அன்பு

அடிகள் எல்லாச் சமயத்தினரையும் நண்பராகப் பெற்றிருந்தார். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சைவர், வைணவர் முதலிய அனைவரும் அவரை நேசித்தனர்; அவருடன் அளவளாவி மகிழ்ந்தனர். அடிகள் அவ்வச் சமயத்தாருடன் அவரவர் சமயத் தொடர்பான செய்திகளைப் பேசி மகிழ்விப்பது வழக்கம்; அவற்றுடன் சமரச சன்மார்க் கத்தைப்பற்றியும் பேசுவார்; இந்த நண்பர்களுடன் பேசுகையில் சாதி வேறுபாடுகள் இந்து சமய பலத்தைப் போக்கி வருவதை நன்கு விளக்கிக் கூறிச் சமய ஒற்றுமைக்கு எல்லாரும் பாடுபட வேண்டும் என்று கூறி வற்புறுத்துவார்; ''உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்பதை உறுதிப்படுத்தும் அளவுக் கருவி ஒழுக்கமே தவிரப் பிறப்பன்று'' என்று கூறுவார்; நாட்டில் உள்ள சாதிச் சண்டை, மதச் சண்டைகள் ஒழிந்து மக்கள் முன்னேறும் நாள் எந்நாளோ என்று அடிக்கடி கூறி வருந்துவார்.

## முடிவுரை

அடிகளது வாழ்வு தியாக வாழ்வு; அவர் துறவியாக இருந்தார்; கல்விக்கும், சமயத்துக்கும், தமிழுக்கும் தொண்டாற்றினர்; தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகட்கு ஆசிரியராக இருந்தார்; தமிழ் ஆராய்ச்சி நூல்கள் எழுதினர்; கருத்தை ஈர்க்கத்தக்க கட்டுரைகளை வெளிப்படுத்தினர்; ஏழை பங்காளராய்த் திகழ்ந்தார்; நாடெங்கும் சொற்பொழி வாற்றி மக்கட்குத் தமிழ்ப் பற்றையும், சமயப்பற்றையும் வளர்த்தார்; 'தொண்டு செய்யவே பிறவி வேண்டும்' என்றார். இராமகிருஷ்ண மடத்து அடிகளுள் தமிழ் மொழிக்குப் பாடு பட்ட முதற் பெரியார் விபுலானந்தர் என்றே கூறலாம். அப்பெரியாரைப் பெற்றெடுத்த ஈழநாட்டுக்கு நமது நன்றி உரியதாகுக! அவரது தியாக வாழ்வு நமக்கு நல்வழி காட்டுவதாகுக.

அருஞ்சொற்பொருள் :

திரிபு - ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல்; அற — நீங்க; வழுக்கி வீழ்வதை - தவறிச் செல்வதை; பரிதாபம் — இரக்கம்;

செருக்குற்று - ஆணவங்கொண்டு ; ஊறு – தடை ; எல்லையற்ற – அளவில்லாத ; கழி - மிக்க ; ஈடுபாடு - பற்று ; ஈர்க்கத்தக்க - கவரக் கூடிய.

**வினாக்கள் :**

1. அடிகளாரின் தமிழ்த் தொண்டுபற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

2. எவற்றை மணமற்ற காட்டுப் பூக்களாக அடிகள் கூறுகின்றார்?

3. அடிகளார் அடிக்கடி கூறிவந்த செய்தி யாது?

4. தமிழ் நாட்டிற்குத் தேவையான எழுத்தாளர் யாவர்?

5. தம் போன்ற புலவர்களை ஊக்குவிக்கும் பண்பினைப் பெற்றவர் அடிகளார் என்பதனைச் சான்றுடன் எழுதுக.

6. தமிழ்ப் புலவர்கள் சிதறுண்டு சிறப்பிழந்து தவிக்கக் காரணம் யாது?

7. அடிகளார் ஏழைகளிடத்தில் இரக்கம் கொண்டவர் என்பதனை விளக்குக.

8. அடிகள் தம் மாணவர்கட்கும் நண்பர்கட்கும் கூறியுள்ள செய்தி யாது?

9. அடிகளாரின் சிறப்பியல்களை எழுதுக.

# 15. மனைக்கலை

கலைஞர் திருமதி சி. பெரியநாயகி அம்மையார்

## கலையுணர்ச்சி

வீடுகள் அனைத்திலும் கலை காணப்படுகிறதா ? வீட்டிலே கலையுள்ளம் படைத்த ஒருவர் இருந்து கலையை உணர்ச்சி குன்றாமல் பிறருக்கு வெளிப்படுத்தும் நிலையில் வாழ்ந்தால் தான் கலையைக் காணலாம். மனிதன் இறைவனாகிய கலைஞ ஞல் படைக்கப்பட்டவன். அவன் கலையுள்ளம் படைத்தவ ஞகவே இருக்கவேண்டும். எல்லாருக்கும் கலையைப் பெருக்க வழியுண்டு. ஆனால், சோம்பல், சோர்வு என்னும் கெட்ட பழக்கங்கள் மக்களின் உள்ளத்தில் கலையுணர்ச்சியை அவித்துவிடுகின்றன. ஆகையால்தான் கலை சில வீடுகளில் மிளிர்கின்றது; சில வீடுகளில் காணப்படுவதில்லை.

## வீட்டின் அமைப்பில் கலை

வீட்டின் அமைப்பிற் கலையை எங்தெந்த நிலையிற் காணலாம் என்ருல், வீட்டினுடைய உயரத்திலோ, பருமையிலோ அன்று என்று கூறவேண்டும். கம்பீரமான தோற்றத்திலே கவர்ச்சியான அமைப்பிலே கலையைக் காணலாம். அது பெரும்பாலும் கட்டுபவனுடைய கலை உள்ளத்தைப் பொறுத்திருக்கிறது.

## வீட்டின் அறைகள்

வீட்டினுட் காணப்படும் கலைக்கு வீட்டுத் தலைவன் அல்லது தலைவி பொறுப்புடையர். சிறப்பாகத் தலைவிதான் பொறுப்பாளி என்றுகூடச் சொல்லலாம். முதலாவதாக வீட்டின் அறைகளைச் சரியான முறையில் தேர்ந்தெடுக்கலாம்; அதுவும் அவசியம். ஆனால், கலை அதில் இருக்க் முடியாது. தேவையைப் பூர்த்தி செய்வதோடு எந்த அழகுணர்ச்சியுடன் தேர்ந்து கொள்ளப்படுகிறதோ அந்த உணர்ச்சி எதிரொலி ஆகும் முறையில் அறைகள் அமைதல் வேண்டும். ஒருத்தி தன் நெற்றியிலே பொட்டிட்டுக் கொள்கிருள். அதில்

எப்பொழுதும் கலை இருக்கிறது என்று சொல்லி விட முடியாது. மேனாட்டு உடை அணிந்த பெண்ணின் நெற்றியிலுள்ள பொட்டு அழகை வெளிப்படுத்துவதில்லை. கரிய கூந்தல் தவழ்ந்தாடும் அழகிய நெற்றியில் நம்நாட்டு உடைக்கு ஏற்பக் குங்குமத்தை இட்டுக் கொள்ளும்போது அங்கே கலையைக் காணலாம். அதுபோலத்தான் கலையழகு . தோன்றும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அறைகளில் தேவையான பொருள்களை அமைத்து வைப்பதிற் கலையைக் காண்டல் இயலும்.

## பொருள்களின் அமைப்பு

சில வீடுகளிலே அழகிய வண்ணம் பூசப்பட்ட சுவர், விலையுயர்ந்த கம்பளம் விரித்த தரை, அழகிய பொருள்கள், விலையுயர்ந்த பொருட் குவியல்கள் ஆகியவற்றைக் காண லாம். ஆனால், வெண்மாவு கொண்டு கோலம் இடப்பட்ட முற்றத்திற் பசுஞ்சாணத்தால் மெழுகப்பட்ட ஒரு திண்ணையிற் காணப்படும் கலை சில நேரம் அங்குக் காணப்படுவதில்லை. காரணம் அங்கேயும் பொருள்கள் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலோ, செல்வத்தின் பெருமிதத்தை வெளிக்குக் காட்டவேண்டிய அளவிலோ நிரப்பப்பட்டிருத்தல் தான். பொருள்கள் அமைக்கப்பட்டிருக்கும் விதத்தில், எளிய முறையில் ஆயினும் அழகுணர்ச்சி தோன்றக்கூடிய வகையில் தேவைக்கு அவசியமான பொருள்களை இடத்திற்கு ஏற்றாற் போல வைப்பதுதான் கலை.

## பொருளைத் தேர்ந்தெடுத்தல்

பொருள்களை இடத்திற்கேற்ப அமைப்பதில் கலை மிளிர் கின்றது என்றால், பொருள்களைப் பொறுக்கி எடுப்பதிலும் கலை காணப்படவேண்டும். விலை மலிவு என்ற காரணத்தைக் கொண்டோ, பெருமைக்காகவோ பொருளை வாங்கி நிரப்பினால் கலையைக் காண முடியாது. நம் அறையின் அமைப்பு என்ன, அந்த அமைப்புக்கேற்ப இப்பொருள் பொருந்துமா, பொருந்துவதோடன்றி அழகு காணப்படுமா என்று உன்னிப்பார்த்துப் பயனுள்ள பொருள்களை வாங்கு வதில் கலை இருக்கிறது என்று சொல்லலாம்.

### இடமும் பொருள்களின் அமைப்பும்

எடுத்துக்காட்டாகப் போதுமான அறைகளையுடைய ஒரு நடுத்தரமான வீட்டில் உள்ளவர்கள், படித்த நாகரிக வாழ்க்கையிலுள்ளவர்களுடன் பழகுகின்றவர்கள் என வைத்துக் கொள்வோம். அவர்களுக்குத் தங்கள் நண்பர் வந்தால் அவர்களுடன் உட்கார்ந்து அளவளாவ ஒரு நல்ல அறை வேண்டும். அங்கே உட்காருவதற்கு ஓர் அழகான கட்டிலை வைத்திருந்தால் அது கலையன்று. தங்கள் தகுதிக்கு ஏற்பச் சில நாற்காலிகள், அவற்ருேடு பொருந்தும் ஒரு சிறிய வட்ட மேசை, மேசையின்மீது விரிப்பு, அழகிய பூக்களைத் தாங்கி நிற்கும் ஒரு சிறிய செம்பு இவற்றை அமைக்கும் முறையில் அமைப்பதிலே கலை காணப்படும்.

பல நிறப் பூக்களை எடுத்துச் செம்பிலே தண்ணீர்விட்டு வைத்துவிட்டால் கலை அங்கே காணப்படுவதில்லை. செம்பின் தோற்றம், பூக்களின் தோற்றம் இரண்டிற்கும் பொருத்தம் காணப்படவேண்டும். ஒடுங்கி நீண்ட பூச்செம்பில் பருத்துத் திரட்சியாகக் காணப்படும் மலர்களைக் குட்டையான தண்டு களுடன் வைத்தால் பொருந்தி நிற்கமாட்டா. அதுபோலவே, பருத்து விரிந்த செம்பில் நீண்ட தண்டுகளையுடைய மெல்லிய அல்லிபோன்ற மலர்களை இட்டு வைத்தால் பொருந்தாது. நிறங்களையும் பார்த்தே அமைத்தல் வேண்டும். ஆகவே, கலை என்பது பொருள்கள் ஒன்ருேடொன்று பொருந்தும் நிலையிலே தான் காணப்படும். மாலை நேரம் என்ருல் மதியமும் மலர் களும் தென்றலும் எவ்வாறு பொருந்தி வருகின்றனவோ அமாவாசை என்ருல் நள்ளிரவு, இடியின் முழக்கம், மின்னலின் பிளவு ஆகியவை எவ்வாறு பொருந்தி நிற்கின்றனவோ, அவ்வாறு அறையின் அளவுத் தேர்வு, அமைப்பு, பொருள் களின் தேர்வு முதலியவை பொருந்தி இருக்கவேண்டும்.

### படிக்கும் அறை

நண்பர்களுடன் கூடிப் பேசும் அறையைத் தவிர வேறு பல அறைகள் தனித்தனி உபயோகத்திற்காக வீட்டில் இருந்தால், அந்தந்த அறையிலும் கலை பொலிவுறும்படி

செய்ய வேண்டும். வீட்டிலே படிக்கும் அறை ஒன்று இருக்கிறது. அதிலே கண்ணைக் கவரும் நூல்கள் நிரம்ப உள. அழகிய விளக்கு உண்டு. மேலே மின்சாரக் காற்றாடி யுண்டு. இவ்வளவு பொருள்கள் இருந்து விட்டால் கலை உண்டு என்று சொல்ல முடியுமா?

அந்த அறையினுட் செல்லும் ஒருவருக்கு உட்கார்ந்து புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்னும் உணர்ச்சி உண்டாகும் நிலையில் அந்த அறையின் பொருள்களை அமைத் திருக்க வேண்டும். விளக்கு, படிப்பதற்குப் போதுமான ஒளியை உடையதாக இருக்க வேண்டும். நடுவிலே அழகிய மேசை, சுற்றிலும் நாற்காலிகள் வேண்டும். விரிப்புகளோ, பூச்செம்புகளோ அத்துணை அவசியமில்லை. இங்கேயும் கலையைக் காண வேண்டும். எங்கே என்றால் அலமாரியில், அலமாரிகளை அமைத்திருக்கும் நிலையில், அதில் நூல்களை ஒழுங்காக அழகாக முறை தவறாமல் அடுக்கியிருக்கும் அந்தத் தகுதியில் கலையைக் காணலாம். வீடு சிறிதாக இருக்குமேயானால், கலையழகு குன்றாத வண்ணம் அதையே அலுவலக வேலைகளைச் செய்யும் ஓர் இடமாகவும் கொள்ளலாம். கலையழகு அதனால் குன்றி விடுவதில்லை. வைத்திருக்கும் முறை சரியானதாக இருக்கவேண்டும்.

**படுக்கை அறை**

படுக்கையறை ஒவ்வொரு வீட்டிற்கும் இன்றியமை யாதது. நல்ல காற்றோட்டமுள்ள அறைகளே தேர்ந்தெடுக் கப்படவேண்டும். அங்கே கட்டில் உபயோகப்படுமானால் அதனடியில் பெட்டியோ பிற பொருள்களோ வைக்கப்படக் கூடாது. ஒரு சிறிய உடுப்பு மேசை, உடுப்பு அலமாரி, அவசியமானால் உட்கார்ந்து படிக்க ஒரு சாய்வு நாற்காலி, அதற்கென ஒரு மேசை விளக்கு இவ்வளவு பொருள்கள் இருந்தால் சௌகரியம். அங்கேயும் அவற்றைப் பயன் படுத்தும் முறையில் கலையைக் காணலாம். படுக்கை விரிப்பில், தலையணை உறையில், கொசுவலையில் கலையுள்ளம் வெளிப்படுவதைக் காணலாம்.

### சாப்பாட்டு அறை

பின்னர், சாப்பாட்டு அறைக்குச் செல்வோம். அங்கே இன்றியமையாது வேண்டிய பொருள்கள் அவரவர் வழக்கத் திற்கேற்ப மாறுபடலாம். கலை வேண்டுமானுல் ஒரு முறையை மேற்கொள்ளலாம். ஒன்று மேனுட்டு முறை; மற்ருென்று தமிழ் நாட்டு முறை.

உண்கலங்கள் அநேகமாகப் பயனுக்கேற்ருற்போல ஒரே விதமான வேலைப்பாடுள்ளனவாக இருக்க வேண்டும். அவற்றைக் கழுவி அடுக்கி வைத்திருக்கிற முறையில் கலை கமழ வேண்டும். பால், மோர், தயிர், பழம், சர்க்கரை, வெண்ணெய் போன்ற பொருள்களை ஓர் அலமாரியில் உள்ளே எறும்பு செல்லாதபடி கால்களிலே தண்ணீர் ஊற்ற வசதி யுடைய நிலையில், அமைத்து வைப்பது வெறும் பயன் மட்டு மன்று; கலையுமேதான். செல்வர்கள் குளிர்ப்பமைவு அதற்குப் பதில் வைத்துக் கொள்ளலாம்.

### சமையல் அறை

சமையல் அறைக்குச் சென்ருல் அங்கேதான் கலை முழுவதும் வெளிப்பட வேண்டும். ஏழையின் குடிசையாஞலும் சரி, செல்வரின் மாளிகையாஞலும் அங்கே பொருள்களை வைக்கும் முறையில் கலையைக் காணவேண்டும். நடுத்தர மான வீட்டில் சமையலறையில் கலையைக் காண வேண்டும் என்ருல் எப்படி இருக்க வேண்டும்? ஏனைய அறைகளை விடச் சமையலறை சற்றுப் பெரியதாக இருத்தல் நல்லது. அடுப்பு, அதற்குமேல் புகைபோக்கி, அடிப்பகுதியில் மழைக் காலத்தில் மட்டும் விறகுகளைக் காயவைத்துக் கொள்ளப் போதுமான இடம் இவை வேண்டும். ஆனல் தரையிலே அடுப்புகளை அமைத்து விட்டால் இந்த வசதி ஏற்படாது.

அவ்வறையில் பொருள்களை அமைத்திருக்கும் முறை உட்சென்றவுடன் அறை விசாலமானது என்று காட்ட வேண்டும். ஆனல், வேலை செய்பவர்களுக்கு அலைச்சல் அதிகம் இருக்கக் கூடாது.

அடுப்பின் பக்கத்திலே சிமிட்டியாலான ஒரு மேசை போன்ற உயரமான திண்ணை நாடோறும் கழுவி விடக்கூடிய

நிலையில் இருக்க வேண்டும். சமையலறையிலே ஒரு மூலையிலே ஒரு சிறிய தண்ணீர்க் குழாய், அதன் நீர் உள்ளே தெறித்து விழாத நிலையில் ஒரு சிறிய தொட்டி, இவற்றை வைத்திருப்பது மிகவும் நல்லது. அம்மி, மாவாட்டும் கல் இவ்வளவையும் சமையலறையிலே வைத்துக்கொள்ளக் கூடிய அளவில் அறை பெரிதாக இருப்பது நல்லது. ஒரு பெண்ணின் கலைத்திறன் கலையுணர்ச்சி முழுவதும் அவள் சமையலறையில் தான் விளங்க வேண்டும்.

### பொருள்களை வைக்கும் அறை

சமையலறையில் மட்டுமன்று; அதனை அடுத்துள்ள பொருள்களைத் திரட்டி வைக்கும் அறையை மிகவும் தூயதாக வைத்திருப்பதிலும், பொருள்களை வைத்திருப்பதிலும், பொருள்களை வைத்திருக்கும் பாண்டங்களை அடுக்கி வைத் திருக்கும் எளிய முறையிலும் கலை இருக்கத்தான் செய்கிறது. பொருள்களை வைக்கும் பாண்டங்கள் கூடிய மட்டும் ஒரே வகைப் பொருள்களாகவும் ஒரே விதமான வேலைப்பாடுள்ளவை யாகவும் அமைந்திருந்தால், அதில் ஒரு தனிக் கலை காணப்படும்.

### வீட்டின் சுற்றுப்புறம்

வீட்டைச் சுற்றியுள்ள பாகங்களுக்குச் சென்றால், அங்கேதான் கலை தன் உயர்நிலையில் விளங்க வேண்டும்; சுற்றுப்புற அமைப்பு பிறரைக் கவரக்கூடிய நிலையில் இருக்கும் பொழுது கலை அங்கே காணப்படுகிறது.

தோட்டத்தை எடுத்துக்கொள்வோம். பூந்தோட்டம் அமைப்பதிலும் கலையைக் காணலாம். வீட்டின் முன்பக்கம் பூந்தோட்டம்; பின்பக்கம் காய்கறித் தோட்டம் என அமைக்க வேண்டும். தோட்டம் என்றால் செடிகளை நட்டுப் பயிராக்குதல் என்று கொள்ள முடியாது. அவற்றை வரிசைப் படுத்தி அமைப்பதில்தான் கலை இருக்கிறது. தரையில் வைக்க வேண்டிய செடிகளைத் தோற்றம், நிறம் முதலியவை களுக்கேற்ப ஒழுங்குபடுத்தி நட்டுவிட்டுத் தொட்டிகளில் வைக்கவேண்டிய செடிகளைத் தொட்டிகளில் நட்டுவைத்தலில்

தனிக் கலை காணப்படுகிறது. மேலும், பாத்திகளின் இரு கரைகளிலும் குட்டையாக வெட்டிவிடக் கூடிய செடிகளை வைத்து அவற்றை அழகாக வெட்டி விடுவதில் கலை காணப் படுகிறது. பின்னிப் பின்னி அடர்ந்து வளர்ந்து ஒழுங்கற்று நிற்கும் செடிகளை எவ்வளவு அழகான முறையில் வெட்டி வளர்க்கிறார்கள் என்பதைத் திருவனந்தபுரம், பெங்களூர், நீலகிரி, கோடைக்கானல், கொழும்பு, டெல்லி போன்ற இடங்கட்குச் சென்று பார்த்தால் நன்கு தெரியும்.

### வீடும் இலக்கியமும்

இவ்வாறு வீட்டின் பல பகுதிகளையும் பலவிதமாக வைத்திருப்பதால் எந்த விதமான கலையைக் காண்கிறோம்? அங்கே காவியத்திற் காணும் கலை, ஓவியத்தில் ஒருங் கலை ஆகிய பல கலைகளைக் காண்கிறோம். வீட்டை அமைக்கும் முறையில், வீட்டில் பொருள்களை அமைக்கும் முறையில் கலையுள்ளத்தின் கற்பனைத்திறன் காணப்படுகிறது. இலக்கி யத்திற் காணப்படும் கலையின் தோற்றமும், வீட்டின் பொருள் களை அமைக்கும் முறையில் காணப்படும் கலையின் தோற்றமும் ஒன்றே.

### கலையைப் பெருக்குதல்

கலை உணர்ச்சியைத் தோற்றுவிக்கப் புதிதாகப் பொருள் களை உண்டாக்க வேண்டியதில்லை. இறைவன் படைத்த எல்லாப் பொருள்களிலும் கலை உண்டு. அறிவுள்ள பொருள் களிலே கலையுடனே கலையுணர்ச்சியும் உண்டு. ஆகவே அக்கலையுணர்ச்சியை எழுப்பி விடுவதின்வழி கலையைப் பெருக்க வேண்டும். எவ்வாறு எனில், கலையின் பொலிவு நிறைந்த இடங்களைப் பார்க்க நேரிடுவதால் கலையுணர்ச்சி தூண்டப்படுகிறது; பலரோடு பழகுவதால் ஏற்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, சோம்பலும் சோர்வும் நீங்கி உழைப்பும் ஊக்கமும் ஏற்படும்போது தொழில் உள்ளம் ஈடுபடுகிறது; தொழில் சிறக்கும் நிலையில் கலை ஏற்படுகிறது.

### மகளிர் பொறுப்பு

வீட்டில் உள்ள மகளிர், வேலைக்காரர்கள் கையில் எல்லாப் பொறுப்பையும் ஒப்புவித்துவிட்டுக் கவலையின்றி

இருக்கலாம் என்று நினைக்கும் தவறான எண்ணத்தினின்று நீங்கினால்தான் எல்லாருடைய வீட்டிலும் கலை கமழும். வேலைக்காரர்களைக்கொண்டு வேலைகளைச் செய்யச் செய்து, பொறுப்பை மட்டுமாவது மகளிரே ஏற்று நடத்த வேண்டும். அப்பொழுதுதான் மனையிற் கலை நிறைந்திருக்கும். கலை நிறைந்த மனையில் வாழ்வு மகிழ்ச்சியாய் இருக்கும். மகிழ்ச்சி நோயைப் போக்கும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வ மாகும். ஆகவே அத்தனைக்கும் கலை இன்றியமையாதது. அதுவே அடிப்படையென்று கூடக் கூறலாம். எனவே, கலை நிறைந்த இல்லத்தில் இல்லாதது உண்டோ ?

**அருஞ்சொற்பொருள் :**

மிளிர்கின்றது - விளங்குகின்றது; கம்பீரமான – எடுப்பான; அளவளாவ – பேசி மகிழ; கமழ - மணக்க, விளங்க; ஓரும் - உணரும்.

**வினாக்கள்:**

1. சில வீடுகளில் கலை விளங்குவதற்கும் விளங்காததற்கும் காரணங்கள் யாவை?

2. வீட்டின் அமைப்பில் கலை எவ்வாறு வெளிப்படும்?

3. வீட்டின் அறைகளைத் தேர்ந்தெடுத்தலில் எவ்வாறு கலை அமைகிறது?

4. வீட்டில் பொருள்களை அமைக்கும் முறையை எழுதுக.

5. வீட்டுப் பொருள்களை எவ்வாறு தேர்ந்தெடுத்தல் வேண்டும்?

6. இடத்திற்கு ஏற்றவாறு பொருள்களை அமைக்கவேண்டும் என்பதை ஓர் எடுத்துக்காட்டுடன் பதினைந்து வரிகளில் எழுதுக.

7. படிக்கும் அறை எவ்வாறு அமைதல் வேண்டும்?

8. படுக்கை அறை எவ்வாறு அமைதல் வேண்டும்?

9. சாப்பாட்டு அறை எவ்வாறு அமைதல் வேண்டும்?

10. சமையல் அறை எவ்வாறு அமைதல் வேண்டும்?

11. பொருள்களை வைக்கும் அறை எவ்வாறு அமைதல் வேண்டும்?

12. வீட்டின் சுற்றுப்புறமும் தோட்டமும் எவ்வாறு அமைதல் வேண்டும்?

13. கலையைப் பெருக்கும் வழி யாது?

14. கலை கமழ, வீட்டுப் பொறுப்பு மகளிர்க்கே வேண்டும் என்பதை விளக்குக.

# 16. வள்ளல் அழகப்பர்

புலவர் திரு. முத்து. சம்பந்தன்

## வள்ளல் யார் ?

இம்மைச் செய்தன மறுமைக்குப் பயன் நல்கும் என்னும் வணிக நோக்கின்றி, இன்ன பொழுதில் ஈதல் - இன்னவர்க்குக் கொடுத்தல்-இவ்வளவே நல்கல் என்னும் வரையறையின்றிச் செல்வத்துப் பயனே ஈதல் என்ற குறிக்கோளுடன் ஒப்புரவு செய்தொழுகும் உள்ளங் கொண்ட பெருந்தகையோர்தாம் வள்ளல் என உலகினராற் போற்றிப் புகழத்தக்காராவர். இத்தகைய உள்ளப் பாங்குடைய பெருமக்கள் பலர், பண்டை நாளில் நந்தமிழகத்தே வாழ்ந்து வந்தனர். அப்பரம்பரை இடையீடுபட்டுப்போகா வண்ணந் தோன்றியவரே நம் அழகப்பர்.

## பிறப்பும் இளமையும்

அலைகடலோடியும் அரும்பொருள் தேடுதல் நம் முந்தையோர் கண்ட நெறிமுறையாகும். அந்நெறிமுறையின் வழுவாது, அஞ்சாது, பண்டைநாள் தொட்டு இன்றுகாறும், கடல்கடந்து, இலங்கை, மலேயா முதலிய வெளிநாடுகளுக்குச் சென்று, பொருளீட்டிவருந் தொழிலைச் செட்டிநாட்டு மக்கள் மேற்கொண்டுள்ளனர். அச்செட்டிமார் நாட்டிலுள்ள கோட்டையூர் என்னும் சிற்றூர்தான் அழகப்பரை நாட்டுக்கு ஈந்து பெரும்புகழ் கொள்வதாயிற்று. இராமநாதன் செட்டியார் என்ற திருவுடையாரும் உமையாள் என்ற திருவாட்டியும் ஆற்றிய அருந்தவப்பயனால் 6—4—1909இல் அழகப்பர் தோன்றினார்.

இவர், இளமைப் பருவத்திலேயே கல்விச் செல்வத்தில் ஈடுபாடுகொண்டவராய் விளங்கினார். ஆதலின், தொடக்கப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலுங் கல்வி பயிலுங்கால் தலைமாணாக்கராக விளங்கி, ஆசிரியர்கள் அன்பிற்கும் உரியவராகத் திகழ்ந்தார். நல்லொழுக்கம், கடமையுணர்வு,

மடியின்மை முதலிய நற்பண்புகட்கு நிலைக்களனாக நின்றிலங்கினார்.

### மலேயாச் செலவு

அழகப்பர், 1925ஆம் ஆண்டில் பத்தாம் ,வகுப்பிற் பயின்று கொண்டிருந்தார். எதிர்பாராவகையில் மலேயாவில் இருந்து அவருடைய தந்தையார் ஓரஞ்சல் எழுதியிருந்தார். உடனே மலேயாவிற்குப் புறப்பட்டு வருமாறு எழுதப்பட்டு இருந்தது. அவ்வஞ்சலில், கல்வியிற் பெருவிருப்புடையராய் இருந்த அழகப்பருக்கு மலேயாப் பயணத்தில் நாட்டஞ்செல்ல வில்லை. ஆயினும் 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' யாதலின், தந்தையாரின் ஆணையைத் தலைமேற்கொண்டு, சென்னைத் துறைமுகத்தில் கப்பலேறினார். கடலில் அலை யெழுவதுபோல் அவருடைய நெஞ்சத்திலும் எண்ண அலைகள் மாறிமாறித் தோன்றின. கல்வியைக் கைவிட நேரிட்டதே எனக் கவன்றார். உள்ளம் பலவாறு எண்ணி யெண்ணி உழன்றமையால் வெப்பம் மீதூர உடல் நலங்குன்றியது. கடுங் காய்ச்சலுக்காளாகினார். அவர் உடல்நிலையைக் கண்ட கப்பற்றலைவர், நாகப்பட்டினத் துறைமுகத்தில் அழகப்பரை இறக்கிவிட்டார். கல்வி கற்க மீண்டும் வாய்ப்பு ஏற்பட்டது என்ற களிப்பால், அழகப்பர் காய்ச்சலுக்கு நன்றி கூறினார். பின்னர், அவருடைய கல்வி தொடர்ந்தது.

### கல்வி முன்னேற்றம்

அழகப்பர் பள்ளியிறுதிவகுப்பில் தேர்ச்சிபெற்றுக் கல்லூரியில் இடைநிலை (Intermediate) வகுப்பிலும் முதல்வராகத் தேர்ச்சி பெற்றார். மேலும் பயின்று முன்னேற எண்ணங்கொண்ட அழகப்பர் பெற்றோரைப் பிரிந்துழலும் துயரநிலைக்காளானார். அந்நிலையில் அழகப்பருக்கு உற்றாரும் உறவினரும் மற்றோரும் உதவ முன்வந்திலர். எண்ணந் திண்ணியராகப்பெற்ற அவர், இன்பம் விழைந்திலராய், இடும்பை இயல்பென்று நினைந்து, கல்லூரிக் கல்வியைத் தொடர்ந்து பயில முற்பட்டார். குன்றா ஆர்வமும் குறைவிலா உழைப்பும் அவரைக் கைவிடவில்லை. முதுகலைப் (M. A.) பட்டத்திற்கு உரியராகித் திகழ்ந்தார்.

முதுகலைப் பட்டத்தோடு கல்வி முற்றுப்பெற்று விட்டதாக அவர் எண்ணினாரல்லர். ஐ. சி. எஸ். (Indian Civil Service) என்னும் மேலை நாட்டுக் கல்வியில் நாட்டஞ் செல்லவே இலண்டன் மாநகரம் சென்றடைந்தார். ஆனால் அவர் உடல்நிலை அக்கல்விக்கு இடந்தரவில்லை. ஆயினும் சட்டக் கல்வி பயில்வதெனத் துணிந்தார். அக்கல்வி பயிலுங்கால் அவருக்கு ஓய்வு மிகுதியாகக் கிடைத்தது; அவ்வோய்வுப் பொழுதைப் பயன்பெறுவகையாற் கழித்தல் வேண்டுமென எண்ணங்கொண்டிருந்தார். அவ்வமயம் அங்கே மாநாடொன்று நடைபெற்றது. அம்மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்து, 'ரைட் ஆனரபிள்' (Right Honourable) சீநிவாச சாத்திரியார் சென்றிருந்தார். அக்காலை அவருடைய தொடர்பு அழகப்பருக்குக் கிடைத்தது. அவர்தம் பரிந்துரையால் 'இலண்டன் சார்ட்டர்டு பாங்கு' என்னும் நிறுவனத்தில் ஓய்வு நேரத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது. எஞ்சிய நேரத்தில் வானூர்தி உய்க்கவும் கற்றுக்கொண்டார். இலண்டன் சென்ற அழகப்பர், ஒரு வானூர்தி வலவனாகவும் (Pilot) வழக்கறிஞராகவும் (Barrister) 1933இல் தாயகந் திரும்பினார்.

### தொழில் முயற்சி

தாயகம் மீண்ட அழகப்பர் வழிவழிவந்த தொழிலாகிய வாணிகத்தை மேற்கொண்டு, இடையறாப் பேரூக்கஞ் செலுத்தி, அல்லும் பகலும் அரும்பாடுபட்டு முயல்வாராயினர். ஆயினும் ஊரை ஏய்த்துப் பிழைப்போரும், உதட்டில் நறவு பூசிய நட்பினரும், உடனிருந்தே ஊறுசெய்வோரும் சூழ்ந்திருந்தமையால் பெரும் பொருட்கேடு விளைவதாயிற்று. தொழிலில் இழப்பு நேர்ந்ததை அறிந்த அருமை நண்பர்கள், அற்ற குளத்துக் கொக்கே போல அகல்வாராயினர். அஃதும் அவருக்கு மாந்தர் மனத்தியல்பை எடைபோட்டுப் பார்க்க உதவியது. ஆதலின், பொருளிழப்பு அவர்க்குத் தளர்ச்சியைக் கொடுத்திலது.

மடுத்தவாயெல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண், செயலிழந்து, வலுவிழந்து, பிறக்கிட்டோடி விடுமன்றோ?

அஃதே போல் அழகப்பர்க்கு நேர்ந்த இடுக்கணும் நொய்தா யிற்று. ஊக்கத்தை முதலாகக் கொண்டு, கேரள மாநிலத்தில் புதுக்காடு என்னும் சிற்றூரில் காடு மேடாகக் கிடந்த நிலத்தை விலைக்குப் பெற்று, அங்கே 'அழகப்பா நூற்பாலை' என்னும் பெயரில் ஆலையொன்று நிறுவினார். அதனைச் சுற்றி வீடுகள் பலவுங் கட்டுவித்து, 'அழகப்பா நகர்' ஆக்கினார். அசைவிலா ஊக்கமுடைய அவரை, ஆக்கம் அதர் வினாவிக் கொண்டு சென்றடைந்தது.

**கல்விக் கொடை**

அழகப்பர் ஆலைத் தொழிலால் அளக்கலாகாப் பொருட் பேறு பெற்றாரெனினும் மக்கள் மனப்பாங்கை அளந்தறியும் வாய்ப்பினையும் மிகுதியாகப் பெற்றார். இரக்க மனம், அரக்க மனம் என இருவகை மனங்களையும் கண்டுணர்ந்தார். வலியோர், மெலியோர் என இருவகை மாந்தர், சமுதாயத்தில் நடமாடி வருதலையும், மெலியோர் வலியோர்க்குப் பலியா வதையும் கண்டு கண்டு, மனம் நொந்தார். இவற்றிற் கெல்லாம் அடிப்படைக் காரணம் கல்வியின்மையே எனத் தெளிந்தார். இத்தெளிவு அவர்க்கோர் மனவெழுச்சியை உண்டாக்கியது. சத்திரஞ்சாவடி கட்டுவதினும் கோவில் கோபுரம் எழுப்புவதினும் கல்வி வளர்ப்பதுவே சாலச்சிறந்த கடமையாகும் என்னுங் கருத்து அவருள்ளத்தே வேரூன்றியது. ஈட்டும் பொருளால் நாட்டில் கல்வி வளர்த்துப் பெரும்புகழை நிலைநாட்ட வேண்டும் என்பது, அவர்தம் உள்ளக் கிடக்கை யாகியது.

'சென்னை மாநிலத்தில் கலைக்கல்லூரிகள் இல்லாக் குறையை நிறைவு செய்யப் பணம் படைத்த நல்லறிவாளர் முன் வருதல் வேண்டும்; நூறாயிரம் வெண்பொற் காசுகள் கொடுப்பின் கல்லூரி தோற்றுவிக்கலாம். இதனைச் செய்தோர் சிறந்த அறஞ் செய்தோராவர்' என்னும் பொருளுரையைச் சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஆ. இலக்குமணசாமி முதலியார், 1947 இல் சென்னை அடையாற்றில் நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் சொற்பெருக் காற்றுகையில் குறிப்பிட்டார். அவ்வமயம் அங்குச்

சென்றிருந்த அழகப்பர், இதனைச் செவியேற்று, மனமகிழ்ந்து, தம் உள்ளக் கிடக்கை உருவாகுங் காலம் வந்துவிட்டதென நினைந்து, அத்தொகைக்குரிய காசோலை (செக்) ஒன்றைத் தந்து ஆவனபுரியுமாறு வேண்டிக்கொண்டார்.

### கலைக் கோவில்களின் தோற்றம்

பின்னர், காரைக்குடியிலும் புதுக்காட்டிலும் கல்வி நிலையங்கள் தொடர்ந்து தோன்றலாயின. 1947இல் காரைக்குடியில் கலைக்கல்லூரியைத் தோற்றுவித்த அழகப்பர், இறுதிவரை ஆண்டுக்காண்டு புதுப்புதுக் கல்லூரிகளையும் கல்வி நிறுவனங்களையும் தோற்றுவித்த வண்ணமாகவே விளங்கினார். தொழிலில் அவருக்குக் கிடைத்த ஊதியமெல்லாம் நாட்டிற்குக் கிடைத்த நன்மையாகவே முடிந்தது. மாண்டிசோரிப் பள்ளி, ஆதாரப் பள்ளி, தொடக்கப் பள்ளி, மாதிரி உயர்நிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, தொழில் நுணுக்கக் கல்லூரி, உடற் கல்வி கல்லூரி, மகளிர் கல்லூரி முதலிய கலைக்கோவில்களைக் காரைக்குடியில் கட்டி முடித்தார். காரைக்குடியில், மின் இரசாயன ஆய்வு நிலையம் (Electro Chemical Research Institute) நிறுவுவதற்குப் பெருமுயற்சி செய்ததுடன், 120 ஹெக்டேர் (300 ஏக்கர்) நிலமும் 15 இலட்சம் வெண் பொன்னும் வழங்கினார்.

இவை தவிரத் தமிழகத்தும், அண்டை மாநிலங்களிலும் பல்கலைக்கழகங்கட்கும், உயர்நிலைப்பள்ளிகட்கும், ஆய்வுக் கூடங்கட்கும், நில ஆராய்ச்சித்துறைகட்கும், நூல்வெளியீடு, புயலுதவி, பள்ளிப் பகலுணவு முதலிய அறப்பணிகட்கும் அழகப்பர் வாரி வாரி வழங்கிய நன்கொடைகள் அளப்பரியன; வியக்கத்தக்கன; கல்விக்காகக் கொடுத்துக் கொடைவெற்றி கண்டவர். நிலையாமையை நன்குணர்ந்த அழகப்பர், வந்தன வெல்லாம் வழங்கி வழங்கி நிலைத்த புகழுக்குரியவரானார்.

### விருதுகள்

அழகப்பர் நாட்டிற்காகச் செய்த அளப்பரிய அறப்பணிகளைக் கண்டு மகிழ்ந்து, பாராட்டக் கருதிய சென்னைப்

பல்கலைக்கழகமும் அண்ணுமலைப் பல்கலைக்கழகமும் 'டாக்டர்' பட்டந் தந்து சிறப்பித்தன. இந்தியப் பேரரசு 'பத்மபூஷண்' என்னும் விருது சூட்டிப் பெருமை செய்தது. செட்டிநாட் டரசராகிய அண்ணுமலைச் செட்டியாரவர்கள் அழகப்பரின் வண்மைக் குணத்தைப்போற்றி, 'வள்ளல்' என்னும் பட்டப் பெயரைச் சூட்டிப் பாராட்டினுர். அன்று முதல் அழகப்பச் செட்டியார், வள்ளல் அழகப்பர் என்றே அழைக்கப்பட்டார்.

## சிறப்பியல்புகள்

அஃறிணைப் பொருள்களிடத்தும் இரக்கங் காட்டும் அருளுள்ளம் படைத்தவர் அழகப்பர். கல்லூரிகளையடுத்து, அழகிய செடி கொடிகளையும் பூங்காக்களையும் ஏற்படுத்தினுர். ஒரு சமயம் வீசிய புயலினுல் மரங்கள், செடிகள், கொடிகள் சாய்ந்தும் சிதைந்தும் பாழாயின. அக் கோலத்தைக் கண்ட வள்ளலின் விழிகள் கசிந்து நீர்மல்கின. பொருளை யீட்டிப் பெருக்குவதிலே வல்லவர். ஈட்டிய பொருளை வகுப்பதிலே நல்லவர். அச்சத்தைக் கழிப்பதில் ஆற்றல் மிக்கவர். சான்ருேர்தம் உறவைக் கூட்டுவதிலே தகுதி வாய்ந்தவர். உரம், அவருள்ளத்தில் வித்திய வித்து; உழைப்பு, அதற்குப் பாய்ச்சிய நீர்; அவ்வித்தில் முளைத்தெழுந்த நன்மரமே அவர் பெற்ற செல்வம். அம்மரந் தந்தசெழுங்கனியே அவர் கொண்ட கொடைப் பண்பு. ஆங்கிலத்திலும் தமிழிலும் நகைச் சுவை கனியக் கனியப் பேசும் நாவன்மை, அவர்க்கு இயல்பாக வாய்த்த சிறப்பாகும். செய்ந்நன்றி மறவாச் செம்மல். சிந்தனை, கலங்காவூக்கம், விரைந்த செயல் முதலிய நற்பண்பு களுக்கு நிலைக்களன். நிலையாமையுணர்ந்த நெஞ்சினர்.

## புகழுடம்பு

'மன்னுவுலகத்து மன்னியது புரிந்த' அழகப்பர், 5—4—1957இல் புகழுடம்பு பெற்ருர். மக்கள் உள்ளத்து ளெல்லாம் வாழ்பவரானுர். செந்நாப்புலவர்தம் செந்தமிழ்ப் பாடல்களிலெல்லாம் அழியா நிலைபெற்ருர். அப்பெருமக னுரின் மறைவைக் குறித்து, அவர்தம் ஈகைப்பண்பு தோன்றக் கவியரசு முடியரசன் அவர்கள் மனமுருகிப் பாடியபாடல் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

''அள்ளியள்ளி வழங்குதற்குக் கையை ஈந்தான்
அழகாகப் பேசுதற்கு வாயை ஈந்தான்
உள்ளமெனு மொருபொருளை உரத்துக் கீந்தான்
உடம்பினையுங் கொடுநோய்க்கே ஈந்தா னந்தோ !
வெள்ளமென வருநிதியம் வாழும் வீடு
வினைமுயற்சி யத்தனையுங் கல்விக் கீந்தான்
உள்ளதென ஒன்றில்லை அந்தப் போதும்
உயிருளதே கொள்கவெனச் சாவுக் கீந்தான்.''

**அருஞ்சொற்பொருள் :**

ஒப்புரவு – உதவி; இடையீடு – இடைவெளி; ஈந்து – கொடுத்து; மடியின்மை – சோம்பலின்மை; நிலைக்களன் – இருப்பிடம்; நாட்டம்– எண்ணம்; மீதூர – மிகுதியாக; இடும்பை – துன்பம்; உய்க்கவும் – செலுத்தவும்; வலவன் – ஓட்டி (Pilot); நறவு – தேன்; ஊறு–துன்பம்; அற்றகுளம் – நீரற்றகுளம்; மடுத்தவாய் – பொருந்திய இடம்; பகடு – காளை; பிறக்கிடுதல்–தோற்றேடுதல்; நொய்தாயிற்று - மெலிதாயிற்று; அதர் - வழி.

**வினாக்கள் :**

1. வள்ளல் யார் ?

2. அழகப்பரின் பிறப்பும் இளமையும்பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

3. அழகப்பரின் மலேயாச் செலவு பற்றிக் குறிப்பிடுக.

4. அழகப்பரின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

5. அழகப்பரின் தொழில் முயற்சியைப் பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

6. அழகப்பரின் கல்விக்கொடையைப் பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக.

7. அழகப்பர் ஏற்படுத்திய கலைக்கோயில்கள் எவை? அவரின் பொருட்கொடைக்குச் சில எடுத்துக்காட்டுக்கள் தருக.

8. அழகப்பர் பெற்ற விருதுகள் எவை?

9. அழகப்பரின் சிறப்பியல்புகளை 15 வரிகளில் எழுதுக.

10. அழகப்பரின் ஈகையைப் புலப்படுத்தும் கவியரசு முடியரசன் அவர்களின் பாடற்கருத்தை எழுதுக.

---

## 17. இளவரசனுக்கு

வித்துவான் கா. சு. துரைராசு

அன்புள்ள அரசு,

உன் கடிதம் பெற்றேன். மகிழ்ச்சி. அரையாண்டுத் தேர்விற் பெற்ற மதிப்பெண்களைக் குறித்துள்ளாய். காலாண்டுத் தேர்வைவிடக் குறைந்துளவே! காரணம் என்ன? படிப்பில் முயற்சி குறைந்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது உன் கடிதம். தேர்வில் வெற்றி பெறுவதற்குரிய மதிப்பெண்கள் பெற்ருற் போதும் என்ற எண்ணம் மட்டுங் கூடாது. வகுப்பில், பள்ளியில் முதல்வனுகத் திகழவேண்டும் என்ற எண்ணந்தான் வேண்டப்படுவது. அதற்கேற்ற முறையில் முயன்று, நன்கு பயின்று, ஆண்டுத் தேர்வில் முதல்வனுக வெற்றிபெற விழைவு கொள்.

உன் கடிதத்தில் இன்னும் எழுத்துப் பிழைகள் உள்ளன. இன்னுஞ் சிறிது அக்கறை கொள்வையாயின் பிழையின்றியே எழுதி விடலாம். எவ்வளவு படித்துப் பட்டம் பெற்ருலும் பிழைபட எழுதுவோர் நன்கு மதிக்கப்படார். அதனுல் பிழை நீக்கி எழுதப் பழகு; பழகி வெற்றி பெறு. பிழைபட எழுதுவது மொழிக்குச் செய்யும் பெருந்தீங்காகும். உன் தாய்மொழிக்குத் தீங்கு செய்ய எண்ணுதே.

அலுவல் மிகுதியால் இரண்டு திங்களாக உனக்கு அறிவுரைகள் எழுதாமலேயே கடிதங்கள் எழுதி விட்டேன். இன்று ஓய்வு கிடைத்தமையால் மீண்டுஞ் சில அறிவுரைகள் எழுதுகின்றேன். நான் எழுதுவது வெறும் 'உபதேச'மாகப் போய்விடக் கூடாது. உன் வாழ்க்கையில் அவற்றைக் கைக்கொண்டு நடக்கவேண்டும். ஏனெனில் நீ எப்பொழுதும் மாணவப் பருவத்திலேயே இருப்பவன் அல்லே. வருங்காலத்தில் இந்நாட்டு மக்களில் ஒருவன். நீ ஒழுக்கமுடையவனுக இருந்தால் உன் நாடும் நல்ல நாடாகும்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்ற பாட்டின் கருத்தை உனக்கு முன்பே விளக்கிக் கூறி யிருக்கிறேன் அல்லவா? 'நான் மட்டும் நல்லவனாக இருந்தாற் போதுமா? மாணவர் அனைவருமல்லவா ஒழுக்கம் உடையவராக, நல்லவராக இருத்தல் வேண்டும்' என்று நீ நினைக்கலாம். ஆம்; அனைவரும் நல்லவராதல் வேண்டும் என்பதே என் அவா. அனைவரும் நல்லவராவதற்கு ஆசிரியர் களை மட்டும் நம்பிக்கொண்டு, பெற்றோர் வாளா விருந்து விடுதல் கூடாது. அத்தனை மாணவர்களையும் ஒருவரே திருத்தல் இயலாது. அதனால் ஒவ்வொரு பெற்றோரும் தத்தம் பிள்ளைகளைத் திருத்த முற்பட வேண்டும். பெற்றோர் ஒவ்வொருவரும் ஆசிரியராதல் வேண்டும். அஃதாவது மக்களைத் திருத்தும் பணியில் அவர்களும் பொறுப்பேற்க வேண்டும் என்பது கருத்து. அவ்வாறு முயன்றால்தான் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். இக்கருத்துக் கொண்டே நானும் ஆசிரியருக்கு மட்டும் அத்தனை பொறுப் பையும் விட்டுவிடாமல் உனக்கு அடிக்கடி இவ்வாறு எழுதுகிறேன்.

நீ எந்த மாணவரோடும் பகையுணர்ச்சி கொண்டு பழகாதே. இற்றை நாளில் பகையுணர்ச்சி வளர்வதற்குரிய சூழ்நிலைகளே இருந்துவரக் காண்கின்றோம். சாதி, சமயம், அரசியல் முதலிய எத்துறைக் கொள்கைகளிலும் பகைமை யுணர்வே தலைதூக்கி நிற்கிறது. அப்பகையுணர்வு கூடவே கூடாது. கருத்து வேறுபாடு இருக்கலாம்; ஆனால், மாறுபாடு இருத்தல் ஆகாது. நாங்கள் படிக்குங் காலத்தில் சாதி, மதம், அரசியல், கொள்கை இவற்றால் வேறுபட்டவர்கள் எவ்வளவோ பேர் கலந்து படித்தோம். ஆயினும் எங்களிடையே பகையுணர்ச்சி தோன்றியதேயில்லை. நாங்கள் பழகும் முறை அவ்வாறிருந்தது. நம் நாட்டுத் தலைவர்கள் சொற்களை, வரலாறுகளைக் கேட்கும்பொழுதும் படிக்கும் பொழுதும் நாமும் அவ்வாறிருத்தல் வேண்டும் என்று விழைவு கொள்ள வேண்டும்; உறுதி பூணவேண்டும். தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனாரைப் பற்றி உன்னிடம்

பன்முறை சொல்லியிருக்கிறேனல்லவா? அப்பெரியார் மற்றொரு பெரியாரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'அவர்க்கும் எனக்கும் இடையே மலை போன்ற கருத்து வேற்றுமையுண்டு; ஆனால் நாங்கள் சந்திக்கும்பொழுது, எங்கள் நட்பில் அந்த மலை மறைந்து விடும், எனக் குறிப்பிட்டுள்ளார். இதுதான் பெருந்தன்மையாகும்; தமிழ்ப் பண்பாடும் ஆகும். இம்முறையில் நீயும் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஊறு நேராவண்ணம் பழகு; பகையுணர்வை விடு. 'பற்று மாக்கள் தம்முடன் ஆயினும் செற்றமுங் கலாமும் செய்யா' திரு.

கட்டுப்பாடும் அடக்கமும் உடையவனாக இரு என்று மிகமிக வற்புறுத்திக் கூற விரும்புகின்றேன். 'கட்டுப்பாடுள்ள ஒரு மனிதனுக்கு, கட்டுப்பாடில்லாத நூறு மனிதர்கள் ஈடாக மாட்டார்கள்' என்று நம் தலைவர்கள் அடிக்கடி சொல்லி வந்துள்ளார்கள். கட்டுப்பாடிருந்தால் எந்தச் செயலையும் வெற்றியுடன் முடிக்கலாம். எடுத்துக்காட்டாக உன்னையே எடுத்துக்கொள். நீ கட்டுப்பாட்டுடன் இருந்தால், தேர்வு வரை திரைப்படம் முதலியவைகளுக்குச் செல்வதில்லை என்ற உறுதிப்பாட்டுடன் படித்து வந்தால் இறுதித் தேர்வில் முதல்வனாக வெற்றி பெறுவது ஒருதலை. இப்பருவத்திலிருந்தே கட்டுப்பாட்டுடன் இருக்கப் பழகிக் கொண்டால் பின்னர் வாழ்க்கை நெறியில் நுழையும்போதோ அரசியல் போன்ற வேறு துறைகளில் இறங்கும்போதோ கட்டாயம் உயர்வு பெறுவாய்; வெற்றி பெறுவாய். கட்டுப்பாட்டால் அளப்பரிய நன்மைகள் உண்டாகும் என்பதற்கு எள்ளளவும் ஐயமே இல்லை. இதற்கு எடுத்துக்காட்டு காந்தியடிகள் ஒருவர் போதாதா?

அடக்கமும் மனிதனை மேம்பாடடையச் செய்யும் உயரிய ஒரு பண்பாகும். அடக்கமுள்ளவன் உயர்வான்; அடக்கமிலான் தாழ்வான் என்ற கருத்தை,

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்று வள்ளுவர் நமக்கு அறிவுறுத்துவதை என்றும் மனத்தகத்தே நிலைநிறுத்தி ஒழுகுதல் வேண்டும். ஆசிரியர்

சொற்களுக்கு அடங்கி நடக்க வேண்டும்; அவர்கள்பால் உரையாடுங் காலத்துப் பணிந்து மொழிதல் வேண்டும். என்னை எவ்வாறு எண்ணுகின்றனையோ அவ்வாறே உன் ஆசிரியரையும் எண்ண வேண்டும். ஆசிரியரிடம் பணிந்து நடக்கப் பழகாவிடின் நீ நாளை யாருக்குப் பணிந்து நடக்கப் போகின்றாய்? பணிவுடைமை, நமக்குத் தாழ்வு தந்து விடுமோ என எண்ணி விடாதே; என்றும் அஃது உயர்வே தரும்.

எல்லாரிடமும் பணிந்து நடக்க வேண்டுமென்றெண்ணித் தாழ்வு மனப்பான்மையுடையவனாக, அடிமை மனப்பான்மை யுடையவனாகப் பழகி விடாதே. பணிவுடைமை வேறு; தாழ்வு மனப்பான்மை வேறு. பணிவுடைமை, அன்பையும் மதிப்பையும் அடிப்படையாகக் கொண்டது. தாழ்வு மனப் பான்மை, அச்சத்தையும் இழிவையும் அடிப்படையாகக் கொண்டது. முன்னது கொள்ளப்படுவது; பின்னது தள்ளப் படுவது. பெருமித உணர்வுடன்றான் மனிதன் வாழ வேண்டும். பெருமிதமாக இருக்க வேண்டும் என்பதற்காகச் செருக்குடை யவனாக மாறி விடாதே. பெருமிதம் வேறு; செருக்கு வேறு. பெருமிதம் வேண்டத் தக்கது; செருக்கு வேண்டத் தகாதது. ஒன்று நல்லது; மற்றொன்று கெட்டது. இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்து நட. இவ்வாறு ஒவ்வொன்றுக்கும் உள்ள வேறுபாடுகளை உணராமல் நிரம்பப் பேர் கெட்டு விட்டார்கள். அந்தக் கேட்டுக்கு நீ இடங் கொடுத்து விடாதே.

அறிவு வளம் பெற வேண்டுமேல் உடல் நலனை நன்கு பேணிக் காத்துக்கொள்ளுதல் வேண்டும். அவ்வூர்த் தட்ப வெப்ப நிலைக் கேற்ப நடந்துகொள். நீராடல், எண்ணெய் முழுக்கு இவை தவறுதல் தவறு. உடலை எப்பொழுதும் தூய்மையாக வைத்திரு. உடல் தூய்மையாக இருப்பின் உளமும் ஓரளவு தூய்மையாக இருக்கும். படிக்கின்ற பாடங்கள் நெஞ்சிற் பதிவதற்கும் பதிந்தவை மறவாமல் இருப்பதற்கும் உடற்றூய்மை உறுதுணை புரியும். நினைவாற்றலுக்கு அத்தூய்மை நன்மருந்து. அந்நன்மருந்தை,

வைகறைத் துயிலெழுகையும் இளங்காலை நீராட்டுமே தரவல்லன. இன்னோரன்ன ஒழுக்கங்களில் மிகவும் உன்னிப்பாக இருக்க வேண்டும்.

ஒழுக்கமென்றால் எளிதாகக் கடைப்பிடிக்க முடியாத ஒன்று என்று எண்ணுவர் சிலர். இன்னுஞ் சிலர், ஒழுக்கம் என்ற சொல்லுக்குப் பிறிதொரு பொருளும் கற்பிப்பர். அப்பொருள், இல்வாழ்வானோடு நின்றுவிடும். அவ்வரையறைக்குள் மட்டும் ஒழுக்கம் முற்றுப் பெற்று விடாது. அவ்வாறு வரையறை செய்துவிடின், ஏனையோர்க்கு எவ்வாறு ஒழுக்கம் வாய்க்கும்? துயிலெழல்முதல் துயிலச் செல்லும் வரை நிகழ்கின்ற ஒவ்வொரு செயலிலும் ஒழுக்கம் விரவி நிற்கின்றது. இன்னின்ன செயலை இன்னின்னவாறு ஆற்றுவது, இவ்வேளையில் ஆற்றுவது என வரையறுத்துக்கொண்டு, நாடோறும் வழுவாது ஒழுகி வருவதுதான் ஒழுக்கம். அவ்வொழுக்கம் வழுக்கின் இழுக்கம் ஏற்படும். இழுக்கத்திற்கு இடங்கொடுத்து விடாதே. துயிலெழல், நீராடல், உண்ணல், உறங்கல், உடுத்தல், படித்தல், பேசல், பழகல் இவ்வனைத்திலும் ஒழுக்கமுடையவனாக இரு. இருந்தால் நல்வாழ்வு உன்னைத் தேடிவந்தடையும்; விழுப்பமும் நல்கும். ஆதலின் ஒழுக்கத்தை உயிரினும் மேம்பாடுடையதாகக் கருதிக் காத்து நட.

சரி; கடிதம் நீண்டு விட்டதென எண்ணுகிறேன். ஒவ்வொன்றாகச் சொன்னாற்றானே நீயும் கடைப்பிடித்து ஒழுக முடியும். அதனால் கடிதத்தை இவ்வளவில் நிறுத்துகிறேன்.

15—8—66
காரைக்குடி

அன்புத் தந்தை
*முடியரசன்*

**அருஞ்சொற்பொருள் :**

கொள்வையாயின் – கொண்டால்; திங்கள் - மாதம்; நல்லை – நன்மையுடையாய்: விழைவு - ஆசை; ஊறு - துன்பம்; பற்றா மாக்கள் - பகைவர்; செற்றம் - சினம்; கலாம் - கலகம்; ஒருதலை - உறுதி; உய்க்கும் – செலுத்தும்; ஆரிருள்-பெருந்துயர் (நரகம்); இன்னோரன்ன - இவை போன்ற; விரவி - கலந்து.

**வினுக்கள் :**

1. பெற்ருேர் கடமை எவ்வாறு உரைக்கப்பட்டுள்ளது ?

2. உடன் பயிலும் மாணவர்களிடம் எவ்வாறு பழகுதல் வேண்டும் ?

3. கட்டுப்பாடு, அடக்கம் இவற்றைப் பற்றி ஆசிரியர் குறிப்பன வற்றைப் பதினைந்து வரிகளில் தொகுத்தெழுதுக.

4. பணிவுடைமை, பெருமிதம் இரண்டையும் ஆசிரியர் எவ்வாறு வற்புறுத்திக் கூறுகிருர் ?

5. உடல் நலம் பேணுவதால் விளையும் நன்மை யாது ?

6. ஒழுக்கம் பற்றி ஆசிரியர் தரும் விளக்கம் யாது ?

# 18. சிறு சேமிப்புத் திட்டம்

வித்துவான் திரு. எம். சுந்தரேசன்

## சேமிப்பின் இன்றியமையாமை

உழைப்புக்கு உவமை காட்டுவோர் அயராது உழைக்கும் சிறு உயிரினங்களாகிய தேனீக்களையும், எறும்புகளையும் கூறுவர். இவை ஓடியாடியும், பறந்து சென்றும் உணவைத் தேடிச் சேமித்து உணவை உண்டு தம்மைக் காத்துக் கொள்கின்றன. மனித சமுதாயமும் இச்சிறு வயிற்றுக்காகவே உழைக்கின்றது. மனிதர்கள் வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை உழைத்துப் பெறுகின்ற ஊதியத்தைக் கொண்டு அடைகின்றார்கள். இன்றைய சமூகத்தின் பொருளாதாரம் நாணயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. உழவர்கள் பயிர் செய்து தானியங்களை விற்றும், தொழிலாளர்கள் தொழிற்சாலையில் உழைத்தும் பொருள் ஈட்டுகின்றனர். தமக்கும் தம் குடும்பத்திற்கும் தேவையான பொருள்களை வாங்குகின்றனர். மக்களின் வாழ்க்கை, பணமின்றி இயங்குவதில்லை. பணம் எப்பொழுதும் கைமாறிக் கொண்டே இருக்கும் போதுதான் சமுதாயத்தில் அனைவருக்கும் பயன் படுகிறது.

> 'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
> இல்லாகித் தோன்றாக் கெடும்.'

இக்குறளை நோக்க, குறைந்த ஊதியம் உடைய ஒருவன் தன் வாழ்க்கையைச் சீர்பெற நடத்த இயலாது; தனக்குக் கிடைக்கும் வருவாயைக் கொண்டு சிக்கன முறையில் வாழ்க்கையை நடத்தவேண்டும்; பணம் மிகுதியாக உடையவனும் மிகுதியாகச் செலவு செய்தால் பின்னர் கடன் வாங்க நேரிடும் என்பது புலனாகிறது.

## வாழ்வில் வெற்றி பெற

குடும்ப வாழ்வில் நமக்கு ஏற்படும் தேவைகளை உடனடித் தேவை, சேய்மைத்தேவை, எதிர்பாராத தேவை என மூன்று

வகைகளாகப் பிரிக்கலாம். குடும்பத்தை நடத்த இன்றியமையாது வேண்டப்படும் உணவு, உடை முதலியவற்றை வாங்குவதற்காகத் தேவைப்படுவது உடனடித் தேவையாகும். பள்ளி திறந்தவுடன் பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்கள் வாங்குதல், திருமண இன்பச் செலவு இவை சேய்மைத்தேவை என்றும், எதிர்பாராது நேர்ந்த நோய், விபத்து காரணமாக ஏற்படும் அவசரமான செலவுபோன்றவை எதிர்பாராத செலவு என்றும் கூறப்படுகிறது.

விஷம்போல் ஏறும் விலைவாசியினால் மாதந்தோறும் வருவாய் பெறுபவர்கள் வாழ்க்கை நடத்த அவை வாய்ப்பாக இல்லை. பணத்தின் மதிப்பும் விலை உயர்வின் காரணத்தால் குறைந்துகொண்டே வருகிறது. இங்ஙிலையில் சேமிக்கும் எண்ணமேயின்றி மாதந்தோறும் முழு வருவாயினையும் செலவிடுவோர் எதிர்பாராத செலவுகள் வரின் செய்வதறியாது திகைப்பர். நமது உழைப்பும், ஊக்கமும் முன்னெச்சரிக்கையுமே வாழ்வு சிறக்க உதவுவன. வாழ்வில் வெற்றிபெற வருங்காலத்தைக் கருத்துட்கொண்டு பொருளைச் சேமிக்கவேண்டும்.

### செலவும் சமுதாய விளைவும்

நாம் எண்ணிச் செலவிடும் பணத்தால் நமக்கு விளையும் நலன்களைத் தவிரப் பிற விளைவுகளும் உண்டு. நம்முடைய நடைமுறைச் செலவுகளால் சமுதாயத்திலும் சில விளைவுகள் நேரக் காண்கிறோம். உதாரணமாக நாம் ஒவ்வொருவரும் ஒரு புத்தகம் வாங்குவதாகக்கொண்டால், புத்தகங்களுக்கான தேவை வளர்ந்து, அதுகாரணமாகப் புத்தகம் வெளியிடும் தொழில் வளர்ச்சி அடைகின்றது. இதற்கு நேர்மாறாக மக்கள் ஆடம்பரப் பொருள்களை வாங்கினால், அவற்றிற்குத் தேவை அதிகரித்து, அதன்மூலம் மக்கள் உழைப்பையும் முதற் பொருளையும் அத்தொழிலில் அதிகம் ஈடுபடுத்த நேரும். அதனால் உணவுப் பொருள்கள், மருந்துகள் முதலிய அவசியமான பொருள்களை உற்பத்தி செய்யப் போட்ட முதலீட்டை அத்தொழிலில் போடச் செய்யும். எனவே அறிவற்ற வகையில் செய்யப்படும் செலவு, சங்கிலிபோல்

தொடர்புடையதாய்ச் செலவு செய்தவனைமட்டும் அன்றிச் சமூகத்தையே பாதிப்பதை நன்குணரலாம். எனவே சிக்கனமாக வாழக் கற்றுக்கொள்வது ஒருவனது தனிப்பட்ட வாழ்க்கைக்கு வேண்டிய பண்புமட்டுமன்று, அது நல்ல ஒழுக்கமும் ஆகும். அவன் தனது பணத்தையும், காலத்தையும் அறிவையும் வீணுக்காது அவன் சேர்ந்து வாழும் சமூகம் அவனைக் குடிமகனுகக்கொண்ட நாடும் பயன்பெற வழிசெய்வதுடன், தானும் நன்மை பெறுகின்றுன். எனவே தனி மனிதன் ஒவ்வொருவனின் செல்வமும் சேர்ந்ததே சமூகத்தின் மொத்த செல்வமாகும். ஒரு நாட்டின் பொருளாதார நிலையும் அதைப் பொறுத்தே அமைகின்றது.

## அரசாங்கத்தின் பொறுப்புக்கள்

நம் குடும்ப ஆக்கத்திற்காக நாம் பொருளீட்டி, காத்து, வகுத்து செலவிட்டுச் சேமிக்கிறேம். நாட்டின் ஆக்கத்திற்காகவும் தேவைப்படுவது பொருள்தான். பொய்யா மொழிப் புலவர்,

> 'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
> எஃகதனிற் கூரிய தில்.'

என்று கூறியுள்ளார். பொருளைக் கொண்டுதான் சமுதாய நலத்தைப் பேணிக் காக்கவேண்டும். 'மிடிப்பயங்கொல்லவும்' துயர்ப்பகை வெல்லவும் உற்ற கருவி பொருளேயாகும். தனி மனிதன் தேவைகளை உழைப்பின் ஊதியத்தைக் கொண்டு சரிகட்டிக் கொள்கிறுன். சமுதாயத் தேவைகளான பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவ நிலையங்கள், மின்வசதி, குடிநீர் வசதி, போக்குவரவு வசதிகள் முதலியவற்றை வழங்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்துள்ளது. இவை தனி மனிதனின் கையில் இல்லை.

அன்றி அயலார் படையெடுப்பினின்று நாட்டைக் காக்கும் பொறுப்பும், உள்நாட்டு அமைதியை நிலைநிறுத்தும் பொறுப்பும் அரசாங்கத்தினுடையது. மனிதன் சுயதேவைப் பூர்த்திக்குப் பொருளைச் செலவிடுவது போன்றே அரசாங்கங்களும் மக்களது பொதுத் தேவைக்காகப் பொருளைச் செலவிடு

கின்றன. பொதுவசதிகளை நுகர்வதற்குப் பதிலாக மக்கள் அரசாங்கங்களுக்கு வரி என்ற பெயரில் பொருளை அளிக்கின்றனர்.

**ஐந்தாண்டுத் திட்டங்கள்**

தனி மனிதனின் சிறுசேமிப்புகள் நாட்டின் பெருந்திட்டங்களுக்கு உதவுகின்றன. நமது அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள ஐந்தாண்டுத் திட்டங்கள் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வை நல்கும்பொருட்டுத் தீட்டப்பட்டவை.

ஒவ்வொரு மனிதனும் தன் எதிர்கால முன்னேற்றத்திற்காகத் திட்டமிடுவது போல் அரசாங்கமும் நாட்டின் முன்னேற்றத்திற்காக முன் கூட்டியே திட்டமிட வேண்டியுள்ளது. முக்கியத் தொழிலான விவசாயம், பிறதொழில்கள், கல்வி, சுகாதாரம் இவை வளர்ச்சியடைய வேண்டியவை.

விவசாயத்தை முன்னேற்றமடையச் செய்ய அணைக்கட்டுகளும் பாசனக் கால்வாய்களும் அமைக்கப்பட்டுள்ளன. பல கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றால் நம் நாடு தனக்கு வேண்டிய தேவையை முழுது மடையச் செய்யப் பெரிய எஃகு ஆலைகள் ஏற்பட்டுள்ளன. இவற்றில் உண்டாக்கப்படும் எஃகு பல தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் உண்டாக்கப் பயன்படுகிறது. இந்தியா தற்பொழுது எஞ்சின்கள், இரயில் வண்டிகள் முதலியன ஆக்கும் தொழில்களுக்கான இயந்திர பாகங்களைத் தானே உற்பத்தி செய்கிறது. அறியாமையையும் பிணியையும் நீக்கப் பள்ளிகளும், மருத்துவச்சாலைகளும் ஏற்பட்டுள்ளன. இவைகளெல்லாம் ஐந்தாண்டுத் திட்டங்களாலேயே ஏற்படுத்தப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 3,360 கோடியும், இரண்டாவதில் ரூ. 6,750 கோடியும், மூன்றாவதில் ரூ. 11,600 கோடியும் செலவிடப்பட்டன. இத்தொகைகள் யாவும் வரி மூலமாகவும், அயல் நாட்டுக் கடன் மூலமாகவும், மக்களின் சிறுசேமிப்பு மூலமாகவுமே கிடைத்துள்ளன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் முதலீட்டுத் தொகையில் 11% சிறு சேமிப்பு நிதிகள் வழியாக நாட்டின் ஆக்கப் பணிக்கு உதவிய தொகை ஏறத்தாழ

ரூ. 370 கோடியாகும். நமது சிறுசேமிப்பு நமது குடும்பத்தினரின் வாழ்வை வளப்படுத்துவது மட்டுமின்றி, மறைமுகமாக நாட்டின் வளத்தைப்பெருக்கி நாட்டு மக்களேயும் வாழ்விக்கின்றது. ஆக்க வேலைத் திட்டங்கள் நிறைவேறி நவபாரதத்தின் வருங்காலம் செழிக்க சிறுசேமிப்பு இயக்கம் எத்துணை உதவியளிக்கிறது என்பதை மீண்டும் கூறல் வேண்டுமோ?

### சிறு சேமிப்பு

சிறு சேமிப்பு இயக்கம் சிக்கன வாழ்வை வளர்க்கவும், சேமிப்பை நல்வழியில் ஈடுபடுத்தவும் உதவுகிறது. நாம் சேமித்த தொகையை நம்மிடமே வைத்துக் கொண்டிருந்தால் அது வளர வழியில்லை. அதனை நாம் செலவழிக்க இடமுண்டு. எனவே சேமிப்பை நமது நலனுக்கும், குடும்பப் பாதுகாப்புக்கும் நாட்டின் ஆக்கத்திற்கும் உதவும் பொருட்டு அதைச் சேமிப்பு பாங்கிகளிலோ, சிறுசேமிப்புப் பத்திரங்களிலோ முதலீடு செய்வதால் அவை பாதுகாப்புடன் இருப்பதோடு வளரவும் செய்கின்றன. நன்முறையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடு உற்பத்தியைப் பெருக்கி, மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதோடு, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த உதவி, நம் நாட்டிற்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் ஒரு சீரிய பணியைச் செய்கிறது.

தற்பொழுது நடைமுறையில் பலவகை சேமிப்பு முதலீடு வழிகள் உள்ளன.

### 12 ஆண்டு தேசீயப் பாதுகாப்புப் பத்திரங்கள்

சேமிப்பு நிதி உள்ள தபால் அலுவலகங்கள் யாவற்றிலும் இப்பத்திரங்களைப் பெறலாம். ரூ. 5இல் இருந்து பல்வேறு மதிப்புகளில் இப்பத்திரங்கள் விற்கப்படுகின்றன. இதில் முதலீடு செய்த தொகைக்கு 6·25% தனி வட்டியோ, 4·75% கூட்டு வட்டியோ அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் தன்பெயரில் அல்லது குடும்பத்தினர்களின் கூட்டுப் பெயரில் ரூ. 35,000 வரை இதில் முதலீடு செய்யலாம். இத்தொகைக்கு வழங்கப்படும் வட்டிக்கு வருமான வரிச் சலுகை உண்டு.

**10 ஆண்டுப் பாதுகாப்பு நிதிப் பத்திரங்கள்**

10 ஆண்டுப் பாதுகாப்பு நிதிப் பத்திரங்கள் ரூ. 50. அதன் மடங்குகள் ஆகிய மதிப்பில் விற்கப்படுகின்றன. ஒருவருடம் கழிந்த பின்னர், என்று வேண்டுமானாலும் அவற்றை மாற்றிக்கொள்ளலாம். பத்திரத் தொகைக்கு வழங்கப்படும் 4·5% வட்டிக்கு வருமான வரி இல்லை.

**அஞ்சல் நிலையச் சேமிப்புப் பாங்கு**

அஞ்சல் நிலையமானது நாட்டின் அன்றாட வாழ்வில் நெருங்கிய தொடர்புகொண்டு நாட்டு வாழ்வின் ஒரு பகுதியாகவே விளங்குகிறது. இஃது ஏழைகளின் நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் பெருவாரியாகப் பெற்றுள்ளது. ஒரு கோடி மக்களின் பாங்காக, ரூ. 500 கோடி சேமிப்பைப் பெற்றுள்ளது. ரூ. 5 இருந்தாலே இதில் கணக்கு வைத்துக் கொள்ளலாம். சிறுவர் சிறுமியரும் இதில் கணக்கு வைத்துக் கொள்ளலாம். தனி ஒருவர் ரூ. 15,000 வரையிலும், கூட்டுக் கணக்காயிருந்தால் ரூ. 30,000 வரையிலும் சேர்த்து வைக்கலாம்.

**வளர்ந்து வரும் சேமிப்புத் திட்டம்**

மாத வருவாய் பெறுபவர்களுக்கு இத்திட்டம் பயனளிக்கும். இது 5, 10 அல்லது 15 ஆண்டுகளில் எதிர் நோக்கும் செலவுகளைச் சமாளிக்க உதவும் திட்டமாகும். மாதா மாதம் ரூ. 5, 10, 20, 50, 100, 200 ஆகிய தொகைகளைச் செலுத்தலாம் 15 வருடச் சேமிப்பானால் மாதம் ரூ. 300 கூடச் செலுத்தலாம். 5, 10, 15 வருடக் கணக்குகளுக்கு முறையே 3·3%, 3·8%, 4·3% வட்டியளிக்கப் படுகிறது. தவணை தவறிவிட்டால் அவற்றை வட்டியுடன் அடுத்துச் செலுத்திவிடலாம். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே தேவை ஏற்பட்டால் கணக்கில் உள்ள தொகையில் பாதியைக் கடனாகப் பெறலாம். கடனைத் தவணைகளில் திருப்பிக் கட்டிவிடலாம். இந்த முறையில் 10 ஆண்டுக் காலத் திற்குப் போடும் சேமிப்புக்கும் வருமானவரிச் சலுகை உண்டு.

**சேமிப்புத் தலைகள்**

சேமிப்புத் தலைகள் 25 பை.; 50 பை.; ரூ. 1 மதிப்புக் களில் தபால் நிலையங்களில் விற்கப்படுகின்றன. சிறுவர்

சிறுமியர் சிறுவயதிலிருந்தே சேமிப்புப் பழக்கத்தை மேற் கொள்ள இவை உதவுகின்றன. சில்லறைத் தொகைகளைக் கொண்டு இந்தத் தலைகளைப்பெற்று இலவசமாகக் கொடுக்கப் படும் அட்டைகளில் ஒட்டி ஒரு குறிப்பிட்ட தொகை சேர்ந்ததும் ஏதேனும் ஒரு சேமிப்பு முறையில் முதலீடு செய்யக் கொடுக்கலாம். அதுபோல் தலைகள் ஒட்டப்பட்ட அட்டை களைக் கொண்டு பரிசுப்பத்திரங்கள் வாங்கலாம். அஞ்சல் நிலையச் சேமிப்புக் கணக்குகளைத் துவக்கலாம்.

**மாணவர்க்கு**

நீங்கள் மேற்கூறிய திட்டங்களில் எதையேனும் தேர்ந் தெடுத்து, உடனே சேர்ந்து உங்களால் இயன்றதைச் சேர்த்து வைத்தால் நீங்கள் பயன் பெறுவதோடு, நம் நாடும் பயன் பெறும். எவ்வளவு சேமிக்கின்றீர்கள் என்பதைவிடச் சேமிக்கும் பழக்கத்தை வளர்ப்பதே முக்கியமானதாகும். எனவே சிக்கன வாழ்வு நடத்தி, பொருளைச் சேமித்து, பலன் பெற்று வாழ முயலுங்கள்.

சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு !
சேமித்து வாழ்வதே செம்மை வாழ்வு !

**அருஞ்சொற்பொருள் :**

அயராது - சோர்வு இல்லாமல்; ஈட்டுகின்றனர்-திரட்டுகின்றனர்; சேய்மை - நெடுங் காலத்திற்குப்பின்; செறுநர் - பகைவர்; செருக்கு - தருக்கு; எஃகு - படைக்கலம்.

**வினாக்கள் :**

1. சேமிப்பின் இன்றியமையாமையைப் புலப்படுத்துக.

2. குடும்ப வாழ்வில் ஏற்படும் தேவைகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்? அவை என்னென்ன ?

3. ஆக்க வேலைக்கு வேண்டிய பொருளை அரசாங்கம் எவ்வாறு பெறுகின்றது ?

4. ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றி நீவிர் அறிந்தவைகளைத் தொகுத்தெழுதுக.

5. சிறு சேமிப்பைப் பற்றி ஆசிரியர் கூறியவைகளைப் பதினைந்து வரிகளில் வரைக.

6. சேமிப்பினை முதலீடு செய்ய அரசாங்கம் வகுத்துள்ள திட்டங்கள் யாவை ?

# 19. கிராம முன்னேற்றம்

வித்துவான் திரு. ஆ. பழனி

## கிராமமும் நாகரிகமும்

கிராமம் என்றவுடன் சலசலவென ஓடி வரும் புனல் நிறைந்த வாய்க்கால்களும், அவற்றின் இருமருங்கும் செழித்து வளர்ந்து பசுமை உமிழும் வயல்வெளிகளும், அடர்ந்து வளர்ந்த சோலைகளும், தோப்புக்களும், கொடி படர்ந்த கூரைகளையுடைய சிறுசிறு குடில்களும் குறுகிய வீதிகளும் நெருங்கிய வேலிகளும் நம் கண் முன்னே காட்சியளிக்கும். பெரும் பெரும் மாளிகைகள், திரைப்பட அரங்குகள், வியத்தகு மருத்துவ மனைகள், விரைந்தோடும் ஊர்திகள் முதலியன மற்றை ஆண்டுக் காண்டல் அரிது. நகரங்களிலேதான் அவற்றைக் காணலாம். இவற்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நகரமே நாகரிக வாழ்க்கைக்கு ஏற்ற இடம் எனப் பலர் கருதுகின்றனர். உண்மை நாகரிகம் உணராதவரின் உள்ளக் கிடக்கைதான் அது. போலி நாகரிகத்தில் மூழ்கிப் புரளும் நெஞ்சங்களுக்கு உண்மை புலனாவதில்லை. நாட்டுக்குரிய நலமிக்க நாகரிகத்தின் அடிப்படை, கிராமங்களிலேதான் பரவிக் கிடக்கின்றது என்பதை மறந்து, மயங்கிக் கலங்குகின்றனர்.

## கிராமத்தின் பெருமைகள்

கிராமங்கள்தாம் நாட்டின் உயிர்நாடி. நகர மாந்தரின் உயிர் வாழ்வுக்கே கிராமங்கள் காரணமெனின் ஏனைச் செயல்களுக்கு அவற்றின் இன்றியமையாமையைக் கூறவும் வேண்டுமோ? உழவினர் கைம்மடங்கின் உலகில் யாது நிகழும்? ஒன்றுமே நிகழாது. அம்மட்டோ? மனவமைதிக் கேற்ற சூழ்நிலைகளையுடையதும் கிராமமே. நாகரிகத்தின் உச்சியில் இருப்பதாகக் கருதிக்கொண்டிருக்கும் பெரு நகரங்களில் பெறமுடியாத, காணமுடியாத அமைதியைக் கிராமத்திலேதான் பெறமுடியும்; காணமுடியும். கவிஞர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்கள் முதலியவர்கள் விரும்பிப் போற்றுவது கிராமமே. தூய்மையான, குளிர்ந்த, உடல்நலத்திற்கேற்ற காற்றோட்டமும், கண்ணுக்கினிய காட்சிகளும்

செவிக்கினிய ஓசைகளும் நிறைந்து, செறிந்து, மிடைந்து விளங்குவது கிராமமே. சுருங்கக் கூறின் உயிர்நிலைபெற, உடல்நலம்பெற, உள்ளத்தே அமைதி நிலைபெற்றேங்கப் பெருந்துணை புரிவது கிராமம் என்பதில் ஐயமேயில்லை.

**முன்னேற்றப் பணிகள்**

இத்தகு மேன்மை வாய்ந்த கிராமங்களை நன்கு பேணிக் காப்பதும் அவற்றின் முன்னேற்றத்திற் கண்ணுங்கருத்துமாக இருந்துவருவதும் நம் கடமையாகும். கிராமங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்ளுதல், கல்வி வளரச் செய்தல், தொழில் வளர்ச்சியில் நாட்டங்கொள்ளுதல், தீண்டாமை ஒழித்தல், மருத்துவ மனைகள் நிறுவுதல் முதலிய இன்றியமையாத் தேவைகளை நிறைவு செய்தலே கிராம முன்னேற்றத்திற்குரிய பணிகளாகும். வாழ்க்கைக்கு வேண்டிய வசதி வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொடுத்தாற்ருன் கிராமத்தில் உள்ளவர்கள் நகரங்களுக்குச் சென்று தங்கவேண்டும் என்ற மோகங் குறைந்து, தங்கள் கிராமங்களிலேயே உறைவார்கள். நகரத்தவர்களும் கிராமங்களை இகழாதிருப்பர். நகரம் பரப்பிற் பெரியது; கிராமம் பரப்பிற் சிறியது என்ற வேறு பாட்டைத் தவிரப் பிற வேறுபாடு இருத்தல் கூடாது.

**துப்புரவு**

உடல் நலத்துக்கேற்ற உயரிய கிராமங்களைத் தூய்மையாக வைத்துக்கொண்டுள்ளோமா? அத்துறையில் சிறிதேனும் நாட்டம் செலுத்தினேம் அல்லோம். கழிவுப் பொருள்களையும் குப்பை கூளங்களையும் கண்ட கண்ட இடங்களில் எறிந்து விடுகின்ருேம்; குடிநீர் நிலைகளாகிய கிணறு, குளம் முதலியவற்றில் தூய்மைக் குறைவை உண்டு பண்ணுகின்ருேம். மக்கள் குளிக்கும் இடங்கள், மாடுகள் குளிக்கும் இடங்கள் என்ற வேறுபாட்டை மறந்துவிட்டோம். அதனுல் பல்வேறு பிணிகட்கும் ஆளாகின்ருேம். வீதிகள், நீர்நிலைகள் முதலியனவற்றைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுதல், கழிவுநீர் தேங்கி நிற்காமல் பார்த்துக்கொள்ளுதல், குப்பைகளைத் தனியே ஓரிடத்திற் கொட்டுதல் போன்ற துறைகளைக் கண்காணித்து ஆவன செய்தல் வேண்டும்.

### கல்வி வளர்ச்சி

பள்ளியில்லா ஊரைக் காணின் தீயிட்டுக் கொளுத்துக என்று சீறிச் சினந்துரைக்கின்றார் பாரதியார். கல்வியின் இன்றியமையாச் சிறப்பினை யுணர்ந்தமையால் கவிஞர் அவ்வாறு கனன்றுரைப்பாராயினர். கல்வியின் பொருட்டு நகரங்களுக்கு அவர்கள் செல்லாமல், தங்கள் ஊர்களிலேயே அதனைப் பெறுமாறு செய்தல் வேண்டும். பிள்ளைகளைக் கட்டாயம் பள்ளிக்கு அனுப்புவதில் பெற்றோர் அக்கறை காட்ட வேண்டும். முதியோர் கல்வியறிவு பெறுமாறு செய்ய இரவுப் பள்ளிகளை யமைத்து, அவர்கட்குக் கல்வியின் சிறப்பை விளக்கி, அறிவு புகட்ட வேண்டும். செய்தி இதழ்களைப் படித்துச் சுருக்கமாக அவர்களுக்கு விளக்க வேண்டும். படிப்பகம், நூலகம் அமைத்து, அவ்வூரினர் பயனடையுமாறு செய்ய வேண்டும். வானொலி, படக்காட்சி இவற்றின் வாயிலாக உலகச் செய்திகளை விளக்க வேண்டும். இவ்வாறு கிராம மக்களுக்கு அறிவு வளர்ச்சியை உண்டாக்கினால் கிராமம் முன்னேற்றம் அடையும்; அம்மக்களும் சுதந்தர நாட்டில் வாழத் தகுதி பெற்றவராவார்.

### தொழில் வளர்ச்சி

கல்வியறிவு வளர்வதோடு கிராமச் சூழ்நிலைகளும் வளரச் செய்ய வேண்டும். புதிய முறைகளில் உழவுத் தொழிலை வளமுறச் செய்யும் வழிகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஆடு மாடுகளைப் பேணி வளர்க்கும் முறைகளையும் கோழிப் பண்ணைகள் அமைத்து விரிவுபடுத்தும் வகைகளையும் அவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். வேளாண்மைக் காலம் போக எஞ்சிய காலத்தில் வீண்வம்பு, வெட்டிப் பேச்சு, சோம்பிக் கிடத்தல் இவற்றைக் களைந்து பயனுள்ள சிறு சிறு தொழில்களைச் செய்ய முனைதல் வேண்டும். வெல்லம் காய்ச்சுதல், பாய் கூடை பின்னுதல், தீப்பெட்டி செய்தல், கயிறு திரித்தல், மூங்கில் தட்டி செய்தல் முதலிய சிறு தொழில்களை மேற்கொள்ளுமாறு பயிற்றுதல் வேண்டும். இத்தொழில்களுக்கு அரசு நன்முறையில் உதவவேண்டும். விற்பனைச் சந்தைகளை உண்டாக்கிக் கொடுத்தும், பொருட்காட்சி நடத்தி

விளம்பரஞ் செய்தும், ஏற்றுமதி செய்தும் உதவவேண்டியது அரசின் கடமையாகும். இப்பொழுது இத்தகைய உதவிகளை அரசு செய்தும் வருகிறது. பெருந் தொழில்களால் சிறு தொழில்களுக்கு ஊறு நேராவண்ணம் காத்துக்கொள்வதும், போட்டிகள் உண்டாகாதவாறு கவனித்துக் கொள்வதும், வரிச்சலுகை காட்டுவதும் அரசு மேற்கொள்ள வேண்டிய செயல்களாகும். இத்தகைய உதவிகளைப் பெற்றுக் கிராமத்து மக்கள் ஊக்கமுடன் உழைப்பாராயின் அவர்களுக்கும் நாட்டுக்கும் நலம் பயக்கும்.

### தீண்டாமை ஒழிப்பு

இராமலிங்கர், காந்தியடிகள் போன்ற பெருமக்கள் இடைவிடாது பாடுபட்டுங்கூட, இன்னும் நம் நாட்டில் தீண்டாமை ஒழிந்துவிட்டதென்று சொல்ல முடியவில்லை. பின் தங்கிய சில கிராமங்களை இன்னுங் காணுகிறோம். சாதி வேற்றுமையை ஒழிக்கும் வகையில், அவர்கள் மனத்தில் நன்கு பதியும் வண்ணம் அறிவுரை தரும் முறையில் சொற்பொழிவுகளை நிகழ்த்த வேண்டும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்றும் ஆன்றோர்கள் கூறிய கருத்துக்களை எடுத்துச் சொல்லி கிராம மக்களை முன்னேற்றமுறச் செய்தல் வேண்டும். கிராமத்தின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதை நாம் எப்பொழுதும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

### மருத்துவ வசதி

கிராமங்களில் வாழும் மக்கள் தூய்மைக் குறைவு காரணமாகப் பல வகையான நோய்களுக்கு ஆளாகின்றனர். அந்நோய் காரணமாக மருத்துவத்திற்கு நகரங்களை நோக்கி வரவேண்டிய நிலையில் அம்மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் வாழும் ஊர்களிலேயே எல்லா வசதிகளையும் பெறத்தக்க வகையில் மருத்துவ மனைகளை அமைக்க வேண்டும். படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்களும் கூச்சப்படாமல், வருவாய்ப் பெருக்கைமட்டும் மனத்திற்கொள்ளாமல், தொண்டு மனப்பான்மையுடன் சிற்றூர்களிற் பணிபுரிய முன் வருதல் வேண்டும். நோய்களைத் தணிப்பதோடு நில்லாமல் நோய்

பரவுங் காரணத்தை அம்மக்களுக்கு உணர்த்தி, நோய் வாரா முன்பே தடுத்துக் காக்கவேண்டும். மருத்துவ வசதிகளை எளிமையாகவும் குறைந்த செலவில் பெறுமாறும் செய்தல் வேண்டும். இன்னோரன்ன பல துறைகளிலும் ஈடுபட்டுச் செம்மை செய்தாற்றான் கிராமங்கள் முன்னேற்றம் அடையும்.

மேற்குறிப்பிட்ட துறைகளில் அரசாங்கமும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டுள்ளது. மக்களும் அக்கறை காட்டத்தான் செய்கின்றனர். எனினும், இன்னும் பேரளவில் முனைதல் வேண்டும். எடுத்துக்கொண்ட செயல்கள் செவ்வனே நடைபெறவும், நோக்கம் நிறைவேறவும், முயற்சிகள் முழுமையும் கிராமங்களுக்கே பயன்படவும் பாடுபடவேண்டும். கிராம முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றம்; நாட்டின் முன்னேற்றம் நம் முன்னேற்றம் என்ற உணர்வு நம் நெஞ்சத்தே வேரூன்ற வேண்டும். நாட்டுப் பற்றின்றி எச்செயலை எவர் மேற்கொண்டாலும் எள்ளளவும் பயனில்லை. ஆதலின் இப்பற்றுள்ளவர்கள் இத்துறையில் ஈடுபடவேண்டும். இத்துறையில் ஈடுபட்டவர் இப்பற்றுடையராய் மிளிர்தல் வேண்டும்.

**அருஞ்சொற்பொருள் :**

புனல் - நீர்; மருங்கு - பக்கம்; உமிழும் - வெளிப்படுத்தும்; ஊர்தி - வாகனம்; மாந்தர் - மக்கள்; துப்புரவு - தூய்மை; உறைவார் - வாழ்வார்; நாட்டம் - கருத்து; கனன்று - கோபித்து; களைந்து - நீக்கி.

**வினாக்கள் :**

1. கிராமத்தின் பெருமைகள் யாவை ?
2. கிராம முன்னேற்றப் பணிகள் யாவை ?
3. கிராமங்களில் துப்புரவு எந்த அளவில் இருக்கிறது ? அவற்றைத் துப்புரவாக வைத்துக் கொள்வது எப்படி ?
4. கிராமத்து மக்களுக்கு எவ்வாறு கல்வியறிவைப் பரப்புதல் வேண்டும் ?
5. கிராமத்தொழில் வளர்ச்சி பற்றிப் பதினைந்து வரிகளில் தொகுத்தெழுதுக.
6. சாதி வேறுபாடுகளை எவ்வாறு நீக்குவது ?
7. கிராமத்து மக்களுக்கு மருத்துவ வசதிகளை எவ்வாறு அளிக்க வேண்டும் ?